


லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ எனக்கென்று ஒரு இதயம்... ★ முத்துலட்சுமி ராகவன்




லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ எனக்கென்று ஒரு இதயம்... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
எனக்கென்று ஒரு இதயம்...

**முத்துலட்சுமி ராகவன் எழுதிய**

**எனக்கென்று ஒரு இதயம்...**

1

'திருப்பதி மலைவாழும் வெங்கடேசா..!..

திருமகள் மனம் நாடும் ஸ்ரீனிவாசா..!

ஏழுமலை வாசா..!'

வரப்பின் மீது வைத்திருந்த எப்.எம்.ரேடியோவில் ஒலிக்கும் பக்திப் பாடலை கேட்டவாறு மும்முரமாய் கத்தரிக்காய்களைப் பறித்துக் கூடையில் போட்டுக் கொண்டிருந்தார்கள் பூர்ணிமாவும், வசுந்தராவும்.. ரேடியோவில் ஒலித்த பாடலுடன் கூடச் சேர்ந்து தன் இனிய குரலில் பாடிக்கொண்டிருந்தாள் பூர்ணிமா..

"அன்பெனும் அகல்விளக்கை ஏற்றிவைத்தேன்..

அதில் ஆசையெனும் நெய்யை ஊற்றிவைத்தேன்..

என்மனம் உருகிடவே பாடி வந்தேன்..

உந்தன் ஏழுமலையேறி ஓடி வந்தேன்.."

சன்னக் குரலில் பாடிக் கொண்டிருந்த பூர்ணிமாவை ரசித்துப் பார்த்தவாறு காய் பறித்துக் கொண்டிருந்தாள் வசுந்தரா..

'இவள் என் அக்கா..' என்று நினைக்கும் நினைவே அவளுக்குப் பெருமையைத் தந்தது.. தங்கையின் பார்வையை உணர்ந்தவளாய் மெல்லிய சிரிப்பொன்றை தங்கைக்கு பரிசளித்த பூர்ணிமா.. பாடலைத் தொடர்ந்தாள்.

"நினைத்ததை நடத்திடுவாய் வைகுந்தா..

மறைத்ததை பறித்திடுவாய் கோவிந்தா..

உரைத்தது கீதையென்னும் தத்துவமே..

அதை உணர்ந்தவர் வாழ்ந்திடுவார் சத்தியமே..!"

அந்த அதிகாலை நேரத்தில் ஆன்மிகப் பாடலைக் கேட்பதும், அதனுடன் இசைந்து இசைப்பதும் பரமசுகம் என்று நினைத்துக் கொண்டாள் பூர்ணிமா.. வசுந்தராவோ அழகாய், உயரமாய் அதிக சதைப்பிடிப்பில்லாமல் ஒரு பூவைப் போன்ற முக அழகுடன், நீண்ட கூந்தலுடன் தென்பட்ட தமக்கையை பார்ப்பது மட்டுமே தனக்குப் பிடித்த விஷயம் என்று நினைத்தது போல் நொடிக்கொரு தரம் அவளைப் பார்ப்பதும, காய்களைப் பறிப்பதுமாக வேலையைச் செய்து கொண்டிருந்தாள்..

தற்செயலாய் திரும்பிய பூர்ணிமா, தங்கையின் பார்வையைக் கண்டதும் புருவம் உயர்த்தி.. 'என்ன..' என்று கண்களாலேயே வினவினாள்.. 'ஒன்றுமில்லை..' என்று தலையை இடம் வலமாக ஆட்டினாள் வசுந்தரா..

"என்னடி.. பூம் பூம் மாடு போல் தலைய ஆட்டுகிற..?"

"ஒன்றுமில்லையக்கா.."

"என்ன விஷயம்டி..? சும்மா சொல்லு.."

"நீதான் எவ்வளவு அழகாக இருக்கிற..?"

"இது ஒரு பெரிய விஷயமா..?"

"அழகு மட்டுமா..? படிப்பும் உன்னிடத்தில்தானே அதிகம் இருக்கிறது..?"

"நீயும் நன்றாகப் படிக்க வேண்டியதுதானே..?"

"வந்தால்தானே படிக்க முடியும்..?"

"அதெல்லாம் வரும்.. கவனம் வைத்துப் படித்தால் வராமல் எங்கே போகப் போகிறது..?"

"போக்கா.. நீ எப்போது பார்த்தாலும் இப்படித்தான் சொல்லுவ.."

"சரி.. சரி.. கத்தரிக்காய்களை பிடுங்கி முடிச்சாச்சு.. வா.. போகலாம்.."

இருவரும் தோட்டத்தை விட்டு வெளியில் வந்து வரப்பில் ஏறினார்கள்.. தோட்டத்தை ஒட்டியிருந்த சிறு ஓட்டு வீட்டிலிருந்து ஈரக்கையை புடவை முந்தானையில் துடைத்தபடி ஓடி வந்தாள் கனகம்..

"ஏம்மா பூரணி.. உனக்குப் பள்ளிக்கூடம் போக நேரமாயிருச்சு.. இன்னும் கிளம்பாமல் இருக்கியே.. விரசா வாம்மா.. குளிச்சு கிளம்பத்தானே பொழுதிருக்கும்..?

நீ காய் பறிக்காட்டி என்ன.. நாங்க நாளைக்குப் பறிச்சுக்க மாட்டோமா..?"

"நாளைக்கா சந்தை கூடுது..? இன்னிக்கு இதைப் பிடுங்கி வைச்சுட்டா இன்னிக்கு பொழுதுக்குள்ள இந்தக் காயை வித்து நாலு காசு பார்த்துவிடுவீங்க.. நாளைக்குப் பிடுங்கி என்னம்மா பண்ண..? இந்த வாரப் பாட்டுக்கு யார் பணம் தருவாங்க..? பொறுப்பில்லாமல் குடிச்சிட்டு ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கும் அப்பாவா தரப்போ கிறாரு..?"

மகளின் கேள்வியில் இருந்த உண்மை மனதைச் சுட, மௌனமாகிப் போனாள் கனகம்.. பெண்கள் கையிலிருந்த காய்க் கூடையை வாங்கிக்கொண்டு முன்னே அவள் நடக்க, வசுந்தரா பின்தொடர்ந்தாள்.. பூர்ணிமா, சிறு கை ரேடியோவை எடுத்துக்கொண்டு அவர்களின் பின்னே நடந்தாள்..

இரண்டு ஏக்கர் நிலம் சுற்றியிருக்க.. அதன் மையத்தில் சிறு கிணறும், அதை ஒட்டிய சின்னஞ்சிறு ஓட்டு வீடும்தான் அவர்களுக்கு சொந்தம்.. சின்னதாக நீண்டிருக்கும் முன்புற அறையில், இரண்டு கதவுகள் தெரியும்.. ஒன்று, சமையலறை.. மற்றொன்று தனி அறை.. வயதுக்கு வந்த இரண்டு பெண்களும் உடை மாற்றிக் கொள்ள.. வீட்டிற்கு அந்நியர்கள் வந்தால் உள்ளே சென்று மறைந்து கொள்ள

அந்த அறை பயன்பட்டது.. அந்த அறையின் ஓரமாய், பழமையான ஒரு சிறு மர பீரோ.. அருகிலிருந்த அலமாரியில் சின்னக் கைக் கண்ணாடி.. அருகே பவுடர் டப்பா மற்றும் சில எளிமையான அழகுச் சாதனங்கள்.. வீட்டை ஒட்டியுள்ள கிணற்றில் பம்பு செட் போடப்பட்டிருந்தாலும், கிணற்றில் தண்ணீர் சிறிதளவே இருந்தததால், இரண்டு ஏக்கரிலும் பயிர் செய்ய அவர்களுக்கு சாத்தியம் இருந்ததில்லை..

மழைக் காலத்தை வைத்து, சாப்பாட்டிற்கு நெல் நட்டு விடுவார்கள்.. மற்ற நாள்களில் தண்ணீர் உள்ள அளவு காய்கறிகளை நட்டு அதைப் பணமாக்கி குடும்பத்தை ஓட்டிக் கொண்டு வந்தார்கள்..

குடும்பத் தலைவனும், கனகத்தின் கணவனுமான சித்தய்யன் குடிப்பழக்கம் கொண்டவன்.. ஊதாரி, சோம்பேறி, அவனுக்கு வாழ்க்கைப்பட்டு, இரண்டு பெண் குழந்தைகளையும் பெற்றுவிட்ட கனகம், தனியே உழைத்துப் போராடி, பெண்களை வளர்த்தாள்..

மூன்று வேளை சாப்பாடு பெரிய விஷயமாக இருக்க, அதை இரண்டு வேளையாக குறைத்துக் கொண்டார்கள்.. ஆடம்பர உடைகள் கனவாக இருக்க, அத்தியாவசியத்திற்கு உடை வாங்கிக் கொண்டார்கள்..

கழுத்தினில் மஞ்சள் கயிறும், காதுகளில் பிளாஸ்டிக் தோடும், கைகளில் கண்ணாடி வளையலுமாக இருக்கும் கனகம், தன் பெண்களுக்கு உயர் கல்வியை எப்படி அளிக்க முடியும்..?

உள்ளூரில் நடுநிலைப் பள்ளி இருந்தது.. மதிய உணவும் அங்கேயே வழங்கப்பட்டது.. கனகம் நிம்மதியாய் இரு பெண்களையும் உள்ளூரில் படிக்க வைத்தாள்..

மூத்தவள் பூர்ணிமாவிற்கு அடுத்து ஆறு வருடங்கள் கழித்துப் பிறந்த பெண் வசுந்தரா.. பூர்ணிமா உள்ளூர் நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பை முடித்திருந்த போது வசுந்தரா இரண்டாம் வகுப்பை முடித்து இருந்தாள்..

படிப்பில் வசுந்தரா மிக மிக சுமார் ரகமாய் இருக்க, பூர்ணிமா அறிவுச்சுடராய் இருந்தாள்..

மேற்கொண்டு பெண்ணைப் படிக்க வைக்கத் தயங்கிய கனகத்தை தேடி வந்து சந்தித்தாள் உள்ளூர் நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியை சகுந்தலா..

"ஏன் கனகம், பூர்ணிமாவின் படிப்பை நிப்பாட்டி விட்ட..?"

"உள்ளூரில் எட்டாவது வரைக்கும்தானேம்மா இருக்குது..?"

"பக்கத்து டவுனில் ஹையர்செகண்டரி ஸ்கூல் இருக்கே.."

"அதில் படிக்க வைக்க வசதி வேணாமா அம்மா.."

"அப்படிச் சொல்லாதே கனகம். பூர்ணிமா நன்றாகப் படிக்கக்கூடிய பெண்.. அவளை மேலே படிக்க வைத்தால், அவள் உயரே உயர்வாள்.. வாழ்க்கையில் முன்னுக்கு வருவாள்.. அவளை படிக்க வை.."

"நான் வைத்துக் கொண்டா வஞ்சகம் பண்ணுகிறேன் டீச்சர்..? உள்ளூர் பள்ளிக்கூடத்தில் ஏழைகளுக்கு இலவசமாய் பாடப்புத்தகங்கள் தந்தாங்க.. யூனிஃபார்ம் கொடுத்தாங்க.. மதிய சாப்பாடும் போட்டாங்க.. பக்கத்து டவுன் பள்ளிக்கூடத்தில் இது மூன்றும் இருக்காது.. பள்ளிக் கூடத்திற்கு ஃபீஸ் வேற கட்டணும்.. புத்தகம் வாங்கிக் கொடுக்கணும்.. புது யூனிஃபார்ம் வாங்கிக் கொடுக்கணும்.. போக வரவும் தோதுப்படாது.. ஹாஸ்டலில் இருக்க வைத்தால், அதுக்கு வேற பணம் கட்டணும்.. மானமாதுணிகட்டி, வயிற்றுக்கு இரண்டு வேளை கஞ்சி குடிக்கிறதே பெரிய பாடாய் இருக்கிறபோது.. நான் இதுக்கெல்லாம் எங்கே போவேன் தாயி..? ஏழைக்கேத்த எள்ளுருண்டையாய் என் பெண்ணுக்கு எட்டாம் கிளாஸ் வரை படிப்பு கிடைத்திருப்பதே போதும்.. இதுக்கு மேல நான் ஆசைப்பட்டா அது பேராசை அம்மா.."

"இப்படிச் சொன்னால் எப்படி கனகம்..?"

"வேற எப்படி நான் சொல்வது டீச்சர்..? புருஷன் சரியில்லை.. பொட்டைப் புள்ளைகளை பெத்துப் புட்டேன்..

வாழ்க்கையைப் போராடி நடத்திக்கிட்டு இருக்கேன்.. ஒத்தப் பொம்பள நான்.. இதுக்கு மேல என்ன செய்ய முடியும்..?"

சகுந்தலா யோசனையுடன் போய் விட்டாள்.. ஆனால், அவள் மனதில், கண்களில் எதிர்பார்ப்போடு தாயைப் பார்த்து, தன் கல்விக் கனவு நிறைவேறாது என்று புரிந்து கொண்டவுடன் ஏமாற்றத்துடன் தலையைக் கவிழ்த்துக் கொண்ட பூர்ணிமாவின் முகமே மிதந்தது..

ஏழையாக இருந்தால்.. உயர்கல்வி சாத்திய மில்லையா..? மனது கேட்காமல் உள்ளூர்ப் பண்ணையார் ராமலிங்கத்தைத் தேடிப் போய் பார்த்தாள் சகுந்தலா..

"வணக்கம் ஐயா.."

"வாங்க டீச்சர்.. உள்ளே வாங்க.. உட்காருங்க.. பரிமளம் குடிக்க மோர் கொண்டுவாம்மா.."

வீட்டின் முன்புறமிருந்த விஸ்தீரணமான அகன்ற வராண்டாவில் வழவழப்பான தூண்களுக்கு இடையே வரிசையாய் போடப்பட்டிருந்த நாற்காலிகளில்

ஒன்றில் அமர்ந்துகொண்டு மற்றொன்றில் சகுந்தலாவை அமரச் சொன்னார் ராமலிங்கம்.. உள்ளேயிருந்து வந்த ராமலிங்கத்தின் மனைவி பரிமளம், கையிலிருந்த மோர் தம்ளரை சகுந்தலாவிடம் நீட்டினாள்..

"வாங்கம்மா.."

"வணக்கம்மா.."

இருவரும் முகமன் கூறிக்கொண்டார்கள்.. ராமலிங்கம், சகுந்தலாவின் முகத்தை ஆராய்ச்சியாகப் பார்த்தார்..

"சொல்லுங்க டீச்சர்.. வராதவங்க வந்திருக்கீங்க.. காரணமில்லாமல் நீங்க என்னைத் தேடி வரமாட்டீங்க.. என்ன வேண்டும்..? பள்ளிக்கூடத்தில் கட்டடமெல்லாம் சரியாகத்தானே இருக்கு..? ஏதும் பழுதுபார்த்து தர வேண்டுமா..?"

"நீங்கள் செய்த உதவியால் கட்டப்பட்ட கட்டடம் தானே ஐயா அது.. பலமாக இருக்கிறது. நான் வந்தது வேறு ஒரு உதவியை வேண்டி.."

பரிமளம் காலி மோர் தம்ளருடன் நகர முற்பட.. சகுந்தலா அவளை தடுத்து நிறுத்தினாள்..

"அம்மா.. நீங்களும் இருங்க.."

பரிமளம் ஆச்சரியத்துடன் அவர்களின் அருகே அமர்ந்தாள்.. "ஐயா..! ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்கு சமமானது ஆங்கோர் ஏழைக்கு படிப்பை அளித்தல் அப்படின்னு பெரியவங்க சொல்லியிருப்பதை கேள்விப் பட்டிருப்பீங்க.."

"ஆமாம்.."

"நம்ம ஊரில் படிப்பில் கெட்டிக்காரப் பெண் குழந்தையொன்று இருக்கு.. மேலே படிக்க வசதியில்லாத தால், அதன் படிப்பு நிற்கப்போகிறது.. நீங்கள் மனது வைத்து கைகொடுத்தால், அந்தக் குழந்தை ஆசைப்பட்ட படிப்பை படித்துவிடும்.."

ராமலிங்கத்தின் புருவங்கள் மேலேறின.. இதுவரை இப்படிப்பட்ட கோரிக்கையுடன் யாரும் அவரை அணுகியதில்லை..

பிள்ளைகளின் கல்யாணத்திற்கு பணம் போத வில்லை என்று உதவி கேட்பார்கள்.. ஊர் பள்ளிக்கூடம், ஆஸ்பிட்டல் போன்றவற்றை பழுதுபார்க்க உதவி கேட்பார்கள்.. கோயில் காரியங்களுக்கு நன்கொடை கேட்பார்கள்..

இது அவருக்குப் புதிது.. மனைவியை நோக்கினார்.. அவளின் விழிகளிலும் வியப்பு..

"யாரும்மா அந்தப் பெண்குழந்தை.." பரிமளம் வினவினாள்..

"இந்த ஊரில் சித்தய்யன்னு ஒருவர் இருக்கிறாரே.."

"ஓ.. அந்தக் குடிகாரனின் பெண்ணா..?"

"ஆமாம்மா.. அந்தப் பெண்ணின் அப்பா குடிகாரர் தான்.. அதனால்தான் அவளுடைய அம்மா தனியாய் குடும்பத்தைச் சுமக்கிறாங்க.."

"கனகத்தைப் பற்றித்தான் எங்களுக்குத் தெரியுமே.. அதிர்ந்து ஒரு வார்த்தை பேசத் தெரியாத பெண்.. பாவம்.. கல்யாணமாகி இந்த ஊருக்கு வரும்போது எவ்வளவு களையாக இருந்த பெண் அது.. இப்படி ஒரு வாழ்க்கை அந்தப் பெண்ணுக்கு அமைந்துவிட்டது.."

பரிமளம் யோசித்தாள்.. பின் கணவனைப் பார்த்து சிபாரிசு செய்வது போலக் கூறினாள்..

"பாவம்.. இல்லாதவர்கள்.. அந்தப் பெண்பிள்ளைக்கு உதவி செய்தால் நாம் ஒன்றும் குறைந்து விட மாட்டோம்.. அந்தப் பெண்ணின் வாழ்க்கையில் விளக்கேற்றி வைத்ததாக இருக்கட்டுமே.. ஒப்புக் கொள்ளுங்கள்.."

"அது சரி பரிமளம்.. நன்கொடைன்னு கேட்டால் ஒரு தொகையைக் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொள்ளலாம்.. இது அப்படியில்லை.. அந்தப் பெண்ணின் படிப்பு முடியு மட்டும் நாம் உதவி செய்ய வேண்டும்.. இடையில் நிறுத்தி விடக்கூடாது.. அது பெரிய பாவம். ஒன்று, நம்மால் முடியாதுன்னு சொல்லிவிடணும்.. இல்லைன்னா கடைசி வரைக்கும் கை கொடுத்து அந்தப் பெண்ணைக் கரையேத்தி விடணும்.."

"அதுக்கென்ன அதைச் செய்துவிட்டால் போகிறது.."

"சொல்லுதல் யார்க்கும் எளிய - அரியவாம்

சொல்லிய வண்ணம் செயல்."

வள்ளுவரின் வாய்மொழி ஆராயாமல் வாக்கு கொடுத்து விட்டாள் பரிமளம்..

பொய்யாமொழிப் புலவரின் வாக்கு என்றுமே பொய்க்காது..

ராமலிங்கம் அஞ்சியது பணத்திற்காக அல்ல.. ஒரு பொறுப்பை எடுத்துக் கொண்டால் கடைசிவரை அதை நிறுத்தாமல் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற கவலை அவருடையது..

பரிமளம் அதைப் பற்றி யோசிக்கவில்லை.. அவள் மனம் கனகத்தை நினைத்து பரிதாபப்பட்டது.. அந்த ஊரிலேயே அழகான பெண் அவள்.. புது மணப் பெண்ணாக அவள் அந்த ஊருக்குள் அடியெடுத்து வைத்து வந்தபோது, ஊரே அதிசயப்பட்டது..

"இதைப் பாருடா.. குடிகார சித்தய்யனுக்கு இப்படி யொரு பெண்டாட்டியா..? நம்பவே முடியலையே.."

"சித்தய்யனுக்கு அடிச்ச யோகத்தைப் பார்த்தியா.."

"ம்.. ஹூம்.. நானும் தான் ஊரெல்லாம் பெண் தேடினேன்.. எனக்கு ஒரு கோட்டான் வந்து மாட்டுச்சு.. கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்தது போல.. இப்படியொரு பெண்ணைப் பிடித்து இவன் கையில் கொடுத்து விட்டார்களே.."

அப்படிப்பட்ட பேரழகி, இப்போது உருத்தெரியாமல், மாறி இருந்தாள்... இளைத்து, கறுத்துப் போயிருந்தாள்..

அவளின் பெண்களின் ஒருத்தியைக் கைதூக்கி விடுவது புண்ணியம் என்று பரிமளம் நினைத்தாள்..

"பரிமளம்.. யோசித்துதான் சொல்கிறாயா..?"

"ஆமாம்.. அந்தப் பெண்ணின் பொறுப்பை நாம் எடுத்துக் கொள்ளலாம்.."

பரிமளம் தீர்மானமாகக் கூறிவிட்டாள்.. சகுந்தலாவிற்கு ஆனந்தம் தாங்கவில்லை.. அவளுக்கு அவளுடைய சொந்த ஊருக்கே பணிமாறுதல் கிடைத்திருந்தது.. மாற்றலாகிப் போகும் முன்னால், ஒரு புண்ணியத்தை பண்ணிவிட்டுப் போகப் போகும் திருப்தி அவளுக்குள் உதித்தது..

அவசரமாய் கனகத்தைத் தேடிப் போனாள்.. செய்தியைக் கேட்ட கனகத்திற்கு அதை நம்ப முடிய வில்லை..

"இல்லை.. வாத்தியாரம்மா.. இப்படியெல்லாம் யாரும் செய்யமாட்டாங்க.. எவ்வளவுதான் பணக்காரங்களா இருந்தாலும் ஒரு பெண்பிள்ளையின் பொறுப்பை யார் எடுத்துக்குவாங்க..?"

"எடுத்துக்கிட்டு இருக்காங்களே.."

"என்னால் நம்ப முடியவில்லை டீச்சர்.."

"நம்புங்கம்மா.. நம்பிக்கைத்தான் வாழ்க்கை.."

கனகம் சந்தோஷத்துடன் குடிகாரக் கணவன் போதையில் இல்லாத நேரம் பார்த்து விஷயத்தைச் சொன்னாள்.. அவன் முகம் ஒரு மாதிரி ஆனது.. ஏன் என்று அப்போது கனகத்திற்கு விளங்கவில்லை.. இரவில் அவன் தண்ணி அடித்துவிட்டு, வேட்டி அவிழவாசலில் நின்று கத்தியபோது அது விளங்கியது..

"என் மகளைப் படிக்க வைக்க அவங்க யாருடி.. கேட்க ஒரு நாதியில்லன்னு நினைச்சாங்களா..?"

"சத்தம் போடாதீங்க.. நம்ம பெண்ணுக்கு நல்லது நடந்தா அது உங்க கண்ணை உறுத்துதா..?"

"ஆமாண்டி.. என் பொண்ணைப் படிக்க வைக்க முடிஞ்சா படிக்க வைப்பேன்.. இல்லையின்னா வீட்டில் போட்டுப் பூட்டி வைப்பேன்.. அது என் இஷ்டம்டி..

எனக்கு வக்கத்துப் போயிருச்சுன்னு ஊர்ப் பண்ணையார் வீட்டில் போய் பிச்சை எடுக்கிறயா..?"

"யோவ்.. பிச்சை, அது இதுன்னு பேசினால் எனக்கு கெட்ட கோபம் வந்திடும்.."

"என்னடி ரோஷம் பொத்துக்கிட்டு வருது..? இப்ப நீ செய்யப் போறதுக்கு பெயர் என்ன.. பிச்சை தானேடி..!"

"ஆமாய்யா.. நான் பிச்சைதான் எடுக்கறேன்.. என் மகளுக்குப் படிப்பை பிச்சை போடுங்கன்னு அவங்க கிட்ட

கேட்கிறேன்.. லட்சம் லட்சமாய் கொட்டிக் கொடுத்தாலும் அறிவு வந்துவிடாதுய்யா.. அது தானாய் வரனும்.. என் மகள் கிட்ட சரஸ்வதி குடியிருக்கிறாள்.. தரித்திரம் தாண்டவமாடும் வீட்டில் என் செல்லக்கிளி பிறந்து விட்டாளே.. அதுதான் மகாலட்சுமி வாசம் செய்யும் மனையில போய் யாசகம் கேட்டேன்.. என் மகளுக்கு படிப்பைக் கொடும்மான்னு கேட்டேன்.. அது தப்பா..?"

"தப்புதாண்டி.. அது தப்புதாண்டி.. பெத்தவன் நான் இருக்கும்போது பொட்டச்சிங்க ராஜ்ஜியம் கட்டி ஆளணும்னு நினைக்கிறீங்க பாருங்க.. அது தப்புத்தான்.."

"சரிய்யா.. நாங்க ராஜ்ஜியம் கட்டி ஆளலை.. நீங்க தான் புருஷன்.. இந்த பிள்ளைகளை பெத்த அப்பன்.. என் மகள் படிக்கணும்னு நினைக்கிறா.. அதுக்கு ஒரு வழியைப் பண்ணுங்க.."

"ஏய்.. பொட்டச்சிக்கு எதுக்குடி படிப்பு..? அவள் காலை ஒடித்து மூலையில் போடு படிப்பாம் படிப்பு.."

"அதுதானே பார்த்தேன்.. எங்கே ரோசம் பொத்துக் கிட்டு வந்துருச்சேன்னு நினைச்சேன்.. உங்க வயித்துக்கே நீங்க உழைச்சுக் கஞ்சியைக் குடிக்க மாட்டீங்க.. இதில் பெத்த மகளை எங்கே படிக்க வைக்கப் போறீங்க..?"

விடிய விடிய சித்தய்யன் கனகத்தை போட்டு அடித்ததில் அக்கம் பக்கம் விஷயம் பரவி, பஞ்சாயத்து வரை போய்விட்டது.. அப்போதும் ராமலிங்கம், பரிமளத்திடம் தயக்கத்துடன் கூறினார்..

"நான் சொன்னது போல் ஆகிவிட்டதே பரிமளம்.."

"ஒன்றும் ஆகவில்லை.. இப்போது என்ன ஆகிவிட்டது..?"

"நம்ம தரம் என்ன.. அவன் தரம் என்ன.. அவனுக்காக ஒரு பஞ்சாயத்தை நாம் கூட்டுவதா..?"

"அந்த வீட்டில் படிக்க ஆசைப்படும் இளம் குருத்து ஒன்று மாட்டியிருக்கே.. அதை நினைச்சுப் பாருங்க.."

மனைவியின் கோரிக்கைக்காக ராமலிங்கம் பஞ்சாயத்தில் தீர்மானமாய் கூறிவிட்டார்..

"இந்த ஊருக்காரங்களுக்கு முன்னாடி நான் சொல்வது இதுதான்.. சித்தய்யனின் பெரிய மகள் பூர்ணிமாவை படிக்க வைக்கும் பொறுப்பை நான் எடுத்துக்கிட்டு இருக்கேன்.. இதில் அவன் தலையிடக் கூடாது.."

மனைவியிடம் எகிறிக் குதித்த சித்தய்யன் பஞ்சாயத்தில் அடங்கி நின்றான்..

சொன்னது போலே, பக்கத்தில் இருந்த நகரத்தில் இருந்த மேல்நிலைப் பள்ளியில் பூர்ணிமாவை சேர்த்து விட்டார் ராமலிங்கம்..

பள்ளியில் சேர்க்க சித்தய்யன் வர மறுத்து விட்டான்.. ராமலிங்கமே கார்டியன் என்று கையெழுத்திட்டு அவளின் பள்ளி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்தார்..

அவளுக்கான பள்ளிக் கட்டணம், விடுதிக் கட்டணம் ஆகியவற்றை கட்டிவிட்டு, புத்தகங்களையும் சீருடை களையும் வாங்கிக் கொடுத்தார்..

படிப்பில் அக்கறையாய் படிக்கும் பூர்ணிமா, காலாண்டு, அரையாண்டு, முழுஆண்டு விடுப்புகளுக்கு மட்டும் கிராமத்திற்கு வருவாள்.. அப்படி அவள் வரும் போதெல்லாம், பெரிய வீட்டிற்குப் போய் ராமலிங் கத்தையும், பரிமளத்தையும் பார்த்து நன்றி சொல்விட்டு வரமறந்ததே இல்லை..

"ஏம்மா.. பண்ணையாருக்கு எத்தனை பிள்ளைகள்..?"

"ஆண் ஒண்ணு.. பொண்ணொண்ணு.. இரண்டே பிள்ளைகள்தான்.."

"நான் அவங்க வீட்டுக்குப் போகிறப்ப எல்லாம் அவங்களை நான் பார்த்ததே இல்லையே.."

"ஏண்டி.. தர்மத்திற்கு படிக்க வைக்கும் உன்னையே பக்கத்து டவுனுக்கு அனுப்பி படிக்க வைக்கும் பண்ணையார், பெத்தப் பிள்ளைகளை எப்படி படிக்க

வைப்பார்.. அவங்க ரெண்டு பேரும், மெட்ராஸில் படிக்கிறாங்க.."

"அது சென்னைம்மா.."

"எனக்கு அது மெட்ராஸ்தான்.."

"சரி, வைச்சுக்கங்க.. அந்த அவங்க ஹாஸ்டலில் தங்கி இருக்கிறாங்களா..?"

"ஏண்டி.. இருக்கப்பட்ட மகராசங்க.. ஊருக்கு ஒரு வீட்டை வாங்கிப் போட்டிருப்பாங்க.. நம்ம பண்ணை யாருக்கு மெட்ராஸிலும் ரெண்டு வீடுங்க இருக்குதாமே.. இதெல்லாம் போக.. குளுகுளுன்னு ரெண்டு ஊர்.. மலைமேல இருக்குதாமே.."

"ஊட்டியும்.. கொடைக்கானலுமா..?"

"ஆமாம்.. அங்கேயும் ஒரு வீடு இருக்குதாமே.."

"அப்படியா.. ஆமாம். சொன்னையில் வீட்டில் தங்கிக்கிட்டா, சாப்பாட்டிற்கு என்ன பண்ணுவாங்க..?"

"வேலைக்கு ஆட்கள் இருப்பாங்கடி.. அத்தோட நம்ம பண்ணையாரோட அக்கா குழந்தையில்லாமல் சின்ன வயசிலேயே விதவையாகி, தம்பி வீட்டுக்கு வந்து விட்டவங்க இருக்காங்க.. நம்ம பண்ணையாரோட பிள்ளைகளை சின்ன வயசில் இருந்து தூக்கி வளர்த்த வங்க அவங்கதானாம்.. அவங்ககூடப் போய் இருக்கிறாங்க.."

"அவங்கள்லாம் இந்த ஊருக்கு வருவதே இல்லையா..?"

"இந்த நாச்சியார்புரத்தில் அதுகளுக்கு என்னடி வேலை..? அவங்க வெயில் காலத்தில குளுகுளுன்னு இருக்கிற ஊர்களுக்குப் போவாங்களா, இங்கே வருவாங்களா..?"

"பெத்த அப்பா.. அம்மாவைப் பார்க்க வர மாட்டாங்களா..?"

"இவங்கதான்.. மாசத்தில் பாதிநாள் மெட்ராஸிற்கு போயிருவாங்களே.. இங்கேயும் அங்கேயுமாத்தானே இருக்கிறாங்க.."

ஆக.. பூர்ணிமா.. ஒருமுறைகூட ராமலிங்கம், பரிமளம் தம்பதிகளின் பிள்ளைச் செல்வங்களை பார்த்ததே இல்லை..

அம்பாசமுத்திரத்தில் படித்துக் கொண்டிருந்த பூர்ணிமா, அந்த வருடம் பத்தாம் வகுப்பைத் தொட்டுக் கொண்டிருந்தாள்.. காலாண்டு விடுமுறைக்கு நாச்சியார் புரம் வந்துவிட்டு, அன்று காலையில் ஊருக்குள் வரும் டவுன் பஸ்ஸில் ஏறி.. அம்பாசமுத்திரத்திற்கு படிப்பதற்காக அவள் செல்ல வேண்டும்..

விடுமுறை முடிந்தது.. அன்று காலையில் அக்கா கிளம்பிவிடுவாள் என்று தெரிந்திருந்தாலும், நேரம் நெருங்க, நெருங்க வசுந்தரா சிணுங்க ஆரம்பித்தாள்..

"திரும்பவும் எப்ப வருவ அக்கா..?"

"அரைப் பரிட்சை லீவிற்கு வருவேண்டி.."

"அதுக்கு இன்னும் இரண்டரை மாசம் இருக்கே.."

"அதுக்கு நான் என்னடி பண்ண முடியும்..?"

"நீ இங்கேயே இருந்துவிடேன்.. நாம ரெண்டு பேரும் கோயிலுக்குப் போகலாம்.. ஆற்றில் நீச்சலடிக்கலாம்.. தோட்டத்தில் காய் பறிக்கலாம்.. நம்ப வீட்டுத் தோப்பில் இருக்கும் மாமரத்தில் ஊஞ்சல் கட்டி ஆடலாம்.. வீட்டுக்கு முன்னால் பாண்டி விளையாடலாம்.."

"படிப்பைத் தவிர எல்லா வேலைகளையும் செய்யலாம்னு சொல்கிற.. உருப்பட்டு விடுவடி.. ஒழுங்காய் படி.."

"அக்கா.."

"என்னம்மா இவ.. இப்படி நைநைங்கறா.."

எப்போது விடுமுறைக்கு வந்து திரும்பினாலும் ஹாஸ்டலுக்குப் போகப் பிடிக்காமல் மனம் முரண்டு பிடிக்கும்.. பூர்ணிமாவோ, மனதுக்கு தைரியம் சொல்லிக் கொண்டு கிளம்பிக் கொண்டிருந்தாள்.. அப்போது பார்த்து

வசுந்தரா சிணுங்கவும், அவளுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது..

பெரிய மகளுக்காக தின்பண்டங்கள் செய்து டப்பாக்களில் அடைத்துக் கொண்டிருந்த கனகம் சிறிய மகளை அதட்டினாள்..

"ஏண்டி, நீயும் படிக்க மாட்ட.. படிக்கப் போகிற வளையும் விட மாட்டாயா..? நீ பண்ணும் குறும்பு இருக்கே.. அவளை விடு.. இப்போ பண்ணையார் வீட்டுக் கணக்குப்பிள்ளை பூர்ணிமாவை பள்ளிக்கூடத்தில கொண்டு போய் விட்டுவிட்டு வர வந்துவிடுவார்.." அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வாசலில் சப்தம் கேட்டது..

"கனகம்.."

"இதோ.. கணக்குப் பிள்ளையே வந்துவிட்டார்.."

கனகம் பரபரப்பாய் வாசலுக்கு வந்து கயிற்றுக் கட்டிலைத் தூக்கிப் போட்டாள்..

"இருக்கட்டும்.. இருக்கட்டும்.." என்றபடி கணக்குப் பிள்ளை லோகநாதன் அமர்ந்து கொண்டார்..

"பூர்ணிமா கிளம்பிருச்சா.."

"இதோ வந்து விடுவாங்கய்யா.."

இது ராமலிங்கத்தின் ஏற்பாடு.. பஞ்சாயத்தில் வைத்து பூர்ணிமாவை படிக்க வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் ஒரு சொல் வந்துவிடக் கூடாது என்பதற்காக.. பூர்ணிமா விடுமுறைக்கு கிளம்பி வரும் போது அவளை அழைத்து வர கணக்குப்பிள்ளையை அனுப்பி வைத்துவிடுவார்.. பூர்ணிமா விடுமுறை முடிந்து பள்ளிக்குச் செல்லும்போது அதே கணக்குப் பிள்ளையே கொண்டுபோய் விட்டுவிடுவார்..

வழக்கத்தின்படி கணக்குபிள்ளை வந்து காத்திருக்கும் போது ஊருக்குள் இருந்து சிலர் வேகமாய் ஓடி வந்தார்கள்..

"கனகம்.. கனகம்.."

கனகம் அவர்கள் சத்தம் போட்டபடி ஓடிவந்த வேகத்தைப் பார்த்து திகிலடைந்து நின்று விட்டாள்.. என்னமோ நடந்திருக்கிறது என்று அவள் மனம் யூகித்தது.. என்னவென்று புரியாமல் அவளது தொண்டையைப் பிசைந்து, அடிவயிறு கலங்கியது..

## 3

"அடியேய் கனகம்.. சித்தய்யன் கள்ளச் சாராயம் குடிச்சுப்புட்டு செத்துப் போயிட்டாண்டி.." கனகத்தின் உறவுக்காரப் பெண்மணி ஒருத்தி கதறிக் கொண்டு ஓடி வந்தாள்..

கனகம் சர்வாங்கமும் ஆட நிலைகுலைந்து போய் விட்டாள்.. குடிகாரன்.. பொறுப்பில்லாதவன்.. சோம்பேறி.. ஆனாலும் அந்தக் குடும்பத்தின் ஆண் துணை அவன்.. அவனில்லாமல் தனியே வாழ்வது என்பது கொடுமை யல்லவா..?

கனகம் கதறித் தவித்தாள்.. யார் ஆறுதல் கூறியும் அவளை அமைதிப்படுத்த முடியவில்லை.. அந்த முறை பூர்ணிமாவால் உடனே பள்ளிக்குத் திரும்ப முடிய வில்லை.. ஒரு வாரம் கழித்து அவளைப் பள்ளிக்கூடத்திற்கு ராமலிங்கமே அவருடைய காரில் அழைத்துப் போனார்..

"ஐயா.. நான் பஸ்ஸில் வருகிறேங்கய்யா.." பூர்ணிமா தயங்கி நின்றபோது..

"நான் உன் கார்டியன்.. என்னுடன் காரில் வராமல் பஸ்ஸில் வருகிறாயா.. காருக்குள் ஏறு.." என்று அதட்டல் போட்டு ஏறவைத்தார் அவர்..

வழிநெடுக அவளுக்குப் பலவித புத்திமதிகள் சொல்லிக்கொண்டே வந்தார்..

"அப்பா போயிட்டாருன்னு கவலைப்படக்கூடாது.. படிப்பில் கவனமாய் இருக்கணும்.."

"சரிங்கய்யா.."

"வீட்டுக் கவலை இருக்கக் கூடாது.. இத்தனை நாளா சித்தய்யனா உன் குடும்பத்தைப் பார்த்துக் கிட்டான்..? கனகம்தானே பார்த்துச்சு.. இனிமேயும் அது பார்த்துக்கும்.. பொறுப்பாய் படி.."

"சரிங்கய்யா.."

குரு உபதேசம் பண்ண கேட்டுக் கொள்ளும் சிஷ்யை ஆனாள் அவள்.. பள்ளியில் தலைமை ஆசிரியையின் அறைக்குப் போய் பூர்ணிமா தாமதமாக வந்ததற்கு விளக்கம் கொடுத்துவிட்டு அவளை விடுதியில் ஒப்படைத்துவிட்டுக் கிளம்பினார், அந்த மிகப் பெரும் பணக்காரர்..

அவரின் வார்த்தைகள் பூர்ணிமாவின் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்க.. வெறிகொண்டவளாய் அவள் படித்தாள்.. பள்ளியிறுதித் தேர்வில் மாவட்டத்தில் முதல் மாணவியாக தேர்ச்சி பெற்றாள்..

ராமலிங்கத்திடமும், பரிமளத்திடமும் அவள் ஆசிபெறச் சென்றபோது.. ராமலிங்கம் அவளுக்கு ஒரு கைக்கடிகாரத்தை பரிசாக அளித்தார்.. பரிமளமோ, இரண்டு பவுனில் மெல்லிய தங்கச் செயின் ஒன்றை அணிவித்து விட்டாள்..

"அம்மா.. இது எதுக்கும்மா..?"

"போட்டுக்கம்மா.. எங்கள் பெயரைக் காப்பாற்றி யிருக்கிற.. நாங்கள் படிக்க வைப்பதற்கு ஓர் அர்த்தம் இருக்கிறதுன்னு எல்லோருக்கும் தெரியப்படுத்தி விட்ட.. அதுக்குத்தான் இந்தப் பரிசு.. போட்டுக்க.."

மேல்நிலைக் கல்வியின் முதலாமாண்டில்.. பூர்ணிமா, ராமலிங்கம் பரிசளித்த கைக்கடிகாரத்துடனும், பரிமளம் பரிசளித்த தங்கச் செயினோடும் பள்ளிக்குச் சென்றாள்..

"இதற்கு மேல் என்ன படிப்பு படிக்க ஆசைப்படு கிறாயம்மா..?" ராமலிங்கம் அன்புடன் வினவிய போது..

"நான் இன்ஜினீயரிங் படிக்க ஆசைப்படுகிறேன்.. ஐயா.." என்று மரியாதையுடன் பதிலளித்தாள் பூர்ணிமா..

மேல்நிலைப்பள்ளியில், கணிதத்தை சிறப்புப் பாடமாகக் கொண்ட முதல் குரூப்பில் பூர்ணிமாவைச் சேர்த்து விட்டார் ராமலிங்கம்..

பூர்ணிமா கவனமாகப் படித்தாள், முதலாண்டு முடித்து இரண்டாம் ஆண்டு படிப்பு வந்தபோது, இரவு பகலாய் கண்விழித்துப் படித்தாள், தேர்வுகளை நல்ல முறையில் எழுதினாள்..

மேல்நிலைப் பள்ளித் தேர்வுகள் முடிந்து நாச்சியார் புரம் திரும்பியவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது..

ராமலிங்கமும், பரிமளமும் காலமாகி விட்டிருந்தார்கள்..

"என்னம்மா சொல்றீங்க..?" பூர்ணிமா நெஞ்சைப் பிடித்துக்கொண்டு அமர்ந்துவிட்டாள்..

தந்தையின் பாசத்தையும்.. பாதுகாப்பையும் அளித்த ஊரின் பெரிய மனிதர்.. சொன்ன சொல்லைக் காப்பாற்றும் நேர்மையாளர்.. உயிரோடு இல்லையா..?

பெண்பிள்ளையின் பொறுப்பை ஏற்கத் தயங்கிய கணவரிடம் பிடிவாதமாய் வாதாடி.. ஒரு பெண் குழந்தைக்கு படிப்பை அளிக்கும் வரத்தைப் பெற்றுத்தந்த அந்த அன்பு தெய்வம் உயிரோடு இல்லையா..?

ராமலிங்கம் அளித்த கைகடிகாரமும், பரிமளம் அணிவித்துச் சென்ற தங்கச் சங்கிலியும் அவள் உடம்பில் கல்லாய் கனத்தன..

"எப்படிம்மா.. இது எப்படிம்மா நடந்தது..?"

"ச்சு.. என்னத்தடி சொல்வேன்.. முதலில் அந்தம்மா தான் உயிரை விட்டுச்சு.. திடீர்னு நெஞ்சைப் பிடிச்சுக் கிட்டு இருந்த மகராசி பூவோடயும், பொட்டோடயும் போய்ச் சேர்ந்துவிட்டது.."

"ஐயோ.. இது என்னம்மா கொடுமை..?"

"கொடுமைதான்.. இதை யாருகிட்ட சொல்லி அழுவது..? பெண்டாட்டி செத்த மறுநிமிஷமே மறு கல்யாணம் பண்ணுகிற உலகம் இது.. அந்த மகராசி போன நாளில் இருந்து பல்லில் பச்சைத் தண்ணிகூட படாமல் விரதம் இருந்து மறுவாரமே உயிரை விடும் மகராசனை எங்கேயாவது நீ பார்த்திருக்கிறாயா..?"

"ஐயா.. அப்படித்தான் போய் விட்டாரா..?"

"ஆமாம்.. இது கொடுமைதான்.."

"எனக்கு ஏம்மா சொல்லவில்லை..?"

"பரீட்சை சமயம்.. வேணாமின்னு கணக்குப் பிள்ளை சொல்லிவிட்டாரு.. எனக்கும் அது சரின்னு பட்டுச்சு.."

"கடைசியா அவங்க முகத்தை பார்த்திருப்பேனே.."

"இப்ப என்னம்மா.. நம்ம வீட்டில அவங்க போட்டோவை பெரிசு பண்ணிமாட்டி வை.. நினைத்த போதெல்லாம் பார்த்துக்க.."

சொன்னபடி கனகம் சந்தைக்குப் போனபோது.. ராமலிங்கம், பரிமளம் சேர்ந்திருந்த போட்டோவை பெரிது பண்ணி.. பிரேம் போட்டுக் கொண்டு வந்து வீட்டில் மாட்டி வைத்தாள்..

தினமும் தோட்டத்தில் பூத்த மலர்களைக் கோர்த்து மாலையாக்கி அந்தப் படத்திற்கு அணிவித்து விட்டு, ஊதுபத்தி ஏற்றி வைத்து அதன் முன் கண்மூடி வணங்கி நிற்பதை வழக்கமாகக் கொண்டாள் பூர்ணிமா..

இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன.. தேர்வு முடிவுகள் வெளியாகிவிட்டன.. மாவட்டத்தில் முதல் மாணவி யாகவும்.. மாநிலத்தின் பதினைந்தாவது இடத்தைப் பிடித்தும் தேர்வில் வெற்றி பெற்றிருந்தாள் பூர்ணிமா..

"அம்மா.. இதைக் கேட்க.. ஐயாவும், அம்மாவும் இல்லையே.."

பூர்ணிமா கண்ணீர் பெருகி அழுதாள்..

"வானத்தில் இருந்து அவங்க பார்த்துக்கிட்டுத்தான் இருப்பாங்கம்மா.." கனகம் ஆறுதல் சொன்னாள்..

தேர்வு முடிவுகள் வந்தபின்னாலும், மேற்படிப்பைப் பற்றி பூர்ணிமா பேச்சை எடுக்கவில்லை.. ஏன் என்று கனகமும் கேட்கவில்லை..

எதனால் பூர்ணிமா மௌனமாக இருக்கிறாள் என்பதை நன்கு அறிவாள்..

ராமலிங்கமும் பரிமளமும் உயிரோடு இல்லை.. பூர்ணிமாவைப் படிக்க வைக்க வாக்கு கொடுத்திருந்தவர்கள் இவர்கள்தான்.. இவர்களே இல்லையெனும்போது மேற்படிப்பு என்பது பூர்ணிமாவிற்கு கனவு அல்லவா..?

எதையும் நினைத்து ஏங்காமல், இயல்பாய் வீட்டு வேலைகளையும் தோட்ட வேலைகளையும் பார்க்க ஆரம்பித்தாள் பூர்ணிமா..

தினப்படி வேலைகளில் ஒன்றாக, மாலை தொடுத்து ராமலிங்கம், பரிமளம் படத்திற்கு சூட்டுவதை வைத்துக் கொண்டாள்..

ஒருநாள் மாலை.. வழக்கப்படி அவர்களின் படத்திற்கு புது மாலையைப் போட்டுவிட்டு.. ஊதுபத்தி ஏற்றியவள்.. கண்மூடி கரம் கூப்பி வணங்கி நின்றாள்.. அவளது கண்களில் இருந்து நீ பெருக்கெடுத்து வழிந்து கொண்டிருந்தது..

உங்களால்தான் இந்த நான்கு வருடங்களும் உயர்ந்த நிலையில் இருந்த பெரிய தரமான பள்ளியில் என்னால் படிக்க முடிந்தது.. இந்த அளவிற்கு நான் ப்ளஸ்டூ படிக்க முடிந்ததே நீங்கள் எனக்கு தந்த வரம், என்னோடு நீங்கள் இல்லையே என்பதுதான் எனக்குப் பெரிய குறை.. என்னை மேலே படிக்க வைக்க நீங்கள் இல்லாமல் போனீர்களே என்று ஒருபோதும் நான் நினைக்கமாட்டேன்..

கண்களில் வழியும் நீரோடு அவள் கண்களைத் திறந்தபோது.. கண்ணீர் திரையின் ஊடே.. அவளைப்

பார்த்துக் கொண்டே நின்றிருந்த அவன் தென்பட்டான்..

கூப்பியிருந்த கைகளை விலக்கிக் கொள்ளாமல் கண்ணில் வழிந்த நீரைத் துடைத்துக் கொள்ளாமல் அவள் வினவினாள்..

"யார் நீங்கள்..?"

"சந்தானகிருஷ்ணன்.."

"என்ன வேண்டும்..?"

"நீதான் வேண்டும்.."

சட்டென்று தன்நிலைக்கு வந்தாள் அவள்.. அவசரமாய் குவித்த கரங்களைக் கொண்டு முகம் துடைத்துக் கொண்டவள் கோபமாய் அவனை ஏறிட்டாள்..

உயரமாய்.. கம்பீரமாய் மேல்தட்டு இளைஞனின் நவ நாகரீகத் தோற்றத்துடன் ஆளை அளக்கும் பார்வையுடன் நிமிர்ந்து நின்றிருந்தான் அவன்..

"மிஸ்டர்..!"

"சந்தான கிருஷ்ணன் என்றேனே.."

"நீங்கள் வெளியூரா..?"

"அப்படியும் சொல்லலாம்.."

"அதனால்தான் இந்த ஊர்ப் பழக்கம் தெரியவில்லை.."

"ம்..ம்.. அடிக்கடி வந்திருந்தால் தெரிந்திருக்கும்.."

"இது கிராமம்.."

"எனக்கும் தெரியுமே.."

"இங்கேயெல்லாம் இப்படிப்பட்ட பேச்சுக்களை அனுமதிக்க மாட்டார்கள்.. முதுகில் டின்கட்டி விடுவார்கள்.."

"ஓஹோ.. ஆனால், நான் என்ன தவறாகப் பேசினேன்..?"

"முன் பின் தெரியாதவர்கள் வீட்டில் நுழைந்து ஒரு வயதுப் பெண்ணிடம் இப்படிப் பேசலாமா..?"

"இது தெரிந்தவர்கள் வீடுதான்.. அத்தோடு.. உனக்கு என்ன ஒரு வயதுதான் ஆகிறதா..?"

"வம்புக்கு இழுக்கிறீர்களா..?"

"நான் அந்த மூடில் இல்லை.."

"வேறு எந்த மூடில் இருக்கிறீர்கள்..?"

"சீரியஸ் மூடில் இருக்கிறேன்.."

"பேச்சைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே.."

"ஒரு வார்த்தையில் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு.. அதைக்கூடத் தெரிந்து கொள்ளாத நீ எப்படி ஸ்டேட் லெவலில் ரேங்க் வாங்கி பாஸ் பண்ணியிருக்கிறாய்..?"

பூர்ணிமாவிற்கு தூக்கிவாரிப் போட்டது.. இவனுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்..

"ஏன் சார்.. திடீர்ன்று வீட்டிற்குள் வந்தீங்க.. யார் நீங்கன்னு கேட்டா சந்தானகிருஷ்ணன் என்கிறீங்க.."

"அதுதானே என் பெயர்..?"

"என்ன வேண்டும்ன்னு கேட்டா நீ வேண்டும் என்று சொல்கிறீங்களே.. இது கண்ணியமான பேச்சா..?"

அவன் முகத்தில் இப்போது இறுக்கத்துடன் கூடிய கோபம் தெரிந்தது.. அவளைத் துளைத்துவிடுவது போல் ஒரு பார்வை பார்த்தான்..

"கண்ணியத்தைத் தவிர வேறு எதையும் என்னைப் பெற்றவர்கள் எனக்குக் கற்றுத் தரவில்லை.."

அவனது முகம் எதையோ உணர்த்த, பூர்ணிமா பேச்சிழந்தாள்..

'இந்த அமைதியும்.. நிமிர்வும்.. கோபமும்.. எனக்குப் பழக்கமானதாகத் தோன்றுகிறதே.. யார் இவன்..?'

"உங்களைப் பெற்றவர்கள் யார்..?"

"நீ இவ்வளவு நேரும் கண்களை மூடிக்கொண்டு கை குவித்துக் கண்ணீரோடு மனதிற்குள் யாரிடம் பேசிக் கொண்டிருந்தாயே.. அவர்கள்தான் என்னைப் பெற்றவர்கள்.."

"என்னது..?"

பூர்ணிமா சட்டென்று நிமிர்ந்து அவனது முகத்தையே இமைக்காமல் பார்த்தாள்.. அவள் கண்களில் நின்றிருந்த கண்ணீர் மீண்டும் பெருக்கெடுத்து.. நாத்தளுதளுக்க.. உணர்ச்சி வெள்ளத்தில் சிக்கி.. அவள் திக்கு முக்காடிப் போனாள்..

'இவன் ஐயாவின் மகனா.. என்னை ஆதரித்த அந்த அன்பு தெய்வங்கள் பெற்றெடுத்த குலக்கொழுந்து இவன்தானா..'

"என்னை மன்னித்துவிடுங்கள் சார்.. நீங்கள் ஐயாவின் மகன்னு எனக்குத் தெரியாது.." அவள் கரம் கூப்பி மன்னிப்பு கேட்டாள்..

அவன் அவளை விட்டுவிட்டு பூமாலைக்குள் சிரித்துக் கொண்டிருந்த பெற்றோரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்..

## 4

பூர்ணிமா பரபரவென்று வெளியே ஓடி கயிற்றுக் கட்டிலைத் தூக்கிக் கொண்டு வந்து போட்டாள்.. அதன் மேல் விரிப்பு ஒன்றை விரித்து விட்டாள்..

"உட்காருங்கள் சார்.."

அவன் அமைதியாய் அமர்ந்துகொண்டான்..

"வீட்டில் உன் அம்மா இல்லையா..?"

"தோட்டத்தில் இருக்கிறாங்க.. கூப்பிட்டுக்கிட்டு வரவா..?"

"ம்ம்.."

பூர்ணிமா அவசரமாய் தோட்டத்தை நோக்கி ஓடினாள்.. களை எடுத்துக் கொண்டிருந்த கனகம், களைக் கொத்தை அப்படியே போட்டுவிட்டு இழுத்துச் செருகியிருந்த சேலையைச் சரிசெய்த வண்ணம் வீட்டிற்கு ஓடிவந்தாள்..

"வணக்கம் சின்னய்யா.."

"வாங்கம்மா.."

"பூர்ணி.. காபித்தண்ணி போடு.."

"இருக்கட்டும்.."

"நீங்க அப்படிச் சொல்லக் கூடாது.. பூரணிக்கு உங்க அப்பா மேலயும்.. அம்மா மேலயும் உயிர்.. அவங்க போன சேதி கேட்டு ஒரு மாதமா.. சரியாச் சாப்பிடாமல் அழுதுக்கிட்டு இருந்தா.."

கனகம் சொல்லிக்கொண்டே போக, சந்தான கிருஷ்ணன் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து லேசாகத் திரும்பி.. சமையலறையில் காபி போட்டுக் கொண்டிருந்த பூர்ணிமாவை வாத்சல்யத்துடன் பார்த்தான்..

அவன் வரும்போது.. பெற்றவர்களின் படத்திற்கு முன்னால் கண்ணீரோடு கைகூப்பி நின்ற அவளின் தோற்றம் அவனுடைய நினைவிற்கு வந்தது..

"தெரியும்.."

"பெரியவங்க மனுஷ உருவில் நடமாடிக்கிட்டு இருந்த தெய்வங்கள்.. அவங்க போனபின்னால்..

இந்த ஊரே இருண்டுபோய்விட்டது போல இருக்குங்க சின்னய்யா.."

அவன் பதில் கூறாமல் பூர்ணிமா கொண்டு வந்து நீட்டிய காபியை வாங்கிக் குடிக்க ஆரம்பித்தான்..

அவன் குடித்து முடித்து நீட்டிய காலி தம்ளரை பெற்றுக் கொண்ட பூர்ணிமா, உள்ளே செல்லத் திரும்பினாள்..

"நில் பூர்ணிமா.." என்றான் அவன்..

அவள் நின்றாள்.. அவன் முகத்தைப் புரியாமல் பார்த்தாள்..

"நான் எதற்கு வந்திருக்கிறேன்னு தெரியுமா..?"

"தெரியாது.."

"உன் மேல் படிப்பு சம்பந்தமாக உன்னோடு பேசி விட்டுப் போக வந்திருக்கிறேன்.."

பூர்ணிமா பேசுவதற்கு வார்த்தைகளைத் தேடித் தவித்தாள்.. கனகம் பரவசத்துடன் கைகூப்பினாள்..

"என்ன படிக்கப் போகிற..?"

"அதைப்பற்றி யோசிக்கவில்லை.."

"ஏன்..?"

"என்னைப் பற்றியும், என் படிப்பைப் பற்றியும் கவலைப்பட்ட ஐயாவும், அம்மாவும் போய்விட்டார்கள்.. எனக்கென்று ஒரு இதயம், இனி இந்த உலகத்தில் இருக்கிறதாங்கிற நினைவில் நான் அதைப் பற்றியே நினைத்துப் பார்க்கவில்லை.."

அவளது வார்த்தைகளில் வெளிப்பட்ட உணர்வுகள் அவனைத் தாக்கின.. அவளுக்கு தன் பெற்றவர்கள் மேல் இருந்த பற்றுதலைக் கண்டவனுக்கு நெஞ்சம் நெகிழ்ந்தது..

"ஏன் அப்படி நினைக்கிற..? நான் இல்லையா உனக்கு..?"

"என்ன சொன்னீங்க..?"

மின்சாரம் தாக்கப் பெற்றவளாய் அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.. அவனது வார்த்தைகள் பூஞ்சிறகாய் அவள் இதயத்தில் பதிந்தன..

"அம்மாவும்.. அப்பாவும்.. அவர்களுடைய கடைசி நிமிடத்தில் என்னிடம் கேட்டு வாங்கிக் கொண்ட வாக்குறுதி, உன்னை மேலே படிக்க வைக்கவேண்டும் என்பதுதான்.. இந்த ஊருக்கு முன்னிலையில் என் அப்பா உன்னை படிக்க வைப்பதாக வாக்கு கொடுத்திருக்கிறார்..

பாதியில் அவர் போனாலும் அவர் விட்டுச் சென்றதை நிறைவேற்ற வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.. நான் உன்னைப் படிக்க வைக்கிறேன்.."

அவன் தன் கையிலிருந்த பெட்டியைத் திறந்தான்.. ஒரு விண்ணப்பப் படிவத்தை எடுத்து அவள் கையில் கொடுத்தான்..

"இன்ஜினீயரிங் படிக்க வேண்டும்ன்னு ஆசைப் பட்டாயாமே.. விண்ணப்பம் இது.. கையெழுத்துப் போடு.. இனி நான் தான் உனக்கு கார்டியன்.."

"சென்னையிலா சார்..?"

"ஆமாம்.. எனக்கு சென்னையில்தான் பிஸினஸ்.. உன்னை திருநெல்வேலியில் சேர்த்துவிட்டால் நான் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ள முடியாது.. அப்பா உன் பாதுகாப்பைப் பற்றியும் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.. நீ சென்னைக்கு வந்து படி.."

"ஆனால்.. என் அம்மா.. தங்கை.."

பூர்ணிமா அப்போதும் தயங்க.. கனகம் அவசரமாய் பதில் சொன்னாள்..

"அவள் மெட்ராஸுக்கு வருவாள் சின்னய்யா.. பூர்ணி நீ எங்கே இருந்தாலும் லீவு சமயத்தில்தான் எங்களைப் பார்க்க வரமுடியும்.. அது திருநெல்வேலியாக இருந்தால் என்ன..? மெட்ராஸாக இருந்தால் என்ன..?"

"வசுந்தராவின் படிப்பும்மா..?"

"இப்போதுதான் அவள் ஆறாம் வகுப்பை முடித்திருக்கிறாள்.. ஏழாம் வகுப்பு போகப் போகிறாள்.. நம்ம ஊரில்தான் நம்ம பள்ளிக்கூடம் பத்தாவது வரை வந்துருச்சே.. அவ படிக்கிற படிப்புக்கு நம்ம பள்ளிக்கூடமே போதும்.."

பூர்ணிமா அவன் நீட்டிய பேப்பரில் கையெழுத்தைப் போட்டாள்.. சந்தானகிருஷ்ணன் எழுந்து கொண்டான்..

"நான் அடுத்த வாரத்தில் வருகிறேன்.. நீ கிளம்பு வதற்கு தயாராக இரு.. வேறு எதையும் நினைத்து மனதை உழப்பிக் கொள்ளாதே.." என்றவன், அவனுடைய பெற்றோரின் படத்திற்கு முன்னால் போய் நின்றான்..

கண்கலங்க கைகூப்பி நின்றான்.. பின் கிளம்பிச் சென்றுவிட்டான்..

"அம்மா..!" நடந்து முடிந்தவைகளை நம்ப முடியாத பிரமிப்பில் பூர்ணிமா தாயைப் பார்த்தாள்..

"என்னை ஏம்மா பார்க்கிற..? செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்பார்கள்.. அதைப்போல இந்த மண்ணை விட்டுப் போன பின்னாலேயும்.. உன்னைப் படிக்க வைக்க அவங்க மகனை அனுப்பி வைத்திருக்கிறாங்களே... அந்த அன்பு தெய்வங்கள்.. அவங்களைப் பாரும்மா.. அவங்களைக் கையெடுத்துக் கும்பிடு.." கனகம் விழிகளில் வழிந்த நீரைத் துடைக்காமல் பேசினாள்..

பூர்ணிமா அவர்களின் படத்திற்கு முன்னால் கை குவித்து அழுதாள்.. கனகமும் உடன் சேர்ந்து அழ வசுந்தரா.. தானும் அழுவதற்கு முனைந்தாள்..

அடுத்து வந்த நாள்கள் இறக்கை கட்டி ஓடின.. சேர்த்து வைத்திருந்த சிறுவாட்டுப் பணத்தில் மகளுக்குப் புதுத் துணி எடுக்க நினைத்தாள் கனகம்..

"பூர்ணி.."

"அம்மா.."

"நீ டவுனுக்குப் படிக்கப் போன பின்னால.. பாவாடை தாவணி போட்டுக்கறதை விட்டுட்டு சுடிதாருக்கு மாறிட்ட.."

"அதுக்கு என்னம்மா.. இப்ப..?"

"பட்டணத்துக்கு படிக்கப் போற.. நல்லதா நாலு துணிமணி வாங்கணுமில்ல.. அதுதான்.."

"ஆமாமில்ல.. ஆனா.. உங்களிடம் பணம் இருக்கா தேம்மா.."

"சம்சாரிப் பொம்பளகிட்ட கை வறண்டு போகாதுடி மகளே.. ஆடு இருக்கு, மாடு இருக்கு, கோழி இருக்கு, தினப்படி செலவுக்கு காய்கறி இருக்கு.. பாலை விற்கலாம்.. மீதம் இருக்கிற பாலைக் காய்ச்சி உரை ஊத்தி தயிராக்கி.. அதைக் கடைந்து வெண்ணெயை எடுத்து அதையும் விற்கலாம்.. மிச்சமிருக்கிற மோரில் நம்மபாட்டுக்கு போக மீதி இருக்கிறதையும் விற்கலாம்.. சேர்த்து வைச்ச பணம் இருக்குடி மகளே.. நீ கிளம்பு.."

"ஆனா.. அது உங்களுக்கும் வசுவுக்கும் வேணுமே.."

"எங்களுக்கென்னடி.. நாங்க என்ன சீமையிலா இருக்கோம்..? இந்த நாச்சியார்புரத்திற்கு இருக்கிற துணிமணி போதும்.. நீ வா.."

கனகம் மகளைக் கிளப்பிக் கொண்டிருந்தபோது வாசல் பக்கமிருந்து கார் சத்தம் கேட்டது.. அவசரமாய் வாசலுக்கு ஓடி வந்தார்கள் அவர்கள்..

சந்தானகிருஷ்ணன் காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான்.. கனகம் அவசரமாய் வரவேற்க.. அவன் பெற்றவர்களின் படத்தின் முன் நின்று வணங்கிவிட்டு பூர்ணிமாவைப் பார்த்தான்..

"கிளம்பு.."

"எங்கே சார்.."

"சென்னைக்கு.."

"இப்போதேவா..?"

"ஆமாம்.. காலேஜ் ஆரம்பித்து ஒரு வாரம் ஆகி விட்டது.. நான்தான்.. நீ உன் அம்மா.. தங்கையுடன் இருந்துவிட்டு வர ஒரு வாரம் வேண்டும்கிற நினைவுடன் விட்டுவிட்டுப் போனேன்.. இனி தாமதிக்க முடியாது.."

பூர்ணிமா தயக்கத்துடன் கனகத்தைப் பார்த்தாள்.. கனகம் கையசைத்தாள்.. அவர்களின் பார்வை பரிமாற்றத்தைக் கண்டு புருவம் உயர்த்தினான் அவன்..

"என்ன விஷயம்..?"

"பூர்ணிமாவை டவுனுக்கு கூப்பிட்டுக் கொண்டு போய் விட்டுவர நினைத்தேன் சின்னய்யா.."

"ஏன்..? ஏதும் வேலை இருக்கா..?"

"இல்லைங்கய்யா.. அவளுக்குப் புதுசா துணி எடுக்கனும்.."

"சென்னையில் இல்லாத துணி வகையா இங்கே இருக்கப் போகிறது..?"

"சின்னய்யா.."

"பூர்ணிமாவிற்கு படிப்பைத் தவிர பாதுகாப்பையும் கொடுக்க வேண்டும்ன்னு அப்பாவும், அம்மாவும் சொல்லியிருக்கிறாங்க.. கார்டியனாக நான் பொறுப் பெடுத்துக் கொண்டிருக்கிறேன்.. அவளுடைய எல்லாச் செலவுகளையும் நான் பார்த்துக் கொள்வேன்.."

பூர்ணிமா சென்னைக்குக் கிளம்பத் தயாரானாள்..

"அக்கா.." என்று அழுத வசுந்தராவின் முன் மண்டியிட்டு அமர்ந்தாள்..

"நன்றாய் படி வசு.. படிப்புதான் நமக்கு எதிர்காலம்.. வேறு எதுவும் இல்லை.. அம்மா தனியாளாய் நின்று உழைத்து நம்மைக் காப்பாற்றிக்கிட்டு இருக்காங்க.. நீ அதை யோசித்து கவனமாய் படிக்கனும்.."

"சரிக்கா.."

பூர்ணிமா கையை ஆட்டிக் கொண்டே வருவதை பார்த்த வண்ணம் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் சந்தானகிருஷ்ணன்..

புள்ளியாகி தாயும் தங்கையும் கண் பார்வையிலிருந்து விலகிய பின் தலையை உள்ளுக்குள் இழுத்துக் கொண்ட பூர்ணிமா, காரின் பின்பக்க ஸீட்டில் சாய்ந்து உட்கார்ந்து கொள்ளாமல் நுனியில் அமர்ந்துகொண்டு வந்தாள்..

"பூர்ணிமா..!"

"சார்..?"

"நாம் சென்னைக்குப் போக பல மணி நேரம் ஆகும்."

'ஏன் இதைச் சொல்கிறான்..?' புரியாதவளாய் விழித்தாள் பூர்ணிமா..

"ஸீட் நுனியில் உட்கார்ந்துக்கிட்டு வருவதெல்லாம் பலமணி நேரக் கார் பயணத்திற்கு சரிவராது.. சாய்ந்து நன்றாக உட்கார்ந்துகொள்.. தூக்கம் வந்தால் தூங்கு.."

சங்கடத்துடன் ஸீட்டில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள் அவள்.. அவன் அவளைக் கவனித்துக் கொண்டிருப்பது அவளுக்கு இயல்பாய் இருக்க முடியாத ஓர் உணர்வைத் தந்தது..

மனதில் ஓடிய எண்ணத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவள் ஜன்னல் வழியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டே வந்தாள்.. சந்தானகிருஷ்ணன் மௌனமாக காரை ஓட்டிக்கொண்டு வந்தான்.. இடையில் சாலையோரமாய் இருந்த இளநீர் குவியலின் அருகே காரை நிறுத்தி இறங்கினான்.. இரண்டு இளநிகளை வாங்கி

ஸ்டிராபோடச் சொன்னவன்.. ஒன்றைக் காருக்குள் இருந்தவளிடம் நீட்டினான்..

"இளநீர் குடி.."

"எதற்கு சார்.. இதெல்லாம்.."

"வேறு எதற்கு.. குடிப்பதற்குதான்.."

பேசாமல் வாங்கிக் குடித்தாள்.. மீண்டும் கார் கிளம்பி ஓடியது.. காருக்குள் பேச்சுகளற்ற மௌனம் குடிகொண்டது.. சந்தான கிருஷ்ணன் காரில் இருந்த பிளேயரை போட்டுவிட்டான்..

'சரவணப் பொய்கையில் நீராடி..

துணை தந்தருள் என்றேன் இறைவனிடம்..

இருகரம் கூப்பி வரம் கேட்டேன்..

அந்த மன்னவன் இன்னருள் வரம் கொடுத்தான்..'

சந்தானகிருஷ்ணனுக்கு ஏனோ.. பூர்ணிமா இரு கரம் கூப்பி அவனுடைய பெற்றோரின் படத்தின் முன்னால் கண்மூடி கண்ணீர் வழிய நின்ற கோலம் தோன்றியது..

## 5

சந்தானகிருஷ்ணனின் மனதில் நினைவலைகளைத் தோற்றுவித்த அந்தப் பாடல் பூர்ணிமாவின் மனதில் வேறு வகையான நினைவலைகளைத் தோற்றுவித்தது..

'கண்ணீர் ஏன் விடுகின்றாய்.. நாங்கள் காற்றோடு கலந்து விட்டாலும் உன்னைக் காப்பாற்றத் தேடி வருவோம்..' என்று சொல்லாமல் சொல்லிவிட்ட அந்த பெரிய மனிதரையும், அவரின் மனைவியையும் நினைத்துக் கொண்டவளுக்கு மீண்டும் கண்களில் நீர் துளிர்த்தது.. அதைத் துடைத்துக் கொண்டவளை காரின் முன் பக்கக் கண்ணாடியின் வழியே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

"ஏன் கண் கலங்குகிறாய்..?"

"ஒண்ணுமில்லை சார்..!"

"அப்பா.. அம்மாவின் நினைவு வந்துவிட்டதா..?"

"ம்ம்..."

"உன் அப்பா அம்மாவின் நினைவு வருவது இயற்கை.. ஆனால், உனக்கு வருவது என் அப்பா அம்மாவின் நினைவு.. இதை நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது.."

"இதில் ஆச்சரியப்பட ஒண்ணுமில்லை சார்.. என் அப்பா, அம்மா எனக்குச் செய்ய வேண்டியதை உங்களுடைய அப்பாவும் அம்மாவும்தான் செய்தார்கள்.."

"ஓ.. நாங்கள் நிறைய பேருக்கு உதவி பண்ணியிருக் கிறோம்.. இத்தனை நன்றியையும்.. அன்பையும்.. யாரிடமும் நாங்கள் பார்த்ததில்லை.. உனக்கு ஒன்று தெரியுமா பூர்ணிமா.."

"என்ன சார்..?"

"உதவி செய்வது எவ்வளவு மனநிறைவைத் தருகிறதோ அதைப் போன்ற ஓர் நிறைவை உண்மையான அன்பும் நன்றியும் தரும்.."

"எனக்குத் தெரியவில்லை.."

"அதனால் பரவாயில்லை.."

அதற்குப் பின்னால் அவன் அதிகம் பேசவில்லை.. வழியில் மதுரையில் சாப்பிடுவதற்காக காரை நிறுத்தினான்..

"இறங்கு பூர்ணிமா.."

"எதற்கு சார்..?"

"சாப்பிட.. மதியம் மணி மூன்றாகிவிட்டதே உனக்குப் பசிக்கவில்லையா..?"

"எனக்கு இது பழக்கம்தான் சார்.."

பதில் சொன்னவளை இரக்கத்துடன் பார்த்தான் சந்தானகிருஷ்ணன்.. எளிமையான காட்டன் சுடிதார்.. கண்ணியமாய் போடப்பட்டு இருந்த துப்பட்டா.. நகர்ப் புற நாகரிகம் அறியாத நீண்ட பின்னல்.. ஒப்பனையற்ற இயல்பான முகம்.. ஏழ்மையை ஒப்புக்கொள்ளும் எளிiயான சுபாவம்..

'பாத்திரம் அறிந்து பிச்சை போட்டிருக்கிறார்கள் என் அப்பாவும்.. அம்மாவும்..'

தாய் தந்தையின் தேர்வை நினைத்து மனதிற்குள் அவர்களைப் பாராட்டிக் கொண்டான் அவன்..

"எனக்குப் பசிதாங்கி பழக்கமில்லை பூர்ணிமா.. வா.. சாப்பிட்டுவிட்டுப் போகலாம்.."

உள்ளே சென்று ஏ.ஸி. ஹாலில் அமர்ந்து மெனுகார்டை எடுத்துப் புரட்டினான்..

"உனக்கு என்ன வேண்டும்..?" என்று கேட்டான்..

"சார்..?" அவள் புரியாமல் விழித்தாள்..

"நீ என்ன சாப்பிடுகிறாய் பூர்ணிமா..?"

"சாப்பாடு சாப்பிடத்தானே வந்திருக்கிறோம்..?"

இவளுக்கு ஹோட்டல்களில் சென்று சாப்பிட்டு பழக்கமில்லை என்று புரிந்துகொண்டு மெல்ல சிரித்தான்.. அருகில் வந்த சர்வரிடம் அவனே ஆர்டர் செய்தான்.. உணவு வகைகள் வந்ததும், அவள் புறம் பிளேட்டை நகர்த்தி வைத்தான்..

"சாப்பிடு.." என்றவன்.. மடமடவென்று சாப்பிட ஆரம்பித்தான்..

எதிரே அமர்ந்திருந்தவள் சாப்பிடாமல் இருப்பதை உணர்ந்து கேள்வியாக பார்த்தான்.. அவள் விழித்தாள்..

"சாப்பிடவில்லையா..?"

"சார்.." அவள் தயங்கினாள்..

"என்ன..?"

"இது.. இதை வைத்துதான் சாப்பிட வேண்டுமா..?" அவள் முள்கரண்டியைக் காட்டி பரிதாபமாக வினவவும், அடக்கமாட்டாமல் சிரித்துவிட்டான் சந்தானகிருஷ்ணன்.. அவளின் முகம் சிவந்து விட்டது..

"முள் கரண்டியில் சாப்பிட்டுப் பழக்கமில்லையா..?"

"ம்ம்..."

"பரவாயில்லை.. பழகிக் கொண்டால் போகுது.. அதை இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம்.. இப்போது கையில் எடுத்துச் சாப்பிடு.."

சந்தானகிருஷ்ணன் இலகுவாகப் பேசியபடி கையிலிருந்த முள் கரண்டியை வைத்துவிட்டு சாதராணமாய் சாப்பிட ஆரம்பித்தான்..

பூர்ணிமாவின் முகம் இயல்பானது.. அவள் அவனைப் பார்த்தவாறு சாப்பிட்டு முடித்தாள்..

"குட்.. போகலாமா.."

சிறுகுழந்தை சாப்பிட்டு முடித்துவிட்டதை பாராட்டுவது போல அவன் பாராட்டவும், அவளுக்கு முகம் சிவந்துவிட்டது..

'அடிக்கடி முகம் சிவக்கிறாளே.. சிறு பெண்.. வெளியுலகில் பேசிப் பழகவில்லை போல.. ஆனால் ஒன்று.. இவளின் இந்த முகச் சிவப்பை இதுவரை நான் எந்தப் பெண்ணிடமும் பார்த்தது இல்லை..'

மீண்டும் கார் பயணம் துவங்கியது.. பூர்ணிமா மௌனமாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டு வர.. மாலை மயங்கும்போது கார் திருச்சியை தொட்டது.. பாதையோர காபி பாரில் காபி இரண்டை வரவழைத்து அவளுக்கு ஒன்றைக் கொடுத்துவிட்டு தானும் ஒன்றைப் பருகினான்..

பார்த்து பார்த்து அவன் கவனித்துக் கொண்டது பூர்ணிமாவிற்கு நெகிழ்ச்சியைத் தந்தது..

விழுப்புரத்தில் இரவுச் சாப்பாட்டிற்கு கார் நின்றது.. இப்போது முள் கரண்டியை முதலிலேயே தூக்கிப் போட்டு விட்டு கைகளால் அவன் சாப்பிட ஆரம்பிக்கவும், அவளின் பயந்த முகம் தெளிந்தது..

"என் கூட சாப்பிட வருவதென்றால் உனக்கு இத்தனை பயமா..?"

அவன் கேலியாக வினவினான்..

"ஏன் இப்படிக் கேட்கிறீங்க..?"

"முள் கரண்டியையே முறைத்துப் பார்க்கிறாயே.. அதனால் கேட்டேன்.."

அவளது கன்னச் சிவப்பை ரசித்தவாறு சாப்பிட்டு முடித்துவிட்டு எழுந்தான்.. அவள் பின்தொடர்ந்தாள்.. கார் கிளம்பியது..

நடுநிசியைத் தொடும் நேரத்தில் அவனுடைய கார் சென்னை நகரில் நுழைந்தது.. நீலாங்கரையில்.. மிகப் பெரிய பணக்காரர்கள் வசிக்கும் பகுதியில் இருந்த மாளிகை போன்ற ஒரு வீட்டின் முன் கார் சென்று நின்றது.. கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கினான் சந்தான கிருஷ்ணன்..

"இறங்கு பூர்ணிமா.."

"இங்கேயா..?"

"ஆமாம்.."

"நாம் காலேஜிற்குப் போகிறோம்ன்னு நினைத்தேனே.."

"உடனே காலேஜிற்கு போக முடியுமா..? இது மிட்நைட்.. காலையில் தான் நீ காலேஜ் போக முடியும்.. அதுவரை நிம்மதியாய் தூங்கு.."

"ஆனால், இது யாருடைய வீடுன்று தெரிய வில்லையே.."

"எங்கள் வீடுதான்.."

"ஓ.."

அந்த வீட்டின் முன்புற அமைப்பையும், விளக்குகள் ஒளிர்ந்த தோட்டத்தையும், நீச்சல்குளத்தையும், அவள் பிரமிப்புடன் பார்த்தாள்..

"உள்ளே வா..!"

அழைப்புமணியை அவன் அழுத்தியதும் கதவு திறந்தது.. பண்டரிபாயைப் போன்ற கருணை ததும்பும் முகத்துடன் சிநேகித்த சிரிப்புடன் ஒரு அம்மாள் எதிரே நின்றாள்..

"ஏன் இவ்வளவு நேரமாகிவிட்டது சந்தானம்..?"

"ம்ம்.. நேரமாகிவிட்டது அத்தை.."

"கெட்டிக்காரன்டா நீ..! என் கேள்விக்கு இதுதான் பதிலா..?"

"ஆமாம்.."

"இவள்தான் என் தம்பியும் தம்பி பெண்டாட்டியும் படிக்க வைப்பதாக வாக்கு கொடுத்திருந்த பெண்ணா..?"

"ஆமாம் அத்தை.."

அத்தையம்மாளின் பார்வை தன் மேல் படிவதை உணர்ந்த பூர்ணிமா மரியாதையுடன் கை குவித்தாள்..

"நான் முதன் முதலில் இவளைப் பார்க்கும்போது இதேபோல்தான் உங்களுடைய தம்பியும், தம்பி பெண்டாட்டியும் இருந்த படத்தின் முன்னால் கை கூப்பி.. கண்மூடி.. கண்ணீர் வழிய இவள் நின்றிருந்தாள்.."

சந்தானகிருஷ்ணனின் முகத்தில் ஓர் நெகிழ்ச்சி படர்ந்திருந்தது..

அத்தையம்மாளின் முகத்தில் இருந்த சிரிப்பு சட்டென்று மறைந்து முகத்தில் சோகம் அப்பிக் கொண்டது..

"அப்படியா.. இவளுக்கு உன் அப்பா.. அம்மா மேல் அவ்வளவு பக்தியா..?"

"வெறும் பக்தியில்லை.. கண்ணை மூடிக்கொண்டு மானசீகமாய் பேசிக் கொள்ளும் அளவுக்கு பக்தி.."

"உன் பெயர் என்னம்மா.."

"பூர்ணிமா.."

"சாப்பிட்டாயா..?"

"ஏன் அத்தை.. நடுராத்திரி வரை இந்த பெண்ணை பட்டினி போட்டு கூப்பிட்டுக் கொண்டு வந்திருப்பேன்னு முடிவே பண்ணி விட்டீங்களா..?"

"நீ செய்தாலும் செய்வேடா.."

அத்தையம்மாளின் சோகத்தை மாற்ற மருமகன் பேச்சை மாற்றுவதையும், மருமகன் சோர்ந்து விடக் கூடாது

என்பதற்காக அத்தையம்மாள் அந்த வேடிக்கைப் பேச்சில் இணைந்துகொள்வதையும் கண்ட பூர்ணிமாவின் மனம் நெகிழ்ந்தது..

இதுபோன்ற உறவுச் சங்கிலிகள் தான் இந்திய மண்ணில் குடும்ப வாழ்வை உலகுக்கு உதாரணமாகக் காட்டுகின்றன என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் பூரணி..

"படுக்கப் போம்மா.."

அத்தையம்மாள் காட்டிய அறையில் தன் சிறு பையை வைத்துவிட்டு.. குளியலறைக்குள் புகுந்தாள் பூர்ணிமா.. குளித்துவிட்டுப் படுத்தவள், அவளை யறியாமல் உறங்கிவிட்டாள்..

அதிகாலையில் வழக்கம் போல் விழிப்பு வந்துவிட, எழுந்து பல் துலக்கி முகம் கழுவி அறைக்கு வெளியே வந்தாள்..

"வாம்மா.. காபி சாப்பிடு.." நெற்றியில் திருநீறு துலங்க.. பூஜையறையில் இருந்து வெளிப்பட்ட அத்தையம்மாள் கூறினாள்..

பூர்ணிமா தயக்கத்துடன் காபியை வாங்கிக் கொண்டாள்..

"ம்ம்.. என் தம்பி அடிக்கடி சொல்வான்.. 'எல்லாப் பொண்டாடிகளும் நகை நட்டு வேணுமின்னு ஆசைப்படுவாங்க.. என் பொண்டாட்டி நம்ம ஊரில் இருக்கிற ஏழைப் பெண்ணுக்குப் படிப்பு வேணுமின்னு ஆசைப்படறா..'ன்னு.. அப்ப உன்னை ஒரு தரம் வந்து பார்க்கணும்னு நினைச்சுக்குவேன்.. ச்ச்.. இந்த தாயம்மா நினைச்சது எந்தக் காலத்தில் நிறைவேறியது..?"

'அத்தையின் பெயர் தாயம்மாவா..?' பூர்ணிமா என்ன சொல்வது என்று தெரியாமல் மெலிதாய் புன்னகைத்தாள்.

"குட்மார்னிங் பூர்ணிமா.." என்றபடி காலை ஜாகிங் போக அரை டிராயர், டிசர்ட்டுடன் வந்து நின்றான் சந்தான கிருஷ்ணன்..

"குட்மார்னிங் சார்.." என்றபடி அவனை நிமிர்ந்து பார்த்த பூர்ணிமா.. அவனை அந்த உடையில் பார்க்கவும்..

கூச்சப்பட்டுக் கொண்டு விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்..

அவளது கூச்சத்தை உணர்ந்து கொண்டவனின் இதழ்களில் முறுவல் மலர்ந்தது.. அதிக நேரம் நின்று அவளை சங்கடப்படுத்தாமல் வெளியேறிவிட்டான்..

"இந்நேரத்தில் எங்கே போகிறாங்க..?" வெகுளித் தனமாய் வினவினாள் பூர்ணிமா..

"ஜாகிங் போகிறான்.." அவளது அறியாத்தனத்தை ரசித்தபடி பதில் கூறினாள் தாயம்மா..

"ஜாகிங்ன்னா..?"

"ம்ம்.. மெதுவாய் ஓடுவது.."

"ஏன் அப்படி ஓடணும்..?"

"அது என்னவோ உடற்பயிற்சியாமே.."

"ஓ..."

கண்களை மலர்த்தியவளைப் பார்க்க தாயம்மாவிற்கு வேடிக்கையாக இருந்தது. அப்போது...

"அத்தை.." என்று அழைத்தபடி மாடிப்படிகளில் கண்ணில் தூக்கக் கலக்கத்தோடு இறங்கி வந்தாள் ஒரு இளம்பெண்..

"எனக்கு பெட்காபி கொண்டு வராமல் இங்கே யாரோடு உட்கார்ந்து வெட்டி அரட்டை அடித்துக் கொண்டிருக்கீங்க..? யார் இந்தப் பெண்..?"

இருபத்து இரண்டு வயது மதிக்கத்தக்க இருந்த அந்த சந்தியா, பூர்ணிமாவை துச்சமாகப் பார்த்தவாறு வினவினாள்..

அவளது விழிகள்.. தனது தோற்றத்தையும், எளிய உடைகளையும் அளவெடுப்பதை உணர்ந்த பூர்ணிமா விற்குள்.. தாழ்வுமனப்பான்மை தோன்றியது.. அவள் சங்கடப்படுவதை உணர்ந்த சந்தியாவின் கண்களில் ஏளனம் தோன்றியது..

# 6

சந்தியா சோபாவில் அமர்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டாள்.. அவள் உடுத்தியிருந்த விலையுயர்ந்த நைட்டியைப் பார்த்த பூர்ணிமாவிற்கு கசங்கிப்போன பழைய காட்டன் துணியினால் ஆன தன் சுடிதாரை நினைத்து சங்கடமாக இருந்தது..

'ச்சீ.. இப்படி நினைக்கக் கூடாது.. நான் படிக்க வந்திருக்கிறேன்.. எனக்குப் படிப்புதான் முக்கியம்.. அதை விட்டு விட்டு மனதை வேறு திசையில் செலுத்தக் கூடாது.. என் தகுதிக்கு, என்னால் இது போன்ற விலை குறைவான துணிகளைத்தான் போட முடியும்..' தன்னைத் தானே கடிந்து கொண்டாள் பூர்ணிமா..

அவளுடைய மனப் போராட்டத்தை அறிந்து கொண்டவள் போல் உதாசீனமாய் அவளைப் பார்த்தபடி தாயம்மாவிடம் வினவினாள் சந்தியா..

"சொல்லுங்க அத்தை.. யார் இந்தப் பெண்..? வீட்டு வேலை செய்வதற்காக கிராமத்தில் இருந்து வந்திருக்கிறாளா..?"

பூர்ணிமா துடித்துப் போய் விட்டாள்.. ஏழ்மை நிலையில் இருந்தாலும், தங்கள் தோட்டத்தில் உழைத்துச் சாப்பிட்ட கனகத்தின் மகள் அவள்.. கல்வியைத்தான் யாசகம் கேட்டாள்.. அவளைப் போய் இப்படிச் சொல்லி விட்டாளே..

வீட்டு வேலை செய்வதில் தவறில்லை.. அதுவும் ஒரு உத்தியோகம்தான்.. ஆனால், படிக்க வந்த பெண்ணை, வேலைக்கு வந்த பெண்ணாக நினைத்துச் சொன்னால் கேட்டுக் கொண்டிருப்பவளின் மனம் பாடுபடாதா..?

"சந்தியா.. அவசரப்பட்டு வார்த்தைகளைச் சிதற விடக் கூடாதுன்னு எத்தனை முறை உனக்குச் சொன்னாலும்.. ஏன் உன் புத்தியில் அது ஏற மாட்டேன் என்கிறது..? வார்த்தைகளைக் கொட்டிவிட்டால் அதைத் திரும்ப அள்ள முடியாது.."

"அத்தை ப்ளீஸ்.. காலையிலேயே உபதேசமா..?"

"நீதானே அதை ஆரம்பித்து வைத்த..?"

"இந்தப் பெண் யாரென்றுதானே கேட்டேன்.."

"நீ அத்தோடு நிறுத்தவில்லையே.. இந்தப் பெண் யாராக இருக்கும்கிற உன் யூகத்தையும் சேர்த்துச் சொன்னாயே.."

"தெரியாமல் சொல்லிவிட்டேன்.. போதுமா.."

"போதும்.. இந்தப் பெண்ணின் பெயர் பூர்ணிமா..!"

"என்னவோ.. எலிஸபெத் மகாராணியின் பெயரைச் சொல்வது போல் சொல்கிறீங்களே.. இவளுடைய பெயர் என்ன அவ்வளவு பிரபலமா..?"

"சந்தியா..!"

"ஏன் அதட்டுகிறீங்க அத்தை..?"

"இவள்தான் உன் அப்பாவும் அம்மாவும் படிக்க வைத்துக் கொண்டிருந்த பெண்.."

"ஓ.. படிக்க வசதியில்லாத அந்த ஏழைப் பெண்ணா..?"

சந்தியாவின் குரலில்தான் எத்தனை இளக்காரம்.. பூர்ணிமாவிற்கு அழவேண்டும் போல் இருந்தது.. அவள் எழுந்து கொண்டாள்..

"அத்தை..! நான் குளிக்கப் போகவா..?"

அங்கிருந்து நகரப் போன பூர்ணிமாவை சந்தியாவின் கோபக் குரல் தடுத்து நிறுத்தியது..

"ஏய்.. நில்லு.."

"என்னங்க.."

"இப்போது என் அத்தையை எப்படிக் கூப்பிட்டாய்..?"

"ஏன்.. அத்தைன்னு கூப்பிட்டேன்.."

"யாருக்கு யார் அத்தை..? இவங்க என்னுடைய அத்தை.. இனிமேல் அத்தைன்னு கூப்பிடும் வேலையை எல்லாம் வைத்துக் கொள்ளாதே.."

பூர்ணிமா உதட்டைக் கடித்துக் கொண்டு தலையை அசைத்தாள்.. தாயம்மாள், சந்தியாவை கண்டித்துக் கொண்டிருக்கையிலேயே பூர்ணிமா அந்த இடத்தை விட்டு ஓடி விட்டாள்..

சற்று நேரம்.. பூட்டிய அறைக்குள் அமர்ந்திருந்தாள்.. மனதிற்குள் ராமலிங்கம்.. பரிமளம் தம்பதியினரை நினைத்துப் பார்த்துக் கொண்டாள்.. அவளது கலக்கம் பறந்துவிட்டது..

'பேசியது யார்..? என்னை வளர்த்தவர்களின் பெண் தானே.. அவர்களுக்காக எதையும் தாங்கிக் கொள்ளலாமே.. இதைத் தாங்குவதா கஷ்டம்..?'

பூர்ணிமா எழுந்து குளித்து வேறு உடை மாற்றி லேசான ஒப்பனையுடன் அறையை விட்டு வெளியே வந்தாள்..

ஹாலில் நடுநாயகமாய் மாட்டியிருந்த பெரியவர் களின் படத்தின் முன்னே கண் மூடி வேண்டி நின்றாள்.. தோட்டத்திலிருந்து அப்போதுதான் வீட்டுக்குள் நுழைந்த தாயம்மா அதைக் கண்டாள்.. கண்மூடி நின்ற பூர்ணிமாவின் கோலம் மானசீகமாய் அவள் தம்பியிடமும், தம்பி மனைவியிடமும் பேசிக் கொண்டிருப்பதை உணர்த்த, நெகிழ்ந்து நின்றாள்.. வேண்டுதலை முடித்த பூர்ணிமா, கண்விழித்தபோது அப்போதுதான் உள்ளே வருபவளைப் போன்ற பாவனையுடன் தாயம்மாள் அவளைப் பார்த்துச் சிரித்தாள்..

காதலர்கள் பேசிக் கொள்வதற்கு மட்டும்தான் தனிமை வேண்டும் என்று இல்லை, கடவுளிடமும், கடவுளாகி விட்டவர்களிடமும் பேசுவதற்கும் தனிமை வேண்டும்..

அதை பூர்ணிமாவிற்கு கொடுத்த தாயம்மா.. பூர்ணிமாவிடம் அன்பாக வினவினாள்..

"சாப்பிட வருகிறாயாம்மா.."

"சரிங்கம்மா.."

'அத்தை..' என்பதை கவனமாய் தவிர்த்தவளைப் பார்த்த தாயம்மா, அவளது புத்திசாலித்தனத்தை எண்ணி வியந்தாள்.. 'அம்மா..' என்பது பாசத்தை குறிப்பிடும் சொல்.. அதுவே வீட்டு எஜமானியை அழைக்கும் சொல்லாகவும், பெரியவர்களை மரியாதையுடன் விளிக்கும் சொல்லாகவும் இருந்தது.. 'அம்மா..' என்று அழைக்கும் குரலைக் கேட்க தவமிருந்தவள் இன்று, அதைக் கேட்டுவிட்ட பாசத்துடன் பூர்ணிமாவை அணைத்துக் கொண்டாள்..

"இன்னும் இரண்டு இட்லி வைத்துக் கொள்ளம்மா.." என்று தாயம்மாள் உபசரித்துக் கொண்டிருந்தபோது..

"என்ன அத்தை.. வீட்டுக்கு விருந்தாளி வந்தால் என்னை மறந்துவிட வேண்டுமா.." என்று வினவியவாறு சந்தானகிருஷ்ணன் வந்து அமர்ந்தான்..

"உன்னை யாருடா மறந்தது..?"

"வேறு யார் மறந்ததாம்.. எல்லாம் நீங்கள் தான்.."

"உனக்குத்தான் பசிக்குமா.. இவளுக்குப் பசிக்காதா..?"

"பசிக்காதாமே.."

"ஏன் அப்படிச் சொல்கிற..?"

"நேற்று என்னுடன் வந்தவள் வாயைத் திறந்து பசிக்கிறதுன்னு ஒரு வார்த்தை சொல்ல வேண்டுமே.. ஊஹும்.. அமைதியாய் பிடித்து வைத்த பிள்ளையார் போல உட்கார்ந்து இருந்தாள்.."

"அதற்காக நீ பட்டினிபோட்டா அவளை அழைத்து வந்த..?"

"பொறுமை அத்தை.. பொறுமை.. எனக்கும் வயிறுன்னு ஒன்று இருக்கிறதில்லையா.. அதனால் என் வயிறுக்கு கொஞ்சம் ஈயும்போது இவளுக்கும் கொஞ்சம் வாங்கிக் கொடுத்தேன்.."

விளையாட்டாய் அவன் பேசுவதைக் கேட்டதனால்.. பூர்ணிமா அடுத்தவர் வீட்டில் இருக்கிறோம் என்ற உணர்வை விட்டாள்.. இயல்பாய் அவளால் சாப்பிட

முடிந்தது.. அந்த இயல்புக்கு வேட்டு வைக்க சந்தியா அங்கு வந்து சேர்ந்தாள்..

"அத்தை..! இது என்ன நான் சாப்பிட வருவேன்னு உங்களுக்குத் தெரியாதா..?"

"ஏம்மா.. உனக்கும் பிடித்த டிபனை செய்து வைத்திருக்கிறேனே.."

"பிடித்த டிபன் இருந்தால் போதுமா..?"

"போதாதா..?"

"பிடிக்காத வேலைகளையும் சேர்த்து செய்து வைத்திருக்கிறீங்களே..?"

"பிடிக்காத வேலையா..?"

"ஆமாம்.."

"நீ என்ன சொல்கிற சந்தியா... எனக்குப் புரிய வில்லையே..?"

"உங்களுக்கு எதுதான் புரிந்தது..? இது புரிய.."

"நீதான் புரிய வை.."

"அத்தை..! இந்தப் பெண்ணுக்கு முதலிலேயே சாப் பாட்டைப் போட்டு அனுப்பி வைத்திருக்க வேண்டியது தானே.. எனக்கு சமமாக உட்கார வைக்க வேண்டுமா..?"

பூர்ணிமா விக்கித்துப் போனாள்.. அவளது தொண்டைக் குழியில் உணவு சிக்கிக் கொண்டது.. கண்களில் நீர் தளும்ப சட்டென்று எழுந்திருக்கப் போனாள்..

"பூர்ணிமா.. உட்கார்..!" சந்தானகிருஷ்ணன் குரல் கண்டிப்புடன் வெளிவந்தது..

"நான்.. நான்.. எனக்கு போதும்.." பூர்ணிமா தடுமாறினாள்..

"எப்படிப் போதும்..? நீ சாப்பிட்டு முடிக்க வில்லையே.. இரண்டு இட்லிகள் உனக்குப் போதுமா..? உட்கார்..!" தாயம்மா கோபமாய் கூறினாள்..

"சார்.. எனக்கு இது போதும்.. அம்மா, ப்ளீஸ்.. எனக்கு வயிறு நிறைந்துவிட்டது.." பூர்ணிமா மறுத்தாள்..

"அடடா.. இது என்ன டைனிங் ஹாலா..? இல்லை டிராமா நடக்கும் மேடையா..? இந்தப் பெண் என்னமோ ஃபிலிம் காட்டுகிறாள்.. அத்தையும் மருமகனும் சேர்ந்து தாங்கு தாங்குன்னு தாங்குறீங்க.. யாரை.. எங்கே வைக்க வேண்டும்ன்னு உங்கள் இருவருக்கும்

தெரியுமா.. இல்லை தெரியாதா.." சந்தியா அலட்சியமாய் பூர்ணிமாவைப் பார்த்தபடி பேசினாள்.

"சந்தியா.. கீப் கொய்ட்.. பூர்ணிமா..! உனக்கு ஒன்றைச் சொல்கிறேன். நீ படிக்க வந்திருக்கிறாய்.. அதுவும் ஊர்விட்டு ஊர் படிக்க வந்திருக்கிறாய்.. பள்ளி வேறு, காலேஜ் வேறு.. இது சென்னை.. அம்பாசமுத்திர மில்லை.. ஒவ்வொருவரும் ஒரு விதமாய் இருப்பார்கள்.. அவனைத்தையும் சந்தித்து நீ நிமிர்வுடன் நிற்க வேண்டாமா..? அதோடு நான் உன் கார்டியன்.. இந்த வீடு, என் பெயருக்கு என் அப்பா வாங்கிக் கொடுத்திருக்கும் வீடு.. இங்கேதான் நீ வார விடுமுறைகளுக்கும் மற்ற விடுமுறைகளுக்கும் வந்து தங்கிப் போக வேண்டும்.. இப்போது நீ தங்கியிருக்கும் ரூம் இனி உன்னுடையது.. நீ இங்கே வரும் போது அந்த ரூம் உனக்காக காத்திருக்கும்.."

"சார்.."

"உட்கார்ந்து சாப்பிடு பூர்ணிமா.. இன்ஜினீயரிங்க படிக்கப் போகிறாய்.. முதல் வருடம் ராகிங் இருக்கும்.. அதை நீ சந்திப்பாயா.. மாட்டாயா.. அதுபோல்தான் இதுவும்.. திரும்பவும் உனக்குச் சொல்கிறேன்.. இது என் வீடு.. நான் உனக்கு கார்டியன்.. இந்த வீட்டில் உனக்கும் எல்லா உரிமையும் இருக்கிறது.. உட்கார்.."

பூர்ணிமா தயக்கத்துடன் அமர்ந்து நடுக்கத்துடன் தட்டில் கை வைக்கும்போது சந்தியா கிறீச்சிட்டாள்.. பூர்ணிமாவின் உடல் தூக்கிப் போட்டது..

"பார்த்தீங்களா அத்தை.."

"பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன் சந்தியா.."

"அண்ணன் சொன்னதைக் கேட்டீங்களா..?"

"கேட்டேன்.."

"இது அவன் வீடாம்.."

"அதுதானே உண்மை.. இந்த வீடு அவனுடைய வீடுதானே..?"

"அப்போ எனக்கு இந்த வீட்டில் எந்த உரிமையும் இல்லையா..?"

"இருக்கிறது.. அண்ணன் வீடுங்கிற முறையில் தான் உன் உரிமை இருக்கிறது.. இந்த வீட்டிற்கு எஜமானன் அவன்தான்.. அதை நீ மறந்து விடாதே.."

"இது என் வீடு இல்லையா..?"

"இல்லை.. உன் பெயரில் இருக்கும் வீட்டை வாடகைக்கு விட்டிருக்கிறாய்.. அதில் வரும் வாடகையை மாதா மாதம் நீதான் வாங்கி உன் பெயரில் பேங்க்கில் போட்டு வைத்துக் கொள்கிறாய்.. மறந்துவிட்டதா..?"

"என் அம்மாவும் அப்பாவும் இருந்தால் இப்படிச் சொல்வார்களா..?"

"அவர்கள் சொல்லுக்கு உன்னிடம் மதிப்பிருக் கிறதா..? இந்தப் பெண் பூர்ணிமாவின் பொறுப்பை உன் அண்ணன் ஏற்றுக்கொள்ள வேண்டும்ன்னு அவர்கள் சாகும்போது சொல்லிவிட்டுப் போனார்களே.. அது உன் நினைவில் இருக்கிறதா..? பெற்றவர்களின் சொல்லுக்காக நாச்சியார்புரத்திற்கு போய் இந்தப் பெண்ணை அழைத்து வந்திருக்கிறான் உன் அண்ணன்.. நீ என்ன செய்கிறாய்..? இந்த சின்னப் பெண்ணின் மனதை நோகடிக்கிறாய்.. இதை யார் உனக்கு கற்றுத் தந்தது..? உன்னைப் பெற்ற பரிமளமும் வளர்த்த நானும் இதை உனக்குக் கற்றுத் தரவில்லையே.. வேறு எங்கு கற்றாய்..?"

தாயம்மா கோபத்துடன் சந்தியாவை சாடிக் கொண்டிருக்கும் போது சந்தானகிருஷ்ணன் குறுக் கிட்டான்..

"விடுங்கள் அத்தை.. அவளுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்.."

"உனக்குத்தான் நிறைய தெரிந்திருக்கிறதே அண்ணா..! நான் பாவம் பெண்பிள்ளை.. எனக்கு இவ்வளவுதானே தெரியும்.."

சந்தானகிருஷ்ணன், தாயம்மாவைப் பார்த்தான்.. அவளது முகத்தில் மெலிதான கோபம் வந்திருந்தது..

"சந்தியா.. அப்படி என்ன உன் அண்ணன் ரொம்பவும் விவரமானவனாக ஆகிவிட்டான்..? நீ விவரமில்லாமல் போய் விட்டாய்..?"

சந்தியா குரோதமாக சந்தானகிருஷ்ணனைப் பார்த்தாள்.. அவன் வெறுமையான பார்வையை தங்கையின் மேல் வீசினான்.. ஒரே வயிற்றில் பிறந்த அண்ணன் தங்கைகளின் சொற்போரைக் கண்ட தாயம்மாவின் மனம் வேதனைப்பட்டது..

பணம் என்பது பாசத்தைப் பிரிக்கும் கருவியா..?

## 7

நாச்சியார்புரத்தின் ஊர் பண்ணையார் ராமலிங்கத்திற்கு கிராமத்தில் அரண்மனை போன்ற பெரிய வீடும், தோப்புகளும், வயல்களும் உண்டு.. இது கிராம மக்கள் அறிந்தவை..

அறியாதது அவர் தன்னுடைய காலத்தில் சென்னையில் மோட்டார் சாமான்கள் தயாரிக்கும் கம்பெனி ஒன்றில் பங்குதாரர் ஆகி மெல்ல மெல்ல பல தொழில்களை சென்னையில் உருவாக்கியது..

சந்தானகிருஷ்ணன் தன் எம்.பி.ஏ படிப்பை பூனா வில் படித்து முடித்து திரும்பியவுடன் அனைத்து தொழில்களின் பொறுப்புகளையும் மகனிடம் கொடுத்து விட்டார் அவர்..

கொடைக்கானல், ஊட்டி, கோவா ஆகிய ஊர்களில் அவர் வீடு வாங்கிப் போடும்போதெல்லாம் இரண்டிரண்டாக வாங்கிப் போடுவார்.. காரணம் கேட்கும் தமக்கையிடமும் அப்போதே அவர் தெளிவாகச் சொல்வார்..

"எனக்குப் பெண்ணும் பிள்ளையும் சமம்தான்.. நாளைக்கு அண்ணனுக்கு மட்டும் அப்பா சொத்தைக் கொடுத்தார்.. நமக்கு எதுவும் கொடுக்கவில்லையேன்னு சந்தியா நினைத்துவிடக்கூடாது. பெண்பிள்ளைக்குத் தான் அப்பா நிறையச் செய்திருக்கிறார்.. நமக்குச் செய்ய வில்லைன்னு சந்தானம் நினைத்து விடக் கூடாது.. அதனால்தான் எந்தச் சொத்தை வாங்கினாலும் இரண்டிரண்டாய் வாங்குகிறேன்.." என்பார்..

அப்படித் தெளிவாக இருந்த ராமலிங்கம், மனைவியின் மறைவுக்குப் பின் உடனடியாக வக்கீலை அழைத்து உயில் தயாரிக்க சொல்லிவிட்டார்.. அவரது மறைவிற்குப் பின் அந்த உயிலைப் படித்தவர்கள் அவரது சரியான செயல்பாட்டை எண்ணி வியந்து போனார்கள்..

கிராமத்தில் இருக்கும் வயல்களும், தோப்பும், வீடுகளும் பரம்பரையாய் வருவது என்பதால் அது மகனுக்கு சேரவேண்டும் என்றும் எழுதியிருந்தவர், அந்தச் சொத்துக்களுக்கு இணையான மதிப்புள்ள பரம்பரை வைர நகைகளை மகளுக்குக் கொடுத்திருந்தார்.. சென்னை, கொடைக்கானல், ஊட்டி, கோவா போன்ற ஊர்களில் வாங்கியிருந்த வீடுகளை மகனுக்கும் மகளுக்கும் ஆளுக்கு ஒன்றாக சமமாய் பிரித்துக் கொடுத்திருந்தாள்..

சென்னையில் இருந்த பெரிய தொழில்களை மகனுக்குக் கொடுத்திருந்தவர், அதற்கு இணையான மதிப்புள்ள இரண்டு முக்கிய தொழில்களை மட்டும் சந்தியாவின் பெயருக்கு கொடுத்திருந்தார்..

இதுதான் அவரது புத்திசாலித்தனம்.. சந்தான கிருஷ்ணன் பெயருக்கு மாற்றப்பட்டிருந்த தொழில்கள் எல்லாம் ராமலிங்கம் முழு உரிமையுடன் வைத்திருந்த சொந்தத் தொழில்கள்..

சந்தியாவுக்கு அவர் அளித்திருந்த இரண்டு தொழில்களிலும் அவரது உறவினரும், நண்பருமான கோகுல்நாத் சம பங்கு பெற்றிருந்தார்..

முழு உரிமையுடன் கூடிய தொழில்களை மகனுக்கும், பங்குதாரர் இருக்கும் தொழில்களை மகளுக்கும் அளித்திருந்ததால் அதில் அவர் பாரபட்சம் காட்டுகிறார் என்று தோன்றும்..

ஆனால், அதில்தான் அவருடைய புத்திசாலித்தனம் வெளிப்பட்டது.. இது நெருங்கிய உறவினர்களுக்கும் அவரை நன்கு அறிந்தவர்களுக்கும் மட்டும் தெரியும்..

கோகுல்நாத்திற்கு ஒரு மகன் இருந்தான்.. அவனைத் திருமணம் செய்துகொள்ள சந்தியா மிகவும் விரும்பினாள்.. பெண் கேட்டு வருபவர்களுக்கு பெண் கொடுப்பதுதான் முறை.. மாப்பிள்ளை கேட்பது சரிவராது என்பது ராமலிங்கத்தின் கொள்கை..

தன் மகனை சந்தியா விரும்பும்போது, உன் மகனுக்கு என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள் என்று ராமலிங்கம்தான் தன்னிடம் வந்து கேட்க வேண்டும்.. தான் போய் பெண் கேட்க வேண்டுமென்ற அவசியம் இல்லை என்பது கோகுல்நாத்தின் கர்வம்..

இதனால்தான் இறக்கும் தறுவாயில் கோகுல்நாத் பங்குதாரர் ஆக இருந்த இரண்டு பெரிய தொழில்களையும் சந்தியாவின் பெயருக்கு மாற்றி எழுதியிருந்தார் ராமலிங்கம்..

இப்போது தன் மகளுக்கு சந்தியாவைத் திருமணம் முடித்து வைத்தால் அந்த இரண்டு தொழில்களின் முழு உரிமையும் கோகுல்நாத்திற்கு கிடைக்கும் என்ற சூழ்நிலையை உருவாக்கிவிட்டுச் சென்றுவிட்டார், சந்தியா வின் தந்தை..

தகப்பனாரின் கொள்கையின் வழி நடப்பவன் சந்தானகிருஷ்ணன்.. எனவேதான் தான் ஏற்றுக் கொண்டிருந்த ஊர்த்திருவிழாவின் பொறுப்பு, தர்ம காரியங்கள் அனைத்தையும் தனக்குப் பின், தன் மகன் ஏற்று செய்ய வேண்டும் என்ற கட்டளையை உயிலில் குறிப்பிட்டிருந்தார் ராமலிங்கம்..

அந்த தர்ம காரியங்களில் ஒன்றாக பூர்ணிமாவின் கல்விப் பொறுப்பை சந்தானகிருஷ்ணன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் இருந்தது..

சந்தானகிருஷ்ணன் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.. நாச்சியார்புரத்திற்குப் போய் பூர்ணிமாவை அழைத்து வந்தும் விட்டான்.. நம்பி வந்த சிறு பெண்ணை தங்கை அவமானப்படுத்திப் பேசினால் அவனுக்குக் கோபம் வரத்தானே செய்யும்..?

எனவேதான் சந்தியாவிடம் மிகக் கண்டிப்புடன் பேசினான்.. பூர்ணிமாவிற்கு காப்பாளர் என்ற முறையில் அவள் அவனுடைய வீட்டிற்கு வந்து போகும் உரிமையை அவளுக்கு அவன் அளித்திருக்கும்போது தங்கை அதை மறுப்பதைப் போல் செயல்படுவதை ஆரம்பித்திலேயே தடுத்துவிட வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு..

"ஏன் அப்படிப் பார்க்கிறாய் சந்தியா..?"

"இருக்க எனக்கு இடமில்லாமல் ஆக்கிவிட்டாயா..?"

"ஏன்.. இந்த வீட்டில் நீயிருக்க என்ன தடை..? இங்கே உனக்கு இருக்கும் உரிமை, நீ கல்யாணமாகிச் சென்றாலும் தொடரும் சந்தியா.. இறுதிவரை, என் வீடு, உனக்குத் தாய்வீடுதான்.."

"ஓ.. அப்படியென்றால் எனக்கு இது தாய்வீடுதான் என்வீடு இல்லை என்கிறாய்.. அப்படித்தானே..?"

"ஒரு அண்ணன் போல் நான் பேசுகிறேன்.. எதிரியைப் போல் நீ பேசுகிறாய்.. உனக்கு என்னதான் பிரச்னை..?"

"இந்த வீட்டில் எனக்கு உரிமை இருக்கிறதா.. இல்லையா..?"

"இருக்கிறது.. ஒரு தங்கை என்ற முறையில் உரிமை இருக்கிறது.."

"நீ சொல்வது எனக்குப் புரியவில்லை.."

"சந்தியா.. இது என் வீடு.. இங்கே முடிவுகளை எடுக்கும் அதிகாரம் எனக்கு மட்டுமே இருக்கிறது.."

"கிராமத்து சொத்துகளை முழுதாய் அமுக்கிக் கொண்ட ஆணவத்தில் பேசுகிறாயா..?"

"அதை நான் அமுக்கவில்லை.. அப்பா கொடுத்திருக் கிறார்.. அந்தச் சொத்திற்கு சமமான நகைகளையெல்லாம் உனக்குக் கொடுத்திருக்கிறாரே.. இதை நீ அமுக்கிக் கொண்டதாய் நான் சொல்ல மாட்டேன்.. அப்புறம் உனக்கும் எனக்கும் வித்தியாசமில்லாமல் போய்விடும்.."

"ஓ.. அப்படியென்ன என்னைவிட நீ உயர்ந்து விட்டாய்..?"

"இது என் வீடுதான்.. ஆனால், அத்தையின் கடைசி மூச்சுவரை இங்கே அவங்க என்கூட இருக்கலாம்.. நீயும் கடைசிவரை உன் தாய்வீடு என்று என் வீட்டிற்கு வந்து போகலாம்.. இது உன் வீட்டில் நடக்குமா..? நாளைக்கு உனக்குத் திருமணமாகி நீ போகும் வீட்டிற்கு அத்தை வந்து உரிமையுடன் தங்கிப் போக முடியுமா..? இல்லை எனக்குத்தான் அது உரிமையான வீடாக ஆகுமா..?"

"இது மட்டுமா.. இல்லை.. இன்னும் இருக்கிறதா..?"

"இருக்கிறதே.."

"அதையும் ஏன் விட்டுவைக்கிறாய்.. லிஸ்ட் போட்டுச் சொல்லிவிடு.."

"லிஸ்ட்டுதான்.. அப்பா வருடா வருடம் செய்யும் தர்ம காரியங்களை லிஸ்ட்டே போட்டு என்னிடம் கொடுத் திருக்கிறார்.. அதை அவருடைய இடத்தில் இருந்து நான் செய்ய வேண்டும்.. நன்றாய் புரிந்து கொள்.. அப்பா சொத்தை நம் இருவருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுத்தார்.. ஆனால்.. பொறுப்புகளை என்னிடம் மட்டும் தான் கொடுத்தார்.."

சந்தியா வாயடைத்துப் போனாவளாய் கோபத்துடன் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தாள்..

'எல்லாத்துக்கும் பதில் பேசுவாள்.. இதற்கு மட்டும் பதில் சொல்ல மாட்டாள்.. எப்படித்தான் என் தம்பிக்குப் பெண்ணாகப் பிறந்தாளோ..'

தாயம்மா மனதிற்குள் மூண்ட எரிச்சலை வெளியில் காட்டிக் கொள்ளாமல் பரிமாற ஆரம்பித்தாள்..

'ஆயிரம்தான் இருந்தாலும் என் தம்பியின் பெண், தாய் தகப்பன் இல்லாத குழந்தை பாவம்..' அவள் மனதிற்குள் கருணை சுரந்தது..

தன்னால்தான் அண்ணன் தங்கைக்குள் சண்டை மூண்டுவிட்டதோ என்ற குற்ற உணர்வுடன் பரபரவென தலையைக் குனிந்துகொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்த பூர்ணிமாவிற்கு தெரியாது, சந்தியாவிற்கு சுயநலம் அதிகம் என்பது..

அத்துடன் கூட ஒரு வன்மமும் சந்தியாவிற்கு தனது அண்ணன் மேல் தோன்றியிருந்தது.. அது அவளுடைய திருமணம் சந்தானகிருஷ்ணனின் முடிவில் இருந்தது..

இவன் மட்டும் கொஞ்சம் மனது வைத்தால்.. சந்தியா பெருமூச்சு விட்டாள்..

ஆனால், சந்தானகிருஷ்ணன் மனம் வைக்க மறுத்தான்.. அதனால் ஏமாற்றமடைந்த சந்தியாவின் கோபம் பலவகைகளில் வெளிப்பட்டது.. அது தாயம்மாவிற்கும் புரிந்துதான் இருந்தது.. அவளும் சொல்லிப் பார்த்தாள்..

"சந்தானம்.. நமக்கிருப்பதோ ஒரு பெண் பிள்ளை.. அவளுடைய மனது பிரகாரம் கல்யாணம் செய்து வைத்தால் என்னப்பா.."

அத்தையின் வார்த்தைகளைக் கேட்டதும் அவன் நிமிர்ந்து பார்த்தான்.. அந்தப் பார்வையின் அர்த்தம் தாயம்மாவிற்குப் புரியாமல் இல்லை..

"அத்தை..! எனக்கு மட்டும் அவளுடைய கல்யாணத்தில் அக்கறை இல்லையா என்ன..? மாப்பிள்ளை வீட்டில் கேட்பது பணமாக இருந்தால் என் சொத்தைப் பூராவும் அவளுக்கு விட்டுக் கொடுப்பேனே.. ஆனால், அவர்கள் கேட்பது என் மனத்தையல்லவா..? என்னால் அது முடியவில்லையே அத்தை.."

"ஆனாலும் சந்தியா.."

"அவளுக்கு ஏற்ற மாதிரி நல்ல மாப்பிள்ளையாக நான் பார்க்கிறேன்.. அவளைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லுங்கள்.."

"பிடிக்காத ஒருவனை எப்படி அவள் கல்யாணம் செய்து கொள்வாள்..?"

"புரிகிறது இல்லையா.. பிடிக்காதவங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்வது கஷ்டம்னு உங்களுக்குப் புரிகிறது இல்லையா.. மனதுபிரகாரம் அவள் மட்டும் தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளணுமா..? எனக்கும் மனம் இருக்கிறது அத்தை.."

"ஆனாலும் நீதானே அவளுடைய அண்ணன்.. நீதான் அவளுடைய எதிர்காலத்தை நல்ல முறையில் அமைத்துத்தர வேண்டும்.."

"நிச்சயம் செய்வேன்.. இவளை மட்டும் கொஞ்சம் பொறுமையாக இருக்கச் சொல்லுங்கள்.. கோகுல்நாத் இவள் பெயரில் இருக்கும் தொழில்களை விட்டுக் கொடுக்க மாட்டார்.. என்றைக்கு இருந்தாலும் அவர்கள் நம் வீட்டில் பெண் கட்டித்தான் ஆகவேண்டும்.. அதை விட்டுவிட்டு அவளுடைய எதிர்காலத்திற்காக என்னுடைய எதிர்காலத்தை அழித்துக்கொள்ள என்னால் முடியாது.."

தாயம்மாவிற்கு அவன் சொல்வது சரியென்றே தோன்றும்.. ஆனால், சந்தியா தன் அண்ணனை குரோதமாய் பார்ப்பாள்.. தன் திருமணத்தை தடுக்கும் எதிரியென்றே நினைப்பாள்..

"நான் ஏன் பொறுமையாக இருக்க வேண்டும் அத்தை.. சார் எனக்காக கொஞ்சம் இறங்கி வரமாட்டாரா..?"

"சந்தியா.. அவர்கள் கேட்பது நடந்துவிட்டால் என் நிலை இறங்கித்தான் போகும்.."

"அத்தை..! இதெல்லாம் கண்துடைப்பு.."

"அதற்கு எனக்கு அவசியம் என்ன வந்திருக்கிறது..?"

"உன்னை யாரும் மலையுச்சியில் இருந்து தள்ள நினைக்கவில்லை.."

"பாதாளத்தில் தள்ள நினைக்கிறார்கள்.."

"என் மேல் உனக்கு உண்மையான பாசமில்லை.."

"உனக்கு என்மேல் உண்மையான பாசம் இருக்கிறதா..? இருந்திருந்தால் இப்படிச் சொல்வாயா..?"

அண்ணனுக்கும் தங்கைக்கும் அடிக்கடி சொற்போர் நடக்கும்.. சந்தியா முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, மூன்று நாள்கள் சந்தானகிருஷ்ணனிடம் பேசாமல் இருப்பாள்.. மனம் தாங்காமல் சந்தானகிருஷ்ணன் தங்கையிடம் வலியப் போய் பேசி சமாதானம் செய்து கொள்வான்..

அப்போதைக்கு சமாதானம் ஆகும்.. சந்தியா.. மீண்டும் வம்புக்கு வருவாள்.. பழைய கதை தொடரும்..

சந்தானகிருஷ்ணனுக்கு சந்தியாவின் மனம் புரியாமல் இல்லை.. கோகுல்நாத்தின் மகன் வினய்யின் மேல் அவள் சிறுவயதிலிருந்து காதல் கொண்டிருந்தாள்.. அது நிறைவேறத் தடை வந்ததில் அவளுக்கு வருத்தம்.. ஆனால், அதற்காக சந்தானகிருஷ்ணன் என்ன பண்ண முடியும்..?

## 8

அந்தக் கல்லூரியில் தென்பட்ட மாணவிகளின் ஆடை அலங்காரங்களைப் பார்த்து திகைத்துவிட்டாள் பூர்ணிமா.. இவர்களுடன் தானும் படிக்கப் போகிறோமா என்று ஒரு பக்கம் அதிசயமாகவும் எப்படி இவர்களுடன் கலந்து பழகப்

போகிறோம் என்று இன்னொரு பக்கம் மலைப்பாகவும் அவளுக்கு இருந்தது..

சந்தானகிருஷ்ணன் கம்பீரமாய் உள்ளே செல்ல, அவனைப் பின் தொடர்ந்து சென்றவளுக்கு அங்கேயிருந்த மாணவிகள், அவனைப் பார்த்து தங்களுக்குள் பேசிக் கொள்வதும் புரிந்தது..

"பூர்ணிமா..! அங்கே என்ன வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறாய்..? என் கூடவே வா..!" சந்தான கிருஷ்ணன் திரும்பிப் பார்த்துக் கூறினான்..

அவசரமாய் அவனுடன் இணைந்து நடந்தாள் பூர்ணிமா.. கல்லூரி பிரின்ஸிபால் அறையில் அமர்ந்திருந்த வரிடம் சந்தானகிருஷ்ணன்,

"ஹலோ சார்.." என்று கை நீட்டினான்..

"ஹவ் ஆர் யூ மிஸ்டர் கிருஷ்ணன்.." என்றபடி அவரும் பிடித்த கையை விடாமல் பற்றிக் குலுக்கினார்..

"இதுதான் பூர்ணிமா..!"

"ஓ.. என்னம்மா.. இந்த காலேஜ் பிடித்திருக்கிறதா..?"

அவர் அன்புடன் கேட்க, பூர்ணிமா மரியாதையுடன், எழுந்து நின்று பதில் சொன்னாள்..

"பிடித்திருக்கிறது சார்.."

"அதற்கு ஏன் எழுந்து நிற்கிறாய்..?"

பிரின்ஸிபால் சர்மா, ஒரு வட இந்தியர், அவருக்கு பூர்ணிமா எழுந்து விறைப்பாக நின்று பதில் சொல்லியது ஆச்சரியத்தை அளித்தது..

"இவள் இன்னும் ஸ்கூலில் இருந்து வெளியே வரவில்லை சார்.." சந்தானகிருஷ்ணன் சிரித்தான்..

"ஓ.. உங்கள் ஸ்கூலில் பிரின்ஸ்பால் கேள்வி கேட்டால் இப்படித்தான் எழுந்து நின்று பதில் சொல்வீர்களா..? வெரி நைஸ்.. வெரி நைஸ், ஆனால் இங்கே இருப்பவர்கள் பதில்

சொல்லும் விதமே வேறு ம்ம்.. போகப் போக நீயும் அதைப் பழகிக் கொள்வாய்.. என்ன கிருஷ்.. நான் சொல்வது சரிதானே.." சர்மா பலமாக சிரித்தார்..

"ஆனால், இந்தப் பெண் அப்படியெல்லாம் மாறுகின்ற பெண்ணில்லை சார்..!" சந்தானகிருஷ்ணன் வாஞ்சையுடன் பூர்ணிமாவை பார்த்தான்..

அவன் காட்டிய பரிவும், நம்பிக்கையும் பூர்ணிமாவின் மனதில் இருந்த பயத்தையும், தனிமை உணர்வையும் போக்கின..

கட்ட வேண்டிய பணத்தை கட்டிவிட்டு அவளை மறுநாள் கல்லூரிக்கும், மாணவியர் விடுதிக்கும் அனுப்புவதாகக் கூறிவிட்டு, அவளை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான் சந்தானகிருஷ்ணன்..

மீண்டும் மிரள வைக்கும் நாகரிக யுவதிகளின் நடை உடை பாவனைகளைப் படபடப்புடன் பார்த்தவாறு சந்தானகிருஷ்ணனின் காரில் ஏறினாள் பூர்ணிமா..

"இறங்கு.." என்று சந்தானகிருஷ்ணன் சொன்ன இடம், ஒரு ஜவுளிக் கடையின் முன் வாசல்..

"இங்கேயா.." பூர்ணிமா தயங்கினாள்..

"உனக்கு டிரஸ் எடுக்க வேண்டாமா.. இரண்டு செட் போதுமா..?"

"ஆனாலும் சார்.."

"ச்சு.. உன்னிடம் சொல்லித்தான் கூப்பிட்டுக் கொண்டு வந்தேன்.. உன் படிப்பு மட்டுமில்லை.. உன் தேவைகள் அனைத்திற்கும் நான்தான் பொறுப்பு.. நான் உன் கார்டியன்.."

ஜவுளிக்கடையின் உள்ளே இருந்த சுடிதார்களை அவள் தயக்கத்துடன் பார்த்தவாறு விலகியே நிற்க, சந்தானகிருஷ்ணன் புருவம் உயர்த்தினான்.. பின்னர் மளமளவென்று அவனே துணி வகைகளைத் தேர்வு செய்து அடுக்கினான்..

"இருபத்துநான்கு செட்டா.. சார், இது அதிகம்.."

"நீ படிக்கப் போகும் காலேஜின் தரத்திற்கு இது குறைவு.."

"எனக்கு இவ்வளவு வேண்டாம் சார்.."

"இது உனக்குத் தேவை பூர்ணிமா.. உனக்கு அது தெரியவில்லை.. எனக்குத் தெரியும்.. பேசாமல் இரு.."

பெண்களின் உள்ளாடைகள் இருக்கும் பகுதியைக் காட்டி, அதிலும் வேண்டியவற்றை எடுத்துக் கொண்டு வரச்சொன்னான்..

சுடிதாரரையும், நைட்டியையும் தானே தேர்வு செய்து வாங்கிக் கொடுத்தவன், இதில் விலகி நின்று காட்டிய கண்ணியம் பூர்ணிமாவைக் கவர்ந்தது..

அவள் தேவையான உள்ளாடைகளை வாங்கிக் கொண்டாள்.. அடுத்து அவர்கள் போன இடம் நகைக்கடை..

"சார்.. எனக்கு இவை வேண்டாம்.." பூர்ணிமா தீர்மானமாக கூறினாள்..

"சின்னச் சின்ன நகைகள்தான் பூர்ணிமா.."

"வேண்டாம் சார்.. எனக்கு இதில் ஆர்வம் இல்லை.. உங்கள் அப்பா வாங்கிக் கொடுத்த வாட்ச் இருக்கிறது.. உங்கள் அம்மா வாங்கிக் கொடுத்த செயின் இருக்கிறது.. இதைவிட வேறு என்ன எனக்கு வேண்டும்..?"

சந்தானகிருஷ்ணன் அவளை வற்புறுத்தவில்லை.. அவளது உடைகளை வைத்துக் கொள்ள பெட்டிகள், டிராவல்ஸ் பேக் ஒன்று, பெட்சீட், தலையணை உறைகள், பக்கெட் இன்னும் தேவையான பொருள்கள் என்று எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து வாங்கிக் கொடுத்தான்..

மதிய உணவிற்கு அவர்கள் வீடு திரும்பினார்கள்.. தாயம்மா, பூர்ணிமாவிடம் கல்லூரியைப் பற்றி விசாரித்தாள்.. சந்தியாவின் தலை தென்படாததால் அவளும் தைரியமாய் நின்று பதில் சொல்லிவிட்டு,

வாங்கிக் கொண்டு வந்த பொருள்களை தான் தங்கியிருந்த அறையில் கொண்டு போய் வைத்தாள்..

"சாப்பிட்டுவிட்டு கொஞ்ச நேரம் தூங்கி எழுந்திரும்மா.." தாயம்மா பரிவுடன் பரிமாறியபடி கூறினாள்..

"சரிங்கம்மா.."

பூர்ணிமா பணிவுடன் பதில் கூறிக்கொண்டு இருந்த போது அங்கு வந்தான் சந்தானகிருஷ்ணன்..

"நீயும் சாப்பிட உட்காரப்பா.. இந்தப் பெண்ணிற்கு வேண்டியதை எல்லாம் கேட்டு வாங்கிக் கொடுத்து விட்டாயா..?"

"இதுவா.. இது வேண்டுமென்று சொன்னதைவிட வேண்டாமென்று சொன்னதுதான் அதிகம்.."

"ஏன்ம்மா..?"

"எனக்கு எதற்கு அதிக டிரஸ்ன்னு கேட்கிறாள்.."

"ஏன் அப்படிக் கேட்டாய் பூர்ணிமா..? இந்த துணிகளே உனக்குப் போதாதேம்மா.. இது நாச்சியார் புரமில்லை.. சென்னை.. இங்கே இந்த ஊருக்கு ஏற்றது போல் இருக்க வேண்டாமா..?"

"இல்லைம்மா.. எனக்கு இதுவே அதிகம்னுதான் இப்பவும் தோணுது.."

"நல்ல பெண் போ.. ஏன் கிருஷ்ணா, காது கைகளுக்கு ஏதாவது சிறியதாய் நகை வாங்கிக் கொடுத்தாயா..?"

"துணிகளுக்கே வேண்டாம் என்று மல்லுகட்டியவள், நகைகளை வாங்கிக் கொள்வாளா அத்தை..? கடைக்குள் வரக்கூட மாட்டேனென்று சொல்லி விட்டாள்.. அவள் கையில் கட்டியிருப்பது என் அப்பா வாங்கிக் கொடுத்த வாட்ச்சாம்.. கழுத்தில் போட்டிருக்கும் செயின் அம்மா வாங்கிக் கொடுத்ததாம்.. அதுவே போதுமாம்.."

தாயம்மா ஆர்வமாக பூர்ணிமாவின் அருகே வந்து அவளது கையைப் பிடித்துப் பார்த்தாள்..

"நிஜமாகவா சொல்கிறாய்..? பூர்ணிமா இதை ராமு கொடுத்தானா..?"

"ஆமாம்மா.."

"இந்தச் செயினை பரிமளம் கொடுத்தாளா..?"

"ஆமாம்மா.."

"எங்கே காட்டு பார்க்கலாம்.."

தாயம்மா அந்த இரு பொருள்களையும் தொட்டு நெகிழ்ந்து நின்றாள்.. அவள் கண்களில் நீர் ததும்பியது..

"இது என் தம்பி வாங்கிக் கொடுத்ததா..? இதை என் தம்பி பொண்டாட்டி வாங்கி கொடுத்தாளா..? இந்த நகை போதும், வேறு வேண்டாமென்று சொல்லிவிட்டாயா..?"

திரும்பத் திரும்ப நா தளுதளுக்கப் பேசிக் கொண்டிருந்த தாயம்மா, சட்டென்று உள்ளே போய் விட்டாள்..

"ஏன் உள்ளே போய்விட்டாங்க...?" பூர்ணிமா புரியாமல் வினவினாள்..

"அப்பா, அம்மாவின் நினைவு வந்திருக்கும்.. நீ சாப்பிடு.."

சந்தானகிருஷ்ணன் பரிவுடன் கூறினான்.. பூர்ணிமா தலை குனிந்து சாப்பிட்டு முடித்தாள்..

"கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கி எழுந்திரு பூர்ணிமா.."

சந்தானகிருஷ்ணன் காரில் ஏறிச் சென்று விட்டான். பூர்ணிமாவிற்கு மதிய தூக்கம் தூங்கிப் பழக்கமில்லை.. அதே சமயம் ஹாலில் அமர்ந்திருந்தால் சந்தியாவின் கண்களில் பட்டுவிடும் அபாயம் இருந்ததால் அவளுக்கு தந்திருந்த அறைக்குச் சென்றுவிட்டாள்.. ஏதேதோ யோசனைகளுடன் கட்டிலில் சுருண்டு படுத்தவளுக்கு உண்மையிலேயே தூக்கம் வந்துவிட்டது.. விழிப்பு வந்து அவள் எழுந்தபோது மாலையாகி விட்டிருந்தது. அவசரமாய் முகம் கழுவி, உடை திருத்தி வெளியே வந்தாள்..

"வா பூர்ணிமா.. காபி சாப்பிடு.." என்று அன்போடு கூறினாள் தாயம்மா..

பூர்ணிமா தயக்கத்துடன் அவளருகில் சென்றாள்..

"ஏம்மா.. இப்படிச் சங்கடப்படறே..?" என்று அன்பாக தாயம்மா வினவியபோது..

"இருக்காதா அத்தை..? வேளாவேளைக்கு, காபி, டிபன், சாப்பாடு, காபி, டிபன் என்று சாப்பிட்டு பழக்கம் இருந்திருக்காது இல்லையா..? அதிலும் இத்தனையும் ஓசியில் கிடைக்கிறதுன்னா கொட்டிக்கொள்ள.. கொஞ்ச மாவது தயக்கம் இருக்கத்தானே செய்யும்..? பாவம், ஒரு நேரம் கஞ்சியோ, கூழோ, அரை வயிறு கால்வயிற்றுக்கு சாப்பிட்டுவிட்டு இருந்தவளுக்கு நம் வீட்டில் நான்கு நேரமும் மூக்கு முட்ட சாப்பாடு கிடைத்தால் சந்தோஷத் தோடு சங்கடமும் வரத்தானே செய்யும்.." என்ற சந்தியாவின் குரல் கேட்டது..

'சுளீர்..' என்ற சாட்டையால் யாரும் அடித்திருந்தால் கூட அவ்வளவு வலித்திருக்குமா என்பது சந்தேகம்தான்.. பூர்ணிமா கண்மூடி ஒரு நிமிடம் மௌனமாக நின்றாள்.. பின்னர் விடுவிடுவென்று தோட்டத்திற்குப் போய் விட்டாள்.

அங்கிருந்த மரப்பெஞ்சில் அமர்ந்தாலும் அவளது மனப்புழுக்கம் கொஞ்சம் கூடக் குறையவில்லை..

'எப்படிப் பேசிவிட்டாள்..' அவளது கண்கள் கலங்கின..

'வேண்டாம் இந்தப் படிப்பு.. ஊருக்கே திருப்பிப் போய்விடலாம்..' என்று அவளுக்குத் தோன்றி விட்டது..

நேரம் செல்லச் செல்ல அந்த எண்ணம் அவளுள் வேரூன்றிவிட்டது.. உடனே ஊருக்குத் திரும்பிச் சென்று விட வேண்டுமென்ற வேகமும் வந்தது.. கண்மூடி, தலை குனிந்து அமர்ந்திருந்தவளை,

"பூர்ணிமா.." என்ற குரல் எழுப்பியது..

கண் திறந்து பார்த்தாள்.. சந்தானகிருஷ்ணன் கையில் இரண்டு காபிக் கோப்பைகளோடு நின்றிருந்தான்..

சுற்றிலும் இருள் பரவ ஆரம்பித்திருந்தது.. தோட்டத்தில் விளக்குகள் எரிய ஆரம்பித்திருந்தன..

சந்தானகிருஷ்ணன் அவள் அமர்ந்திருந்த பெஞ்சில் அமர்ந்தான்.. அவளிடம் ஒரு காபிக் கோப்பையை நீட்டினான்..

"குடி.." என்றான் பரிவான குரலில்..

"வேண்டாம்.." பூர்ணிமா தேம்பி அழ ஆரம்பித்து விட்டாள்..

"ச்ச.. அழக் கூடாது.. இப்போது என்ன நடந்து விட்டது..? அழாதே..! சந்தியா சொல்வதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளக் கூடாது.. புரிந்ததா.."

சந்தானகிருஷ்ணன் கண்டிப்பான குரலில் கூறினான்.. சொல்வதற்கு இவனுக்கு எளிதாகத்தான் இருக்கும்.. கேட்பவளுக்கு அல்லவா அதன் கஷ்டம் தெரியும்..? பூர்ணிமாவின் கண்ணீர் நிற்கவில்லை..

"சார்.. நான் எங்கள் ஊருக்குப் போகிறேன்.. அனுப்பி வைத்துவிடுங்கள்.."

"காபியைக் குடி.."

"எனக்குப் படிப்பு வேண்டாம் சார்.. சுயமரியாதையை விட்டுவிட்டு என்னால் படிக்க முடியாது.."

"காபியைக் குடியென்று சொன்னேன்.."

"தயவுசெய்து மன்னித்துவிடுங்கள் சார்.. இனி இந்த வீட்டில் பச்சைத் தண்ணீர்கூட என்னால் குடிக்க முடியாது.."

பூர்ணிமாவின் குரலில் விரக்தி இருந்தது.. சந்தான கிருஷ்ணன் அவள் முகத்தையே தீர்க்கமாகப் பார்த்தான்.. முதல் முறையாக அவனது பார்வையை நேருக்கு நேர் சந்தித்தாள் அவள்.. அவன் விழிகளில் தெரிந்த ஏதோ ஒன்று அவளைக் கட்டிப்போட்டது..

"இதுதான் உன் முடிவா..?" சந்தானகிருஷ்ணன் அழுத்தமாகக் கேட்டான்..

அவனது தீட்சண்யமான பார்வையைச் சந்திக்க முடியாதவளாக பூர்ணிமா விழிகளைத் திருப்பிக் கொண்டாள்..

"ஆமாம் சார்.."

"ஸோ.. நீ உன் சுயமரியாதை தவறுவதை மட்டுமே நினைக்கிறாய்.. நான் வாக்கு தவறுவதைப் பற்றி நீ துளிகூட நினைத்துப் பார்க்கவில்லை.. அதைப் பற்றி கவலைப்பட வில்லை.. அதுசரி.. என்னைப் பற்றி நினைத்துப் பார்க்கவும், கவலைப்படவும் உனக்கு நான் யார்..? போ.. என் அப்பா, அம்மா சாகும் நேரத்தில் என்னிடம் ஒப்படைத்த பொறுப்பை நிறைவேற்ற முடியாத, கையாலாகாதவனாக என்னை ஆக்கிவிட்டு நீ உன் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு போ.. போய் விடு இங்கிருந்து.."

அவனுக்கு அவ்வளவு கோபம் வரக்கூடும் என்று நினைத்துக்கூடப் பார்த்திராத பூர்ணிமா, நடுங்கிப் போய் விட்டாள்.. அவளால் அவன் பேசிய வார்த்தைகளைத் தாங்க முடியவில்லை..

சந்தானகிருஷ்ணனை வாக்கு தவறியவனாக அவள் ஆக்குவதா..? பூர்ணிமா திகைத்துப் போனாள்..

"சார்.." என்றாள் நைந்த குரலில்

"காபியைக் குடி.." என்றான் அவன் அழுத்தமான குரலில்..

பூர்ணிமா மறுத்துப் பேசாமல் காபியை வாங்கி ஒரே மூச்சில் குடித்து முடித்தாள்.. சந்தானகிருஷ்ணன் அவளைக் கனிவோடு பார்த்தான்..

அவளைப் பற்றிக் கவலை கொள்ளாமல், அவனுக்காக அவள் காபியை வாங்கிக் குடித்தது அவனது மனதைத் தொட்டது..

"பூர்ணிமா.. சந்தியாவிற்கு என் மேல் கோபம்.. நான் உனக்கு கார்டியன்.. உன்னைக் காயப்படுத்துவதன் மூலம் அவள் என்னைக் காயப்படுத்தப் பார்க்கிறாள்.. நீ அதைப் புரிந்துகொள்.. அடிப்படையில் அவள் நல்ல பெண்.. அவளது காதல் நிறைவேறுமோ, இல்லை நிறைவேறாதோ என்ற கவலை அவளுடைய மனத்தை அழுத்திக் கொண்டிருக்கிறது.. மனவலி தாங்காமல், மற்றவர்களின் மனத்தை புண்படுத்தி வலிக்கச் செய்து கொண்டிருக்கிறாள்.. நீ இதைத் தவறாக நினைக்காதே.."

"அவங்க உங்க தங்கைதானே.."

"இதில் என்ன உனக்குச் சந்தேகம்..?"

"அண்ணனிடம் பாசம் இல்லாத தங்கையா..? எனக்கு மட்டும் இப்படி ஒரு அண்ணன் இருந்தால், நான் என் உயிரையே கொடுப்பேன்.."

"அவளுக்கு என் மேல் பாசம் இருக்கிறது பூர்ணிமா.. எனக்குத்தான் அவள் மேல் துளிகூட பாசமில்லைன்னு அவள் நினைக்கிறாள்.."

"அப்படி ஏன் நினைக்கவேண்டும்..?"

"காரணம் இருக்கிறது.."

"என்ன காரணம்.."

"வினய்.."

"யார் அவங்க..?"

"சந்தியா காதலிக்கும் நபர்.."

"ஓ.. உங்களுக்கு அவரைத் தெரியுமா..?"

"பிறந்ததில் இருந்து தெரியும்.."

"உங்களுக்குச் சொந்தமா..?"

"சொந்தம்தான்.. அத்தோடு வினய்யின் அப்பா.. அப்பாவுடன் பிஸினஸ் பார்ட்னராக இருப்பவர்.."

"அப்புறம்.. கல்யாணம் பண்ணிவைக்க என்ன தடை..?"

சந்தானகிருஷ்ணன் உடனடியாக இதற்கு பதில் சொல்லவில்லை.. பேசாமல் சற்று நேரம் இருந்தவன் ஓர் பெருமூச்சோடு சொன்னான்..

"கோகுல்நாத், வினய்யின் மேல் சந்தியா கொண்டிருக்கும் காதலை நன்கு அறிவார்.. வினய்க்காக சந்தியா எதுவும் செய்வாள்ன்னு அவருக்கு நன்றாகத் தெரியும்.. அதனால் சந்தியாவின் காதலை பயன்படுத்தி அவர் இரண்டு விஷயங்களை நிறைவேற்றிக் கொள்ள முனைகிறார்.."

"ஓ.."

அவனாகச் சொல்லாமல் அது என்ன என்று எப்படிக் கேட்பது என்ற நினைவுடன் மௌனமானாள் பூர்ணிமா.. சந்தானகிருஷ்ணன் அவளை வித்தியாசமாக நினைக்க வில்லை.. மனம் திறந்து பேச தனக்கென்று ஓர் தோழி கிடைத்துவிட்ட உணர்வுடன் அவன் பேச ஆரம்பித்தான்..

"அப்பா.. சந்தியாவைப் பெண் கேட்டு கோகுல் நாத் வருவதுதான் முறையென்று நினைத்தார் பூர்ணிமா.. வினய்யை சந்தியா விரும்புவது நன்றாகத் தெரிந்திருந்தும் கோகுல்நாத் கர்வமாக இருந்ததற்குக் காரணம், என் அப்பாவை அவருடைய மகளுக்கு மாப்பிள்ளையாக வினய்யை கேட்டு அவரின் வீட்டு வாசல்படியை மிதிக்க வைக்கவேண்டும் என்ற வன்மம் தான்.. அத்தோடு வேறு ஓர் எண்ணமும் அவர் மனதில் இருக்கிறது.."

'அது என்ன..' என்பது போல் பூர்ணிமா பார்த்தாள்..

"அதை இப்போது என்னால் சொல்ல முடியாது பூர்ணிமா.. இன்னொரு நாள் சொல்கிறேன்.. அதைப் பற்றிப் பேசவே எனக்குப் பிடிக்கவில்லை.."

"ம்ம்.. உங்கள் தங்கையும் பாவம்தானே.."

"அதனால்தான் அவள் பேசுவதற்கு பொறுமையாகப் போகிறேன்.."

"அதோடு சேர்த்து, உங்கள் அப்பா செய்யாத காரியத்தை நீங்கள் செய்யலாமே.."

"எதைச் சொல்கிறாய்.."

"உங்கள் தங்கையின் காதலரின் அப்பாவின் வீட்டிற்குப் போவதைத்தான் சொல்கிறேன்.."

"ஒன்றை நினைவில் கொள் பூர்ணிமா.. சந்தியா என் தங்கை.. என் அத்தையும், அம்மாவும் வளர்த்த பெண்.. அவள் மனதளவில் வினய்யின் மேல் காதல் கொண்டிருக் கிறாள்.. அவ்வளவுதான்.. வேறு எதற்கும் அவள் இடம் கொடுக்கமாட்டாள்.. இது ஒன்றுதான் எங்களின் ப்ளஸ் பாயிண்ட் கோகுல்நாத்திற்கு சறுக்கல்.. அதனால் என் அப்பா மிதிக்காத அவர்கள் வீட்டுப் படியை நானும் மிதிக்க மாட்டேன்.."

"உங்கள் தங்கையின் காதலையும் நீங்கள் மதிக்க வேண்டாமா..?"

"நான் மதித்தால் மட்டும் போதுமா..? அவள் யாரைக் காதலிக்கிறாளோ.. அவன் முதலில் மதிக்க வேண்டாமா..?"

"ஓ.. நீங்கள் அப்படி வருகிறீர்களா..?"

"ஆமாம்.. வினய்க்கு சந்தியாவின் மேல் காதல் உண்டு.. ஆனால், அவன் இதுவரை அந்தக் காதலை சந்தியாவிடம் வெளிப்படுத்தியது இல்லை.. என்னவோ, இவளுடைய காதலை ஏற்றுக் கொண்டது போல் வேடம் போட்டுக் கொண்டிருக்கிறான்.."

"ஏன் அப்படிச் செய்கிறார்.."

"என்னவென்று சொல்வது..? அவன் ஒரு பந்தத்தில் மாட்டியிருக்கிறான்.. அந்த பந்தம் அவனை நிர்ப்பந்தப் படுத்திக் கொண்டிருக்கிறது.."

"எனக்குப் புரியவில்லை.."

"புரியும் காலத்தில் புரியும்.. இப்போது இதை மட்டும் புரிந்து கொள் பூர்ணிமா.. ஊர் கூட்டத்தில் வைத்து என் அப்பா உன்

கல்விக்குப் பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கிறார்.. உன் ஊருக்கு வந்து, நான் அதே பொறுப்பை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்.. என் பொறுப்பை நான் நிறைவேற்ற எனக்கு உன் ஒத்துழைப்பு தேவை.."

"சார்.. நான் இப்படியெல்லாம் பேச்சுக் கேட்டதில்லை சார்.. நாங்கள் ஏழைதான்.. ஆனால், வயிற்றுக்கு சாப்பாடும், இருக்க சொந்த வீடும், உடுத்திக்கொள்ள தேவையான துணிமணிகளும் எங்களுக்கு இருக்கின்றன.. என் அம்மா எங்கள் வயிற்றை வாடப் போட்டதில்லை.."

"ஈஸி பூர்ணிமா.. ஈஸி.. சந்தியா பேசியது கொடிய வார்த்தைகள்தான்.. நான் அவள் சார்பாக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.. எனக்காக அவள் பேசியதை மன்னித்து மறந்துவிடு.."

பூர்ணிமா பதறிவிட்டாள்.. யாரிடம் யார் மன்னிப்பு கேட்பது.. அவளிடம் அவன் மன்னிப்புக் கேட்பதா..?

"சார்.. வேண்டாம்.. என்னைப் பாவி ஆக்காதீர்கள்.."

"அப்படி நீ நினைத்தால் எனக்கு வாக்கு கொடு.."

"உங்களுக்கு நான் வாக்கு கொடுப்பதா..?"

"ஆமாம்.."

"சார்.. ப்ளீஸ்.. ஆர்டர் போடுங்கள்.. வாக்கு கேட்க வேண்டாம்.."

"என் கட்டளையை என் தங்கையே கேட்பதில்லை.."

"நான் உங்கள் தங்கை இல்லை..."

"என்ன சொன்னாய்..?"

அவனுடைய கண்கள் ஏன் மின்னுகின்றன என்று அவனுக்குப் புரியவில்லை..

"நான் உங்கள் தங்கை இல்லைன்னு சொன்னேன் சார்.. நான் பூர்ணிமா.."

"ம்ம்.. அப்படியென்றால், ஏன் வாக்கு கொடுக்கத் தயங்குகிறாய்.."

"நான் தான் உங்கள் வார்த்தையை மீற மாட்டேனே.. அப்புறமும் ஏன் வாக்கு கேட்கிறீர்கள்..?"

"என் வார்த்தையை மீறாதவள்தான் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் நான் கொடுத்த காபியை குடிக்க மறுத்தாயா..? படிப்பு வேண்டாம், என்னை உடனே ஊருக்கு அனுப்பிவிடுங்கள்ன்னு சொன்னாயா..?"

"அது.. அது வந்து.."

"அதுபோல் வந்தவிடக்கூடாது என்றுதான் வாக்கு கேட்கிறேன்.."

பூர்ணிமா வெட்கத்துடன் உதட்டை கடித்துக் கொண்டாள்.. அவன் அதை வேடிக்கைப் பார்த்தான்.. அந்தச் சிறுபெண்ணின் மனம் தவித்ததையும், இப்போது என்ன செய்வது என்று புரியாமல் யோசிப்பதையும் பிரதிபலித்த அவளது முகத்தை மென்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்..

"ம்ம்.. என்ன வாக்கு கொடுக்க வேண்டும்..?"

"அடேங்கப்பா..! என்னிடம் வாக்கு கொடுக்க இவ்வளவு தயக்கமா..? நானெல்லாம் உன்னைப் போல் இவ்வளவு யோசித்து வாக்கு கொடுக்கவில்லையே.. என் அப்பா கேட்டவுடன் வாக்கு கொடுத்துவிட்டேனே.."

"ஸாரி.. ஸாரி.. என்ன சார்..?"

"யார் என்ன சொன்னாலும் என் அனுமதி இல்லாமல் நீ உன் படிப்பை பாதியில் விட்டுவிட்டு ஊருக்குத் திரும்பிப் போக நினைக்கக் கூடாது.. என் கடமையை முழுதாக செய்யவிட வேண்டும்.. இன்றைக்குப் போல் ஏதாவது யாராவது பேசினால் இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டுவிட வேண்டும்.."

"அது ஏன்..?"

"ஏனா..? அதற்குத்தானே ஆண்டவன் நமக்கு இரண்டு காதுகளைக் கொடுத்திருக்கிறார்.."

சந்தானகிருஷ்ணன் வினவிய விதத்தில் பூர்ணிமா வாய்விட்டுச் சிரித்தாள்.. அவன் முகம் கனிந்தது..

'சிறு பெண்..'

"ம்ம்.. சொல்லு.. வாக்கு தருவாயா..? மாட்டாயா..?"

"வாக்கு தருகிறேன் சார்.."

"அதை உன் வாயால் சொல்லு.."

"உங்கள் அனுமதி இல்லாமல் நான் என் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு என் ஊருக்குப் போக மாட்டேன் சார்.."

"யார் என்ன சொன்னாலும் கண்டுகொள்ளக் கூடாது."

"ம்ம்..."

"வாக்கு மாற மாட்டாயே.."

"வார்த்தை தவற மாட்டேன்.."

அவர்கள் இருவரையும் சுற்றி மின்விளக்கின் ஒளி வெள்ளம் வட்டமாக கவிந்திருந்தது.. சந்தானகிருஷ்ணன் எழுந்துகொண்டான்..

"வா.. போகலாம்.."

அவன் முன்னே போக, பின்தொடர்ந்த பூர்ணிமாவிற்கு, தன் முன் வழிகாட்டி அவன் செல்வது போல் இருந்தது..

கிருஷ்ணனைப் பின்தொடர்ந்த அர்ஜுனன் போல் தன்னை உணர்ந்தாள் அவள்..

## 10

அவர்கள் வீட்டுக்குள் பிரவேசித்தபோது கவலையுடன் அமர்ந்திருந்த தாயம்மா எழுந்து கொண்டாள்.. அவளது கண்கள் சந்தான கிருஷ்ணனிடம் சமிக்ஞையாய் 'என்ன..?'

என்றும் வினவின.. அவன் கண்களை மூடித் திறந்து.. நிலைமை சரியாகிவிட்டதை உணர்த்தினான்.. நிம்மதியடைந்த தாயம்மா, பூர்ணிமாவை நோக்கிப் பரிவுடன் புன்னகைத்தாள்..

"என்னம்மா.. தோட்டத்தில் இருந்தாயா..?"

"ஆமாம் அம்மா.."

பூர்ணிமா, தாயம்மாவிற்கு பதிலளித்துக் கொண்டிருந்தபோதே சந்தியா அங்கு வருவதைப் பார்த்து விட்டாள்..

"அப்புறம் வேறு எங்கு போவாள் அத்தை..? வெட்டி ரோஷப்பட்டு, ஊருக்கு மூட்டைகட்ட அவளென்ன பைத்தியமா..? வழியில் போகிறவர்களுக்கு எல்லாம் வடித்துக் கொட்டுகிறோமே.. நாம்தான் பைத்தியம்.."

சந்தியாவின் எகத்தாளமான வார்த்தைகள் ஒவ்வொன்றும் பூர்ணிமாவின் இதயத்தில் முள்ளாகப் பாய்ந்தன.. அதில் குருதி கொட்ட ஆரம்பித்தது.. தாங்க முடியாதவளாய் சந்தானகிருஷ்ணனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள்..

'ஏன் என்னை வாக்குறுதியால் கட்டிப்போட்டாய்..?' என்று அவளது விழிகள் வினவின..

"அவள் ஒன்றும் வழியில் போகும் பெண்ணில் லையே சந்தியா..!"

"வேறு யார் அண்ணா..? இந்த வீட்டுப் பெண்ணா..?"

"ஆமாம்.."

"நீ சொல்வதன் அர்த்தம் உனக்கு விளங்குகிறதா..?"

"நீ எந்த உள்நோக்கத்தில் இப்படிப் பேசுகிறாய்ன்னு எனக்குப் புரிகிறது.."

சந்தானகிருஷ்ணன், சந்தியாவின் விழியோடு விழி பார்த்தான்.. அண்ணனின் நேர்கொண்ட பார்வையை சந்திக்க முடியாதவளாய் தங்கை முகம் திருப்பிக் கொண்டாள்..

'எப்படிப் பேசினாலும் கண்டுபிடித்து விடுகிறானே..' அவளது மனம் குமைந்தது..

"வேண்டாம் சந்தியா.. இது சரியில்லை.. விட்டுவிடு.."

"எதை விட்டுவிடச் சொல்கிற..?"

"தேவையில்லாமல் நம் வீட்டில் இருக்கும் பெண்ணின் மனம் நோகப் பேசுவதை விட்டுவிடு."

"என்னைச் சண்டைக்காரி என்கிறாயா..?"

"இல்லை.. நான் அப்படிச் சொல்லவில்லை.. மனதில் எதையோ வைத்துக் கொண்டு வெளியில் வேறு மாதிரி பேசுகிறாய்ன்னு நினைக்கிறேன்.."

"எனக்கு அது தெரியாது.."

"கொஞ்ச நாள் முன்பு வரை தெரியாதுன்னு சொல்லு.."

"ஏன்.. இப்போது என்ன வந்தது..?"

"அதை உன் மனசாட்சியிடம் கேள்.."

"அண்ணா.. நான் ஏன் என் மனசாட்சியிடம் கேட்க வேண்டும்..? நீ உன் மனசாட்சியிடம் கேட்டால் ஆகாதா..?"

"என்னவென்று கேட்கச் சொல்கிறாய்..?"

"நீ சொல்வது சரியான்னு கேள்.."

"நான் என்ன செய்துவிட்டேன்..?"

"செய்ய வேண்டியதை நீ செய்யவில்லை.."

"சந்தியா.. நான் எதைச் செய்யவேண்டும் எதைச் செய்யக்கூடாதுன்னு எனக்கு நன்றாகத் தெரியும்.. நீ ஒன்றும் சொல்ல வேண்டாம்.."

"அப்படித்தான் நான் சொல்லுவேன்... நான் சொல்லாமல் வேறு யார் உனக்கு இதைச் சொல்வார்கள்..? அத்தை சொல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குப் போய் விட்டது.."

சந்தியாவின் விழிகள் தாயம்மாவை குற்றம் சாட்ட.. அவள் அவசரமாகப் பேசினாள்..

"சந்தியா.. நான் சொல்ல வேண்டிய அளவு சொல்லி விட்டேன் கண்ணு.. அண்ணன்தான் பிடிவாதமாக இருக்கிறான்.."

"அத்தையை ஏன் வம்புக்கு இழுக்கிற சந்தியா.. அவங்க சொல்ல வேண்டியதை தினமும் சொல்லிக் கிட்டுதான் இருக்கிறாங்க.."

"கேட்க வேண்டிய நீதான் கேட்காமல் இருக்கிறாயாக்கும்.."

சந்தானகிருஷ்ணன் உன்னுடன் இனி பேசி பிரயோஜனமில்லை என்பதுபோல் தோளைக் குலுக்கிக் கொண்டு போய்விட்டான்.. பூர்ணிமா அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே அறைக்கு நழுவிவிட்டாள்.. சந்தியா தன் கோபத்தை யார் மேல் காட்டுவது என்று தெரியாமல் சோபாவில் தொப்பென்று அமர்ந்தாள்..

அவள் அருகினில் அமர்ந்து ஆறுதலாய் அவளுடைய தோளைத் தொட்டாள் தாயம்மா.. அதற்காகவே காத்திருந்தது போல் தாயம்மாவின் மடியில் விழுந்து அழ ஆரம்பித்தாள் சந்தியா..

"அழாதேடா.. என் கண்ணில்ல.."

"எனக்கென்று யாருமே இல்லை அத்தை.."

"ஏண்டா கண்ணு.. நானில்லையா..?"

"நீங்களிருந்து என்ன பண்ண..? நீங்களும் அண்ணனுடன் சேர்ந்து நியாயம் பேசுகிறீங்களே.."

"சந்தியா பொறுமையாக இரும்மா.."

"எதுவரை அத்தை..? எனக்கு நரை விழுந்து தடியூன்றி.. கிழவியாகும் வரையா.."

"பைத்தியம் போல் பேசாதே.. நீ மட்டுமா கிழவியாவாய்..? வினய்யும்தானே கிழவன் ஆவான்..? அவனுடைய அப்பன் அதை பார்த்துக்கிட்டு இருப்பானா..?"

"எந்த தைரியத்தில் வினய் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் எனக்காக காத்திருப்பான்னு நீங்க சொல்றீங்க.."

"உன் பெயரில் இருக்கும் இரண்டு தொழில்களிலும் வினய்யின் அப்பன் கோகுல்நாத் பார்ட்னராக இருக்கும் தைரியத்தில்தான் சொல்கிறேன்.."

"ச்சு.. உங்களுக்கும் அண்ணனுக்கும் இதை விட்டால் வேறு பேச்சே இல்லையா.. இதையே எத்தனை தரம் சொல்வீங்க..?"

"உன் புத்தியில் ஏறும் வரை சொல்வோம்.."

"அத்தை.."

"ஆமாம் சந்தியா.. உன் அப்பாவிற்கு நிறைய தொழில்கள் இருக்கின்றன.. பத்தாததற்கு கிராமத்தில் இருக்கும் நிலபுலன் வேறு.. ஆனால், கோகுல்நாத்திற்கு இந்த இரண்டு தொழில்களை விட்டால் வேறு தொழில் இல்லை.. உனக்கு வேறு இடத்தில் கல்யாணமாகி உன் கணவன் தொழிலைக் கவனிக்க வந்துவிட்டால் அவன் நிலைமை என்னாவது... அதனால் இந்த தொழில்களை முழுவதுமாக கைப்பற்றத்தான் அவன் நினைப்பான்.. உன்னை விட்டுக் கொடுத்துவிட அவன் என்ன முட்டாளா..?"

"ஆனால், இந்தச் சண்டை எதற்கு அத்தை..? அவங்க கேட்பதை செய்துவிடலாமே.. அது எனக்கும் நல்லது தானே..."

"உன் அண்ணனுக்கு நல்லது இல்லை என்கிறானே.."

"அத்தை..! நான் என்ன சொல்கிறேனென்றால்.."

"விட்டுவிடு கண்ணம்மா..! எல்லாம் சரியாகி விடும்.. நம்பிக்கை வை.. உன் அண்ணன் உன்னை விட்டு விட மாட்டான்.."

தாயம்மாள் பேச்சை கத்தரித்துவிட்டு எழுந்து சென்றுவிட்டாள்.. சந்தியா துக்கத்துடன், டி.வி-யை உயிர்ப்பித்தாள்.. சேனல்களை ஒரு குறிக்கோள் இல்லாமல்

மாற்றிக் கொண்டேயிருந்தாள்.. மனம் பூராவும் வினய்யின் நினைவு நிரம்பியிருந்தது.. அவனை சமீப காலமாய் பார்க்க முடியவில்லை.. போன் பண்ணினால் 'ஸ்விட்ச் ஆஃப்' என்று பதில் வந்தது.. அவனைப் பார்க்க வேண்டும் போல் ஏக்கம் நெஞ்சமெங்கும் வியாபித்தது.. ஆனால், எங்கே சென்று அவனைப் பார்ப்பது..? கோகுல்நாத்திடமும் அவனைப் பற்றி விசாரிக்க முடியவில்லை.. மறைமுகமாய் இவள் கேட்கும் கேள்விகளைப் புரிந்து கொள்ளாதது போல் அவர் பதிலளித்தார்..

"கண்கள் இரண்டும் என்று

உன்னைக் கண்டு பேசுமோ..

காலம் இனிமேல் நம்மை

ஒன்றாய் கொண்டு சேர்க்குமோ.."

டி.வி-யில் பழைய பாடல் ஒன்று ஒளிபரப்பாக கண்களை மூடிச் சரிந்தாள் சந்தியா.. அதே சமயம், தம்பி மகளுக்குப் பிடித்த டிபனை செய்து டைனிங் டேபிளின் மேல் வைத்துவிட்டு, தாயம்மா அவளைத் தேடிவந்தாள்..

சந்தியா கேட்டுக் கொண்டிருந்த பாடலைக் கேட்டு அவளுக்குள் கருணை சுரந்தது..

'பாவம்.. அவனைப் பார்க்க முடியாத தவிப்பில் எல்லோரின் மீதும் பாய்கிறாள் இவள்..'

"பச்சைக் கிளியானால்..

பறந்தேனும் தேடுவேன்..

பாடி வரும் தென்றல்..

தேரேறி ஓடுவேன்..

சென்ற இடம் காணேன்..

சிந்தை வாடலானேன்..

சேதிசொல்ல.. யாரும்..

தூது செல்லக் காணேன்"

தாயம்மாள் தம்பி மகளின் அமைதியைக் கலைக்க விரும்பாதவளாய் சப்தம் எழுப்பாமல் அவளருகில் அமர்ந்தாள்..

"சென்ற இடம் யாவும்..

நிழல்போலத் தோணுதே..

அன்று சொன்ன வார்த்தை..

அலைபோல மோதுதே..

கணையாழி இங்கே..

மணவாளன் அங்கே..

காணாமல் நானும்..

உயிர் வாழ்வதெங்கே.."

சந்தியாவின் கடைக்கண்ணிலிருந்து நீர் கோடாக இறங்கி அவளது தலைமுடியை நனைத்தது..

அதைப் பார்த்துக் கொண்டே வந்த சந்தான கிருஷ்ணனின் கண்களும் தாயம்மாவின் கண்களும் சந்தித்துக் கொண்டன..

தங்கையின் துயரத்தைக் கண்டு அவனது மனம் கனத்தது.. அவளின் மனநிலையை மாற்ற விரும்பியவன்.. பூர்ணிமாவின் அறைப் பக்கம் திரும்பி..

"பூர்ணிமா.. பூர்ணிமா.." என்று அழைத்தான்.. அவன் எதை எதிர்பார்த்தானோ அது உடனே நடந்தது.. சந்தியா அவசரமாக எழுந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.. முகத்தை சாதாரணமாய் வைத்துக் கொண்டு டி.வி. சேனலை உடனே மாற்றினாள்..

"என்ன சார்.."

"சாப்பிடவா.. பசிக்கவில்லையா.."

பூர்ணிமா தயக்கத்துடன் சந்தியாவைப் பார்த்தாள்.. அவளோ பதிலுக்கு முறைத்தாள்..

"என்னை ஏன் பார்க்கிறாய்..? அதுதான் மகாராணியை மாகாராஜாவே அழைக்கிறாரே.. போய் கொட்டிக் கொண்டுபோ.."

"ஏன் அவளிடம் கோபமாய் பேசுகிறாய் சந்தியா.. அவளுக்கு மட்டும்தான் பசிக்குமா..? உனக்குப் பசிக்காதா..?"

"என்மேல் உனக்கு ரொம்பத்தான் கரிசனம் இருப்பது போல் நடிக்காதே.. நீ என்னையா முதலில் கூப்பிட்டாய்..?"

"அவளும்.. நீயும் ஒன்றா..?"

"அப்படி ஒன்று இருப்பதுகூட உன் நினைவில் இருக்கிறதா..?"

"சந்தியா.. நீ இந்த வீட்டின் இளவரசி..!"

"அப்போ.. அந்தப் பெண் யார்..? நான் சொன்னது போல் மகாராணியா..?"

இதுவரை அமைதியாக இருந்த பூர்ணிமா குறுக்கிட்டுப் பேசினாள்..

"இல்லைங்க.. நான் அடைக்கலமாய் வந்தவள்.."

"யாரிடம்..?"

"ஏன்.. உங்களிடம்தான் வந்திருக்கிறேன்னு வைத்துக் கொள்ளுங்களேன்.. உங்களுடைய அப்பா எனக்குப் பொறுப்பாளராக இருந்தார்.. அவருக்கு பின்.. நீங்கள் என்னைப் பார்த்துக் கொள்ள மாட்டீங்களா..?"

அவளது பணிவான பேச்சிற்கு பலன் இருந்தது.. சந்தியா மேற்கொண்டு எதுவும் பேசாமல் சாப்பிட வந்தாள்.. சாப்பாட்டுக்கு இடையில் பூர்ணிமாவை புண்படுத்தி எதையும் பேசவில்லை..

தாயம்மாளுக்கும் சந்தானகிருஷ்ணனுக்கும் நிம்மதி யாக இருந்தது.. சந்தானகிருஷ்ணன், பூர்ணிமாவின் செயல்பாட்டை மனதிற்குள் மெச்சிக்கொண்டான். 'கோடு போட்டுக் கொடுத்தால்.. இவள் ரோடு போட்டு விடுகிறாளே..

11

வகுப்பறை சன்னமான பேச்சொலியுடன் இருந்தது.. வகுப்பறையின் மேடையில் விரிவுரைளாயர் பேசிக் கொண்டிருப்பதை பூர்ணிமா கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.. சிலர் கேட்கமுயன்று கொண்டிருந்தனர்.. சிலர் கேட்பதை தவிர்த்து தங்களுக்குள் மென்குரலில் பேசிக் கொண்டிருந்தனர்.. சிலர் வேறு யோசனையில் இருந்தனர்..

முதலில் இவர்களின் இந்தச் செயல்களைக் கவனித்த போது பூர்ணிமாவிற்கு ஆச்சரியமாக இருந்தது.. அம்பா சமுத்திரத்தில் அவள் படித்த பள்ளியிலும் சிலர் கண்டு கொள்ளாமல் இருப்பார்கள்.. ஆனால், அவர்களை ஆசிரியர்கள் உடனே இனம்கண்டு கொண்டு உடனடியாகக் கண்டிப்பார்கள்..

இங்கோ யாரும் எதையும் கண்டுகொள்வதில்லை.. 'என் கடமை பாடம் நடத்துவது கவனித்தால் முன்னேறு.. கவனிக்காவிட்டால் அது உன் கவலை..' என்பது போல் ஆசிரியர்கள் இருந்தார்கள்..

மாணவர்களோ, அதுசே சரியென்று நினைப்பவர்கள் போல், வாங்குகின்ற சம்பளத்திற்கு நீங்கள் பாடம் நடத்துகிறீர்கள்.. எங்களுக்கென்ன வந்தது என்பது போல் அமர்ந்திருந்தார்கள்..

அவர்களிலும் பூர்ணிமாவைப் போல் ஆழ்ந்த கவனத்துடன் படிக்கத் துடிக்கும் மாணவ-மாணவிகள் இல்லாமல் இல்லை.. அவர்கள் பூர்ணிமாவைப் போல் நோட்ஸ் எடுத்துக் கொண்டிருந்தனர்..

வகுப்பு முடிந்ததும், பூர்ணிமா வெளியே வந்தாள்.. அடுத்த வகுப்பிலிருந்து கீதா வந்து அவளுடன் சேர்ந்து கொண்டாள்.. இருவரும் பேசியவாறு மாணவிகள் விடுதியை அடைந்தனர்.. மாடியேறி அவர்களின் அறைக் கதவைத் திறந்தனர்..

"ஹப்பா.. ஒருவழியாய் இன்றைக்கு காலேஜ் முடிந்து விட்டது.." என்றபடி புத்தகங்களை அலமாரியில் வைத்துவிட்டு.. நைட்டியை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்தாள் கீதா..

'ஏதோ வெட்டிச் சாய்த்துவிட்டு வந்தவள் போல் பேசுகிறாளே..' என்று நினைத்துக்கொண்ட பூர்ணிமாவிற்கு சிரிப்பு வந்தது..

அவள் ஜன்னலருகே சென்று.. கதவுகளை விரியத் திறந்துவிட்டாள்.. வெளிக்காற்று இதமாக முகம் தழுவி உள்ளே வந்தது.. ஜன்னல் வழி.. கல்லூரி வாசலுக்கு செல்லும் சாலை தெரிந்தது..

அன்று அவளை விடுதியில் விட்டு விட்டு சந்தான கிருஷ்ணன் சென்றபோது இதே சாலை வழியாகத்தான் காரில் சென்றான்.. கலக்கத்துடன் நின்றுகொண்டிருந்த வளை திரும்பிப் பார்த்து ஒரு புன்முறுவல் செய்து கை அசைத்தான்..

பூர்ணிமாவின் கலக்கம் ஓடிவிட்டது.. அவள் அவசரமாக பதிலுக்கு கை அசைத்தாள்.. பின் மாடியேறி அவளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இந்த அறைக்குள் வந்த போது..

"ஹாய்.." என்று வரவேற்றாள் கீதா..

பதில் சொல்லாமல்.. தயங்கி நின்ற பூர்ணிமாவின் அருகே வந்து கைநீட்டி..

"ஹாய் சொன்னால்.. கை கொடுக்கணும்.." என்றாள்.

பூர்ணிமா தன்னைச் சமாளித்துக் கொண்டு கீதாவின் கரத்தைப் பற்றிக் கொண்டாள்..

"நான் கீதா.. என் ஊர் நெய்வேலி.. அப்பாவும் அம்மாவும் நெய்வேலியில் இன்ஜினீயர்ஸ்.. என்னையும் அவங்களைப் போல் ஆக்க இங்கே அனுப்பி வைத்திருக் காங்க.. நீ..?"

"என் பெயர் பூர்ணிமா.. அப்பா இல்லை.. அம்மாவும் தங்கையும் மட்டும்தான்.."

"ஓ.. அப்படின்னா உன் கூட வந்த அந்த ஹேண்ட்சம் மேன் யார்..?"

"ஹேண்ட்சம் மேனா..?"

"ம்ம்.. இந்த ஹாஸ்டலே அவரைத்தான் சைட் அடித்தது.. நீ பார்க்கலையா..?"

"இல்லையே.."

"அதனால் ஒன்றும் தப்பில்லை.. இனி பழகிக் கொள்.."

"எதற்கு..?"

"சைட் அடிக்க.."

பூர்ணிமா திகைத்துப்போய் கீதாவைப் பார்த்த போது அவள் கலகலவென்று சிரித்தாள்..

"என்ன இந்த முழி முழிக்கிற..? உனக்கு அரிச்சுவடியில் இருந்து பாடம் எடுக்கணும் போல இருக்கே.. ஓகே.. அதை அப்புறம் பார்ப்போம்.. இப்போ அவர் யார்ன்னு சொல்லு.."

"அவர் என் கார்டியன்.."

"கார்டியன்னா..?"

"ம்ம்.. கார்டியன்னா.. கார்டியன்தான்.."

"புரியலை.. உனக்கு அம்மா இருக்கிறாங்க இல்ல..?"

"இருக்காங்க.. ஆனால், என்னைப் படிக்க வைக்கும் அளவுக்கு பொருளாதார வசதி அவங்ககிட்ட இல்லை.."

"ஓ..."

"இவர் எங்கள் ஊர்ப் பண்ணையாரின் மகன்.. என்னைப் படிக்க வைக்கும் பொறுப்பை பண்ணையார் ஏற்றுக்கொண்டிருந்தார்.. அவர் இறந்துவிட்டார்.. அவருக்குப் பின்னால் அவருடைய மகனான இவர் என் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.."

"அப்படியா..?"

கீதாவின் விழிகளில் தெரிந்த பரிதாபத்தை தாங்க முடியாதவளாய் பூர்ணிமா தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்..

கீதாவிற்கு அவளைப் பார்க்கையில் ஆச்சரியம் மேலோங்கியது.. தன் ஏழ்மையை வெளிப்படையாகக் கூறிய பூர்ணிமாவின் இயல்பான தன்மை அவளைக் கவர்ந்தது.. அவளுக்கு பூர்ணிமாவை மிகவும் பிடித்துப் போய்விட்டது..

"இதைப் பாருடா.. ஊரில்.. உலகத்தில் வயதுப் பெண்களுக்கு கார்டியனாக இருப்பவர்கள் கிழவர்களாக இருப்பார்கள்.. உனக்கு ஊரையே திரும்பிப் பார்க்க வைக்கிற மன்மதன் போய் கார்டியனாக வந்து வாய்த்திருக் கிறாரே.. இது உலக அதிசயம்தான்.."

பதில் கூறாமல் முறுவலித்தாள் பூர்ணிமா.. பல் வரிசை தெரியாமல் அமர்த்தலாக அவள் சிரித்த பாங்கு.. அமைதியான முகபாவம்.. எல்லாமே கீதாவை ஈர்க்க.. அவள்..

"நீ மட்டும் குறைச்சலா என்ன..? அந்த கார்டியனுக்கு ஏற்ற கட்டழகிதான்.." என்றாள்..

பூர்ணிமாவிற்கு தூக்கிவாரிப் போட்டது..

"ஊகும்.. கீதா.. விளையாட்டுக்குக் கூட அப்படிப் பேசாதே.." என்று பதற்றமாகச் சொன்னாள் பூர்ணிமா..

"ஏன்.. உள்ளதைத்தானே சொன்னேன்..? நீயும் அழகுதானே பூர்ணிமா.."

"அதற்காக யாரோடு யாரை இணை சேர்ப்பது..? அவர் என்னைத் தேடி வந்து எனக்கு படிப்பைக் கொடுக்கும் தேவன்.. அவரின் நிழலைக்கூட நான் வணங்குவேன்.. இனியொரு முறை இப்படிப் பேசாதே.. அவர் மலை.. நான் மடு.."

"ஓகே.. ஓகே.. லீவ் இட்.. டென்ஷன் ஆகாதே.. ஆமாம் பூர்ணிமா.. நீ ப்ளஸ் டூவில் எத்தனை மார்க்..?"

கீதா பேச்சை மாற்றிவிட்டாள்.. பூர்ணிமாவும் அவள் கேட்டதற்கு பதில் சொல்லியபடி துணிகளை எடுத்து அவளுக்கான அலமாரியில் அடுக்க ஆரம்பித்தாள்..

"வாவ்.. எல்லாமே அருமையான கலர்.. சூப்பர் மெட்டீரியல்.. உன் டிரஸ் செலக்ட் பண்ணியிருக்கும் டேஸ்ட் பிரமாதம்.." கீதா எழுந்து வந்து.. பூர்ணிமாவின் சுடிதார்களைப் பார்த்துவிட்டுப் பாராட்டினாள்..

"இந்தப் பாராட்டெல்லாம் என்னைச் சேர்ந்தது இல்லை.." பூர்ணிமா சிரித்தாள்..

"வேறு யாரைச் சேர்ந்தது..?"

"என் கார்டியனைச் சேர்ந்தது.. நான் என் வழக்கப் படி இரண்டு செட் டிரஸ் போதும் என்றேன்.. அவர்தான் என்னை அதட்டிவிட்டு இந்த டிரஸ்களை எடுத்துக் கொடுத்தார்.."

"நல்லவேலை செய்திருக்கிறார்.. நீ இரண்டு செட் போதுமென்றாயா.. எந்தக் காலத்தில் இருக்கிறாய்..?"

பூர்ணிமா பதில் சொல்லாமல் சிரித்துவிட்டு, குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.. கீதாவின் மனதில் சந்தானகிருஷ்ணனின் மேல் மதிப்பு உருவாகியது..

வெறுமனே.. படிப்புக்கு மட்டும் பணத்தைக் கொடுத்துவிட்டுக் கழன்று கொள்ளாமல்.. டிரஸ் முதற்கொண்டு பார்த்துப் பார்த்து வாங்கிக் கொடுத்திருக் கிறாரே..

அதன் பின்னால், இருவரும் நெருங்கிய தோழிகள் ஆகிவிட்டனர்.. கீதா.. பூர்ணிமாவிற்கு ஆசான் ஆனாள்.. சென்னை கல்லூரியில் மற்றவர்களுடன் எப்படிப் பேசிப் பழகவேண்டும், எப்படி நிமிர்வாக இருக்கவேண்டும் என்று அவள் பூர்ணிமாவிற்கு கற்றுத் தந்தாள்..

"பூர்ணி.. உன் பர்சனல் என்னோடு இருக்கட்டும்.. மற்றவர்களிடம் ஷேர் பண்ணிக் கொள்ளாதே.."

"ஏன் கீதா..?"

"இது பொய்யான உலகம் பூர்ணி.. பேக்ரவுண்டு இல்லாவிட்டால் யாரையும் இது மதிக்காது.. ஏழைகளிடம் ஒரு மாதிரியும், பணக்காரர்களிடம் வேறு மாதிரியும் பழகும் உலகம் இது.."

"ஏழையாக இருப்பது ஒன்றும் குற்றம் இல்லையே.."

"இல்லைதான்.. அதை ஏன் ஊர் பூராவும் சொல்ல வேண்டும்..?"

"பொய் சொல்லச் சொல்கிறாயா..?"

"இல்லை.. நீ உண்மையை விளம்பாமல் இருந்தால் போதும் என்கிறேன்.."

"யாராவது என்னைப் பற்றி விசாரித்தால் உண்மையைத்தான் நான் சொல்வேன்.. உண்மையை எப்படி மறைப்பது கீதா..?"

"உன்னை யாருடி மறைக்கச் சொன்னது.. நீ இங்கே படிக்கும் காலம் வரை, உன் கார்டியனின் பொறுப்பில் தானே இருக்க வேண்டும்..?"

"ஆமாம்.."

"அதை மட்டும் சொல்லு.. போதும்.. அதில் பொய் யில்லையே.."

"இல்லை.. ஆனாலும்,"

"இந்த ஆனா.. ஆவன்னாவெல்லாம் வேண்டாம், பூர்ணி..! சொன்னதைச் செய்.."

பூர்ணிமா, கீதா சொல்வதற்கு தலையை ஆட்டினாலும்.. அவள் சொன்னபடி உண்மையை மறைக்க அவளுக்கு மனம் வரவில்லை..

எனவே.. மற்றவர்களிடம் அதிகம் பழகாமல் தள்ளியே நின்றாள்.. யாராவது அவளுடைய வீட்டைப் பற்றிக் கேட்கும் போது..

'அப்பா உயிரோடு இல்லை.. இங்கே என் கார்டியனின் பொறுப்பில் இருந்து படித்துக் கொண்டிருக் கிறேன்..' என்று கூறுவாள்..

பாவம்.. பூர்ணிமா.. அவள் என்னவோ பொய்யுரைக்க மனம் இல்லாமல் இயல்பாகத்தான் இதைக் கூறினாள்..

ஆனால், கேட்டுக் கொண்டவர்கள், அவளைப் பணக்காரி என்று நினைத்தனர்.. அப்பா இல்லாதவளுக்கு படித்து முடிக்கும்வரை கார்டியனாக ஒருவர் இருப்ப தென்றால், அவர் பணக்காரியாகத்தானே இருக்க வேண்டும் என்பது அவர்களின் நினைவு..

இதை அறியாத பூர்ணிமா, அவளிடம் பழகுபவர்கள் அவளுக்காகவே அவளுடன் பழகுவதாக நம்பினாள்.. அப்படி அவள் நம்பிப் பழகியவர்களில் ஒருவன் பிரசன்னா..

பூர்ணிமா வந்ததும் சந்தித்த ராகிங்கில் அவளுக்கு உதவி செய்தவன் இந்த பிரசன்னா.. அந்தக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு மாணவனாக இருந்தான்..

ராகிங் பண்ணிக் கொண்டிருந்த கும்பலின் தலைவன் அவனுக்கு நண்பனாம்..

"பரத நாட்டியம் ஆடு.." என்று மிரட்டிக் கொண்டிருந்தவனின் எதிரே வந்து நின்று பூர்ணிமாவைப் பார்த்து,

"ஹாய்.. பூர்ணி.. வீட்டில் எல்லோரும் சௌக்கியமா..?" என்று கேட்டான் பிரசன்னா..

"என்னடா மச்சி.. இது உனக்குத் தெரிந்த பெண்ணா..?"

"ஆமாம்டா.. மச்சான்.."

அவனைத் தனக்குத் தெரியாதே என்று குழம்பித் தவித்த பூர்ணிமா.. 'நீங்கள் யார்..?' என்று கேட்க வாய் திறந்தபோது.. கண் சமிக்ஞையில் அவளை அடக்கினான் பிரசன்னா..

"ஸாரிடா மச்சான்.. புதுப் பொண்ணுன்னு கிண்டல் பண்ண ஆரம்பித்தோம்.. உனக்குத் தெரிந்த பொண்ணுன்னா விட்டிருப்போம்.."

"பரவாயில்லைடா.. தெரியாமல்தானே பண்ணினே.. இதுக்குப் போய் ஃபீல் பண்ணணுமா..?"

பிரசன்னா, பூர்ணிமாவை அழைத்துக் கொண்டு போனான்..

13

"நீங்கள் யார்.. என் பெயர் எப்படி உங்களுக்குத் தெரியும்..?"

ஓர் அறியாமையுடன் இதை வினவிய பூர்ணிமாவின் களங்கமில்லாத நிலவு போன்ற முகத்தை பிரசன்னா.. கண்களில் ஓர் சிரிப்போடு பார்த்தான்..

"நான் பிரசன்னா.. இன்ஜினீயரிங் தேர்ட் இயர்.. என்னைப் பற்றிய விவரம் போதுமா..?"

"இல்லை.. என் பெயர் எப்படி.."

"எனக்குத் தெரிந்ததுன்னு கேட்கிறாய்..? அது ரொம்ப சிம்பிள்.. இன்னும் ஸ்கூல் பீரியடிலேயே இருக்கும் நீ.. கொட்டை எழுத்தில் நோட்புக்கின் மேல் உன் பெயரை எழுதி வைத்திருக்கிறயே.. எனக்கு மட்டுமில்லை.. இந்தக் காலேஜிற்கே உன் பெயர் தெரியும்.."

"ஐயையோ.."

பூர்ணிமா கலவரத்துடன் நோட்புக்கை எடுத்துப் பார்க்க, பிரசன்னாவிற்கு சிரிப்பு வந்துவிட்டது.. நகரத்தின் நாகரிகப் பூச்சுக் கலக்காத கிராமத்தின் வெகுளித்தனம் அவளுடைய செயல்பாட்டில் தெரிவதை ரசித்துப் பார்த்தான் அவன்..

"போகுது விடு.. எல்லோருக்கும் தெரிந்த நபராக இருப்பதில் உனக்கென்ன கஷ்டம்..?"

இதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியாதவளாய் இருக்குமிடம் தெரியாமல் இருக்கும் பூர்ணிமா விழித்தாள்..

"உன்னை எனக்குத் தெரிந்தது போல் நான் காட்டிக் கொண்டதால்தான்... அவர்கள் உன்னைச் சும்மா விட்டார்கள்.."

"ஆமாம்.. ஆமாம்.."

"நான் பொய் சொன்னது உன்னைக் காப்பாற்றதான்.."

"ரொம்ப நன்றி சார்.."

"உன் நன்றியெல்லாம் எனக்கு வேண்டாம்.. பதிலுக்கு நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டுமே.."

"என்ன சார்.. சொல்லுங்கள், கண்டிப்பாக செய்கிறேன்.."

"இது என்ன சார்.. மோர்ன்னு சொல்கிற..? நான் காலேஜ் ஸ்டூடண்ட்ம்மா.. என்னை மிடில் ஏஜ் ஆளாக்காதே.."

"நீங்க என்னைவிடப் பெரியவங்க.."

"ரொம்பப் பெரியவன் இல்லைம்மா.. உன்னைவிட நான்கே வயதுதான் பெரியவன்.."

"உங்களை எப்படிக் கூப்பிடுவது..?"

"ஏன்.. எனக்குன்னு ஒரு பெயர் இருக்கிறதே.. அதைச் சொல்லிக் கூப்பிடு.."

"சேச்சே.."

"என் பெயர் அவ்வளவு கண்றாவியாகவா இருக்கிறது..?"

"ஐயையோ.. நான் அந்த அர்த்தத்தில் சொல்ல வில்லை.."

"வேறு எந்த அர்த்தத்தில் சொன்ன..?"

"உங்களை எப்படிப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது..?"

"ஏன்..? பிரசன்னா.. பிரசன்னான்னு தான் கூப்பிடணும்.."

"அது சரியாக இருக்காது.."

"இதோ பார்.. இதுதான் சென்னை கல்ச்சர்.. இங்கே பெயர் சொல்லித்தான் கூப்பிடணும்.."

"முயற்சி பண்ணுகிறேன்.."

"நீ என்னவோ பண்ணு.. இப்போதைக்கு நீ ஒப்புக் கொண்ட உதவியைப் பண்ணு.."

"சொல்லுங்க.. சொல்லுங்க.."

"அடேங்கப்பா.. எனக்கு உதவி செய்வதில் இவ்வளவு ஆர்வமா..?"

"நீங்க எனக்கு எவ்வளவு பெரிய உதவியைச் செய்திருக்கிறீங்க... நான் பதிலுக்கு உதவி செய்ய வேண்டாமா..?"

"நன்றிக்கடனை கழிக்கத் துடிக்கிற.."

"ஆமாம்ன்னு தான் வைத்துக் கொள்ளுங்களேன்.."

அவளது குழந்தைத்தனத்தைக் கண்டு அவனுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது..

"ஏன் சிரிக்கிறீங்க..?"

"ஒன்றுமில்லை.. சும்மா.."

"பொய்.."

"மெய்.."

"நான் நம்ப மாட்டேன்.."

"நம்பித்தான் ஆகனும்.. அதுசரி.. என்னவோ பதில் உதவி செய்ய துடித்துக் கொண்டிருப்பது போல் சொன்னாயே.. அது சும்மா விளையாட்டுக்குத்தானே..?"

"இல்லையில்லை.. நிஜமாகத்தான் சொன்னேன்.."

"பூர்ணிமா.. என் ஃப்ரெண்ட்.. உன்னை எனக்குத் தெரிந்த பெண்ணுன்னு நினைத்துக் கொண்டிருக்கிறான்."

"ஆமாம்.."

"அது பொய்யாகிவிடக் கூடாதில்லையா..?"

"ஆமாமாம்.. அவர் உங்களைத் தவறாக புரிந்து கொள்வார்.."

"பரவாயில்லையே.. புரிந்து கொண்டாயே.."

பூர்ணிமா பெருமையாய் முகத்தை வைத்துக் கொண்டாள்.. திரும்பவும் சிரித்தால் நன்றாக இருக்காதென்ற நினைவுடன் சிரிப்பை அடக்கிக் கொண்டான் பிரசன்னா..

"அதற்கு.. நான் என்ன செய்யனும்..?"

"தினமும் கொஞ்ச நேரம் என்னிடம் வந்து பேசி விட்டுப் போகனும்.."

"எதற்கு..?" புரியாமல் விழித்தாள் பூர்ணிமா..

"அதற்குத்தான்.." பிரசன்னாவின் கண்கள் சிரித்தன.

"அதற்கென்றால்..?"

"என் நண்பன் உன்னை எனக்குத் தெரிந்த பெண்ணுன்னு நினைக்க வேண்டாமா..? அதற்காகத்தான்.. உன்னைத் தினமும் என்னைக் கவனி என்கிறேன்.."

"ஓ..."

அந்த 'ஓ'வை நெற்றியில் சாக்ரடீஸ் போல் ஆழ்ந்த சிந்தனை ரேகையோடு உதடுகளைக் குவித்துச் சொன்ன பூர்ணிமாவை பிரசன்னா ரசித்து நோக்கினான்..

'இவள்தான் எவ்வளவு அறியாப் பெண்ணாக இருக்கிறாள்..?'

அன்று இரவு.. கீதாவிடம் பிரசன்னா கூறியதை பூர்ணிமா சொல்லியபோது அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்..

"மக்கு.. அவன் உன்னிடம் கடலை போடப் பார்க்கின்றான்டி.."

'கடலை' என்றால் என்னவென்று பூர்ணிமாவிற்குத் தெரியும்.. நிலத்தில் விளைவதை அவளிடம் எப்படிப் போட முடியுமென்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.. கீதாவைப் புரியாமல் நோக்கிவிட்டு தூங்கிவிட்டாள்..

14

அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குள் சந்தானகிருஷ்ணன் நுழைந்தபோது.. செல்போனில் பேசிக்கொண்டே வினய் எதிரே வந்தான்.. சந்தான கிருஷ்ணன் அவனையே பார்த்தவாறு செல்ல.. சந்தானகிருஷ்ணனின் பார்வையைச் சந்தித்துவிட்ட

வினய் தயங்கி நின்றான்.. சந்தானகிருஷ்ணன் எதுவும் போசாமல் வினய்யின் விழிகளைக் கூர்மையாகப் பார்த்தான்.. செல்போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக்கொண்ட வினய், சங்கடத்துடன்..

"ஹாய்.." என்று கைநீட்டினான்..

நீட்டிய கையைப் பற்றிக் கொள்ளாமல் புறக் கணித்த சந்தான கிருஷ்ணன்..

"ஹவ் ஆர் யூ வினய்..?" என்று வினவினான்..

"ஐ ஆம் ஃபைன்.."

"பட், சந்தியா இஸ் நாட் ஃபைன்.. டூ யூ நோ இட்..?"

வினய் பதில் சொல்லாமல் மௌனித்தான்.. சந்தான கிருஷ்ணனைப் பார்ப்பதைத் தவிர்த்தான்.. சந்தான கிருஷ்ணன், வினய்யின் முகத்திலிருந்து விழிகளை அகற்ற வில்லை..

"என்ன வினய்.. பதிலையே காணோம்.."

"ம்ம்..."

"என்ன பதில் சொல்வதுன்னு தெரியலையா..?"

"நான் வருகிறேன் கிருஷ்..."

"எங்கே வருகிறாய் வினய்..? நீதான் கம்பெனி பக்கம் வருவதே இல்லையாமே.."

"அப்பா வருகிறாரே.."

"ஆனால்.. முதலிலெல்லாம் நீதானே வந்தாய்.."

"இப்போது என்னால் முடியவில்லை.."

"முடியவில்லைன்னு ஏன் சொல்கிற.. நீ நினைத்ததை முடித்துவிட்டாய்ன்னு சொல்லு."

"நீ எதைச் சொல்கிற கிருஷ்..?"

"புரியவில்லையா..?"

"புரியவில்லையே.."

"பாவம்.. உனக்குப் புரியாதுதான்.. நீதான் சுயமாய் சிந்திப்பது இல்லையே.. உன் அப்பா சாவி கொடுத்தால் ஆடும் வெறும் தலையாட்டி பொம்மைதானே நீ.."

"கிருஷ்.. மைண்ட் யூவர் வெர்ட்ஸ்.."

"ஏன்..? ஏன் நான் என் வார்த்தைகளைக் கட்டுப் படுத்த வேண்டும்..? என் வார்த்தைகளால் உன் மனம் புண்பட்டுவிட்டதா..? எந்த அளவு புண்பட்டிருக்கிறது வினய்.. என் தங்கை ரத்தக் கண்ணீர் வடிக்கிறாளே.. தினமும் அழுது புலம்புகிறாளே.. அமைதியான தென்றலைப் போல் இருந்தவள் புயலாய் மாறி நிற்கிறாளே.. அன்பைத் தவிர வேறு ஒன்றையும் அறியாதவள், அழகிய ராட்சசியாய் மாறி நிற்கிறாளே..

அந்த அளவுக்குப் புண்பட்டிருக்கிறதா..?"

சந்தானகிருஷ்ணனின் வார்த்தைகள் வினய்யின் இதயத்தைக் குத்திக் கிழித்தன.. அவன் மனதின் வலியின் வேதனையை முகத்தில் பிரதிபலிக்காமல் இருக்க படாத பாடுபட்டான்..

அலையலையாய் அவன் முகத்தில் உணர்ச்சிகள் அலைமோதுவதைக் கவனித்தபடி அசையாமல் நின்றான் சந்தானகிருஷ்ணன்.

"கிருஷ்.. நான் சந்தியாவின் மனத்தைக் காயப் படுத்தவில்லையே.."

"எப்படி உன்னால் இப்படிப் பேசமுடிகிறது வினய்..? நீ அவள் மனதை அறிவாயல்லவா.."

"இந்த விஷயத்தில் அப்பா எடுக்கும் முடிவிற்கு நான் கட்டுப்பட்டுதான் ஆக வேண்டும் கிருஷ்.."

"வெல்.. ஆனால், ஒன்றை நீ நினைவில் வைத்துக் கொள்.. நான் சந்தியா எடுக்கும் முடிவிற்கு கட்டுப் படமாட்டேன்.."

"அதற்கு நான் என்ன பண்ண முடியும் கிருஷ்..?"

"ஒன்றும் பண்ண முடியாதுதான்.. நாளைக்கு சந்தியாவிற்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்து நான் கல்யாணம் பண்ணிவைத்தால் உன்னால் ஒன்றும் பண்ண முடியாதுதான்.."

வினய் சட்டென்று சந்தானகிருஷ்ணனைப் பார்த்தான்.. அவன் முகத்தில் சினம் தோன்றியது..

"என்ன சொன்ன..?"

"ஏன்.. நான் சொன்னது உன் காதில் விழ வில்லையா..?"

"என் சந்தியா.. என்னைத் தவிர இன்னொருவனை மனதாலும் நினைக்கமாட்டாள்.."

வினய்யின் கரங்கள் கோபத்தில் நடுங்கின.. சந்தான கிருஷ்ணனின் முகத்தில் புன்முறுவல் மலர்ந்தது..

"ம்ம்..? 'உன் சந்தியா..' என்னவோ உனக்கும் அவளுக்கும் சம்பந்தமே இல்லாதது போல் பேசினயே.. இப்போது பார்த்தயா..? பூனைக்குட்டி வெளியில் வந்து விட்டது.."

"கிருஷ்..! இனி இப்படிப் பேசாதே.."

"நான் பேசுவது இருக்கட்டும்.. நீயேன் உன் மனதில் இவ்வளவு காதலை வைத்துக் கொண்டு அவளை அலைக்கழிக்கிற..?"

வினய், சந்தானகிருஷ்ணனை எரித்துவிடுவது போல் பார்த்தான்..

"காரணம் உனக்குத் தெரியாதா..?"

"இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லையா வினய்..? உன் காதலை.. உன் அப்பாவின் ஆசைக்காக பணயம் வைக்கிறாயா..? ஆனால் சந்தியா.. நான் எவ்வளவு சொல்லியும் அவள் காதலை மறந்துவிட மறுக்கிறாளே.."

வினய்யின் முகத்தில் வெளிச்சம் பரவியதை மனதிற்குள் குறித்துக் கொண்டான் சந்தானகிருஷ்ணன்..

"கிருஷ்.. நீ மட்டும் கொஞ்சம் மனது வைத்தால்.."

"மனது வைத்தால்..?"

"என் காதலும்.. சந்தியாவின் காதலும் நிறை வேறிவிடும்.."

"பைத்தியக்காரா.. உன் மனம் அவள் மேல் இருக்கிறது.. அவள் மனம் உன் மேல் இருக்கிறது.. இதில் ஊடே என்னை ஏன் இழுக்கிற..? என் மனம் யாரின் மேலும் இல்லையே.."

"ஆனால் கிருஷ்.."

"வினய்.." சந்தானகிருஷ்ணனின் குரல் அதட்டலாக வெளிவந்தது..

"சந்தியாவின் மனதில் உன்மேல் காதலை வர வழைத்துவிட்டு நீ இப்போது கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருப்பது எனக்குத் தெரியாதுன்னு நினைக்கிறயா..? காதலை வியாபாரம் ஆக்காதே.. உன்னை நல்ல விலைக்கு விற்க விலையை நிர்ணயம் பண்ணிக் கொண்டிருக்கிறாயே.. இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லையா..? சந்தியா.. பாவம்.. நல்லபெண்.. அதனால்தான் உன்னை மறக்க முடியாமல் தவிக்கிறாள்.. இதுவே வேறு ஒருத்தியாக இருந்தால்.. என் காதலை மதிக்காத நீயும் வேண்டாம்.. உன் உறவும் வேண்டாம்ன்னு தூக்கிப் போட்டுவிட்டுப் போயிருப்பாள்.. அவள் அதைச் செய்யாமல் இருப்பது உனக்கு வெற்றின்னு நினைத்துவிடாதே.. என்றாவது ஒரு நாள் அவள் அதைச் செய்துவிட்டால்.. நீ தோற்றுவிடுவாய்.."

வினய்யின் முகத்தில் பரவியிருந்த வெளிச்சம் மறைந்தது.. அவன் முகம் இருண்டது சந்தானகிருஷ்ணன் மேலும் தொடர்ந்தான்..

"உன் அப்பா.. உன்னை விற்கப் பார்க்கிறார்.. ஆனால், நான் உனக்கு விலை கொடுக்க மாட்டேன்.. என் தங்கைக்கு என்ன குறை..? அவளுக்கு அழகில்லையா.. படிப்பில்லையா.. பணமில்லையா..? எது அவளிடம் இல்லை.. எல்லாம் நிறைந்த நிறைகுடம் அவள்..! எங்கள் வீட்டின் இளவரசி..! அவளைக் கல்யாணம் செய்து கொள்ளும் தகுதி உனக்குத்தான் இல்லை.. உனக்கு இருக்கும் ஒரே ஒரு தகுதி என்னன்னு தெரியுமா..? நீ அவளால் காதலிக்கப்படுகிறாய்.. அது மட்டுமே உன் தகுதி.."

வினய்யின் முகம் அவமானத்தில் கன்றிச் சிவந்தது.. "நீ பாவம் வினய்.. இப்படியொரு தகப்பனுக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கிறாய்.. என் அப்பாவாக இருந்திருந்தால்

ஒருபோதும் இப்படிப் பெற்ற பிள்ளையை வியாபாரப் பொருளாக்கியிருக்க மாட்டார்.. நான் உன் வீட்டு வாசல்படியை மிதித்து என் தங்கையைக் கல்யாணம் பண்ணிக் கொள்ன்னு கேட்பேன்னு கனவிலும் நினைக்காதே.. ஏமாந்து போவாய்.. என் அப்பா செய்யாத அந்த காரியத்தை ஒரு நாளும் நான் செய்ய மாட்டேன்.. உனக்கு ஆறுமாதம் அவகாசம் தருகிறேன்.. அதற்குள் பெண்கேட்டு நீ வந்தால் உனக்கு சந்தியாவை மணம் முடித்துத் தருகிறேன்."

"வராவிட்டால்..?"

"வேறு ஒருவனை மணக்க என் தங்கையைச் சம்ம திக்கவைப்பேன்.. என்னால் அது முடியும்.."

சந்தானகிருஷ்ணன் வேகமாய் ஹோட்டலுக்குள் போய்விட்டான்.. வினய் முகம் இருள.. அவனது காரில் ஏறி அமர்ந்தான்.

## 15

"அண்ணா.." சந்தியா மெதுவாக அலுவலக அறையின் கதவைத் தட்டி அழைத்தாள்..

கம்ப்யூட்டரிலிருந்து தலை நிமிர்ந்த சந்தான கிருஷ்ணன் புன்னகைத்தான்.. அவளது வரவை அவன் எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்..

"வாம்மா.. சாப்பிட்டுவிட்டாயா..?"

சந்தியா பதிலளிக்காமல் அவனுக்கு எதிரே வந்து அமர்ந்தாள்..

"ஏன் சந்தியா என்னவோ போல் இருக்கே..?"

"அண்ணா.. நீ அவரைப் பார்த்தாயா.."

சந்தானகிருஷ்ணன் மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.. வெளியில் ஒன்றும் தெரியாதவன் போல் வினவினான்..

"யாரைச் சொல்கிற..?"

"அவரைத்தான்.. வினய்யை நீ பார்த்தாயா..?"

சந்தானகிருஷ்ணன் பதில் சொல்லாமல் தங்கையைப் பார்த்தான்.. அவள் முகம் ஜ்வலித்துக் கொண்டிருந்தது.. ஒருவித மென்மை அவளிடம் தென்பட்டது..

'இந்தக் காதலுக்குத்தான் எத்தனை சக்தி இருக்கிறது.. கொதித்த மனம் குளிர்வதும்.. குளிர்ந்த மனம் கொதிப்பதும் காதலில் மட்டுமே சாத்தியமாகிறதே.. இது எப்படி..?' அவன் மனம் வினவியது..

"ஆமாம்.. பார்த்தேன்.."

"நிறையப் பேசினாயாமே.."

"ஆமாம்.. பேசினேன்.."

சந்தியா பாசத்துடன் தனது அண்ணனைப் பார்த்தாள்..

"தேங்க்ஸ் அண்ணா.."

"எதற்கு நன்றி சொல்கிற..?"

"எனக்காக நீ இவ்வளவு தூரம் பேசியிருக்கிறாயே.."

"முட்டாள் போல் பேசாதே.. நீ யார்..? என்னுடைய ஒரே தங்கை.. ஏதோ தெருவில் நடந்துபோகும் சம்பந்த மில்லாதவள் போல நன்றி சொல்கிறாயே.."

"இதுநாள் வரை நீ அப்படித்தான் இருக்கிறாய்ன்னு நினைத்தேன்.."

"குட் ஜோக்.. அவன் உன்னிடம் பேசினானா.."

"ம்ம்.."

"என்ன சொன்னான்..?"

"உன் அண்ணன் சொன்னால் என்னை நீ மறந்து விடுவாயான்னு கேட்டார்.."

"அப்புறம்..?"

"என்னை விட்டுப் போய்விடுவியான்னு கேட்டார்.."

"நீ என்ன சொன்ன..?"

"நான் என்ன சொல்லியிருப்பேன்னு நீ நினைக்கிற..?"

"அவன் கால்களில் விழுந்திருப்ப.."

"காதலின் இன்னொரு முகம் சரணாகதிதானே.."

"எனக்குக் காதலைப் பற்றித் தெரியாது.."

"உன் தங்கையைப் பற்றியும் தெரியாது.. தெரிந்திருந்தால், நான் என் தங்கையை இன்னொரு கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சம்மதிக்க வைப்பேன்னு சொல்லியிருக்க மாட்ட.."

"ஓ.. இதுதான் உனக்கு கோபமா..?"

"பின்னே.. கோபம் வராதா..? ஏன் அப்படிச் சொன்ன..?"

"அப்படி நான் சொன்னதினால்தான் இன்றைக்கு அவன் உன்னிடம் பேசியிருக்கிறான்.. இல்லாவிட்டால் பேசியிருப்பானா..? என்னவோ காதல்.. காதல் என்கிறாயே.. அந்தக் காதல் அவன் மனத்தில் இருந்தால் நான் சொன்ன வார்த்தைக்கு பறந்துகொண்டு வந்து பேசுவான்னு நினைத்தேன்.. என் யூகம் சரியாகி விட்டது.. இந்த இரண்டு மாதங்களாக அவனிடம் பேசாமல் நீ தவிப்பதைப் பார்த்து எனக்கு கஷ்டமாக இருந்தது.. அதனால்தான் இந்த வேலையைப் பண்ணினேன்.. பார் அதிர்ச்சி வைத்தியம் உடனே வேலை பார்த்து விட்டது.."

"ஆனாலும் நீ அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது..?"

"வேறு என்னம்மா செய்வது..? முள்ளை முள்ளால்தான் எடுக்கனும்.. இவனைப் போல அப்பன் பேச்சுக்கு தலையாட்டும் பொம்மைகளுக்கு காதல் எதற்கு..?"

"அண்ணா.. அவரைப் பற்றிக் குறைவாகப் பேசாதே.. நீ மட்டும் உன் அப்பா பேசும் பேச்சிற்கு தலையை ஆட்டலாம்.. அவர் ஆட்டக் கூடாதா.."

"நான் தலையை ஆட்டுகிறேன் என்பதற்காக என் அப்பா எப்போதுமே என்னைத் தலையாட்டி பொம்மையாக வைத்திருந்ததில்லை.. முக்கியமாய் நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்னு சொன்னால் என் அப்பா அதற்கு தடையாக நிற்கமாட்டார்.. என் காதலை வைத்து வியாபாரமும் பேச மாட்டார்.."

"உனக்கு அப்பாவைப் பற்றி குறைவாக ஒரு வார்த்தை பேசிவிடக் கூடாது.."

"உனக்கு உன் காதலனைப் பற்றிக் குறைவாக ஒரு வார்த்தை பேசிவிடக் கூடாது.."

"பதிலுக்குப் பதிலா..?"

"நான் உன் அண்ணன் இல்லையா.."

சந்தியா கலகலவென்று சிரித்துக் கொண்டே எழுந்து நின்று சந்தானகிருஷ்ணனின் தலையைக் கலைத்தாள்.. பின் சென்றுவிட்டாள்..

தங்கையின் கலகலப்பைப் பார்த்தவாறு அமர்ந்திருந்த சந்தானகிருஷ்ணனுக்கு மனம் இதமாக இருந்தது..

'அந்த வினய் போனில் கூப்பிட்டுப் பேசிவிட்டதற்கு இவ்வளவு சந்தோஷமா..?'

எழுந்து அறையை விட்டு வெளியே வந்தான்.. தோட்டத்திலிருந்து வந்த இதமான குளிர் காற்று.. அவனை 'வா..' வென்று அழைத்தது..

தோட்டத்தில் மெல்ல நடந்து கொடுத்தான்.. மனம் முழுவதும் சந்தியாவின் கலகலப்பே நிறைந்திருந்தது..

'இந்தச் சிரிப்பு என்றும் அவள் முகத்தில் நிலைக்க வழி என்ன..?'

அவனுக்கு இதற்கு மட்டும் வழிதெரியவில்லை.. யோசனையுடன் நடந்து கொண்டிருந்தவன்.. தாயம்மா அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்..

"சந்தானம்.. சாப்பிடவா.. நேரமாகிறது.."

அப்போதைக்கு யோசனையை பின்னுக்குத் தள்ளிவிட்டு சந்தானகிருஷ்ணன் வீட்டை நோக்கி நடந்தான்..

16

"நேற்றைக்கு என்னடி.. மரத்தடியில்.. அந்த பிரசன்னாவோடு மாநாடு போட்டுக் கொண்டிருந்தாயே.. என்ன விஷயம்..?"

கீதா முகத்திற்கு லேசான ஒப்பனை பண்ணிக் கொண்டே பூர்ணிமாவைத் திரும்பிப் பார்த்துக் கேட்டாள்..

கல்லூரி போகத் தயாராகி புத்தகங்களை அடுக்கிக் கொண்டிருந்த பூர்ணிமா நிமிர்ந்தாள்..

"புதிதாய் ஒன்றுமில்லைடி.. தினமும் போலத்தான் பேசிக் கொண்டிருந்தோம்.."

"தினமும் போலன்னா..?"

"எப்போதும் போலத்தான்.. உனக்கு என்ன பிடிக்கும்.. என்ன சினிமா பிடிக்கும்.. என்ன கலர் பிடிக்கும்ன்னு கேட்டுக் கொண்டிருந்தார்.."

"நீ எதுவும் எனக்குப் பிடிக்காது.. படிக்க மட்டும் தான் பிடிக்கும்னு சொல்லியிருப்ப.."

"அட.. ஆமாண்டி.. எப்படிச் சரியாக கண்டு பிடித்த..?"

"அதற்கு அந்த மாங்காய் மடையன், ஏன் என்னைப் பிடிக்காதான்னு கேட்டிருப்பான்.."

"ஐயோடி.. அப்படியே பக்கத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்தவள் போல் சொல்கிறாயே.. எப்படிடீ.."

"இதற்குப் போய் ஜோசியமா கேட்டுவிட்டு வரணும்.. அவன் சுற்றிச் சுற்றி அங்கேதானே வருவான்.."

"என்னமோ போ.. கீதா.. நீ சொல்வது எதுவும் எனக்கு விளங்கவே மாட்டேன் என்கிறது.."

"ஆனால்.. பாடங்கள் மட்டும் அப்படியே விளங்கி விடுகிறது.."

பூர்ணிமா வெள்ளையாகச் சிரித்தாள்.. கீதா அவளைப் பார்த்து, "போதும்.. அப்படியே அசடு வழிகிறது.." என்று சொல்லவும், இன்னும் அதிகமாகச் சிரித்தாள்..

இருவரும்.. ஹாஸ்டலை விட்டு வெளியே வந்து இரு பக்கமும் மரங்கள் இருந்த நீண்ட சிமெண்ட் பாதையில் கல்லூரியை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்..

"கீதா.. நீயும் என்னுடைய குரூப்பே எடுத்திருக்கலாம்.. இப்போது பார்.. நீயும் நானும் வேறு வேறு கிளாஸில் உட்கார வேண்டியதாக இருக்கிறது.." பூர்ணிமா உண்மையாக இதைக் கூறினாள்..

"ஆமாண்டி.. ஒட்டுப்புல் போல் என்னுடனேயே ஒட்டிக்கொள்.. ஏன் கிளாஸில் இருக்கும் மத்தபெண்கள் கிட்டப் பேசிப் பழகவேண்டியதுதானே.."

"அதெல்லாம் பழகியாச்சு.. ஆனால்.. அவர்கள் எல்லோரும் உன்னைப் போல் ஆக முடியுமா..?"

"ஐஸ் வைக்காதே.. கிளாஸில் இருக்கிற பெண்கள் தான் என்னைப் போல் ஆகமுடியாது.. அதோ.. அங்கே நிற்கிறானே.. அவனாவது என்னைப் போல் ஆவானா..?"

கீதா பொடி வைத்துப் பேசுவதை உணராதவளாக பூர்ணிமா.. "எவன்..?" என்று வினவியபடி திரும்பிப் பார்த்தாள்..

அங்கே பிரசன்னா நின்று கொண்டிருந்தான்..

"இவர் ஏன்.. இப்போது போய் இங்கே நிற்கிறார்..?"

"அதை என்னிடம் ஏண்டி கேட்கிறாய்..?"

"கிளாஸ் ஆரம்பித்துவிடுமே கீதா.."

"இதையும் அவனிடமே போய்ச் சொல்லு.."

"ஏண்டி கோபித்துக் கொள்கிற..?"

"பின்னே.. நீ செய்யும் வேலைக்கு உன்னைக் கொஞ்சுவார்களா..?"

"நான் என்னடி செய்தேன்..?"

"ஏண்டி.. என்னவோ நேர்ந்துகிட்ட நேர்த்திக் கடனை நிறைவேற்றுவது போல அவனிடம் மரத்தடியில் நின்று தினமும் பேசிக் கொண்டிருக்கிறாயே.. உனக்கு மண்டையில் மசாலா என்பதே இல்லையா..?"

"இல்லைடி கீதா.."

"என்னது மசாலா இல்லையா.."

"அது இல்லைடி.."

"பின்னே.. இது வேறு இல்லையா..?"

"ஆமாம்.."

"என்னன்னு சொல்லித் தொலை.."

"நான் அவருக்கு வாக்கு கொடுத்திருக்கேன்டி.."

"சும்மா.. அவர் அவர்ன்னு அந்தக் குட்டிச் சுவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்காதே.. அவனுக்கெல்லாம் என்னடி மரியாதை வேண்டிக்கிடக்கு..?"

"தப்பு கீதா.."

"நீ இதை எனக்குச் சொல்கிறாயா..? எல்லாம் நேரம்டி.."

"அவர் நமக்கு சீனியர்.."

"அதுக்காக என்ன செய்யணும்கிற..? அவனுக்கு கோயில் கட்டி கும்பாபிஷேகம் பண்ண வேண்டுமா..?"

"அதெல்லாம் வேண்டாம்.."

"உன் கருணைக்கு நன்றி தாயே.. நான் பிழைத்தேன்.."

"அவருக்கு மரியாதை கொடுத்தால் போதும்.."

"யாருக்கு.. யார் மரியாதை கொடுப்பது..?"

"ஏன்..? அவருக்கு நீதான் மரியாதை கொடுக்கனும்.."

"ஹ.. அதெல்லாம் கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் நடக்காது.. அதற்கு வேறு ஆளைப் பார்.."

அவர்கள் பேசிக் கொண்டே மரத்தடியை நெருங்கி விட்டனர்.. பூர்ணிமா நின்றுவிட.. கீதா, பிரசன்னாவை முறைத்துக்கொண்டே போய்விட்டாள்..

"ஏன் உன் ஃபிரெண்ட் எப்பப் பார்த்தாலும் என்னை முறைத்துக் கொண்டே போகிறாங்க..? போன பிறவியில் என் முறைப்பெண்ணாகப் பிறந்திருப்பாங்களோ.." பிரசன்னா கேட்டான்..

'இதை மட்டும் அவளிடம் சொன்னேன்னு வைங்க.. அவள் உங்களை பந்தாடி விடுவாள்..' மனதில் நினைத்த நினைவு புன்னகையை உண்டாக்க, பூர்ணிமா சிரித்தவாறு அவனைப் பார்த்தாள்..

"ஆமாம்.. ஏன் இப்போது போய் மரத்தடியில் நிற்கிறீங்க.."

"இப்போது நின்றால் என்ன..?"

"கிளாஸ் ஆரம்பிக்கும் நேரம் வந்துவிட்டதே.. இன்டர்வல் டயத்தில் மீட் பண்ணலாமே.."

பூர்ணிமா வகுப்பறையைப் பார்த்துக் கொண்டே தவிப்பாகக் கூறினாள்.. அதற்கு பிரசன்னா கூறிய பதிலைக் கேட்டதும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது..

# 17

"உன்னை உடனே பார்க்க வேண்டும் போல் இருந்தது பூர்ணி.." என்றான் பிரசன்னா..

பூர்ணிமா திகைத்துப் போனாள்.. அவளுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.. அந்த நேரம் பார்த்து அவளது வகுப்பறைக்குள் விரிவுரையாளர்

நுழைய, பிரசன்னாவிடம் சொல்லிக் கொள்ளக்கூடத் தோன்றாதவளாய் வகுப்பறையை நோக்கி ஓடினாள்..

"எக்ஸ்க்யூஸ்மீ மேடம்.."

"ஏன் லேட்..?"

"ஸாரி.. மேடம்.."

"கோ டு யுவர் சீட்.."

'தன் இடத்தில் போய் அமர்ந்து கொண்டவளுக்கு படபடப்பாக இருந்தது..'

'உன்னை உடனே பார்க்க வேண்டும் போல் இருந்தது..'

ஏன் அப்படிச் சொன்னான் அவன் என்பதைவிட, இந்த வார்த்தைகள் தன் மனதை நெருடக் காரணம் என்ன என்பதுதான் பூர்ணிமாவிற்கு விளங்கவில்லை..

பூர்ணிமாவிற்கு சில சிந்தனைகள் வராதுதான்.. அதற்காக அவளை ஒரேயடியாய் குழந்தையென்றும் சொல்லிவிட முடியாது..

அவளுக்கென்றும் ஓர் மனம் இருந்தது.. அதில் உணர்வுகள் இருந்தன.. அந்த அடையாளம் தெரியாத உணர்வுகளை இனம் கண்டுகொள்ள முடியாமல் தவித்தாள் அவள்..

அது.. அந்த உணர்வு.. பார்க்க வேண்டும் போல் தோன்றிய தவிப்பு, பூர்ணிமாவுக்குள்ளும் இருந்தது..

ஆனால், அது பிரசன்னாவைப் பார்க்க வேண்டும் போல் தோன்றிய தவிப்பு அல்ல..

சந்தானகிருஷ்ணனைப் பார்க்க வேண்டும் போல் தோன்றிய தவிப்பு..

இந்த உணர்வு எந்த நாளில், எந்த வினாடியில் பூர்ணிமாவின் மனதிற்குள் உதித்தது என்பதை அவளால் அறியமுடியவில்லை..

என்று.. அவனைத் தொடர்ந்து படிப்பதற்காக சென்னை மண்ணை மிதித்தாளோ.. அன்று தோன்றிய உணர்வா..?

அவள் விடுதியில் வசிக்க தேவையான பொருள் களையும், உடைகளையும் ஓர் அன்னையைப் போல் யோசித்துப் பார்த்துப் பார்த்து வாங்கிக் கொடுத்தானே.. அப்போது தோன்றிய உணர்வா..?

அவளது படிப்புக்கான கட்டணங்களை கொஞ்சம் கூட யோசிக்காமல் கட்டிவிட்டு.. அவளுக்குத் தேவையான புத்தகங்களைத் தேடிப்பிடித்து வாங்கிக் கொடுத்தானே.. அப்போது தோன்றிய உணர்வா..?

விடுதியின் வாசலில் அவளை விட்டுச் சென்ற முதல் நாளில் அவள் கையில் பணத்தைக் கொடுத்து செலவுக்கு வைத்துக் கொள்ளச் சொல்லிவிட்டுச் சென்றானே.. அப்போது தோன்றிய உணர்வா..?

ஒவ்வொரு வார வெள்ளியன்றும் மாலையில் அவளை வீட்டுக்கு அழைத்துச் செல்ல காரோடு வந்து விடுவானே.. அப்போது தோன்றிய உணர்வா..?

வார இறுதி விடுமுறை நாள்களில் அவனது வீட்டில் அவளை உரிமையோடு இருக்கச் செய்து, ஞாயிறன்று மாலையில் மீண்டும் விடுதிக்குக் கொண்டு வந்து பொறுப்பாக விட்டுச் செல்வானே.. அப்போது தோன்றிய உணர்வா..?

எதுவென்று வரையறுத்து அவளால் சொல்ல முடியவில்லை.. ஆனால்.. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை

மாலைப்பொழுதையும் எப்போது வரும் என்று அவள் நினைத்து எதிர்பார்த்து காத்துக் கிடந்தாள்..

அந்த இரண்டு நாள்களில் உயிர்ப்புடன் அவனது வீட்டில் வளைய வந்தாள்.. ஞாயிறு மாலையில் விடுதிக்குத் திரும்பும்போது ஓர் துக்க உணர்வு.. அவளது தொண்டையை அடைக்கும்..

எதனால் அந்த உணர்வு ஏற்படுகிறது என்று இதுநாள் வரை அவளுக்குத் தெரியவில்லை..

அந்த உணர்வுக்குப் பொருள் என்ன என்று இதுநாள் வரை அவளுக்குப் புரியவில்லை..

இனம் விளங்காத அந்த உணர்வை இனம் பிரித்து பிரசன்னா கூறிவிட்டான்..

'இதுதானா..? என் தவிப்பிற்குக் காரணம் இதுதானா..?'

பூர்ணிமாவின் மனம் படபடத்தது..

'இப்படியா நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்..? இது சரியில்லையே..' அவளது மனம் தவித்தது..

அவளும் சென்னைக்கு வந்து ஆறு மாதங்கள் ஓடிவிட்டன.. இந்த ஆறு மாதத்திற்குள் அவளுக்குள் எப்போது இந்த விதை விழுந்து வேர்விட்டது என்று தெரியாமல் அவள் விழித்தாள்..

அவனின் உயரத்தை அண்ணாந்து பார்க்கக் கூடத் திரணியில்லாத அடிமட்ட நிலையில் இருந்துகொண்டு இப்படி ஒரு நினைவை மனதில் வைத்துக் கொண்டிருக் கிறாளே.. அவளால் வகுப்பில் கவனம் செலுத்த முடியவில்லை..

"பூர்ணிமா.. வாட் இஸ் ராங் வித் யூ.. ஆர் யூ ஆல் ரைட்..?"

லெக்சரர் பாடம் நடத்துவதை விட்டுவிட்டு கேள்வி கேட்கவும், அவசரமாய் எழுந்து நின்றாள் பூர்ணிமா..

"எனக்கு உடம்பு சரியில்லை மேடம்.."

"ஓ.. ஹாஸ்டலில் போய் ரெஸ்ட் எடுத்துக் கொள்.."

பூர்ணிமா.. புத்தகங்களை அள்ளிக் கொண்டு வகுப்பறையை விட்டு வெளியே வந்தாள்.. எப்படி ஹாஸ்டல் அறைக்கு வந்தாள் என்ற நினைவே இல்லாமல் அறைக் கதவை திறந்து உள்ளே சென்றவள், கட்டிலில் விழுந்தாள்..

மதிய உணவுக்காக ஹாஸ்டலுக்கு வந்த கீதா.. பூர்ணிமாவை சாப்பிட அழைத்துச் செல்வதற்காக எழுப்பினாள்.. பூர்ணிமாவின் உடல் அனலாக கொதித்தது..

"பூர்ணி.. என்னடி.. காலையில் நல்லாத்தானே இருந்த..?"

"ம்ம்.."

"கிளாஸை அட்டெண்ட் பண்ணாமல் வந்து விட்டாயாமே.."

"ம்ம்.."

கீதா கவலையுடன் பூர்ணிமாவிற்கு போர்த்தி விட்டாள்.. அவசரமாய் டைனிங் ஹாலுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு கொஞ்சம் ரசம் சாதத்தை பூர்ணிமாவிற்கு அறைக்கே வாங்கிக்கொண்டு வந்தாள்..

## 18

கீதா மதியத்திற்கு மேல் வகுப்பிற்கு போகவில்லை.. சாயந்திரம் ஆகியும் பூர்ணிமாவின் காய்ச்சல் விட வில்லை.. கீதாவிற்கு கவலை அதிகரித்தது..

'டேப்லெட் கொடுத்தும் ஜூரம் இறங்கவில்லையே..'

ஒரு முடிவுக்கு வந்தவளாய் எழுந்து.. வார்டனின் அறைக்குச் சென்று விவரத்தைச் சொன்னாள்..

"பூர்ணிமாவிற்கு நல்ல ஜூரம் மேடம்.. இரண்டு முறை டேப்லெட் கொடுத்துவிட்டேன்.. காய்ச்சல் குறையவே

இல்லை.."

வார்டன் கவலையுடன் சந்தானகிருஷ்ணனுக்கு போன் பண்ண, அவன் சற்று நேரத்தில் வந்து விட்டான்..

அயர்வாய் படுத்திருந்த பூர்ணிமாவை எழுப்பினாள் கீதா..

"எழுந்திரு பூர்ணி.."

"ம்ம்.. வேண்டாம் கீதா.."

"உன்னை டாக்டரிடம் அழைத்துக் கொண்டு போக உன் கார்டியன் வந்திருக்கிறார்டி.."

காய்ச்சலையும் மீறி பூர்ணிமாவிற்குள் ஓர் அதிர்வு வருவதை உணர்ந்தாள் கீதா.. பூர்ணிமாவின் விழிகளில் இருந்து நீர் சுரந்தது..

"நிஜமாகவா சொல்கிற..? அவர் வந்திருக்கிறாரா..?"

'ஏன் இப்படித் தவிக்கிறாள்..?' கீதாவிற்குள் சந்தேக விதையின் வித்து விழுந்தது..

"ஆமாம்.. எழுந்திரு.."

பூர்ணிமாவின் கண்ணீரைத் துடைத்துவிட்டு.. கைத்தாங்கலாய் அவளைத் தாங்கிக் கொண்டு ஹாஸ்டல் வாசலுக்கு அழைத்துக் கொண்டு போனாள் அவள்..

காரின் கதவைத் திறந்துகொண்டு அவசரமாய் கீழே இறங்கினான் சந்தானகிருஷ்ணன்..

"இவ்வளவு காய்ச்சலா..?"

"காலையில் நன்றாகத்தான் இருந்தாள்.."

"அப்படியா..?"

"மதியம் நான் சாப்பிட வந்தபோது ரூமில் படுத்திருந்தாள்.. தொட்டுப் பார்த்தால் நல்ல காய்ச்சல்.."

"ஐ ஸீ.."

சந்தானகிருஷ்ணன்.. காரின் பின்பக்க கதவைத் திறந்து விட்டான்.. பூர்ணிமா ஏறி அமர்ந்ததும் கார் கதவை மூடினான்..

"தேங்க்யூ.. நீங்கள் பூர்ணிமாவின் தோழியா..?"

"ஆமாம்.. அவள் என் ரூம்மேட்.."

"அக்கறையாகக் கவனித்துக் கொண்டிருக்கிறீங்க.."

கீதா பதில் சொல்லாமல் லேசாக முறுவலித்தாள்.. சந்தானகிருஷ்ணன் அவளிடம் விடைபெற்றுக் கொண்டு காரை கிளப்பினான்..

'கிடைத்தது சான்ஸ் என்று பெயரைக் கேட்க வில்லை.. அநாவசியமாய் வழியவில்லை..' கீதாவின் மனதில் சந்தானகிருஷ்ணனின் மேல் மதிப்பும் மரியாதையும் உருவாகின..

'வாட் எ கிரேட் மேன்..' கீதா ஹாஸ்டலுக்குள் போய் விட்டாள்..

சந்தானகிருஷ்ணனின் கார் 'சரவணா நர்ஸிங் ஹோம்..' என்ற பெயர்ப் பலகை கொண்ட மருத்துவ மனைக்குள் நுழைந்தது..

டாக்டர் புனிதாவின் கன்சல்ட்டிங் அறைக்குள் பூர்ணிமாவை அழைத்துக்கொண்டு போனான் சந்தான கிருஷ்ணன்..

"ஹலோ கிருஷ்.. ஹவ் ஆர் யூ..?"

"ஃபைன் புனிதா.. ஷி இஸ் பூர்ணிமா.."

"ஓ.. இவள் உனக்கு உறவா கிருஷ்..?"

"நான் இவளுக்கு உறவு.."

"புரியவில்லையே.."

"நான் இவளுடைய கார்டியன் புனிதா.. இவள் என் பொறுப்பில் படித்துக் கொண்டு இருக்கிறாள்.."

"ஓ.. ஐ ஸீ.."

புனிதா, பூர்ணிமாவை பரிசோதித்துவிட்டு.. ஒரு இன்ஜெக்ஷன் போட்டுவிட்டாள்.. சில மாத்திரைகளை எழுதிக் கொடுத்தாள்..

"நத்திங் டு வொர்ரி கிருஷ்.. ஆர்டினரி ஃபீவர்தான்.. ஒரு நாளில் சரியாகி விடும்.. கொஞ்சம் அனிமீக்காக இருக்கிறாள்.. நன்றாகச் சாப்பிடச் சொல்லு.."

"சரி.. புனிதா.. உன் ஹஸ்பெண்ட் எப்படி இருக்கிறார்..?"

"ஃபைன்.."

"உன் வாண்டுகள் என்ன செய்கிறாங்க..?"

"பெரியவன் இப்போதுதான் யூகேஜி போகிறான்.. குட்டிப் பெண் தொட்டிலில் தூங்கிக் கொண்டு இருக்கிறா.."

"நைஸ் ஃபேமிலி.."

"நீ எப்போது கல்யாணம் செய்துகொள்ளப் போகிற கிருஷ்..? உனக்கும் வயது இருபத்தியெட்டு ஆகிவிட்டதே.."

அதுவரை அமைதியாய் இருந்த பூர்ணிமாவின் விழிகளில் சஞ்சலம் தோன்றியதைக் கவனித்துவிட்டாள் புனிதா.. அவளது நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன.. அடுத்து பேசியபோது பூர்ணிமாவைப் பார்த்தவாறே பேச ஆரம்பித்தாள் அவள்..

"எனக்கு மட்டுமா இருபத்தியெட்டு வயதாகி விட்டது.. என்னைவிட ஆறு வயது இளையவளான சந்தியாவிற்கு இருபத்தியிரண்டு வயதாகிவிட்டதே.. அவளுக்கு முதலில் கல்யாணத்தை முடிக்க வேண்டாமா..?"

"ஏன்.. அவள் மேரேஜை சீக்கிரம் முடிப்பதில் உனக்கு என்ன பிராப்ளம்..? நீயோ கோடீஸ்வரன்.. சந்தியாவின் பெயரிலும் கோடிக்கணக்கில் சொத்திருக்கிறது.."

"அதோடு சேர்ந்து அவள் மனதில் காதலும் இருக்கிறதே.."

"ஈஸிட்.. யாரைக் காதலிக்கிறாள்..?"

"எல்லாம் அவளுடைய பிஸினஸ் பார்ட்னர் வினய்யைத்தான் காதலிக்கிறாள்.."

"அப்புறம் என்ன.. பிஸினஸ் பார்ட்னரை லைஃப் பார்ட்னர் ஆக்கிக்கொள்ள வேண்டியதுதானே.."

சந்தானகிருஷ்ணன் அதற்குப் பதில் சொல்லாமல் நகைத்தான்..

## 19

சந்தானகிருஷ்ணனும் புனிதாவும் கான்வென்டில் ஒன்றாக ப்ளஸ் டூ வரை படித்தவர்கள்.. மேற்படிப்பை இரண்டு பேரும் அவரவருக்கு விருப்பப்பட்ட வகையில் தேர்ந்தெடுத்தனர்..

தொழில்களை பொறுப்பேற்க வேண்டிய சந்தான கிருஷ்ணன் பி.பி.ஏ. படித்துவிட்டு எம்.பி.ஏ. படித்து முடித்தான்.. டாக்டர் தம்பதிகளின் ஒரே மகளான புனிதா.. எம்.பி.பி.எஸ். முடித்துவிட்டு மேற்படிப்பை படித்தாள்.. சந்தானகிருஷ்ணன் தொழில்களை பொறுப்பேற்று மேனேஜிங் டைரக்டராக உட்கார.. புனிதா தன் பெற்றோர் பார்த்து வைத்த டாக்டர் மாப்பிள்ளையை மணந்து கொண்டு அவர்களின் சொந்த ஹாஸ்பிடலில் உட்கார்ந்தாள்..

நீண்ட நாள்களுக்குப் பின்னர் சந்தித்த பால்ய சிநேகிதனும் சிநேகிதியும் குடும்ப விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது பூர்ணிமா ஒரு விவரத்தை அறிந்தாள்..

அதை அறிந்தவள்.. சும்மா இருக்காமல் சந்தான கிருஷ்ணனுக்கு நன்மை பயக்கும் என்று ஒரு காரியத்தைச் செய்யப்போக.. அது அவளுக்குப் பெருந்தீமையைக் கொண்டு வந்து விட்டது..

"சொல்லுவது எளிதுதான் புனிதா.. செய்வதுதான் கஷ்டம்.."

"உனக்குக்கூட கஷ்டமாக ஒரு காரியம் இருக்கு முடியுமா..?"

"இந்தக் கல்யாணம் அப்படி ஆகிவிட்டதே.."

"என்ன பிரச்சனை கிருஷ்..?"

"சந்தியாவை மணந்துகொள்ள வினய்யின் அப்பா ஒரு நிபந்தனையைப் போடுகிறார்.."

"சந்தியாவை மணக்க சந்தியாவல்லவா நிபந்தனை போட வேண்டும்..? இவளை மணந்துகொள்ள யாராக இருந்தாலும் போட்டி போட்டுக்கொண்டு வருவார்களே.. கரும்பு தின்ன அவர்களுக்கு கசக்கிறதாக்கும்.."

"வினய், சந்தியாவை காதலிக்கத்தான் செய்கிறான்.. ஆனால், அவனுடைய அப்பாவின் வார்த்தையை மீற யோசிக்கிறான்.."

"ச்சு.. என்ன கிருஷ் இது.. இந்த காலத்திலும் இப்படி ஒரு காதலன் இருப்பானா..?"

"இருக்கிறானே.. ஆனால் ஒன்று புனிதா.. சந்தியாவின் வேதனையை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.. அவள் விரும்பிய வினய்யை அவள் கல்யாணம் செய்து கொண்டுவிட்டால் அதைவிட நிம்மதி எனக்கு வேறு எதுவும் இருக்க முடியாது.."

"வருத்தப்படாதே.. நீ வினய்யிடம் பேசிப் பார்த்தாயா..?"

"பேசிப் பார்க்காமல் இருப்பேனா..?"

"ஏதாவது வழி கண்டுபிடி.."

"எனக்குத் தெரியவில்லை.. அவனாக மனம் மாறினால்தான் உண்டு... அதுவரை சந்தியாவின் கண்ணீரும் நிற்காது.. என் மன வேதனையும் தீராது.."

பிரியமான தோழியிடம் மனம் விட்டுப் பேசியதால் சந்தானகிருஷ்ணனின் குரல் இளகியது.. அதைக் கவனித்த பூர்ணிமாவின் கண்களில் தோன்றிய கவலையை கவனித்தபடி புனிதா, சந்தானகிருஷ்ணனுக்கு ஆறுதல் சொன்னாள்..

"கவலைப்படாதே... மாற்றம் ஒன்றுதான் மாற்றமில்லாதது.. நாளை விடியும் விடியல் நமக்கு நன்மையைத்தான் தரும்.. நம்பிக்கையுடன் இரு.."

"அதே நினைவுதான் புனிதா எனக்கும் இருக்கிறது.."

"ம்ம்.. பைதிவே கிருஷ்.. அந்தப் பெண் பூர்ணிமா என்ன படிக்கிறா..?"

"இன்ஜினீயரிங் ஃபர்ஸ்ட் இயர்.."

இதைச் சொல்லும்போது சந்தானகிருஷ்ணனின் முகத்தில் கனிவு தோன்றியதைக் கவனித்தாள் புனிதா.

"எந்த காலேஜ்..?"

சந்தானகிருஷ்ணன் சொன்னான்..

"நன்றாக படிப்பாளா..?"

"டிஸ்ட்ரிக்ட் ஃபர்ஸ்ட்டாக்கும்.."

இதையும் பெருமையுடன் கூறினான் சந்தான கிருஷ்ணன்..

"ஓகே.. கிருஷ்.. உன்னை ரொம்ப நேரம் பிடித்து வைத்துக் கொண்டுவிட்டேன்.. போய்வா.."

சந்தானகிருஷ்ணனின் கார் கல்லூரி செல்லும் சாலையில் செல்லாமல் வீடு நோக்கிச் செல்வதை கண்ட பூர்ணிமா..

"சார்.. நாம் காலேஜிற்கு போகனும்..." என்று கூறினாள்..

"காலேஜிற்குப் போகலை பூர்ணிமா.. வீட்டிற்கு போகிறோம்.. உனக்குக் காய்ச்சல் விட்டதும் காலேஜ் போகலாம்."

அதைக் கேட்ட பூர்ணிமாவிற்கு நிம்மதியாக இருந்தது.. அன்று வியாழக்கிழமை.. மறுநாள் வெள்ளிக் கிழமை முழுவதும் அவள் ஓய்வெடுத்தால் வார இறுதி விடுமுறை நாள்கள் வந்துவிடும்.. அவள் ஞாயிறு மாலை ஹாஸ்டலுக்குத் திரும்பினால் போதும்.. அவனைப் பார்க்கத் தவித்த தவிப்பிற்கு உடனே பலன் கிடைத்து விட்டதா..?

"ஆனால் சார்.. நான் மாற்று டிரஸ் எடுத்துக்கிட்டு வரவில்லையே.."

"நோ பிராப்ளம்.. அதோ அந்த துணிக்கடையில் நான்கு டிரஸ் எடுத்துக்கொண்டு போகலாம்.."

"வேண்டாம் சார்.. வீண்செலவு.."

"அதெல்லாம் வீண்செலவு இல்லைம்மா.. நீ காலேஜ் போய் ஆறு மாதங்களாகி விட்டதே.. எல்லா டிரஸ்ஸும் பழையதாகி இருக்குமே.. புதிதாய் எடுத்துக்கொள்.."

பூர்ணிமாவை வற்புறுத்தி, காரிலிருந்து இறங்க வைத்து மெதுவாய் கடைக்குள் அழைத்துப்போய் உள்ளாடைப் பிரிவுக்குள் விட்டான் சந்தானகிருஷ்ணன்..

"சுடிதார் நைட்டியை நான் செலக்ட் பண்ணி வாங்கிக் கொள்வேன்.. இதை செலக்ட் பண்ணத்தான் உன்னை உள்ளே அழைத்துவந்தேன்.. எடுத்துக் கொண்டிரு.."

அவள் தயக்கத்துடன் உள்ளாடைகளை வாங்கி முடித்தபோது அவன் கையில் பைகளோடு வந்து விட்டான்.. பணத்தை கட்டிவிட்டு, அவளைக் கைப் பிடித்து அவன் அழைத்தபோது பூர்ணிமாவின் உடலில் மின்சாரம் பாய்ந்தது..

## 20

பூர்ணிமா காய்ச்சலுடன் நடக்க முடியாமல் தள்ளாடிக் கொண்டு இருந்தாள்.. ஆனாலும் பெண்களுக்கான உள்ளாடைகளை அவள்தான் வாங்கவேண்டுமென்பதால்.. அவளை அழைத்துக்கொண்டு வந்து விட்டான் சந்தான கிருஷ்ணன்.. படியேற அவள் சிரமப்படுவதை கவனித்துக் கொண்டுதான் இருந்தான்..

அதனால்தான் திரும்பவும் கடையின் படிகளில் இறங்கவேண்டி வந்தபோது அவள் கீழே விழுந்து விடக்கூடாது என்ற கவனத்துடன் அவளின் கையைப் பிடித்துக் கொண்டான்..

அவனைப் பொறுத்தவரை அது இயல்பான செயல்.. அவளுக்கோ முதன் முதலாய் ஓர் ஆணின் தொடு உணர்வை உணரும் சிலிர்ப்பு.. அவன் மனதுக்குப் பிடித்த மனம் தேடும் ஆண்மகனாகவும் போய் விட்டானேயென்ற தவிப்பு..

பூர்ணிமா உதட்டைக் கடித்து அவளது உணர்வு களை அடக்கிக் கொண்டாள்.. கூடாது.. இது கூடாது என்று நினைத்தாலும் கட்டுக்குள் அடங்காத காதல் நினைவுகள் அவளுள் வியாபித்தன..

அவளின் உணர்வுப் போராட்டத்தை உணராத சந்தானகிருஷ்ணன் காரின் பின்பக்க கதவை அவளுக்காக திறந்துவிட்டான்.. பூர்ணிமா ஏறி அமரவும் தன் கையில் இருந்த பைகளை அவளிடம் நீட்டினான்..

வீட்டிற்குள் அவர்கள் நுழைந்தபோது தாயம்மா ஹாலில் அமர்ந்து சமையல் செய்யும் பெண்ணிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.. பூர்ணிமாவைப் பார்த்ததும் வரவேற்றாள்..

"வாம்மா.. பூர்ணிமா.."

"அத்தை.. இவளுக்கு ஃபீவர்.."

"என்னது காய்ச்சலா..?"

தாயம்மா எழுந்துவந்து பூர்ணிமாவின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.. அவள் முகத்தில் கவலை வந்தது..

"கொதிக்குதேடா சந்தானம்.. டாக்டர்கிட்ட காண்பித்தாயா..?"

"புனிதாகிட்ட கூப்பிட்டுக் கொண்டுபோய்க் காட்டினேன்.."

"என்ன சொன்னாள்..?"

"ஒரு இன்ஜெக்ஷன் போட்டுவிட்டாள்.. மாத்திரைகள் எழுதிக் கொடுத்திருக் கிறாள்.. சாதாரண ஃபீவர் தான்.. ஒரு நாளில் சரியாகிப் போய்விடும்ன்னு சொன்னாள்.."

"சாதாரண காய்ச்சலா.. இப்படிக் கொதிக்குது..?"

தாயம்மா.. பூர்ணிமாவை அவளுடைய அறைக்கு அழைத்துக்கொண்டு போனாள்.. சந்தானகிருஷ்ணன் பைகளோடு பின்னாலேயே போனான்.. அவளுடைய அறையில் பைகளை வைத்துவிட்டு..

"பார்த்துக்கோங்க அத்தை.. நான் கம்பெனிக்குப் போகிறேன்.." என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்..

பூர்ணிமா கட்டிலில் படுத்து கண் மூடிக்கொள்ள, தாயம்மா போர்வையை எடுத்து அவளுக்குப் போர்த்தி விட்டாள்.. காய்ச்சலின் அலுப்பில் பூர்ணிமா தூங்கி விட்டாள்.. தாயம்மா வேலையாளை அழைத்து சூடாய் காபி கொண்டு வரச் சொன்னாள்.. காபி வந்ததும்.. பூர்ணிமாவை எழுப்பினாள்..

"அம்மா..?" என்று அவசரமாய் எழுந்து அமர்ந்தாள் பூர்ணிமா..

தாயம்மாளின் மனம் அந்த 'அம்மா..' என்ற வார்த்தையில் கட்டுண்டு நின்றது..

'அம்மா..' என்று அழைத்து தன்னை தாயாக்கி விட்ட பூர்ணிமாவை தான் பெற்ற பெண் போல் நினைத்து நேசிக்க ஆரம்பித்திருந்தாள் தாயம்மா..

பூர்ணிமா யாரோ ஒரு பெண் அல்ல.. தான் பெற்ற மகள் என்ற உணர்வு அவள் மனதில் வேரூன்றி இருந்தது.. பூர்ணிமா கல்லூரி விடுதியிலிருந்து வரும் வார இறுதி நாள்களை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பாள் தாயம்மா.. அந்த இரண்டு நாள்களும் 'அம்மா' என்று வாய் நிறைய அழைத்துக் கொண்டு.. அவள் முந்தானையைப் பிடித்துக் கொண்டு பூர்ணிமா சுற்றி வரும் பாசத்தில் திளைத்து எழுவாள்..

இன்றும் அதேபோல் அவளது அம்மா என்ற அழைப்பில் மகிழ்ந்து போனாள் தாயம்மா..

"மெல்ல எழுந்திரும்மா.. அவசரம் வேண்டாம்.."

பூர்ணிமாவிற்கு காபியைக் கொடுத்து.. மாத்திரை போட்டுக் கொள்ள வைத்துவிட்டு தாயம்மா அங்கிருந்து சென்றாள்..

நன்றாகத் தூங்கி எழுந்த பூர்ணிமா இருள் சூழ்ந்து வரும் நேரத்தில் கண் விழித்து எழுந்து அமர்ந்தாள்.. அறைக்குள் பரவியிருந்த இருட்டு அவளுக்கு தனிமை உணர்வைக் கொடுத்து அச்சுறுத்தியது.. அப்போது சட்டென்று அறையெங்கும் ஒளிவெள்ளம் பரவியது..

பூர்ணிமா ஆச்சரியத்துடன் விழி மலர்த்திப் பார்த்த போது அறைக்குள் சந்தானகிருஷ்ணன் நின்று கொண்டிருந்தான்..

"என்ன அப்படிப் பார்க்கிற பூர்ணிமா..? பயந்து விட்டயா..? நான் தான் லைட்டைப் போட்டேன்.." என்றான் அவன்..

பூர்ணிமா என்ன பதில் சொல்வது என்று தெரியாதவளாய் மரியாதையுடன் எழுந்து நின்றாள்..

"ஏன் அலட்டிக் கொள்கிற..? உட்கார்.." என்று அதட்டினான் சந்தானகிருஷ்ணன்..

பூர்ணிமா தயக்கத்துடன் உட்கார்ந்தாள்.. ஏனோ.. என்றும் இல்லாமல் அவனை நன்றாகப் பார்க்க வேண்டும் போல் அவளுக்கு இருந்தது..

"காய்ச்சல் எப்படியிருக்கு..?"

"பரவாயில்லை சார்.."

"டேப்லெட் சாப்பிட்டாயா.."

"அம்மா காபியும் டேப்லெட்டும் கொடுத்தாங்க.."

"ஓ.. படுத்துக் கொள்.."

சந்தானகிருஷ்ணன் அறையை விட்டு வெளியேறி விட்டான்.. அவன் சிதறவிட்ட வார்த்தைகளை சிட்டுக் குருவி

போல் மனதில் சேகரித்துக் கொண்டிருந்தாள் பூர்ணிமா..

## 21

நீச்சல்குளத்தில் நீர்ப்பரப்பை வெறித்தபடி அமர்ந்திருந்தாள் சந்தியா.. அவளின் பின்னே யாரோ நிற்பது போல் ஓர் உணர்வு தோன்றவும் திரும்பிப் பார்த்தாள். . பூர்ணிமா நின்றிருந்தாய்..

"நீயா.. நான் யாரோ வந்திருக்கிறாங்க போலன்னு நினைத்து திரும்பிப் பார்த்தேன்.. என்ன விஷயம்..?" என்றாள் சந்தியா விட்டேற்றியாக..

"உங்களுடன் கொஞ்சம் பேசனும்..." பூர்ணிமா தயக்கத்துடன் கூறினாள்..

"என்னிடமா.. என்னிடம் நீயேன் பேசனும்..?"

"ப்ளீஸ்.. நான் உட்கார்ந்து பேசவா..?"

"அதுதான் வந்துவிட்டாயே.. உட்கார்.."

சந்தியா எரிச்சலுடன் சுட்டிக்காட்டிய நாற்காலியில் அமர்ந்து கொண்டாள் பூர்ணிமா..

"இங்கே பார்.. என் அண்ணன்தான் உனக்கு கார்டியன்.. நானில்லை.."

"இதை ஏன் என்னிடம் சொல்கிறீங்க..?"

"உன் தேவை எதுவென்றாலும் நீ அவனிடம்தான் கேட்கனும்.."

சந்தியா முகத்திலடித்தாற் போல் பேசியும் பூர்ணிமா புன்னகை பூத்தாள்..

'இவளுக்கு சுரணையே கிடையாதா..' சந்தியா மனதிற்குள் வெகுண்டாள்..

"எதுக்கு இப்ப சிரிக்கிற..?"

"எனது தேவை உங்களுடைய சந்தோஷம்தான்.."

"என்னது..?"

"ஆமாங்க.. நானும் வந்த நாளிலிருந்து பார்க்கிறேன்.. நீங்கள் எதையோ பறிகொடுத்தது போலவே இருக்கிறீங்க.."

"இதோ பார்.. இந்த வீட்டில் உனக்கென்று ஒரு எல்லை இருக்கிறது.. அதைக் தாண்ட நினைக்காதே.."

"இல்லைங்க.. நான் என் எல்லையைத் தாண்ட நினைக்கவில்லை.. என் மனதில் ஒரு யோசனை தோன்றுகிறது.. அதை உங்களிடம் சொல்லலாம்ன்னு நினைத்தேன்.."

"நீ எனக்கு யோசனை சொல்கிறாயா..?"

சந்தியா.. இகழ்ச்சியாகக் கேட்டது பூர்ணிமாவை பாதிக்கத்தாகத் தெரியவில்லை.. அவள் மீண்டு தன் பேச்சை வலியுறுத்தினாள்..

"தவறாய் நினைத்துக் கொள்ளாதீங்க.. உங்கள் மேல் உங்களின் காதலருக்கு அன்பு நிறைய இருக்கிறது.. அதில் குறைவில்லைன்னு அம்மாவும்.. சாரும் சொல்கிறார்கள்.."

வினய்யின் பேச்சு வந்ததும்.. சந்தியாவின் முகத்தில் மென்மை மீண்டது..

"ஆமாம்.. அதற்கென்ன..?"

"தடையாக இருப்பது அவருடைய அப்பாதானே..?"

"ஆமாம்.."

"என்னை அவருடன் பேச வைக்கிறீங்களா..?"

"ஏய்.. நீ என்ன சொல்கிற..? நீ போய் அவரிடம் பேசப்போகிறாயா..? என்ன பேசப் போகிற..?"

"பாருங்க.. இந்த வீட்டிலிருந்து உங்களுக்காக.. உங்கள் அத்தையோ.. இல்லை உங்களுடைய அண்ணனோ போய் அவரிடம் பேச மாட்டாங்க.."

"அது உண்மைதான்.."

"இப்படியே நாள்கள் ஓடுவது நல்லதா..?"

"அதற்காக.. நீயெல்லாம் போய் என் சார்பாய் பேசும் அளவிற்கு என் நிலைமை தாழ்ந்துவிட்டதா.."

பழைய பூர்ணிமாவாக இருந்திருந்தால்.. இந்த வார்த்தைகளைக் கேட்டதுமே எழுந்து சென்றிருப்பாள்.. 'இவள் எக்கேடு கெட்டால் எனக்கென்ன.. எனக்கு என் சுயமரியாதைதான் முக்கியம்..' என்ற நினைவோடு தன் வேலையைப் பார்த்துக்கொண்டு போயிருப்பாள்..

ஆனால், இவள்தான் புதிய பூர்ணிமாவாக மாறி விட்டாளே.. அதனால் பொறுமையுடன் சந்தியாவைப் பார்த்துப் புன்னகை பூத்தாள்..

"நீங்க ஏன் அப்படி நினைக்கனும்..? இந்த வீட்டிலிருந்து ஒரு ஆள் உங்களுக்காகப் பேசப் போவதாக நினைத்துக் கொள்ளுங்களேன்.."

"நீ இந்த வீட்டைச் சேர்ந்தவள் இல்லை.."

பூர்ணிமாவின் இதயம் வலித்தது. ஆனாலும் மீண்டும் தன் முயற்சியைத் தொடர்ந்தாள்..

"அது அவருக்குத் தெரியாதே.. அவர் இந்த வீட்டிலிருந்து ஒரு பெண் அவருடன் பேச வந்திருக் கிறாள்ன்னுதானே நினைப்பார்.."

சந்தியாவின் முகத்தில் மெல்லிய சிந்தனை படர்ந்தது.. அவள் யோசனையுடன் பூர்ணிமாவைப் பார்த்தாள்..

"ஆமாம்.. நீ போய் அவரைப் பார்த்துப் பேசி என்ன கிழிக்கப் போகிற..?"

"எதையாவது கிழித்துவிட்டால்.. நீங்க எனக்கு என்ன தருவீங்க..?"

"ஏய்ய்.. நிஜமாகத்தான் சொல்கிறாயா..?"

"நிஜமாகத்தான் சொல்கிறேன்.. அப்படி நான் அவருடன் பேசி.. உங்களுடைய கல்யாணம் நடந்து விட்டால் நீங்கள் எனக்கு என்ன தருவீங்க..?"

"என் உயிரையே தருவேன்.."

"அது எனக்கு எதற்கு..? உங்கள் வினய்யுடன் வாழ உங்களுக்கு உயிர் வேண்டுமே.. அதனால் அதை நீங்களே வைத்துக் கொண்டு நூறாண்டு காலம் வாழுங்கள்.."

"பூர்ணிமா.. நீ சொன்னது போல் நடந்து விட்டால்.. நீ எது கேட்டாலும் நான் தருவேன்.."

"சத்தியமாகத் தருவீங்களா..?"

"சத்தியமாகத் தருவேன்.."

"வாக்கு மாற மாட்டீங்களே.."

"வாக்கு தவறும் பரம்பரையில் நான் பிறக்கவில்லை."

சந்தியா மறுநாள் கம்பெனிக்குப் போகும்போது பூர்ணிமாவையும் கூப்பிட்டுக் கொண்டு போவதைப் பார்த்த தாயம்மாளும் சந்தானகிருஷ்ணனும் ஆச்சரியப்பட்டனர்..

## 22

"என்ன அத்தை இது..? கிழக்கும் மேற்கும் கைகோர்த்துக்கிட்டுப் போகுதுங்க.."

"ஆமாண்டா சந்தானம்.. இதுக எப்ப ஒண்ணாச் சேர்ந்துச்சுங்க.."

"யாருக்குத் தெரியும்..? வீட்டில் இருக்கும் உங்களுக்கே தெரியவில்லைன்னும் போது.. வெளியில் போய்விடும் எனக்கு எப்படித் தெரியும்..?"

"என்னமோ போ.. ஒன்றும் புரியவில்லை.. இந்த பூர்ணிமா.. காலேஜ்.. அதை விட்டால் நம்ம வீடுன்னு ஒரு சின்ன

வட்டத்திற்கு சுற்றி வந்துகிட்டு இருந்தாள்.. இப்ப வெளியே கிளம்பிப் போகிறாள்.. போய்விட்டு வரட்டும்.."

இதைச் சொல்லும்போது தாயம்மாவின் முகத்தில் மிளிர்ந்த தாய்மை உணர்வைக் கண்ட சந்தான கிருஷ்ணனின் முகம் இளகியது..

"ஏன் அத்தை.. என்னைவிட அந்தப் பெண் உங்களுக்குப் பிரியமானவளாக ஆகிப் போய்விட்டாளா..?" என்று வேடிக்கையாகக் கேட்டான் அவன்..

"அது உனக்குப் பொறாமையாக இருக்கிறதா..?" என்று தாயம்மாள் சிரித்தாள்..

பூர்ணிமா போவதற்கான நோக்கத்தை அறிந்திருந் தால்.. அவர்கள் இருவரும் இப்படிச் சிரிப்பார்களா என்ன..?

அந்தப் பெரிய கட்டடத்திற்குள் சந்தியாவின் கார் போய்நின்றது.. பூர்ணிமாவுடன் சந்தியா அலுவலகத்தின் படி ஏறி உள்ளே சென்றாள்..

தனது அறைக்கு பூர்ணிமாவுடன் போய் அமர்ந்ததும் செக்ரெட்டரியை இன்டர்காமில் அழைத்தாள் அவள்..

"அனிதா.. என் கேபினுக்கு வாங்க.."

"யெஸ் மேடம்.."

அடுத்த விநாடி அனிதா உள்ளே வந்தாள்..

"அங்கிள் வந்துவிட்டாரா..?"

"அப்போதே வந்துவிட்டார்.."

"ஓகே.. நீ போ.."

"என்னவோ.. பைத்தியக்காரி போல் நீ சொல்லவும் நான் உன்னைக் கூப்பிட்டுக் கொண்டு வந்துவிட்டேன்.. இப்போது எப்படிப் போய் நீ அவரைப் பார்ப்ப.. எனக்கு ஒன்றும் புரியவில்லையே.. என்ன செய்வது பூர்ணிமா..?"

"இது என்னுடைய வேலை.. நீங்கள் ஏன் கவலைப் படுகிறீங்க..?"

பூர்ணிமா எழுந்து வெளியே போனாள்.. அனிதாவிடம் கோகுல்நாத்தின் அறை எங்கே என்று விசாரித்துக் கொண்டு அவருடைய அறைக்குச் சென்றாள்.

"மே.. ஐ கமீன் சார்.."

"யெஸ்.. கமீன்.."

உள்ளே வந்து கரம் குவித்த அந்த சிறு பெண்ணை பார்த்ததும் கோகுல்நாத்தின் புருவங்கள் உயர்ந்தன..

"ஹூ ஆர் யூ..?"

"நான் பூர்ணிமா.."

"ஓஹோ.. என்ன விஷயம்..?"

"சார்.. நான் சந்தியா மேடத்தின் ரிலேடிவ்.."

"ஓ.. ரிலேடிவ் என்கிறாய் ஆனால், சந்தியாவை மேடம்ன்னு சொல்கிறாயே.."

'சரியாகக் கண்டுபிடித்துவிட்டார்.. புத்திசாலிதான்..' மனதிற்குள் மெச்சிக் கொண்டாள்..

"எனக்கு அவங்களின் மேல் மரியாதை அதிகம்.. இந்த இளம்வயதில் இத்தனை பொறுப்புகளோடு இருக்கிறவங்களை மேடம்ன்னு கூப்பிட ஆசைப் பட்டேன்.. அவங்களிடம் பர்மிஷன் கேட்டேன்.. அவங்களும் கொடுத்துவிட்டாங்க.."

"ம்ம்.. என்னைப் பார்க்க ஏன் வந்திருக்கிற..? சந்தியாவின் ரிலேடிவ் என்பதற்காக.. இவ்வளவு சிறிய வயதுப் பெண்ணை என்னுடன் சரிசமமாக உட்கார வைத்துப் பேசிக்கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை.."

"எனக்கு ஒரு விஷயம் தெரியனும் சார்.."

"என்னிடமா..?"

"ஆமாம்.."

"நீ உன் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருக்கிற..?"

"உங்களைப் போய் பெரிய பிஸினஸ்மேன்.. அறிவாளி.. ஆஹா.. ஓஹோன்னு சந்தியா மேடம் சொல்லிக் கொண்டிருக்கிறாங்களே.. அது எப்படின்னு நினைத்துக் கொண்டிருக்கிறேன்.."

"நீ வரம்பு மீறிப் பேசுகிறாய் பெண்ணே.."

"இருக்கட்டுமே.. நீங்கள் பெரிய அறிவாளி.. பிஸினெஸில் புலி.. என்பது உண்மைன்னா சந்தியா மேடத்தை இந்நேரம் உங்கள் வீட்டு மருமகளாக்கிக் கொண்டிருப்பீங்களே.."

"ஓ.. நீ சிபாரிசுக்கு வந்திருக்கிறாயா..?"

"என்னைப் போன்ற சிறியவள் சிபாரிசுக்கு வரும் அளவிற்கு சந்தியா மேடத்தின் மதிப்பு குறைந்து விடவில்லை.. அவங்களின் உயரம் மிகப் பெரியது.."

"அவ்வளவு உயரத்தில் இருப்பவள் உன்னை ஏன் அனுப்பினாள்..?"

"அவங்க அனுப்பி நான் வரவில்லை.. என் மனதில் தோன்றியதை கேட்டுவிட்டுப் போக வந்தேன்.."

"உன் மனதில் தோன்றியதெற்கெல்லாம் நான் விளக்கம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.."

"சந்தியா மேடத்தை வேறு இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுக்க அவங்க அண்ணன் பேச்சுவார்த்தை ஆரம்பித்து விட்டது உங்களுக்குத் தெரியாது போல.."

"என்ன உளறுகிற..? சந்தியா ஒரு நாளும் இதற்கு சம்மதிக்கமாட்டாள்.."

"கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் சார்.."

"இந்தக் கல் கரையாத கல்.. என் மகனைத் தவிர வேறு யாராலும் கரைக்க முடியாத கல்.."

இதைக் கேட்ட பூர்ணிமா கலகலவென்று சிரித்தாள்.. கோகுல்நாத்தின் முகத்தில் சினம் வந்தது..

"ஏன் சிரிக்கிறாய்..?"

"உங்கள் மகனின் சக்தியை அறிந்துகொண்டும்.. அதைப் பயன்படுத்தாமல் சந்தியா மேடத்தை கோட்டை விடப் பார்க்கிறீங்களே.. நீங்கள் என்ன பிஸினஸ்மேன்..?"

கோகுல்நாத்தின் புருவங்கள் உயர்ந்தன.. எதிரே அமர்ந்திருந்த சிறு பெண்ணின் வார்த்தைகளில் பெரிய செய்தியொன்று ஒளிந்து கொண்டிருப்பதை அவரால் உணர முடிந்தது..

## 23

எது எப்படியிருந்தாலும் பூர்ணிமா சொல்லிய ஒரு செய்தி நூறு சதவிகிதம் உண்மையானது.. கோகுல் நாத்திற்கு இருப்பது கூர்மையான வியாபார மூளை.. அதனால் தான் சந்தியாவின் காதலை பணையமாக்கி தான் நினைத்ததை சாதிக்க அவர் முனைந்திருக்கிறார்..

ராமலிங்கத்தின் மகளாக.. பரிமளத்தின் வயிற்றில் பிறந்த பெண்.. காதலனை விட்டு வேறொருவனை ஒரு நாளும் மணக்கமாட்டாள் என்பதை அவர் நன்கு அறிவார்..

அவர் பெற்ற மகனான வினய்கூட அவர் சொல்லுக்கு கட்டுப்பட்டு காதலை தூக்கியெறிவான்.. ஆனால், சந்தியா யார் சொன்னாலும் தன் காதலை தூக்கியெறிய மாட்டாள் என்பதே அவருடைய பலம்..

அதனாலேயே சந்தியாவின் காதலை துருப்புச் சீட்டாய் பயன்படுத்தி, ஆடு புலி ஆட்டத்தை ஆடத் துணிந்து செயலில் இறங்கியிருந்தார் அவர்..

சந்தியா மட்டும் 'காதலாவது கத்தரிக்காயாவது.. என் பணத்திற்கு முன்னால் நீ வெறும் பச்சா..' என்று நிமிர்ந்து கொள்ளும் வகையாக இருந்திருந்தால்.. கோகுல்நாத் அலறியடித்துக் கொண்டு முதலில் அவளைத் தன் மருமகளாக்கிக் கொண்டிருப்பார்..

அப்படியில்லாமல் நல்லவளாக இருந்ததே சந்தியாவிற்கு பாதகமாக அமைந்துவிட்டது..

உலகத்தில் நல்லவர்களாக இருப்பவர்கள் வாழ்க்கையில் என்றும் ஜெயிக்க முடியாமல் போகிறது என்பதை சந்தியா பாவம் அறியாதவளாய் இருந்தாள்..

ஆனால்.. சுயநலமாகவும்.. கொஞ்சம் பொல்லாத வனாகவும் இருக்கா விட்டால்.. வாழ்க்கையின் உயரத்தை தொடமுடியாது என்பதை நன்கு அறிந்திருந்த கோகுல் நாத், சந்தியாவின் காதலை பகடைக்காயக்கி உருட்டி விளையாடிக் கொண்டிருந்தார்..

இன்றோ.. அவரது வியாபார மூளையை விமரிசனம் செய்கிறாள் ஒரு சிறு பெண்.. அவள் தெளிந்த அறிவுடனும் தென்படுகிறாள் என்று கோகுல்நாத் நினைத்தார்..

இவள் என்ன சொல்கிறாள் என்று கேட்டுத்தான் பார்ப்போமே என்பது அவரது நினைவு.. ஏனெனில், சந்தியாதான் காதலுக்குக் கட்டுப்படுவாள்.. சந்தான கிருஷ்ணன்.. யாராலும் கட்டுக்குள் கொண்டுவர முடியாத காட்டு அருவி என்பது அவருக்கு நன்கு தெரியும்..

சமீப காலமாக சந்தானகிருஷ்ணன் தன் தங்கைக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை தேட ஆரம்பித்து இருப்பதாக அவர் ஒரு செய்தியைக் கேள்விப்பட்டிருந்தார்.. அது அவரை மனக்கிலேசத்தில் ஆழ்த்தியிருந்தது.

ஏனென்றால் சந்தானகிருஷ்ணன், கோகுல் நாத்தின் குறுக்குப் புத்தியை நன்கு அறிந்தவன்.. சந்தியாவைப் போலில்லாமல் முரட்டுத்தனமாய் செயல்படுவான்.. ஒன்றை மனதில் நினைத்தால் அதை முடிக்காமல் அவன் விடமாட்டான் என்று வியாபார வட்டாரத்தில் அவனுக்கு ஒரு பெயர் உண்டு..

அவன்பாட்டுக்கு தன் தங்கையை வேறு இடத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுக்க வேண்டும் என்று நினைத்துவிட்டால் என்ன செய்வது என்று அவருக்கு மனது பக்.. பக்கென்று அடித்துக் கொண்டிருந்தது..

சந்தியா மட்டும் கைநழுவிப் போய்விட்டால்.. கோகுல்நாத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.. சந்தியாவின் பெயரிலிருந்த கோகுல்நாத் பங்குதாரராக இருந்த தொழில்களில் சந்தியாவின் பெயரில்தான் அறுபது சதவிகிதம் பங்குகள் இருந்தன.. கோகுல் நாத்திற்கு நாற்பது சதவிகிதம்தான்..

சந்தியாவின் கணவனாக வினய்யைத் தவிர வேறு யார் வந்தாலும் அந்த இரண்டு தொழில்களில் இருந்தும் கோகுல்நாத்தை எளிதாக வெளியேற்றிவிடலாம்..

அந்த அளவுக்கு அவர் கம்பெனி பணத்தில் கை வைத்திருக்கிறார்.. சந்தியா.. அதை அறிந்தும் அறியாதவளாய் அமைதியாக இருந்தாள்.. சந்தியாவின் கணவன் நிச்சயம் அப்படி இருக்கமாட்டான்..

வினய் வேறு சந்தானகிருஷ்ணன் மிரட்டிய செய்தியை கோகுல்நாத்திடம் சொல்லிச் சொல்லி புலம்பிக் கொண்டிருந்தான்... வெளியில் அதை அலட்சியப் படுத்திப் பேசினாலும் கோகுல்நாத்திற்கு உள்ளுக்குள் குளிரும் காய்ச்சலும் வந்துவிட்டது..

'சந்தானகிருஷ்ணன் சொன்னதை செய்யாமல் விட்டுத் தொலைக்க மாட்டானே..' என்று அவர் கதிகலங்கிப் போயிருந்தார்..

சந்தியாவைப் பெண் கேட்டு வர சந்தானகிருஷ்ணன் கொடுத்திருந்த ஆறு மாத கெடுவில் ஏற்கெனவே இரண்டு மாதங்கள் கழித்து இருந்தன.. மேற்கொண்டு என்ன செய்வது என்று அவர் யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில்தான் பூர்ணிமா அவரை சந்திக்க வந்திருந்தாள்..

"நீ என்ன சொல்கிறாய் பூர்ணிமா..?"

"என் பெயர் உங்களுக்கு நினைவில் இருக்கிறதா சார்.."

'சற்று முன் 'பெண்ணே..' என்று அவளை அழைத்ததனை நினைவுபடுத்துகிறாள்..' கோகுல்நாத் அதை கண்டுகொண்டதாய் காட்டிக் கொள்ளவில்லை..

"நீ சொல்லவந்ததை தெளிவாகச் சொல்லம்மா.."

"சந்தியா மேடம் உங்கள் மகனை உயிருக்குயிராய் காதலிக்கிறாங்க இல்லையா..?"

"ஆமாம்.."

"அவங்க காதலை ஜெயிக்க வைத்து.. உங்கள் மகனுக்கு கல்யாணம் பண்ணிவைக்க நீங்கள் ஏதோ ஒரு விஷயத்தை டிமாண்ட் பண்ணுகிறீர்கள் இல்லையா..?"

"நீ புத்திசாலிப் பெண்.."

"உங்கள் பாராட்டிற்கு நன்றி.. ஆனால் சார்.. சந்தியா மேடம் உங்கள் மகனின் காதலியாக இருக்கும் போது.. அவங்களால் உங்க மகன் கேட்கும் டிமாண்டை நிறைவேற்ற முடியாது.."

"ஏன்..?"

"ஏன்னா, அவங்க பெரிய வீட்டில் பிறந்த பெண்.. கல்யாணம் ஆகிப் போகும்வரை பிறந்த வீட்டினருக்கு கட்டுப்பட வேண்டிய, கட்டுப்படும் பெண்.."

"ஓ.."

"ஆகவே அவங்க கல்யாணமாகி உங்கள் மருமகளாகி வந்துவிட்டால்.. உங்கள் வீட்டிற்கும் உங்கள் மகனின் வார்த்தைக்கும்தான் கட்டுப்பட்டு ஆக வேண்டும்.. அதுதான் தமிழ்நாட்டுப் பெண்களின் தலைவிதி.."

தன் தலைவிதியைத் தானே மாற்றிக் கொண்டிருப்பதை அறியாதவளாய் பூர்ணிமா தீவிரமான முகபாவனையுடன் பேசிக் கொண்டிருந்தாள்..

## 24

கோகுல்நாத்தின் விழிகள் மின்னின.. அவருக்கு ஏன் இது தோன்றாமல் போய்விட்டது..? இந்தக் கோணத்தில் ஏன்

அவர் யோசிக்கவில்லை..?

"நீ சொல்வதும் எனக்குச் சரியாகத்தான் படுகிறது.."

"ம்ம்.. சரியான விஷயம் சரியாகத்தான் படும் சார்.. நீங்கள் முதலில் சந்தியா மேடத்தை உங்கள் வீட்டிற்கு மருமகளாக்கிக் கொள்ளுங்க... வினய் சாருக்கு மனைவியாக்குங்க.. உங்கள் வீட்டின் அஸ்திவாரமே அவங்கதான் என்பதுபோல் பாசமழை பொழிந்து அவங்களுக்கு பூவிலங்கை போட்டுவிடுங்க.. அதன் பின்னால் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீங்களோ அதை உங்கள் மகனை விட்டு அவருடைய மனைவியிடம் டிமாண்ட் பண்ண வையுங்க.. இதுதான் நீங்கள் ஜெயிப்பதற்கான ஒரே வழி.."

"ஃபென்டாஸ்டிக் ஐடியா.."

"யெஸ்.. ரியலி இட் இஸ் தி வெரி ஃபென்டாஸ்டிக் ஐடியா.. இதை விட்டு இப்போதே சந்தியா மேடத்தின் காதலை நீங்கள் பணயப் பொருளாக்கினால் அவங்களுக்கே நாளடைவில் உங்கள் மகனின் காதலின் மேல் நம்பிக்கை போய்விடலாம்.."

"ஷ்யூர்.. ஷ்யூர்.."

"அவநம்பிக்கை வந்துவிட்டால்.. அங்கே காதல் ஆட்டம் கண்டுவிடும்.. ஏன் அழிந்துகூடப் போய்விடும்.."

"காட்.."

"வெறும் வாய் வார்த்தையால் சொன்னதற்கே கடவுளைக் கூப்பிடுகிறீங்களே சார்.. நிஜத்தில் நடந்து விட்டால் என்ன செய்வீங்களோ.."

"நிஜத்தில் நடக்க நான் விடமாட்டேன்.."

"நீங்கள் விடக் கூடாது என்பதுதான் என் எண்ணமும்.."

"குட்.. நீ சிறு பெண்.. யாரோ எவரோன்னுகூட எனக்குத் தெரியாது.. ஆனால், சரியான நேரத்திற்கு வந்து சரியான ஐடியாவைக் கொடுத்திருக்கிற.."

"தேங்க்யூ சார்.. நான் கிளம்புகிறேன்.."

"இரும்மா.. ஜூஸ் சாப்பிட்டு விட்டுப் போ.."

கோகுல்நாத் கொடுத்த ஜூஸை பருகிவிட்டு மிகவும் சந்தோஷமாக சந்தியாவின் கேபினுக்குள் நுழைந்தாள் பூர்ணிமா.. அங்கே தவிப்புடன் காத்துக் கொண்டிருந்த சந்தியா அவசரமாய் எழுந்து வந்து பூர்ணிமாவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.. அவளது தளிர் விரல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன..

"சொல்.. பூர்ணிமா என்னவாயிற்று.."

"ம்ம்.. போன காரியம் சக்ஸஸ் ஆகிவிட்டது.."

"ஏய்ய்.. நிஜமாவா சொல்கிற.."

"யெஸ்.. ஐ டிட் இட்.."

"எப்படி.. எப்படி பூர்ணிமா இப்படி ஒரு மேஜிக் நடந்தது..?"

"அது சீக்ரெட்.. சொல்ல மாட்டேன்.."

"நீ சொல்வதை என்னால் நம்பவே முடியவில்லை.."

"நம்புங்கள் மேடம்.. இனி நடப்பவை நன்மையாகவே இருக்கும்.."

அந்த வார இறுதி விடுமுறை முடிந்து பூர்ணிமா கல்லூரி விடுதிக்கு திரும்பி விட்டாள்.. காய்ச்சலுடன் சென்றவள் ஆரோக்கியமாக திரும்பி வந்தவுடன் கீதா நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள்.. அடுத்து வந்த நாட்களில் பூர்ணிமா, பிரசன்னாவுடன் பேசுவதை தவிர்த்தாள்.. கீதா அதை உணர்ந்து புருவம் உயர்த்தினாள்..

"பூர்ணி.."

"ம்ம்..."

"பூர்ணி.. தூங்கி விட்டாயா..?"

"இல்லை.. சொல்லு.."

"நீயேன் பிரசன்னாவை அவாய்ட் பண்ணுகிற..?"

"நீதானே அவனை அவாய்ட் பண்ணச் சொன்னே.."

"நான் சொல்லும்போது எதிர்வாதம் செய்துவிட்டு இப்போது போய் அவாய்ட் பண்ணுகிறாயே.. இதைத் தான் ஏன்னு கேட்கிறேன்.. எங்கிருந்து இந்த ஞானோதயம் வந்தது..?"

"அதுவா.. அது வந்து.. எனக்கு காய்ச்சல் வந்ததே.."

"ஆமாம்.."

"அன்றைக்குத்தான் எனக்கு ஞானோதயம் வந்தது.."

"ஞானோதயத்தைத் தாங்க முடியாமல் காய்ச்சல் வந்துவிட்டதாக்கும்.."

"ச்சீ.. போடி.."

"உன்னை திட்டுவதற்கு ஏண்டி வெட்கப் படுகிற..?"

"கீதா..! அந்த பிரசன்னா என்ன சொன்னான் தெரியுமா..?"

"என்ன சொன்னான்..?"

"என்னைப் பார்க்கணும்போல அவனுக்கு இருந்ததாம்.."

"அதற்கு நீயென்ன பதில் சொன்ன..?"

"பட்டுன்று அங்கிருந்து போய்விட்டேன்.."

"பூர்ணி.. நீ அளவுக்கு அதிகமாய் அவனுடன் பழகிட்டு இப்போது அவனைக் குற்றவாளி ஆக்குவது போல் எனக்குத் தோன்றுகிறது.."

"எனக்கு அவன் மனதில் இப்படியொரு எண்ணம் இருப்பதே தெரியாது கீதா.. ஏன் அவன் சொல்லும்வரை இப்படி ஒரு உணர்வு இருக்கிறதுன்னு இனம் பிரிக்கக் கூட எனக்கு தெரிந்திருக்கவில்லை.. அதனால்தான் அதிர்ச்சியாகி விட்டேன்.."

கீதா மௌனம் சாதித்தாள்.. பூர்ணிமா தூக்கம் கலைந்து போனவளாய்.. இவளுக்கு இடையில் இலக்கில்லாமல் வெறித்துப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தாள்..

அவர்களுக்கு இடையே ஓர் மௌனத் திரை விழுந்திருக்க.. கீதா அந்த மௌனத்திரையை கிழித்தாள்..

"ஸோ.. நீ அந்த உணர்வை அன்றைக்குத்தான் இனம் கண்டு கொண்டாய் இல்லையா பூர்ணி.." ஆழ்ந்த குரலில் வினவினாள் கீதா..

"கீதா.." பூர்ணிமா பேச்சிழந்தாள்..

"பார்க்கணும் போல் இருக்குன்னு அவன் சொன்னதற்காக உனக்கு காய்ச்சல் வந்ததா.. இல்லை வேறு யாரையாவது உனக்கு பார்க்க வேண்டும் போல் இருந்ததால் காய்ச்சல் வந்ததா..?" கீதாவின் கேள்வியில் கொக்கி இருந்தது..

"கீதா.." பூர்ணிமா அகப்பட்டுக் கொண்டவளாய் பதறினாள்..

"பூர்ணி.. அன்றைக்கு சந்தானகிருஷ்ணன் வந்திருக்கிறார்னு சொன்னதும் உன் முகம் காட்டிய மலர்ச்சி.. எனக்குப் புதிதாக இருந்தது.. உன் விழிகளில் ஓர் தேடல் இருந்தது.. அந்தத் தேடுதல் உன் கார்டியனைக் கண்டதும் காணாமல் போய்விட்டது.. இதை நீ அறிவாய் தானே.." கீதாவின் வார்த்தைகளில் தீர்மானம் தெரிந்தது..

"கீதா.." பூர்ணிமா விசும்பினாள்..

அவளது தேம்பல் ஒலி.. அவள் நேசத்தை ஒப்புக் கொண்டது.. தெள்ளத் தெளிவாக அறிவித்தது.. பூர்ணிமாவின் கரத்தைப் பற்றி ஆறுதலாக அழுத்தினாள் கீதா..

## 25

கல்லூரி விட்டு வந்த பூர்ணிமா கீதாவுடன் பேசியவாறு ஹாஸ்டலுக்கு வந்தபோது.. ஹாஸ்டல் வாசலில் கார் நின்றிருந்தது.. அந்தக் காரை உடனடியாக இனம் கண்டுகொண்டாள் பூர்ணிமா..

"கீதா.. அது சந்தியா மேடத்தோட கார்.."

"ஓ.. அந்த கர்வம் பிடித்தவளின் கார் இதுதானா..?"

"திட்டாதே கீதா.. கர்வம் என்பதெல்லாம் அவங்க போடும் பொய் வேஷம்.. உண்மையில் அவங்க நல்லவங்க.."

"நீதான் மெச்சிக்கணும்.. அவங்க உன்னைப் புண்படுத்திப் பேசின வார்த்தைகளை நீ சொன்னபோது எனக்கு ரத்தம் கொதிச்சதடி.."

"விடு.. விடு.. பாவம்.. அவங்களுக்கு வேற டென்ஷன்.."

"அதுக்காக.. சம்பந்தமேயில்லாத உன்மேல் ஏன் பாயணும்..?"

"அதனால் எனக்கொன்றும் குறைவில்லை கீதா.. அவங்க கோவத்தை அவங்க அண்ணனே தாங்கிக் கொள்ளும் போது நான் தாங்கிக் கொள்ளக்கூடாதா..?"

"ஓ.. கதை அப்படி வருகிறதா..? நடத்து.. நடத்து.."

சந்தியாவின் காருக்கருகே அவள் சென்றதும், சந்தியா கார் கதவைத் திறந்து கொண்டு இறங்கினாள்.. அவள் முகம் மலர்ச்சியாக இருந்தது..

"ஹாய் பூர்ணி.."

"வாங்க.. மேடம்.. கீதா.. இவங்கதான் என்னுடைய கார்டியனின் தங்கை.. சந்தியா மேடம்.. இவள் என் ஃப்ரெண்ட் கீதா.."

பூர்ணிமா அறிமுகப்படுத்தியதும் சிரித்துக் கொண்டே கீதாவிற்கு 'ஹாய்' சொன்னாள் சந்தியா.. தோழிகள் இருவருக்குமே ஆச்சரியமாக இருந்தது..

"பூர்ணி.. நாம் கொஞ்சம் அவுட்டிங் போய்விட்டு வரலாமா..?"

"வார்டனிடம் பர்மிஷன் வாங்கனும் மேடம்.."

"நான் வாங்கிக் கொள்கிறேன்.. ஜஸ்ட் ஒன் ஆர் டூ அவர்ஸில் வந்துவிடலாம்.."

சந்தியா பர்மிஷன் வாங்கிக் கொண்டு வந்தாள்.. பூர்ணிமா தன் கையிலிருந்த புத்தகக்கட்டை கீதாவிடம் கொடுத்துவிட்டு காரில் ஏறிக்கொண்டாள்..

கார் ஓர் ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்குள் சென்று நின்றது.. அந்த மாதிரி இடங்களுக்கு வந்து பழக்கமில்லாத பூர்ணிமா, காரை விட்டு இறங்கவே பயந்தாள்..

"இங்கே ஏன் வந்திருக்கிறோம் மேடம்..?"

"சாப்பிட்டுக் கொண்டே பேசத்தான்.."

"வேறு ஏதாவது சின்ன ஹோட்டலுக்குப் போகலாமே.."

"பயப்படாமல் வா.. நான் கூட இருக்கிறேனில் லையா.."

சந்தியா இதமாய் புன்னகைத்தது அதிசயம் என்றால்.. அவள் பூர்ணிமாவின் கையை விடாமல் பற்றிக் கொண்டு ஹோட்டலுக்கு அழைத்துப் போனது பேரதிசயமாக இருந்தது பூர்ணிமாவிற்கு..

மெல்லிய வெளிச்சம் அந்த பெரிய ஹாலை நிறைந்திருந்தது.. அதிக சப்தமில்லாத மெல்லிசை காற்றில் மிதந்து வந்தது.. சந்தியா முன்பதிவு செய்யப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

"ரிசர்வனு போட்டிருக்கே.."

"நான்தான் ரிசர்வ செய்திருந்தேன்.. உனக்கு என்ன வேண்டும்னு மெனு கார்டை பார்த்துச் சொல்.."

"எனக்கு இதெல்லாம் தெரியாது மேடம்.. நீங்களே பார்த்து ஆர்டர் கொடுத்துவிடுங்களேன், ப்ளீஸ்.."

பூர்ணிமாவின் போலித்தனமான நாகரிகம் இல்லாத இயல்பான பாங்கு சந்தியாவைக் கவர்ந்தது..

'இவள்தான் எப்படிப்பட்டவள்..' இவளைப் போய் காயப்படுத்திவிட்டேனே.. சந்தியாவின் மனம் குற்ற உணர்வினால் தவித்தது..

அவிழ்க்கவே முடியாத சிக்கலை ஒரு நொடிப் பொழுதில் சீராக்கிவிட்ட அந்த சிறுபெண்.. தன்னடக்கத் தோடு தன் முன் அமர்ந்திருப்பதை வியப்புடன் பார்த்தாள் சந்தியா..

"என்ன மேடம் அப்படிப் பார்க்கிறீங்க..?"

"யூ ஆர் ஸோ கிரேட் பூர்ணிமா.."

"நீங்கள் பாராட்டுகிற அளவிற்கு நான் ஒன்றும் செய்துவிடவில்லை மேடம்.."

"அது உன் தன்னடக்கம் பூர்ணி.. நேற்று வினய் தன்குடும்பத்தோடு என்னைப் பெண் கேட்க வந்து விட்டார்.."

எதிர்பார்த்த விஷயம்தான் என்றாலும் பூர்ணிமா குதூகலித்தாள்..

"நிஜமாகவா..? கங்கிராஜுலேஷன்ஸ் மேடம்.. கை கொடுங்க.."

"தேங்க்ஸ் பூர்ணி.. நிச்சயதார்த்தம் இந்த வீக் என்டில் நடக்கப்போகிறது.. நெக்ஸ்ட் மன்த்.. ஆறாம் தேதி என் மேரேஜ்.."

பூர்ணிமா சந்தானகிருஷ்ணனின் மனவேதனை நீங்கியிருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.. அந்த நினைவே அவளுக்கு பேரானந்தத்தைத் தந்தது..

"பூர்ணிமா..! அவங்க நாளைக்கே நிச்சயதார்த்தத்தை நடத்திவிடணும்னு சொன்னாங்க.. ஆனால், நான் தான் வீக் என்டிற்கு தள்ளிப் போட்டேன்.."

"ஏன் மேடம்..?"

"இந்தக் கல்யாணம் நடக்க நீதான் காரணம் பூர்ணிமா.. நீ என்ன செய்தாயோ.. ஏது செய்தாயோ.. நடக்குமா என்று நான் நினைத்து ஏங்கிய கல்யாணம் நடக்கப்போகிறது.. அதனால் நீயில்லாமல் என் நிச்சய தார்த்தம் நடப்பதில் எனக்கு உடன்பாடில்லை.. அதுதான்.. நீ வரும் வீக் என்டில்

என் நிச்சயதார்த்தம் நடக்குமாறு பார்த்துக் கொண்டிருக்கிறேன்.."

பூர்ணிமா நெகிழ்ந்து போனாள்.. அவள் இதில் இறங்கியது சந்தான கிருஷ்ணனுக்காக.. அதை அறியாத சந்தியா இந்த அளவுக்கு அவள் மேல் பாசம் காட்டு கிறாளே..

"நான் ஒண்ணும் பெரிதாய் செய்துவிடவில்லை மேடம்.."

"இது பெரிதில்லைன்னா வேறு எதுதான் பெரிது.."

"என் கடமையைத்தான் நான் செய்தேன்.."

"உன் இந்த பாசத்தை நான் உணராமல் போனேன்.."

ஆர்டர் செய்யப்பட்டிருந்த உணவு வகைகள் வந்து விடவும், சந்தியா பூர்ணிமாவின் பக்கம் தட்டுகளை நகர்த்தி வைத்தாள்..

"சாப்பிடு பூர்ணி.."

"தேங்க்ஸ் மேடம்.."

"சொல் பூர்ணிமா.. உனக்கு என்ன வேண்டும்..?" இனிப்பை எடுத்து வாயில் போட்டுக்கொண்ட பூர்ணிமா, சந்தியாவை நிமிர்ந்து பார்த்தாள்.. சந்தியாவின் விழிகளில் உண்மை தெரிந்தது.. கடமை தெரிந்தது.. வாக்கு தவறாத தன்மை தெரிந்தது..

## 26

"நான் என்ன கேட்டாலும் தருவீங்களா மேடம்..?"

"என் சொத்தையே கேள் தருகிறேன்.."

'சொத்தில்லாமல் போனால் அந்த கோகுல்நாத் உங்களை அவருடைய மருமகளாக்கிக்கொள்ள மாட்டார் மேடம்..' என்று மனதிற்கு நினைத்துக் கொண்டாள் பூர்ணிமா..

"எனக்குச் சொத்து வேண்டாம் மேடம்.. உங்களுடைய சொந்தம் வேண்டும்.." பூர்ணிமா நிதானமாகக் கூறினாள்..

"அது உனக்கு என்றைக்கும் கிடைக்கும் பூர்ணிமா.."

"எனக்கு உரிமையோடு கூடிய சொந்தம் வேண்டும்.."

"புரியவில்லையே.."

"புரிந்தால் என்னை வெறுத்து விடமாட்டீங்களே.."

"உன்னை.. நான் வெறுப்பதா..? ஒருபோதும் அது நடக்காது.."

"என் பேராசையை நான் சொன்னவுடன் வெறுத்துத் தான் விடுவீங்க.."

"இல்லை பூர்ணிமா.. உன் ஆசை எதுவாக இருந்தாலும் சொல்.. நான் அதை நிறைவேற்றுகிறேன்.."

"மேடம்.. மடு.. மலைமீது ஆசைப்படலாமா..?"

"நீ யார் மீது ஆசைப்படுகிற..?"

சந்தியாவின் கேள்வி நேரடியாய் வந்து பூர்ணிமாவைத் தாக்கியது.. அவள் பதில் சொல்லாமல்.. உடல் நடுங்க தலைகுனிந்தாள்..

"சொல் பூர்ணிமா.. என்னிடம் உனக்கு என்ன தயக்கம்..?"

"வேண்டாம் மேடம்.. நான் இன்னொரு நாள் சொல்கிறேன்.."

"இப்போதே சொல்லு.."

"நான் சொன்னால் நீங்கள் என்னை வெறுத்து விடுவீங்க.."

"வெறுக்க மாட்டேன் சொல்லு.."

பூர்ணிமா கலக்கத்துடன் சந்தியாவைப் பார்த்தாள்.. அவளால் வாய் திறந்து பேசமுடியவில்லை.. சந்தியாவின் பார்வை அவளை ஊடுருவியது.. அவள் நிதானமாகக் கேட்டாள்..

"பூர்ணிமா.. நீ என் அண்ணனை காதலிக்கிறாயா..?"

பூர்ணிமாவின் முகம் பயத்தில் வெறுத்தது.. அவளால் இப்போதும் வாய்திறந்து பேச முடியவில்லை..

"மேடம்.."

"நான் சொன்னது சரியானதுதானே..?"

"நான் வேண்டுமென்றே செய்யவில்லை மேடம்.."

"காதல் தானாகத்தான் வரும். ஆனால், உன் வயது இப்போது பதினெட்டுதான்.. அண்ணனின் வயது என்ன தெரியுமா..? இருபத்தியெட்டு வயது.. உன்னைவிட பத்து வயது பெரியவன்.."

"அவர் எல்லா வகையிலும் என்னைவிடப் பெரியவர் தானே மேடம்..?"

"நன்றாய்ப் பேசுகிறாய்.."

"என் மேல் கோபமா..?"

"கொஞ்சம்கூட இல்லை.."

"வரம் தர வந்த தேவனையே நான் நினைத்து விட்டேன்.. ஆனால், அவருடைய பணத்தைப் பார்த்து அவர்மேல் நான் ஆசை வைக்கவில்லை.."

"எனக்கு உன் குணம் தெரியும் பூர்ணிமா.."

"எப்படின்னு தெரியவில்லை.. என் மனம் அவர் பின்னால் போய்விட்டது.. இழுத்துப் பிடிக்க என்னால் முடியவில்லை.."

"ம்ம்.. நான் உனக்கு வாக்கு தருகிறேன் பூர்ணிமா.."

"என்னன்னு மேடம்..?"

"நான் என் அண்ணனை உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறேன்.. நீதான் என் அண்ணி..! இதை நான் நடத்திக் காட்டுகிறேன்.."

"மேடம்.. நான் என்னவோ சிறுபிள்ளைத்தனமாக ஆசைப்பட்டுவிட்டேன்.. உங்களிடம் கேட்டுவிட்டேன்.. அதற்காக நீங்கள் எனக்கு வாக்கு கொடுக்க வேண்டுமா..?"

"சிறு பெண்ணான நீதான் என் காதலை நிறை வேற்றி வைத்தாய்.. சிறு பெண்ணான நீதான் என் மனதைப் புரிந்துகொண்டு அமைதி தந்தாய்.. என் தாய் இருந்தால் எப்படி என் வேதனையைத் தீர்த்து வைப்பாங்களோ.. அது போல் நீயும் என் வேதனையைத் தீர்த்து வைத்தாய்.. இனி நீயே என் தாய்..!"

"பெரிய வார்த்தைகளை பேசாதீங்க மேடம்.."

"இல்லை பூர்ணிமா.. அப்பா அம்மா இல்லாத எனக்கு அண்ணன் வீடுதான் கடைசிவரை தாய்வீடு.. என்சுமை தாங்க அண்ணனின் தோள் இருக்கிறது.. என்னை மடிதாங்கும் அண்ணியும் கிடைத்துவிட்டால் நான் அதிர்ஷ்டசாலிதானே.. உன்னைவிட வேறு யார் என்னை மடிதாங்க முடியும்..?"

பூர்ணிமா கரகரவென அழுதுவிட்டாள்.. சந்தியா அவளது கையில் தன் வலதுகரத்தை வைத்து வாக்கு கொடுத்தாள்..

"நீ என் காதல் நிறைவேற உதவியது போல்.. நானும் உன் காதல் நிறைவேற உதவி செய்வேன்.. என் மனதுக்குப் பிடித்தவனை நான் கல்யாணம் செய்து கொள்வது

போல்.. உன் மனதுக்குப் பிடித்தவனை நீ கல்யாணம் செய்து கொள்ள வைப்பேன்.. நீயே என் அண்ணனின் மனைவி.. என் அண்ணி.. இதை நான் உனக்கு வாக்கு கொடுக்கிறேன்.."

ராமலிங்கத்தின் மகளும்.. பரிமளத்தின் வயிற்றில் உதித்த பெண் மகவும்.. சந்தானகிருஷ்ணனின் தங்கையுமான சந்தியா ஒரு சாமான்ய ஏழை குடும்பத்து கிராமத்து சிறுபெண்ணிற்கு வாக்கு கொடுத்தாள்..

கோகுல்நாத், சந்தியாவை மணப்பதற்காக போட்ட நிபந்தனை எதுவென்பதை பூர்ணிமா அறியமாட்டாள்.. ஆனால், சந்தியா நன்கு அறிவாள்.. அதை அறிந்திருந்தும் அவள் பூர்ணிமாவிற்கு வாக்கு கொடுத்தது.. அவள் உடம்பில் ஓடுவது ராமலிங்கத்தின் ரத்தம் என்பதற்கு சிறந்த அத்தாட்சியாக இருந்தது..

சந்தியாவிற்குத் தெரியும்.. வினய்யின் காதலியாக அவள் இருக்கும்போது கோகுல்நாத் தன் நிபந்தனையை நிறைவேற்ற மறைமுகமாக அவளை வற்புறுத்தினார்.. இனி வினய்யின் மனைவியாக.. அவரின் மருமகளாக அவர் வீட்டிற்குள் நுழைந்ததும் வெளிப்படையாக அவர் வற்புறுத்துவார்.. சந்தியா அதை மறுத்தால் போராட்டம் வெடிக்கும்..

அதை அறிந்திருந்தும் சந்தியா, பூர்ணிமாவிற்கு வாக்கு கொடுத்தாள்..

## 27

சந்தானகிருஷ்ணனின் வீடு விழாக்கோலம் பூண்டிருந்தது.. பூர்ணிமா நிற்காமல் ஓடி ஓடி வேலை செய்து கொண்டிருந்தாள்.. அவளது முழுமையான அந்த அர்ப்பணிப்பைக் கண்டு சந்தானகிருஷ்ணனும் தாயம்மாவும் பெருமிதம் கொண்டார்கள்..

கோகுல்நாத்தின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆறு கார்களில் அணிவகுத்து வந்து இறங்கினார்கள்..

சந்தானகிருஷ்ணன் வாசலுக்கு வந்து அவர்களை வரவேற்று அழைத்துச் சென்றான்.. ராமலிங்கத்தின் மனைவி பரிமளத்தின் தாய்வீட்டைச் சேர்ந்தவர்கள் முதல் நாளே குடும்பத்துடன் வந்துவிட்டார்கள்..

ஹாலின் சோபாக்கள் போக.. கூடைச் சேர்கள் நிறைய வரிசையாக போடப்பட்டிருந்தன.. உள்ளே டைனிங் ஹாலிலும் அதிகப்படியான டேபிள்கள் போடப்பட்டு சேர்கள் போடப்பட்டு இருந்தன..

கோகுல்நாத் அமர்த்தலாக அமர்ந்தார்.. அவருடைய குடும்பத்தார் அவரைவிட அமர்த்தலாக ஒரு பார்வை பார்த்தபடி அமர்ந்தனர். அதை மாடியின் உள்பக்க பால்கனி

வழியாக பார்த்துக் கொண்டிருந்தாள் பரிமளத்தின் தாயார் பர்வதம்மாள்..

தாயில்லாத தன் மகள் வயிற்றுப் பேத்தியின் எதிர்காலம் குறித்த கவலை அவளுக்கு இருந்தது.. அருகில் நின்று கொண்டிருந்த மகன் தணிகாசலத்திடம் அங்கலாய்க்க ஆரம்பித்தாள்..

"ஏன் தம்பி.. உன் அக்கா மகளுக்கு ஊரு உலகத்தில வேறு மாப்பிள்ளையே கிடைக்கலியா..? என்னவோ இவன்தான் பெரிய இவன் போல போஸ் கொடுத்துக்கிட்டு உட்கார்ந்திருக்கிறானே இந்த கேத்தரவாடின் மகன்தான் கிடைத்தானா..?"

அப்போது சந்தியா அழைப்பதை பர்வதம் மாளிடம் சொல்வதற்காக வந்த பூர்ணிமாவிற்கு சிரிப்பு வந்து விட்டது.. வாய்விட்டு கலகலவென்று சிரித்தாள் அவள்..

"ஏண்டா தணிகாசலம்.. எதற்கு இந்தச் சின்னக்குட்டி இம்புட்டுச் சிரிப்பை சிரிக்குது..?" முகவாயில் கை வைத்துக் கொண்டு கேட்டாள் பர்வதம்மாள்..

தணிகாசலம், பூர்ணிமாவைப் பார்த்து பரிவாகப் புன்னகைத்தார். ஒரு சிட்டுக்குருவியின் சுறுசுறுப்போடு இங்கும் அங்கும் அலைந்துகொண்டிருந்த அந்த சிறு பெண்ணை அவருக்கு வெகுவாக பிடித்திருந்தது..

"கேத்தரவாடுன்னா என்ன பாட்டி..?" பூர்ணிமா வினவினாள்..

"கேணக் கிறுக்கன்னு அர்த்தம்..?" பர்வதம்மாள் நக்கலாக கூறினாள்..

"யார்.. இந்த ஆளா கேணக்கிறுக்கன்..? எவ்வளவு கெட்டிக்காரத்தனமாய் சின்ன மீனைப் போட்டு.. பெரிய மீனைப் பிடிக்கப் பார்க்கிறான்.. இவன் கேணையன்னா.. நாமெல்லாம் யாரு..?" என்றார் தணிகாசலம் ஓர்வித கோபத்துடன்..

"நம்ம பிள்ளைக்கு புத்தியில்லைங்கறப்போ.. நாம ஊரைக் குத்தம் சொல்லி என்னப்பு பண்றது..? நம்ம தரம் என்ன.. தகுதி என்ன.. இதைப் பத்திய நினைப்பு நம்ம வீட்டுப் பிள்ளைக்கு இல்லாமப் போயிடுச்சு.. அவனுக்கு ராஜயோகம் அடிச்சிருக்கு.. ஆடிப் பார்க்கிறான்.." பர்வதம்மாள் குறைபட்டுக் கொண்டாள்..

"மாப்பிள்ளையைப் பத்தி ஒரு குறை இல்லை அம்மா.. ஆள் பார்க்க ராஜா மாதிரி இருக்கிறான்.. கெட்ட சகவாசம்.. பழக்க வழக்கம்னு எதுவும் இல்லாத சுத்தமான அக்மார்க் முத்திரை மாப்பிள்ளை.. வெளிநாட்டு படிப்பு வேறு.. அதைப் பற்றிக் குறை சொல்ல முடியாது அம்மா.." தணிகாசலம் ஆறுதல் சொன்னார்..

"அதுக்கெல்லாம் சேர்த்து வைத்துதான்.. அந்த மேனாமினுக்கி இருக்கிறாளே.. அவ ஒருத்தி போதும்டா அந்த குடும்பத்திற்கு.. இவன் ஒற்றைப் பிள்ளையாக பிறந்திருந்தால் பிரச்னையே இல்லை.. இவன் தான் வினையைத் துணைக்கு வைத்துக்கொண்டு பிறந்திருக் கிறானே.." பர்வதம்மாளின் முகத்தில் கவலை தொனித்தது.

"என்னம்மா செய்வது..? அண்ணன் சொக்கத் தங்கம்னா.. தங்கச்சிக்காரி தகரடப்பாவாக இருக்கிறா.. நம்ம சந்தியாவிற்கு இப்படி ஒரு நாத்தனார் வந்து வாய்க்கணும்கிறது அவள் தலையெழுத்துபோல.. நாம என்ன செய்ய முடியும் அம்மா.." தாயாரை சமாதானப் படுத்தும் தொனியில் தணிகாசலம் கூறினார்..

"என்னத்தை சொல்றதுப்பா.. அதுதானாவா வந்து வாய்ச்சிருக்கு..? இவளா இழுத்துவிட்டுக் கொண்டு இருக்கிறா.. ஊரில.. நாட்டில வேறு மாப்பிள்ளையே கிடைக்காது போல இல்ல.. இந்த திருவாத்தன் குடும்பத்தில் தடுக்கி விழுந்திருக்கிறா.." பர்வதம்மாள் மீண்டும் வியாக்கியானம் பேசினாள்..

"திருவாத்தனா.. அது என்ன பாட்டி..?" பூர்ணிமா மீண்டும் விளக்கம் கேட்க ஆரம்பிக்கவும், தணிகாசலம் சிரித்தார்..

"உங்க பாட்டி பேசுவதற்கு எல்லாம் அர்த்தம் கேட்டா விடிந்துவிடும் தாயி.. வா.. போய் நிச்சயதார்த்த வேலைகளைப் பார்க்கலாம்.."

"ஆனால்.. சந்தியா மேடம்.. பாட்டியை வரச் சொன்னாங்களே.."

"ஆத்தி.. என் பேத்தி என்னைக் கூப்பிட்டு விட்டிருக்கிறா.. நான் அதை விட்டுவிட்டு.. இந்தச் சீமை சித்ராங்கியைப் பத்திப் பேசிக்கிட்டு இருக்கேனே.." பர்வதம்மாள் உள்ளே விரைந்தாள்.. பூர்ணிமா கீழே அமர்ந்திருந்தவர்களில் பெரியவள் குறிப்பிட்ட அந்த 'சீமை சித்ராங்கி..' யார் என்று பார்க்க முற்பட்டாள்..

"யாரைப் பார்க்கிறேம்மா..?" தணிகாசலம் அன்பாக வினவினார்..

"பாட்டி யாரை இப்படிப் பேசினாங்க..?"

"அதோ அந்த சோபாவில் நடுவில் கோகுல் நாத்தின் பக்கத்தில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு சட்டமாய் உட்கார்ந்து இருக்கிறாளே, ஒரு பெண்.. அவளைத்தான் அம்மா அப்படிச் சொன்னாங்க..."

பூர்ணிமா மாடியிலிருந்து கீழே ஹாலில் அமர்ந்திருந்த அந்தப் பெண்ணைப் பார்த்த அதே நேரம்.. அவளும் விழியுயர்த்தி பூர்ணிமாவைப் பார்த்தாள்..

அவளைப் பார்த்த முதல் பார்வையிலேயே அவளிடம் தென்பட்ட அகம்பாவத்தையும் திமிரையும் கண்டு பூர்ணிமாவிற்கு அவளைப் பிடிக்காமல் போய்விட்டது..

பூர்ணிமாவை அலட்சியமாக ஏதோ.. புழுவைப் பார்ப்பது போல் இகழ்ச்சியாகப் பார்த்தாள் அந்தப் பெண்..

பூர்ணிமாவின் முகம் போன போக்கைப் பார்த்த தணிகாசலம் புரிந்துகொண்ட பாவனையில் சிரித்தார்..

"அந்தப் பெண் ராங்கி பிடிச்சதும்மா.. அது எங்களையே இந்தப் பார்வைதான் பார்க்கும்.. அம்மா அந்தப் பெண்ணிற்கு 'ராங்கி ரங்கம்மா'ன்னும் ஒரு பெயர் வைத்திருக்கிறாங்க..."

'சரியான பெயர்தான்..' என்று தோன்றியது பூர்ணிமாவிற்கு இவளைப் போன்ற பெண்களை பர்வதம்மாள் போன்ற பெரிய வீட்டுப் பெண்மணிக்குப் பிடிக்காமல் போனதில் ஆச்சரியமில்லை என்று எண்ணிக் கொண்டாள் அவள்..

"அந்தப் பெண் யார்..?"

"இது உனக்குத் தெரியாதா..?"

"தெரியாதே.."

"அவள்தான் கோகுல்நாத்தின் மகள்.. வினய்யின் தங்கை.. நம் சந்தியாவின் நாத்தனாராக வரப்போகிறவள்.."

"அடக் கடவுளே.."

"பார்த்தாயா.. உனக்கே கவலையாக இருக்கிறதே.. அப்புறம் அம்மாவிற்கு கவலையாக இருக்காதா..? அதனால்தான் அந்தப் பெண்ணிற்கு அத்தனை பட்டப் பெயரை சூட்டிவிட்டுப் போயிருக்கிறாங்க.."

"அந்தப் பெண்ணிற்குன்னு ஒரு பெயர் இருக்குமே.."

"அதைத்தான் அம்மா சொன்னாங்களே.."

"நான் கவனிக்கவில்லையே.."

"சித்ராங்கி.. அதுதான் அந்தப் பெண்ணின் பெயர்.."

"வினய்ன்னு மாடர்ன் பெயரை அண்ணனுக்கு வைத்துவிட்டு.. தங்கைக்குப் போய் இப்படிப் பழமையான

பெயரை வைத்திருக்கிறாங்களே.."

"அந்த வீட்டில் ரவுடிப் பாட்டி ஒன்று இருந்து மண்டையைப் போட்டதாம்.. அதன் சாயலாய் இந்தப் பெண் இருக்கவும்.. அந்தப் பெயரையே வைத்து விட்டாங்களாம்.."

"பெரிய.. அருந்ததி ரேன்ஜிற்கு இருப்பாள் போல இருக்கே.."

"அருந்ததி சூன்யக்காரனோடு போராடிய நல்ல பெண்.. ஆனால்.. இந்தப் பெண்ணே ஒரு சூன்யக்காரிதான்.."

பூர்ணிமா தன்னையறியாமல் கீழே பார்த்தாள்.. அப்போதும் அந்தப் பெண் மேலே இவர்கள் பேசுவதைத் தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.. பூர்ணிமா தன் பார்வையை விலக்கிக் கொண்டாள்..

"அந்தப் பெண் நம்மையே பார்க்குது.."

"அதற்கு நீ ஏம்மா பயப்படுகிற..? அது ராஜ்ஜியம் சந்தியாவின் மாமனார் வீட்டில்தான்.. இங்கே அதன் ஆட்டம் செல்லாது.."

பூர்ணிமா நிம்மதிப் பெருமூச்சுடன் சந்தியாவைத் தேடிச் சென்றாள்.. தன் புடவையின் கொசுவத்தை சரி செய்து கொண்டிருந்த சந்தியா.. பூர்ணிமாவை நிமிர்ந்து பார்த்து முறுவலித்தாள்.. பேத்தியின் அழகைக் கண்டு பூரித்துப் போன பர்வதம்மாள், சந்தியாவின் கன்னம் வழித்தாள்..

"ஆத்தி.. என் கண்ணே பட்டுவிடும் போல இருக்கே.. எப்படித்தான் இம்புட்டு அழகா இருக்கயோ.. ம்ஹூம்.. இந்த அழகையும் குணத்தையும் கொண்டாடுகிற வீட்டிற்கு மருமகளாகப் போகாமல் இந்தக் குணக்கேடிகள் வீட்டுக்குத்தான் மருமகளாகப் போவேன்னு ஒத்தக்காலில் நின்னு சாதிச்சுட்டியே.. சும்மாவா சொன்னாங்க.. கிளியை வளர்த்து பூனை கையில் கொடுத்தாப்புலன்னு.."

"பாட்டி..! அவர் ஒன்றும் பூனையில்லை.."

"அவனைப் பெத்தவன் பூனைதானே.. அதுவும் வெறும் பூனையில்லை.. கடுவன் பூனையாச்சே.."

"போங்க பாட்டி.. உங்களுக்கு அவங்களைக் கண்டாலே பிடிக்க மாட்டேன் என்கிறது.."

"ஆமாமாம்.. வேறு மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறாயா..?"

"அது இந்த ஜென்மத்தில் நடக்காது பாட்டி.."

"இப்படிச் சொல்லிச் சொல்லியே நிச்சயதார்த்தம் வரை வரவைத்து விட்ட.. இனி பேசிப் பயன் என்ன..?"

"நீங்க ஏன் பாட்டி இப்படி அலுத்துக்கறீங்க..? கல்யாணம் பண்ணி அவங்களுடன் குடித்தனம் பண்ணப் போவது நான்.. நீங்கள் இல்லை.. கவலைப்படாமல் வாங்க.."

"வாடி.. என் சக்கரைக்கட்டி.. உன் தாத்தாவின் அழகு என்ன.. அறிவு என்ன.. வீரம் என்ன..? அவரோடு போய் இந்த கோகுல்நாத்தின் மகனை இணை சேர்க்கிறயா..?"

"ஐய்யே.. போதும் பாட்டி.. எனக்கு என் வினய் தான் உயர்த்தி.."

சந்தியாவை அழைத்துக்கொண்டு போய் ஹாலில் இருந்த அழகிய வேலைப்பாடுகள் செய்த நாற்காலியில் அமர வைத்தார்கள்.. நிச்சயதார்த்தம் ஆரம்பமானது.. நிச்சயதார்த்த பத்திரிகையை வாசித்து முடிந்ததும், மாப்பிள்ளை வீட்டார் வாங்கி வந்திருந்த பட்டுச் சேலையை சந்தியா கட்டிக்கொண்டு வந்தாள்.. மதிய உணவு விருந்து தடபுடலாக முடிந்தது..

சென்னையிலேயே பெரிய திருமண மண்டபத்தை தங்கையின் திருமணத்திற்காக பிடித்திருந்தான் சந்தான கிருஷ்ணன்.. சுபயோக சுபவேளையில் சந்தியாவின் கழுத்தில் வினய் தாலி கட்டினான்.. காதலனின் தாலியைக் கழுத்தில் வாங்கிக் கொண்டபோது சந்தியாவின் விழிகள் உயர்ந்து பூர்ணிமாவைப் பார்த்தன.. அந்த விழிகள் நன்றிகூறின..

மணமகனின் இல்லத்தில் ஆரத்தி எடுத்து சந்தியாவை அழைத்துக் கொண்டார்கள்.. அன்று முதலிரவு என்பதால்

சந்தியாவின் தாய்மாமன் தணிகாசலமும், அவரது மனைவி சுந்தரியும் கோகுல்நாத்தின் வீட்டிலேயே தங்கி விட்டனர்.. மறுநாள் காலையில் சந்தியாவையும் மாப்பிள்ளையையும் மறுவீட்டு விருந்திற்கு அவர்கள் அழைத்துக் கொண்டு வரவேண்டும்..

தாயம்மாள் திருமண மண்டபத்திலிருந்தே, பூர்ணிமாவுடன் வீட்டிற்குப் போய்விட்டாள்.. சந்தான கிருஷ்ணனும் பர்வதம்மாளும் கோகுல்நாத்தின் வீடுவரை போய்விட்டுத் திரும்பிவிட்டனர்.. சந்தியாவின் திருமணம் இனிதாக முடிந்துவிட்டது..

## 29

அறையில் இதமான நறுமணம் சூழ்ந்திருந்தது.. மிகப் பெரிய கட்டில்களின் மேலே மலர்ச்சரங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.. கட்டிலின் ஓரமாய் இருந்த டீபாயில் பழங்களும், இனிப்புகளும் இருந்தன.. அறையை நோட்டமிட்ட வினய்க்கு சிரிப்பு வந்தது.. அன்று தொட்டு இன்று வரை முதலிரவு அறை என்றால் இந்த அடையாளங்கள் மாறாமல் இடம்பெறுவது எப்படி என்று நினைத்துக் கொண்டான்..

போதாக்குறைக்கு.. சற்று நேரத்தில் கையில் பால் செம்போடு சந்தியா உள்ளே வரப்போகிறாள் என்று நினைத்தபோது அவனுக்கு சிரிப்பு வந்தது..

செம்பு நிறைய இருக்கும் பாலைக் குடித்து.. இந்தப் பழங்களையும், இனிப்புகளையும் காலி செய்தால் தூக்கம்தானே வரும்..? விடிய விடிய தூங்க வைக்க இதைச்

செய்கிறார்களோ என்ற நினைத்துக் கொண்டவனின் சிரிப்பு அதிகரித்தது..

அறைக் கதவைத் திறந்து கொண்டு, கையில் பால் செம்போடு சந்தியா உள்ளே வந்தாள்.. அறைக் கதவை மூடித் தாழிட்டுவிட்டு அவளை ரசனையோடு பார்த்தான் வினய்.. அவனது பார்வையைத் தாங்க மாட்டாமல் அவளது முகம் சிவந்தது..

"கையில் என்னடி..?"

"என்னது டீயா..?"

"ஆமாண்டி.. என் பொண்டாட்டி.."

"ஓ.. பொண்டாட்டியாகி விட்டால் 'டீ' போடனுமா..?"

"ஆமாண்டி.."

"ஃபாரினில் படித்தவர்ன்னாங்களே.."

"ஏன்.. அது உனக்குத் தெரியாதா..?"

"இப்படி பட்டிக்காடாய் இருக்கிறீங்களே.."

"பொண்டாட்டி விஷயத்தில் நான் பட்டிக்காடுதான்.. ஆமாம், இது என்ன கையில்..?"

"பால் செம்பு.."

வினய் கடகடவென்று சிரித்தான்.. சந்தியா விழிகளில் வினவினாள்.. வினய் அவளை அணைத்துக் காதோரம் தான் நினைத்ததை சொன்னான்.. அவள் முகம் சிவந்துவிட்டாள்..

"நீ மட்டும் படித்தவள் போலில்லாமல் இப்படி வெட்கப்படலாமா..?"

"வெட்கம் பெண்களின் பொதுவான குணம்.."

"ஆள்வதும் ஆண்களின் இயல்பான குணம்தாண்டி.."

வினய், சந்தியாவின் கையிலிருந்த பால் சொம்பை வாங்கிப் பக்கத்தில் வைத்துவிட்டு.. அவளைத் தன்னருகே

இழுத்துக் கொண்டான்.. சந்தியா கிளர்ந்து அவன் மார்பில் முகம் புதைத்து சரிய.. அவள் மேல் பரவினான்.. ஆண்டுக்கணக்கில் காத்துக் கிடந்த காதல் வேட்கை.. ஆவலுடன் தன் பசியைத் தீர்த்துக் கொண்டது..

எத்தனையோ பேச நினைத்தவர்கள்.. பேச்சை மறந்து கலந்தனர்.. அந்த வினாடிகளில் கரைந்தனர்.. அந்த இரவு முடிந்து விடிந்தபோது.. கட்டிலின் அருகேயிருந்த பழங்களும், பாலும் காணாமல் போயிருந்தன..

மறுவீட்டு விருந்திற்குச் செல்லத் தயாராகி நின்ற மனைவியின் பின்னால் வந்து கட்டிக்கொண்டு, அவளது கூந்தலில் இருந்த மலர்ச்சரத்தின் வாசம் பிடித்தான் வினய்..

"விடுங்கள் வினய்.."

அவன் கைகளில் விருப்பத்துடன் இழைந்தபடி பொய்யாய் முணுமுணுத்தாள் சந்தியா.. அந்தப் பொய்மையை அடையாளம் கண்டு கொண்ட ஆண்மை கர்வத்துடன் அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டது..

"விடவா உனக்குத் தாலி கட்டியிருக்கிறேன்..?"

போதையுடன் சொல்லியபடி அவளது கழுத்து வளைவில் இதழ் பதித்தான் வினய்.. சந்தியா கிறங்கினாள்.. கண்மூடி அவன் புறம் திரும்பி அவனது கழுத்தை தன் கரத்தால் வளைத்துக் கொண்டாள்..

வினய் அவளது நெற்றியில் இதழ் பதித்தான்.. சந்தியாவின் மூடிய இமைகள் அவனை வாவென்று அழைக்கவும், அவளது இமைகளின் மீது முத்தமிட்டான்.. லேசாக திருப்தியுடன் புன்னகைத்த இதழ்களின் மீது இதழ் பதித்து தன் கண்களை மூடிக்கொண்டான்..

எத்தனை நிமிடங்கள் என்று அறியாதவர்களாய்.. அவர்கள் கட்டிக் கொண்டு நின்றபோது.. அறையின் அழைப்புமணி ஒலித்தது.. அவசரமாய் விலகி நின்றாள் சந்தியா.. பார்வையால் அவளை அதட்டினான் வினய்..

"கதவுதான் மூடியிருக்கே.. ஏன் இந்த அவசரம்..?"

"ச்ச்.. காலிங்பெல் அடிக்குதே.."

"அடித்தால் அடித்துவிட்டுப் போகட்டும்.. அதற்கேன் பதட்டப்படுகிறாய்.. கிட்டே வா.."

"வேண்டாம் வினய்.."

"சந்தியா.. வருகிறாயா இல்லையா.."

வினய் அவளை மீண்டும் அணைத்துக் கொண்டான்.. அவனது கரங்கள் அவளைச் சுற்றிக்கொடி போல் படரும்போது.. அழைப்புமணி நிற்காமல் ஒலிக்கத் ஆரம்பித்தது.. எரிச்சலுடன் மனைவிக்கு அவசர முத்தம் கொடுத்துவிட்டு கதவைத் திறந்தான்.. அவனது தங்கை சித்ராங்கி முறைத்துக் கொண்டு நின்றிருந்தாள்..

"என்ன சித்ரா..?"

"எவ்வளவு நேரம்தான் பெல்லடிப்பது..? கதவைத் திறக்காமல் என்ன செய்து கொண்டிருந்த..?"

வினய்யின் முகம் கறுக்க.. அறைக்குள் நின்றிருந்த சந்தியாவின் முகம் அருவருப்பில் சுளித்தது..

'எவ்வளவு அநாகரிகமான கேள்வி..! ச்சே..! இவளும் ஒரு பெண்ணா..?'

கேள்வி கேட்ட சித்ராங்கி.. அவர்களின் படுக்கையறைக்குள் பிரவேசித்ததும் இல்லாமல்.. முகம் சிவக்க நின்றிருந்த சந்தியாவை ஆராய்ச்சியுடன் மேலும்.. கீழும் பார்த்தாள்..

சந்தியா உடல் கூச வினய்யை ஏறிட்டுப் பார்த்தாள்.. அவன் பல்லை கடித்தபடி தங்கையின் முகம் பார்த்தான்..

"உனக்கு மனசாட்சி என்பதே இல்லையா அண்ணா..?"

சித்ராங்கி தமையனின் கோபத்தை சட்டை செய்யாமல் வினவினாள்.. வினய்யின் முகம் இப்போது அதிகமாய் கருத்தது..

சந்தியாவிற்கு அவளது கேள்வியின் அர்த்தம் புரியாமல் இல்லை.. அவள் சட்டென்று உடை மாற்றும் அறைக்குள் போய்விட்டாள்.. பொங்கியெழுந்த அவளுடைய உணர்வுகள் அடங்கிப்போயிருந்தன..

"மேனர்ஸ் இல்லாமல் நீ நடந்து கொள்வதை உணர்கிறாயா இல்லையா.." வினய் அடிக்குரலில் சீறினான்..

"மனசாட்சி இல்லாமல் நீ அவளுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கலாம்.. மேனர்ஸ் இல்லாமல் நான் நடந்துகொள்ள மட்டும் கூடாது.. இது என்ன அநியாயம் அண்ணா..?"

"சித்ரா.. மனசாட்சி அது இதுன்னு ஏன் பேசுகிற..? அவள் என் மனைவி.."

"காதலியாக இருந்தவளை.. ஏன் மனைவியாக்கிக் கொண்டாய் என்பதை நீ மறந்துவிட்டாயா..?"

"அதைப் பேச.. இது நேரமல்ல.."

"பின் எதுதான் நல்ல நேரம்..?"

"கொஞ்சம் பொறுமையாக இரு சித்ரா.."

"எதுவரை பொறுமையாக இருக்கச் சொல்கிற..?"

"இப்போதுதான் எங்களுக்கு கல்யாணம் ஆகியிருக் கிறது.. கொஞ்சநாள் போகட்டும்.. அவளிடம் நான் பேசுகிறேன்.."

"கொஞ்ச நாள் என்றால்.. எத்தனை நாள்கள் அண்ணா.. நீ இரண்டு குழந்தைகளைப் பெற்று பெயர் வைத்து முடிக்கும்வரை என்னைக் காத்திருக்கச் சொல்கிறாயா..?"

"சித்ரா.." பொறுமையிழந்தவனாக கோபம் காட்டினான் வினய்..

"ஒரு அண்ணனிடம் தங்கை பேசுவது போல் பேசிப்பழகு.."

"தங்கை வீட்டில் கல்யாணமாகாமல் தவித்துக் கொண்டிருக்கும்போது தான் மட்டும் காதலித்தவளையே கல்யாணம் பண்ணிக் கொண்டு கொஞ்சிக்குலாவும் அண்ணனிடம் இப்படித்தான் என்னால் பேசமுடியும்.."

"உன்னைத் திருத்த முடியாது.."

"முடியாததை ஏன் முயற்சி பண்ணுகிறாய்.. விட்டு விடு.."

"இப்போது என்னதான் வேண்டும் உனக்கு..?"

"எனக்கு எது வேண்டும்ன்னு உனக்குத் தெரியாதா..?"

"இதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்காமல் இப்போது எதற்காக இங்கே வந்தாய் என்பதை மட்டும் சொல்லு.."

"நாம் கிளம்ப வேண்டும்.. நேரமாகி விட்டது.."

"நாமா..?"

"ஆமாம்.. நாம்தான்.. நான்.. நீ.. உன் மனைவி.."

'ஏன் அண்ணியென்று சொல்ல மாட்டாளாமா..' சந்தியா கோபத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டாள்..

"எங்கே..?"

"மறுவீட்டு விருந்திற்குத்தான்.."

"அதற்கு நீ எதற்கு..?"

'வேறு எதற்கு.. என் நிம்மதியைக் குலைக்கத்தான்..' சந்தியா மனதிற்குள் பொருமிக்கொண்டாள்..

"நான் இல்லாமல்.. நீ மட்டும் உன் மாமனார் வீட்டில் போய்.. உன் மனைவியுடன் கொட்டம் அடிக்கலாமென்று நினைத்தாயா..? அதுதான் நடக்காது.."

"சித்ரா.. என் மனைவி.. உனக்கு அண்ணி.."

"தெரியும்.. தெரியும்.."

"தெரிந்துமா அண்ணின்னு கூப்பிடாமல் அழிச்சாட்டியம் பண்ணுகிறாய்..?"

"இதோபார் அண்ணா.. உன் மனைவியை எப்போது அண்ணின்னு கூப்பிட வேண்டும்ன்னு எனக்குத் தெரியும்.. நீ எனக்கு ஆர்டர் போடாதே.."

வினய் வேகமாய் மூச்சுக்களை இழுத்துவிட்டுத் தன் கோபத்தை சமனப்படுத்திக் கொண்டான்..

"ஓகே.. சித்ரா.. நீ போ.. நாங்கள் வருகிறோம்.."

"ஏன் இதுவரை கொஞ்சியது போதாதா..? இனியும் தொடர வேண்டுமா..?"

"ஷட் அப் அண்ட் கெட் லாஸ்ட் சித்ரா.. திஸ் இஸ் தி லிமிட்.."

சித்ராங்கி கோபத்துடன் அறையை விட்டு வெளியேறினாள்.. அதைவிடக் கோபத்துடன் அறைக் கதவை ஓங்கி அடைத்தான் வினய்.. அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு சோபாவில் அமர்ந்து விட்டான்..

கணவனைச் சமாதானப்படுத்த சந்தியா உடை மாற்றும் அறையை விட்டு வெளியே வரவில்லை.. சற்று நேரம் பொறுத்துப் பார்த்த வினய்.. அவளிடம் எழுந்து சென்றான்..

டிரஸ்ஸிங் டேபிளின் கண்ணாடிக்கு முன்னால் இருந்த சேரில்.. தலைமேல் கைவைத்துக் கொண்டு சந்தியா உட்கார்ந்திருந்தாள்.. வினய்யின் மனதில் குற்ற உணர்வு எழுந்தது..

"ஐ ஆம் ஸாரி சந்தியா.."

"நீங்கள் என்ன தவறு செய்தீங்க..? நீங்க ஏன் மன்னிப்பு கேட்கனும்..?"

"அவளுக்காக.. அவள் பேசியதற்காக.. நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.."

"அப்படியானால் அவளும் நீங்களும் ஒன்று.. நானும் நீங்களும் வேறு வேறா..?"

"சந்தியா.."

வினய் அவளின் தோளைத் தொட்டான்.. சந்தியா.. அவனது இடுப்பைச் சுற்றி வளைத்துக்கொண்டு, அவன் மேல் தலை சாய்த்தாள்.. அவள் முடி கோதிவிட்ட வினய் மென்மையாய்க் கூறினான்..

"இல்லை சந்தியா.. நீயும் நானும் வேறுவேறில்லை.. நானே நீ.. நீயே நான்.. அவள் என் தங்கை சந்தியா..?"

"அதற்காக..? உங்களுக்கும் எனக்கும் இடையில் அவள் வரலாமா..? வர நீங்கள் விடலாமா..?"

"அவள் மனம் உனக்குத் தெரியும்தானே சந்தியா..?"

வினய்யின் கேள்வியில் சந்தியா மௌனமானாள்.. அவளது மனக் கண்ணில்.. கள்ளம் கபடு இல்லாத பூரண நிலவு போன்ற பூர்ணிமாவின் முகம் தெரிந்தது..

31

வினய், சந்தியாவின் தோளைத் தொட்டு எழுப்பி.. அவளது விழியோடு விழி பார்த்தான்..

"அவளும் பெண்தானே சந்தியா.. ஒரு அண்ணனாய் அவளுடைய விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது என் கடமையில்லையா.. என் மனைவியாய் உனக்கும் இதில் பங்கில்லையா.."

சந்தியா தன் தோள் மேலிருந்த வினய்யின் கரங்களை விலக்கினாள்.. வினய்யின் புருவங்கள் முடிச்சிட்டன..

"ஏன் சந்தியா..?"

"நாம் வேறு பேச்சுப் பேசலாம் வினய்.."

"அவளை என்னால் புறக்கணிக்க முடியாது சந்தியா..?"

"நான் புறக்கணிக்கச் சொல்லவில்லையே வினய்.. உங்கள் தங்கைக்கு நீங்கள் அண்ணாக இருப்பதில் எனக்கும் சந்தோஷம்தான்.. நான் அதை தடுக்க மாட்டேன்.. ஆனால், என்னை உங்கள் கடமையில் இழுத்து விடாதீங்க.."

"நீ என் மனைவி சந்தியா.."

"எதனால் இந்த பந்தம் எனக்குக் கிடைத்தது என்பதை நான் நன்றாக அறிவேன் வினய்.. என் காதலுக்கு கிடைத்த பரிசில்லை இந்தக் கல்யாணம். என் பெயரில் உள்ள தொழில்களுக்கு கிடைத்த பரிசுதான் இந்தக் கல்யாணம். கடைசி வரை நீங்கள் என் காதலை மதிக்கவில்லை வினய்.."

"சந்தியா.. ப்ளீஸ்.. அப்படியெல்லாம் சொல்லாதே.. என் முகத்தைப் பார்.. யூ ஆர் மை லவ் டியர்.."

"போதும் வினய்.. என் பெயரில் இருக்கும் தொழில்களை உங்கள் பெயருக்கு மாற்றித்தரச் சொல்கிறீங்களா.. உடனே மாற்றித் தருகிறேன்.. என் வைர நகைகளை உங்கள் தங்கைக்குக் கொடுக்கச் சொல்கிறீங்களா.. காதில் உள்ள திருகாணி முதற்கொண்டு கழட்டிக் கொடுத்துவிடுகிறேன்.. எனக்கு நீங்கள் கட்டியிருக்கும் இந்த தாலி மட்டும் போதும் வினய்.. இதைவிட நான் வேறு என்ன தர வேண்டும்..? என் உயிரைத் தரவா..?"

"ஏய் என்னடி இது அச்சாணியமாய் பேசுகிற..? நேற்று கல்யாணம் பண்ணிக் கொண்டவள் பேசும் பேச்சா இது..?"

"இது ஊருக்காக நடந்த கல்யாணம் வினய்.. மனதளவில் நான் என்றைக்கோ உங்களின் மனைவியாகி விட்டேன்.. மனதால் உங்களுடன் தான் வாழ்ந்து கொண்டிருந்தேன்.. இது உங்களுக்கும் தெரியுமே வினய்."

"ஐ ஆம் ஸாரி கண்ணம்மா.. நாம் வேறு பேசலாம்.."

"இப்போது மட்டும் ஏன் வேறு பேசச் சொல்கிறீங்க வினய்..? நாம் பேச வந்ததைப் பேசலாம்.. நான் உங்களுக்காகத்தான் வாழ்ந்தேன்.. ஆனால் நீங்கள்..? உங்கள் குடும்பத்திற்காக

வாழ்ந்தீங்க.. அவர்கள் சம்மதம் இல்லாவிட்டால் நிச்சயம் என் கழுத்தில் தாலியைக் கட்டியிருக்க மாட்டீங்க.."

"வேறு ஒருத்தியின் கழுத்திலும் நான் தாலியைக் கட்டியிருக்க மாட்டேன்.."

சந்தியா மௌனித்தாள்.. வினய் அவளைத் தன்னோடு அணைத்துக் கொண்டான்.. மெல்ல அவள் சமாதானமாகி இயல்பு நிலைக்குத் திரும்பினாள்..

"என் கண்ணுக்குட்டிக்கு கோபம் போய்விட்டதா..? உன்னோடு மட்டும்தான் என்னால் வாழ முடியும்.. என்னைப் புரிந்துகொள் சந்தியா.."

"ம்ம்..."

"ஐ லவ் யூ டி.."

"ம்ம்..."

"சந்தியா.."

"ம்ம்..."

வினய்.. அவளைத் தழுவிக் கொண்டான்.. அவனது தழுவலில் இறுக்கம் தெரிந்தது.. தாபம் தெரிந்தது.. சந்தியா இசைந்து கொடுத்தாள்..

சித்ராங்கி சொல்லியதே உண்மையானது.. அதுவரை கொஞ்சியது அவர்களுக்குப் போதவில்லை.. ஆவலுடன் கலந்து நின்றார்கள்.. சிறுகதையாக ஆரம்பித்து, தொடர்கதையாய் முடிந்தது..

வெகுநேரம் கழித்து அறையை விட்டு வெளியே வந்தவர்களைப் பார்த்த சித்ராங்கியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது..

சந்தியாவின் தாய்மாமா தணிகாசலம் மருமகளை அன்புடன் பார்த்தார்..

"கிளம்பலாமா சந்தியா..?"

சந்தியா சம்மதமாய் தலையை ஆட்டினாள்..

"சுந்தரி கிளம்பலாம்.."

மனைவியிடம் திரும்பிக் கூறினார் தணிகாசலம்.. கோகுல்நாத்தின் மனைவி சசிரேகா கணவனின் முகத்தை ஜாடையாக பார்த்தாள்.. கோகுல்நாத் மகனை கறார் குரலில் அழைத்தார்..

"வினய்.."

"அப்பா.."

"இன்றைக்கு மதியம் நீ ஒரு பினினஸ் லன்ச்சை அட்டெண்ட் பண்ண வேண்டியிருக்கிறது வினய்.."

சுந்தரி கணவனின் முகத்தைப் பார்த்தாள்.. தணிகாசலம் அவசரமாய் குறுக்கிட்டுப் பேசினார்..

"என்ன நீங்க.. இப்போது போய் அவரை பிஸினஸ் லன்ச்சை அட்டெண்ட் பண்ணச் சொல்றீங்க..?"

"ஏன்.. இப்போது நேரம் நன்றாக இல்லையா.."

"புரியாமல்தான் பேசுகிறீர்களா.. இல்லை புரியாதது போல் நடிக்கிறீங்களான்னு எனக்குப் புரியவில்லை.."

"புரியாத புதிராய் நாங்கள் இல்லையே.."

"அது சரி.. மறுவீட்டு விருந்திற்கு கிளம்பிக் கொண்டிருக்கும் புது மாப்பிள்ளையைக் கூப்பிட்டு பிஸினஸ் லன்ச்சை அட்டெண்ட் பண்ணச் சொல்கிறீங்களே.. ஏன்..? அந்த அதி முக்கியமான பிஸினஸ் லன்ச்சை நீங்கள் அட்டெண்ட் பண்ணினால் ஆகாதா.."

கோகுல்நாத் அலட்சியமாய் உதட்டைச் சுழித்து ஆணவமாய் தணிகாலசத்தை ஓர் பார்வை பார்த்தார்.. சந்தியாவிற்குள் கோபம் குமிழிட்டது..

இது ஒரு கயிறு இழுக்கும் போராட்டம்.. புதிதாய் திருமணமாகி புகுந்த வீட்டில் அடியெடுத்து வைக்கும் எல்லாப் பெண்களும் இந்த கயிறு இழுக்கும் போராட்டத்தைச் சந்தித்துதான் ஆகவேண்டும்.. புதிதாய் திருமணமாகி மனைவியென்று ஒருத்தியின் கையைப் பிடித்து தன் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு வரும் ஆண் கயிறாக மாறித்தான் ஆகவேண்டும்..

இவன் எங்கள் வீட்டுப் பிள்ளை.. இவன் மேல் எங்களுக்குத்தான் உரிமையும், பாசமும் அதிகம் என்று புகுந்த வீட்டார் உரிமை கொடி பிடிப்பார்கள்..

இவன் என் கணவன் இவன் மேல் எனக்கில்லாத உரிமையும் நேசமும் வேறு எவருக்குமே இல்லையென்ற கர்வமும் கோபமும் புது மனைவிக்கு உண்டாகும்..

இதில் உரலுக்கு ஒரு பக்கம் இடி.. மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடியென்று மாட்டிக்கொண்டு விழிப்பது அந்த மாப்பிள்ளை மகராஜன்தான்..

"மிஸ்டர் தணிகாசலம்.. மறு வீட்டு விருந்து உங்களுக்கு வேண்டுமானால் முக்கியமானதாக இருக்கலாம்.. எங்கள் வீட்டில் அதைவிட முக்கியமானவை வேறு இருக்கின்றன.. எங்களுக்கு பிஸினஸ்தான் முக்கியம்.."

"ஓஹோ.. பாவம் நிறையத் தொழில்களை தலையில் சுமந்து கொண்டிருக்கிறீர்கள் போல.. இழுத்து பார்க்க இரண்டு பேர் தேவைதான்.. உங்கள் ஒரு ஆளால் அது முடியாத காரியம்தான்.."

தன் அக்கா மகள் காதலித்து விட்டாளென்ற ஒரே காரணத்திற்காக கோகுல்நாத்தின் மகனுக்கு பெண்ணைக் கொடுத்திருந்த தணிகாசலம் இடக்காகப் பேசினார்..

அவருக்கு நிறையத் தொழில்கள் இருந்தன.. காரைக்குடியில் பெயர்பெற்ற வியாபாரி அவர்.. எந்தத் தொழிலிலும் பங்குதாரர் இல்லை.. அவரிடம் போய் ராமலிங்கம் பாவம் பார்த்து பங்குதாரர் ஆக்கியிருந்த

கோகுல்நாத் பீலா விட்டால்.. அவர் எப்படி கேட்டுக் கொண்டிருப்பார்..?

கோகுல்நாத்தின் வரலாறு அறிந்த தணிகாசலம் அவரை வார்த்தைகளால் அடித்தார்.. ஆனால், அதற்கெல்லாம் அசந்துபோகிற ஆள் கோகுல்நாத் இல்லை.. அவர் அதை கண்டுகொள்ளவே இல்லை..

"மிஸ்டர் தணிகாசலம்.. எங்கள் தொழில்களைப் பார்க்க இரண்டு ஆண்கள் எதற்கு..? என் மகன் ஒருவனே போதுமே.. தாலி கட்டும் வேளையில் எழுந்து வான்னு நான் சொல்லியிருந்தாலும், உடனே எழுந்து வந்துவிடும் மகன் என் மகன்.."

சந்தியாவின் விழிகள் வினய்யை சுட்டெரித்தன.. பாவம், அவன் இருதலைக்கொள்ளியிடம் மாட்டிக் கொண்டது எறும்பு போல் நெளிந்தான்..

சந்தியா எழுந்து நின்றாள்.. கணவனின் முகம் பார்க்காமல் தாய்மாமனின் முகம் பார்த்தாள்..

"சரி மாமா.. நாம் போகலாம்.. அவர் வேலையை முடித்துக்கொண்டு எப்போது வருவாரோ.. அப்போது அங்கே வரட்டும்.."

கோகுல்நாத்தின் ஆட்டத்தைக் கண்டு கொதித்துப் போயிருந்த சுந்தரியும் உடனே எழுந்துகொண்டாள்..

"ஆமாங்க.. சந்தியா சொல்வதுதான் சரி.. அவர் வரும்போது வரட்டும்.. நாம் பெண்ணை அழைத்துக் கொண்டு போகலாம்.."

இதுவும் ஓர் மறைமுகமான எச்சரிக்கைதான்.. நான் தாலி கட்ட விட்டதால் தான் என் மகன் உங்கள் வீட்டுப் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டியிருக்கிறான் என்ற வார்த்தைக்கு பதில் வார்த்தை இது..

நேற்றுதான் திருமணம் முடிந்திருக்கிறது.. இன்று பெண்ணை அழைத்துக் கொண்டு போய்விட்டால்.. மாப்பிள்ளை வீட்டாரின் மரியாதை என்ன ஆவது..?

சசிரேகா மீண்டும் கணவனை குறிப்பாகப் பார்த்தாள்.. கோகுல்நாத் சுதாரித்தார்.. அதைக் கண்ட சுந்தரி கணவரின் காதுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தாள்..

"முடுக்கிவிடுவதெல்லாம் இவரின் பெண்டாட்டி தான்.. வாயைத் திறக்காமல் கண்களாலேயே புருஷனைக் கண்ட்ரோல் பண்ணிக்கொண்டு இருக்கிறாள் மகராசி.."

"விடு சுந்தரி.. இது எல்லார் வீட்டிலேயும் நடக்கிற கதைதானே.." தணிகாசலம் மனைவியைப் போலவே கிண்டலாக முணுமுணுத்தார்.. இப்போது பார்வையால் எரிப்பது சுந்தரியின் முறையானது..

"சரிடா வினய்.. உன் மனைவியின் தாய்மாமன் இவ்வளவு தூரம் கெஞ்சிக் கேட்டுக் கொள்வதால் நான் அந்த பிஸினஸ் மீட்டிங்கிற்கு போகிறேன்.. நீ மறுவீட்டு விருந்திற்குப் போய்விட்டு வா.."

கோகுல்நாத் கெத்தை விடாமல் பேச.. தணிகாசலம் அவரை நேரடியாகப் பார்த்தார்.. அவரது விழிகள் கேட்டன..

'நான் எப்போதுய்யா உன்னிடம் கெஞ்சிக் கேட்டேன்..?'

கோகுல்நாத், தணிகாலசத்தின் பார்வையைக் கண்டுகொண்டதாகவே காண்பித்துக் கொள்ளவில்லை..

'சரியான எம்டன்.. இவனுக்குப் போய் மருமகளாக என் அக்கா மகள் வந்து மாட்டியிருக்கிறாளே.. குடும்பமே யாரையும் வெற்றிலைப் பாக்கைப் போல் மடித்து வாயில போட்டுத் துப்பிவிடும் போல இருக்கிறதே.. ம்ஹும்.. இந்த வீட்டில் மாப்பிள்ளைப் பையன் தான் கொஞ்சம் மனசாட்சியோடு இருக்கிறான்.. அவன் ஒருவனின் துணையோடு இவர்கள் மத்தியில் சந்தியா வாழ்ந்து ஜெயிக்க வேண்டும்..'

தணிகாசலத்தின் பார்வையைக் கண்டு சந்தியா யோசனையானாள்..

சந்தியா சுயமரியாதை அதிகம் கொண்டவள்.. பரம்பரைப் பணக்காரி..! அதற்கான கர்வமும் சிறிதளவு அவளிடம் இருக்கும்.. வினய்யை மனதார காதலித்து விட்டாள்.. அவனைக் கணவனாக அடைய கோகுல்நாத் தடை விதித்திருந்ததால் ஏற்கெனவே கொதித்துப் போயிருந்தாள்.. ஆனாலும் முறைப்படி அவர் வந்து பெண் கேட்காவிட்டால் சந்தானகிருஷ்ணன் தன்னை வினய்க்கு மணம் முடித்து வைக்க மாட்டான் என்பதால் கண்ணீரோடு போராடிக் கொண்டிருந்தாள்..

ஒரு வழியாக பூர்ணிமா தலையிட்டாள்.. சந்தியாவின் திருமணமும் முடிந்துவிட்டது.. மனதில் கோபத்தோடுதான் அந்த வீட்டின் மருமகளாக நுழைந்திருந்தாள் சந்தியா.. அதை அறியாத கோகுல்நாத் மருமகளை மகன் மூலம் ஆட்டுவிக்கும் திட்டத்தோடு இருந்தார்..

அதன் முதல் முயற்சிதான் மறுவீட்டு விருந்திற்கு வினய்யை அனுப்ப மறுத்தது.. ஆனால், சந்தியா அந்த முயற்சியை.. 'நீ வந்தால் வா.. வராவிட்டால் போ.. நான் என் பிறந்த வீட்டிற்கு கிளம்புகிறேன்..' என்ற நிலைப் பாட்டை எடுத்து முறியடித்தாள்..

"சித்ரா.. உன் பெட்டி எங்கே.."

கோகுல்நாத் மகளின் வருகையை உணர்த்தவும் சுந்தரிக்கு தூக்கிவாரிப் போட்டது..

"ஏங்க.. யாராவது வினையை இழுத்துக்கிட்டு விருந்துக்குப் போவாங்களா.. இந்தப் பெண்ணை பக்கத்தில் வைத்துக் கொண்டு ஒரு நிமிஷம் நாம் உட்கார்ந்திருக்க முடியாது.. இந்த லட்சணத்தில் இதுவும்.. நம்ம கூட கிளம்புதாமே.."

கணவனின் காதை அவசரமாய் கடித்தாள் சுந்தரி.. தணிகாலசத்திற்கும் வயிறு கலங்கித்தான் இருந்தது..

"பொறுடி சுந்தரி.. நான் இதை நிறுத்த முடியுமான்னு பார்க்கிறேன்.. நீ வேற பீதியைக் கிளப்பாதே.."

தணிகாசலம் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.. கோகுல்நாத்தைப் பார்த்தார்..

"சித்ரா ஏதும் வெளியூர் போகிறதா..? பெட்டி இவ்வளவு பெரியதாக இருக்கிறதே.."

கணவனின் நையாண்டியை மனதார மனதிற்குள் மெச்சிக் கொண்டாள் சுந்தரி.. கோகுல்நாத்தின் முகம் மாறியது..

"இல்லை தணிகாசலம்.. என் பெண் அவளுடைய அண்ணனுடன் கிளம்பிக் கொண்டிருக்கிறாள்.."

இதுவும் ஓர் பதிலடிதான்.. 'என் மகன் சந்தியாவின் கணவன் அல்ல.. உங்கள் வீட்டு மாப்பிள்ளையும் அல்ல.. என் மகளுக்கு அண்ணன்..' என்பது ஓர் மறைமுகமான எச்சரிக்கை..

"அப்படியா..? அப்போ சந்தியாவின் கணவர் எங்களுடன் மறுவீட்டு விருந்திற்கு வரவில்லையா..? அவர் பிஸினஸ் லன்ச்சை விட்டுவிட்டு தங்கையுடன் வெளியூருக்குப் போகிறாரா..? அப்போ சரி.. வாம்மா சந்தியா, நாம் கிளம்பலாம்.."

விடாக்கண்டனும் கொடாக்கண்டனும் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்த சந்தியாவின் இதழோரம் புன்னகை அரும்பியது.. சுந்தரிக்கு அந்த வயதிலும் கணவனின் மேல் கரைகாணாத காதல் பொங்கி வழிந்தது..

"மிஸ்டர் தணிகாசலம்.."

"சொல்லுங்கள் கோகுல்நாத்.."

"என் மகள் வெளியூருக்குப் போகவில்லை.."

"அப்படியா..? வேறு எங்கே போகிறது..?"

"மறுவீட்டு விருந்திற்கு வருகிறாள்.."

"மறுவீட்டு விருந்து மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும்தானே..?"

"மாப்பிள்ளையின் குடும்பத்தார் சார்பாக அவள் மட்டும் வருகிறாள்.."

"இது என்ன புது வழக்கம்..?"

"எங்கள் வீட்டில் இதுதான் வழக்கம்.."

"அதற்காக அடுத்தவர் வீட்டில் வயதுப் பெண் நாள் கணக்கில் போய் தங்கலாமா.."

"அது அடுத்த வீடு இல்லையே.. என் மகனின் அண்ணியின் வீடுதானே.. இன்னும் சொல்லப் போனால் அது அவள் வீடு போல.."

'அதுதானே பார்த்தேன்.. பூனைக்குட்டி வெளியில் வந்துவிட்டது.. நீ இன்னும் உன் நினைப்பை விட வில்லையா..?'

தணிகாசலம், கோகுல்நாத்தை முறைத்தபடி சந்தியாவை பார்த்தார்..

"என்னவோ மாமா.. என் கணவரின் தங்கைக்கு இப்போதுதான் நான் அவளுக்கு அண்ணி முறையாக வேண்டும்கிற உறவு தெரிந்திருக்கிறது போல.. வருகிறவர்களை நாம் என்ன செய்ய முடியும்..? விடுங்கள்.. அண்ணன் வீட்டில் ஆயிரம் ரூம்கள் இருக்கின்றன.. அதில் என் கணவரின் தங்கைக்கு ஒரு ரூம் இல்லாமலா போய்விடும்..?"

சந்தியாவின் வார்த்தைகளில் இருந்த உதாசீனத்தைக் கண்ட சித்ராங்கி, வினய்யை முறைத்தாள்.. அவனுக்குமே சந்தியா ஏன் இப்படிப் பேசுகிறாள் என்பது பிடிபடவில்லை..

எது எப்படியாக இருந்தாலும்.. இப்போது மனைவியை அதட்டாமல் இருக்க அவனால் முடிய வில்லை.. எனவே.. "சந்தியா வாட் இஸ் திஸ்..? நீ என்ன பேசுகிறாய் என்பதை புரிந்துதான் பேசுகிறாயா..?" என்று அதட்டினான்..

"ஏன் புரியாமல் பேசுகிறேன்னு நினைக்கிறீங்களா..? அதெல்லாம் நன்றாகப் புரிந்துதான் பேசுகிறேன்.."

சந்தியாவின் விழிகள் சித்ராங்கியை எரித்தன.. அவள் மனதில் கோபம் கொந்தளித்துக் கொண்டிருந்தது..

"சித்ராவும் நம்முடன் வருகிறாள்ன்னு நான் நம் பெட்ரூமிலேயே உன்னிடம் சொன்னேனா இல்லையா..?

இப்போது அது தெரியாதது போல் பேசினால் என்ன அர்த்தம்..?"

"எனக்கு அது மட்டும் நினைவில் இல்லை வினய்.. உங்கள் தங்கை வார்த்தைக்கு வார்த்தை என்னை உங்களின் மனைவின்னு மட்டும்தான் சொன்னாள்.. ஒருமுறை கூட அண்ணின்னு சொல்லலை.. அதுவும் நினைவில் இருக்கிறது.."

"சந்தியா.. அவள் சிறு பெண்.."

"என்னைவிட சிறு பெண் இல்லையே.. என் வயது தானே அவளுக்கும்..? கல்யாணமாகிவிட்டதால் நான் பெரியவள்.. அவள் சிறியவள்ன்னு ஆகிவிட்டதா..?"

"சந்தியா..! இது இப்போது அவ்வளவு முக்கியமான விஷயமா..?"

"இல்லைதான்.. அதே போல் நான் பேசிய வார்த்தைகளும் முக்கியமான விஷயம் இல்லைதானே..? அதற்கு ஏன் அதட்டுகிறீங்க..?"

"ஓகே.. சந்தியா.. இந்த டாபிக்கை இத்தோடு விட்டு விடலாம்.."

"நான் ஒன்றும் பிடித்துக்கொண்டு தொங்கலை.."

"இதுதான் பேச்சை விட்டுவிடும் லட்சணமா..?"

"வினய்.. நாம் மறுவீட்டு விருந்திற்கு போவது போல் எனக்குத் தோன்றவில்லை.."

"வேறு எப்படித் தோன்றுகிறது..?"

"வேண்டாம்.. எனக்குத் தோன்றுவதைச் சொன்னால் நமக்கு இன்னும் சண்டை வலுக்கும்.. இன்றைக்கு இவ்வளவு சண்டை போதும்.."

சந்தியா குனிந்து வினய்யின் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வெளியே விரைய.. தணிகாசலமும் சுந்தரியும் அவளைப் பின் பற்றினார்கள்..

பெற்றோருடனும் தங்கையுடனும் தனித்து விடப்பட்ட வினய் சங்கடமுற்றான்.. கோகுல்நாத் அவனை ஓர் குற்றவாளியைப் பார்ப்பது போல் பார்த்தார்..

ஒன்று மட்டும் அவருக்குத் தெளிவாகப் புரிந்தது.. சந்தியாவைத் தங்கள் வீட்டு மருமகளாக்கிக் கொண்டால் மகனை விட்டு அவளைக் கட்டுப்படுத்தலாம் என்ற

அவர் நினைவை தவிடுபொடியாக்கியிருந்தாள் சந்தியா.. இப்போது மகனைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வது என்பது இனியும் முடியுமா என்ற கவலை அவருக்குத் தோன்றி விட்டது..

34

"தாயம்மா.." பர்வதம்மாள் அழைத்தாள்..

"அத்தை..?" என்று பவ்யமாக வினவினாள் தாயம்மாள்..

"ஆரத்தி கரைக்கச் சொல்லிட்டயா..?"

"அப்போதே கரைக்கச் சொல்லிட்டேன் அத்தை..?"

"ஆரத்தி எடுக்கப் போவது யார்..?"

"ஏன்.. நம்ம பூர்ணிமா இருக்கிறாளே.."

"அதுதானே.. அதை நான் மறந்துவிட்டேனே.."

சிட்டுக்குருவியைப் போல் இங்கும் அங்கும் ஓடி.. சந்தியாவை வரவேற்பதற்கான ஆயத்தங்களில் ஈடு பட்டிருந்த பூர்ணிமாவைப் பரிவுடன் பார்த்தாள் பர்வதம்மாள்..

"என்ன அத்தை, அப்படிப் பார்க்கறீங்க..?" தாயம்மாள் ஆதுரமாய் வினவினாள்..

"இந்தப் பெண் இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்த வேளை ரொம்பவும் நல்லவேளை தாயம்மா.. நடக்காது என்று நாம

நினைத்த கல்யாணம் நடந்து விட்டதே.."

"ஆமாம் அத்தை.. மக்கள் மனுஷரிடம் இந்தப் பெண்ணுக்கு இருக்கும் பாசமும் அப்படித்தான்.. நமக்குன்னு சொன்னா உயிரைக்கூட விட்டுவிடுவாள்.."

"அப்படியா.. இந்தக் காலத்திலும் இப்படி ஒரு பெண்ணா..?"

தன் வழக்கப்படி முகவாயில் கைவைத்துக் கொண்டாள் பர்வதம்மாள்.. வாசலில் கார்கள் வந்து வரிசையாய் நிற்கும் சத்தம் கேட்டது..

"பூர்ணிமா.. ஆரத்தியை எடுத்துக் கொண்டு வா.. டேய், சந்தானம்..! தங்கச்சி வந்திட்டாள் பாரு.. தாயம்மா.. வா.. வாசலுக்குப் போகலாம்.."

பர்வதம்மாள் அனைவரையும் முடுக்கியபடி வாசலுக்கு விரைந்தாள்.. முதலில் வந்து நின்ற காரிலிருந்து தணிகாசலமும் சுந்தரியும் இறங்கினார்கள்..

"ஏண்டா.. பொண்ணும் மாப்பிள்ளையும் எங்கேடா..?"

"ஏன் எங்களைப் பார்த்தால் பொண்ணு மாப்பிளையா தெரியலையா..?"

பர்வதம்மாளின் கேள்விக்கு பதில் சொல்லியபடி தணிகாசலம், சுந்தரியைப் பார்த்துக் கண் சிமிட்டவும், அவளுக்கு நாணம் வந்துவிட்டது..

மாமியாரின் முன்னால் கணவரிடம் செல்லப்பேச்சுப் பேசுவதை தவிர்க்க விரும்பியவள்,

"அத்தை.. அவங்க அந்த காரில் வருகிறாங்க.." என்று கூறினாள்..

"ம்ம்..? ஏண்டா மகனே.. பேரன் பேத்தி எடுக்கிற வயசாச்சே.. இன்னும் புது மாப்பிள்ளை நினைவில் தான் இருக்கிறாயா..? பர்வதம்மாள் மகனைக் கிண்டல் செய்தபடி.." உள்ளே வந்த இரண்டாவது காரைப் பார்த்தாள்..

அதைத் திறந்துகொண்டு வினய்யும், சந்தியாவும் இறங்கினார்கள்.. பூர்ணிமா அவசரமாய் ஆரத்தி தட்டுடன் வந்தாள்..

"இரண்டு பேரும் சேர்ந்து நில்லுங்க.." என்று சுந்தரி கூறிக்கொண்டிருக்கும் போதே.. மூன்றாவது கார் உள்ளே நுழைந்தது..

பர்வதம்மாள் மூக்குக்கண்ணாடியைச் சரிசெய்து கொண்டு பார்த்தபோது.. கதவைத் திறந்து கொண்டு காரிலிருந்து வெகு ஸ்டைலாய் இறங்கினாள் சித்ராங்கி..

இறுக்கிப் பிடித்த ஜீன்ஸ்.. பனியன் போல இருந்த கையில்லாத டாப்ஸ்.. விரித்து விடப்பட்ட கூந்தல்.. கண்களில் அகலமான குளிர்க் கண்ணாடி.. காதுகளில் பெரிய வளையல்கள்.. உதடுகளில் சாயம் என்று ஓர் அரேபிய குதிரையின் வாளிப்போடு குதிகால் உயரச் செருப்புகள் தேய வந்து நின்றவளைப் பார்த்த பர்வதம்மாள் புருவங்கள் சுருங்கினாள்..

'இவ எங்கே.. இங்கே வந்தா..?'

அவளது விழிகள் மகனிடம் வினா எழுப்பின.. சுந்தரி மாமியாரின் காதோரம் முணுமுணுத்தாள்..

"இவளும்கூட வருவேன்னு அடம் பிடித்து ஒட்டிக் கிட்டாள் அத்தை.."

"அதுக்காக இவளைக் கையோடு அழைத்துக் கொண்டு வந்துவிடணுமா..? சந்தானகிருஷ்ணன் சும்மாவே வீட்டில் தங்கமாட்டான்.. இவள் வீட்டிலிருந்தால் வீட்டுப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டான்.."

"எனக்கும் அது தெரியும் அத்தை.. ஆனால், சந்தியாவே தடுத்துப் பார்த்தும் இவளை தடுக்க முடியலையே.."

"அவளும்.. அவ போட்டிருக்கிற உடுப்பும்.. குடும்பப் பொம்பளை மாதிரியா இருக்கிறா..? இவள் இந்த வீட்டிற்குள் வருவது நல்லதற்கில்லை சுந்தரி.. அவ்வளவுதான் நான் சொல்வேன்.."

மருமகளோடு வாக்குவாதம் செய்து கொண்டிருந்த பர்வதம்மாள் பேத்திக்கும் அவளுடைய கணவனுக்கும் நடுவில் அந்த சித்ராங்கி வந்து நின்றதைக் கவனிக்க வில்லை.. ஆனால்.. ஆரத்தி எடுக்கப்போன பூர்ணிமா பார்த்துவிட்டாள்.. ஆரத்தி எடுக்காமல் தயங்கி நின்றாள்..

"பூர்ணிமா.. ஏன் ஆரத்தி எடுக்காமல் நிற்கிறாய்..?" என்று தாயம்மாள் வினவியதும்.. பர்வதம்மாள் திரும்பிப் பார்த்தாள்..

"இது என்னடி கூத்தா இருக்கு..? இவள் ஏன் பொண்ணு மாப்பிள்ளைக்கு நடுவில் வந்து நிற்கிறா..? சுந்தரி.. அந்தப் பெண்ணை தள்ளி நிற்கச் சொல்லு.." என்று மாமியார் சொன்னதும்.. தான் பத்தடி தள்ளி நின்றாள் சுந்தரி..

"என்ன சுந்தரி..? ஏன் இப்படி ஓடுகிற..?"

"அத்தை.. அந்தப் பெண்கிட்டப் பேச என்னால் முடியாது.."

"இதுதானா விஷயம்..? இருந்திருந்து இவளுக்குப் போய் பயப்படுவாயா..? என்னை யாருன்னு நினைச்சே.. கைலாசத்தின் மகள்.. வேதாசலத்தின் பொண்டாட்டி.. தணிகாசலத்தின் அம்மா பர்வதமாக்கும்.. இவளுடைய ஆட்டமெல்லாம் என்னிடம் செல்லாது.."

பர்வதம்மாள் வேகமாய் சந்தியாவின் அருகில் போனாள்.. சித்ராங்கியை முறைத்துப் பார்த்தாள்..

"ஏம்ப்பா வினய்.. இந்தப் பெண் உன் தங்கை தானே..?"

"ஆமாம் பாட்டி.."

"உன் தங்கைக்கு எதுவும் தானாகவும் தெரிய மாட்டேன் என்கிறது.. சொன்னாலும் கேட்டுக்கொள்கிற ரகம் போல் தெரியவில்லை.. நீயே சொல்லுப்பா.."

"எதைச் சொல்ல பாட்டி..?"

"ஆரத்தி புருஷனுக்கும் பெண்டாட்டிக்கும்தான் எடுப்பாங்க.. அண்ணனுக்கும் தங்கைக்கும் எடுக்க மாட்டாங்கன்னு சொல்லு.."

வினய்யின் முகம் சங்கடத்தில் ரத்தமாய் சிவந்து விட்டது.. பர்வதம்மாளின் வார்த்தைகளை தாங்க மாட்டாமல் திரும்பி தங்கையை ஒரு அக்கினிப் பார்வை பார்த்தான்..

35

சித்ராங்கி அந்தப் பார்வையைக் கண்டு அலட்டிக் கொள்ளாமல் நின்றாள்.. வேறு வழியின்றி வினய் அடிக்குரலில் உறுமினான்..

"சித்ரா.."

"என்ன..?"

"கொஞ்சம் முன்னால் போ.."

"எதற்கு..?"

"சொன்னால் கேள்.. முன்னாடி போகிறாயா இல்லையா..?"

சித்ரா அசுவாரஸ்யமாய் தோளைக் குலுக்கிக் கொண்டு முன்னே நகர்ந்து சென்றாள்.. பூர்ணிமா ஆரத்தி எடுக்க ஆரம்பித்தாள்.. சந்தியா அவளை வெகு பிரியத்துடன் பார்ப்பதை சித்ராங்கி கவனித்து விட்டாள்..

'ம்ம்.. இவள் ஏன் இந்தப் பெண் மேல் இப்படி பாசமழையைப் பொழிகிறாள்..? இந்தப் பெண்தானே அப்பாவிடம் ரூட் போட்டுக் கொடுத்தவள்..? இவளுக்கு இந்த வீட்டில் என்ன வேலை..? இவர்களுக்கு உறவுக் காரப் பெண்ணென்றால் எந்த வகையில் உறவு..? சந்தியாவின் மேல் இவளுக்கு ஏன் இவ்வளவு அக்கறை..?'

யோசனையுடன் நின்றிருந்தவளைப் பார்த்த பர்வதம்மாள் முகம் கடுத்தாள்..

"ஏன் சுந்தரி.. இந்தப் பெண் ஏன் இப்படி காத்தாட துணி போட்டிருக்கு.. இந்த அடை மழை காலத்தில் உடம்பைப் போர்த்திக்கிட்டு எல்லோரும் படுத்துக் கிடக்கிறாங்க.. இது

ஏன் இப்படி இருக்கு..?" மருமகளிடம் கன காரியமாய் சந்தேகம் கேட்டாள் அவள்..

"என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும் அத்தை..? இந்தப் பொண்ணு கையில் போட்டுக்க வேண்டிய வளையல்களை காதில் மாட்டிக்கிட்டு இருக்கே.. அது ஏன்னு தெரியாமல் நான் ஏற்கெனவே குழம்பிப் போயிருக்கிறேன்.. இதில் இதை வேற நீங்கள் சொன்னீங்கன்னா.. நான் எதை நினைத்து குழம்புவேன்..? அதனால் இரண்டையுமே இந்தப் பெண்கிட்ட விளக்கம் வாங்கிக்கங்க அத்தை.."

வினய்.. தங்கையின் பக்கம் திரும்பிக்கூட பார்க்காமல் மனைவியோடு இழைந்து கொண்டே வீட்டுக்குள் சென்றுவிட, சித்ரா.. அந்தப் பெண்களின் மத்தியில் தனியாக மாட்டிக் கொண்டாள்..

வினய் உள்ளே போனதும் பர்வதம்மாள் உற்சாகமாகி விட்டாள்..

"அதுதானே.. இந்தப் பொண்ணுகிட்ட கேட்க வேண்டியதை உன்னிடம் கேட்டால் உனக்கென்ன தெரியும்.. இதுகிட்டயே கேட்டுவிட்டால் போகுது.. ஏம்மா.. சித்து.. ராங்கி.."

பர்வதம் 'சித்ராங்கி' என்றப் பெயரை.. 'சித்து..' 'ராங்கி..' என்று மாற்றி அழைத்த விதத்தில் சுந்தரிக்கு சிரிப்பு வந்துவிட்டது..

'களுக்' என்று வாய்பொத்தி சிரித்துவிட்டாள்..

"ஏன் சித்தி சிரிக்கிறீங்க..?" என்று வினவினாள் பூர்ணிமா..

"ஒன்றும் இல்லைடா கண்ணு.. நீ உள்ளே போ.." சுந்தரி, பூர்ணிமாவைப் பார்த்துக் கனிவாகக் கூறியதும் சித்ராவிற்கு உடம்பெல்லாம் எரிவது போல் இருந்தது..

பூர்ணிமாவின் எளிமையான தோற்றத்தையும், அவள் கழுத்தில் மெல்லிய செயின் தவிர வேறு நகைகள் இல்லாமல் இருப்பதையும் கவனித்தவளுக்கு 'இவள்.. எந்த

வகையில் என்னைவிட உயர்ந்தவள்..' என்ற கோபம் எழுந்தது..

அந்த சமயம் பார்த்து சந்தானகிருஷ்ணனின் செல்போன் ஒலித்தது.. அவன் பேசியபடி வாசல் பக்கம் சென்றான்.. கையில் இருந்த ஆரத்தியை வாசலில் கொட்ட பூர்ணிமாவும் போனாள்.. அவள் வாசலில் ஆரத்தியை கொட்டிவிட்டுத் திரும்பியபோது சந்தானகிருஷ்ணனின் மீது மோதிவிட்டாள்.. சிரித்துக் கொண்டே சந்தான கிருஷ்ணன் ஒரு கையில் செல்போனை காதில் வைத்துக் கொண்டு மறுகையால் அவளை தாங்கிப் பிடித்துக் கொள்வதையும் பூர்ணிமா வெட்கத்துடன் விலகி உள்ளே ஓடி வருவதையும் கண்ட சித்ராங்கியின் காலடியில் பூமி நடுங்கியது..

பர்வதம்மாளும் மற்றவர்களும் உள்ளே போய் விட்டதை உணர்ந்தவள், அங்கேயிருந்த வேலையாளிடம் பூர்ணிமாவை யாரென்று விசாரித்தாள்..

"அவங்க ஐயாவோட கிராமத்துக்காரப் பொண்ணும்மா.. பெரிய ஐயா படிக்க வைத்தாராம்.. அவர் போன பின்னால் நம்ம ஐயா படிக்கவைக்கிறாராம்.."

'அப்படியா கதை.. இவள் அண்டிப் பிழைப்பவளா..?' சித்ராவின் மனதில் புயல் அடித்தது..

சற்று நேரத்திற்கு முன்னால் சந்தானகிருஷ்ணனின் தோள் மேல் சாய்ந்து விலகியபோது வெட்கத்தில் சிவந்த பூர்ணிமாவின் முகத்தோற்றத்தை நினைக்கும் போது அவளுக்கு உவப்பாக இல்லை..

"ஏய் நில்லு.." என்று சித்ராவைக் கடந்து போன பூர்ணிமாவை அதட்டி அழைத்தாள் அவள்..

தன்னை ஏன் அவள் அழைக்கிறாள் என்று புரியாதவளாய் பூர்ணிமா.. சித்ராவின் அருகே வந்தாள்..

"என்னங்க.."

"என் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு வா.."

பூர்ணிமா புரியாமல் விழித்தாள்.. அந்த வீட்டில் எல்லா வேலைகளையும் உரிமையுடன் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வாள்.. ஆனால், அவளை யாரும் வேலை ஏவி.. அதைச் செய்து அவளுக்குப் பழக்கமில்லை.. இன்றைக்கு சித்ரா ஏவியதை கேட்டதும் அவளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை..

"என்ன விழிக்கிற..? என் பெட்டிகளை எடு.." மீண்டும் அதட்டினாள் சித்ரா..

பூர்ணிமா முகம் சிவக்க.. வேறு வழியின்றி குனியப் போனபோது..

"நில்.." என்று சந்தானகிருஷ்ணன் கர்ஜித்தான்..

பூர்ணிமா அந்த மாதிரியான கர்ஜனையை அதற்கு முன் அவனிடம் கண்டதில்லை.. கேட்டதுமில்லை.. எனவே, வெலவெலத்துப் போய் நின்றுவிட்டாள்.. அழுத்தமான காலடியோசையுடன் அவன் அருகே நெருங்கி வந்தான்.. சித்ராவை உறுத்துப் பார்த்தான்.. அவளோ அந்தப் பார்வையைக் கண்டு அஞ்சாமல் மயங்கிப் போய் நின்றாள்.. அவன் அருவருப்புடன் முகம் திருப்பிக் கொண்டான்..



வெறுப்புடன் முகம் திருப்பிக் கொண்டவனை விருப்பத்துடன் பார்த்துக் கொண்டு நின்றாள் சித்ரா..

"என்ன காரியம் செய்கிறாய்..?" என்று பூர்ணிமாவை அதட்டினான் சந்தானகிருஷ்ணன்..

"இல்லை சார்.. இவங்கதான்.." பூர்ணிமா தடுமாறினாள்..

"அவங்க சொன்னால் உனக்கெங்கே புத்தி புல்மேயப் போனது..? யார் என்ன சொன்னாலும் செய்து விடுவாயா..? போ.. உள்ளே.."

சந்தானகிருஷ்ணனின் கடுமையான முகம் கண்டு பூர்ணிமா நடுக்கத்துடன் வீட்டிற்குள் ஓடிவிட்டாள்.. சித்ராவின் பக்கம் திரும்பினான் அவன்..

"உங்களுக்கு இரண்டு கைகள் இருக்கிறது இல்லையா..?" என்று வினவவேறு செய்தான்..

"ஏன்.. என்னை நன்றாகப் பார்த்தால் உங்களுக்கே அது தெரிந்துவிடுமே.. நீங்கள் தான் என்னைப் பார்க்க மறுக்கிறீங்களே.." என்று குழைந்தாள் சித்ரா..

"நல்லது.. உங்கள் பெட்டிகளை நீங்களே தூக்கிக் கொண்டு வாங்க.. இந்த வீட்டில் இதுதான் பழக்கம்.. அதை விட்டுவிட்டு எங்கள் வீட்டுப் பெண்ணிடம் வேலை வாங்க நினைத்தால் நான் சும்மா இருக்க மாட்டேன்.." என்று உறுமினான் அவன்..

"அவள் என்ன உங்கள் வீட்டுப் பெண்ணா..?"

"ஆமாம்.. அவள் எங்கள் வீட்டுப் பெண்தான்.."

சந்தானகிருஷ்ணன் படிகளில் தாவி ஏறி வீட்டிற்குள் போய்விட்டான்.. சித்ராவின் பார்வை வேலையாளின் மீது படிய.. அவன் அவசரமாக அங்கேயிருந்து போய்விட்டான்..

தன்னை அழையாத விருந்தாளியென்று அவன் கண்டுகொண்டதை உணர்ந்தாள் சித்ரா..

'பேசாமல் வாயை வைத்துக்கொண்டு இருந்திருந்தால்.. இவனாவது பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு வந்திருப்பான்.. இப்போது அதுவும் போச்சு..' என்று மனதிற்குள் அலுத்தவள், தானே பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குள் சென்றாள்..

அதற்குள் சந்தியாவிடம் வினய்யை அவளுடைய அறைக்கு அழைத்துச் கொண்டுபோய் ஓய்வெடுக்க வைக்கச் சொல்லி பர்வதம்மாள் கூறவும், சந்தியா கணவனை அழைத்துக்கொண்டு அவளுடைய அறைக்குள் போய்விட்டாள்..

சித்ரா தன் பெட்டிகளுடன் வீட்டிற்குள் பிரவேசித்த போது பர்வதம்மாள், தன் மகனுடனும் மருமகளுடனும் ஆழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தாள்.. சித்ரா வந்து நிற்பதை உணர்ந்து அவர்கள் அவளைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை..

பொறுமையிழந்த சித்ரா.. தன் கையிலிருந்த பெட்டிகளைக் கீழே போட்டாள்.. அந்த சப்தம் கேட்டு தாயம்மாள் பூஜையறையை விட்டு வெளியே வந்தாள்..

"என்னம்மா இங்கேயே நிக்கிற..?"

"என் ரூம் எங்கே..?"

அதுவரை மகனுடன் தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்த பர்வதம் திரும்பி.. சித்ராவை ஏற இறங்க பார்த்துவிட்டு..

"உன் ரூமா..? என்னமோ இந்த வீட்டைக் கட்டும் போது கூட நின்று கட்டியவள் போல சொல்கிறாயே..?" என்று நையாண்டியாய் கேட்டாள்..

"எனக்கு எந்த ரூம் ஒதுக்கியிருக்கீங்க...?" எரிச்சலுடன் கேட்டாள் சித்ரா..

"அப்படிக் கேளு.. உனக்கு பின்பக்கமா ரூம் ஒதுக்கி யிருக்கு.. தாயம்மா, அந்த ஒதுக்கிய ரூமை இந்த பெண்ணுக்கு காட்டு.. அப்புறம் நீ சொல்லுடா தணிகாசலம்.." பர்வதம்மாள் விட்ட இடத்திலிருந்து மகனிடம் பேச்சை ஆரம்பித்தாள்..

"என்னது எனக்கு மாடியில் ரூம் கொடுக்கலையா..?" சித்ரா கோபமாய்க் கேட்டாள்..

"மாடியிலா..?" ஏம்மா.. நீயென்ன இந்த வீட்டுக்கு விருந்தாளியாய் விருந்து சாப்பிட வந்தாயா..? இல்லை இங்கேயே டேரா போட வந்தாயா..? மாடி ரூம்களில் சந்தியாவும் சந்தானகிருஷ்ணனும் தங்கியிருக்காங்க.. மற்ற ரூம்களில் நாங்கள் இருக்கிறோம்.. உனக்கு மாடியில் ரூம் தர எங்களுக்குத் தோதுபடாது..

"என்னால் கீழே தங்க முடியாது.."

"அது உன் இஷ்டம்.."

"அண்ணன் எங்கே..? அண்ணனைக் கூப்பிடுங்கள்.. நான் அவனிடம் பேசிக்கொள்கிறேன்.."

"அவனா..? எவன்..? உன் வீட்டில் எருமை மாடு மேய்த்தவனா..? அண்ணன்ங்கிற மரியாதை இல்லாமல் பேசின.. நடக்கிறதே வேற.. இந்த அதிகாரத்தை

உன் வீட்டில் வைத்துக்கணும்.. வந்த இடத்தில அடங்கியிருக்கணும்.. புரிந்ததா..?"

"நான் என் அண்ணனைப் பார்க்கணும்.."

"நல்லாத்தான் எனக்கு வாயில் வந்திரும்.. உனக்கு அறிவு இருக்கிறதா.. இல்லை, அதைக் கடன் கொடுத்து விட்டு வந்திருக்கிறாயா..? நேற்று இந்நேரம் கல்யாணமாகி இன்றைக்கு மறுவீட்டு விருந்திற்கு மாப்பிள்ளையாய் வந்திருப்பவரைப் பிடித்து தொங்கிக்கிட்டு இருக்கிறாயே.. ஆள்தான் வளர்ந்து இருக்கிறாய் போல.. புத்தி இன்னும் வளரவில்லையே.."

"இதோ பாருங்கள்.. எனக்கு மாடியில் தங்கித்தான் பழக்கம்.."

"ஏன்ம்மா.. கீழேயும் அதே ரூம்தான் இருக்கு..? தாயம்மாவும் பூர்ணிமாவும் கீழேதானே இருக்கிறாங்க.. அப்புறம் என்ன..?"

"நானும்.. அந்தப் பூர்ணிமாவும் ஒன்றா.."

"நிச்சயம் இல்லைதான்.. அது எங்களுக்குத் தெரியும்.. உனக்குத்தான் தெரிய மாட்டேன் என்கிறது.. அவளது அழகுக்கும் குணத்திற்கும் நீ எப்படி அவளுக்கு இணையாவாய்..?"

பர்வதம்மாள் வெந்த புண்ணில் வேலை பாய்ச் சினாள்.. வினய்க்கு போன் பண்ண முயன்ற சித்ரா, தன் முயற்சியில் தோற்றுப்போனாள்.. வினய்யின் செல்போன் அணைக்கப்பட்டிருந்தது..

அன்று மட்டுமல்ல.. அங்கே தங்கியிருந்த நாள்களில் சித்ரா நினைத்ததை செயல்படுத்த முடியவில்லை.. சந்தானகிருஷ்ணன் அவள் கண்ணில் படவே இல்லை.. பூர்ணிமா கல்லூரிக்குப் பறந்துவிட்டாள்.. கடைசியில் சித்ரா தோற்றுப்போய் தன் வீட்டிற்குப் போக, வினய்யும் சந்தியாவும் தேனிலவிற்கு சுவிட்சர்லாந்து போனார்கள்..

37

பனித்துளிகள்.. மழைச் சாரல்கள் போல்.. பூத்தூவல்கள் போல் பொழிந்து கொண்டிருக்க, கனமான ஸ்வெட்டர்களுடனும் கை தலை உறைகளுடனும் சந்தியாவும் வினய்யும் நடந்து கொண்டிருந்தனர்..

"ஏய்ய்.."

"ம்ம்.."

"கிட்டே வா.."

"மாட்டேன்.."

"வான்னு சொல்கிறேனா.. இல்லையா.."

வினய்யின் கரம் சந்தியாவின் தோளைச் சுற்றி விழுந்து அவளை அருகே இழுத்துக் கொண்டது... அந்த குளிர்ப் பிரதேசத்தில் அவனது உடலின் வெப்பம் அவளுக்கு இதமாக இருக்க.. அவளும் நெருங்கி நடந்தாள்..

"சந்தியா.. நாம் வந்து பதினைந்து நாள் ஆகிவிட்டதில்ல.."

"ஆமாம்.."

"அப்பா கிளம்பி வாடாங்கிறார்.."

"....."

"என்னடி பதிலைக் காணோம்.."

"எனக்கு உடனே இந்தியா திரும்ப விருப்பமில்லை வினய்.. இன்னும் இரண்டு வாரம் போகட்டும்.."

"இதுவே அதிகம் சந்தியா.. அப்பா தேனிலவே வேண்டாம் என்றார்.. நான்தான் பிடிவாதமாக கிளம்பி வந்தேன்.."

"ஏன் பிடிவாதமாய் வந்தீர்களாம்.."

"உனக்காகத்தான்.. உனக்கு ஏமாற்றம் வரக் கூடாதுன்னுதான்.."

"உங்களுக்காக இல்லையா..?"

"எனக்காகவும்தான்.."

"அதை ஏன் ஒப்புக்கொள்ள மாட்டேன்கிறீங்க.."

"அப்பா அங்கே தனியாக தொழிலைக் கவனித்துக் கொண்டிருக்கிறார் சந்தியா.."

"இதற்கு முன்னாலும் அவர் தனியாகத்தானே தொழிலை கவனித்தார்..? உங்களைக் கம்பெனி பக்கம் வரவிட்டதில்லையே.. என் கண்ணில் பட விட்ட தில்லையே.."

"அதை நீ மறக்கவே மாட்டாயா.."

"மறக்கத்தான் இன்னும் கொஞ்ச நாள் இங்கேயே இருப்போம்ன்னு சொல்கிறேன்.."

அறைக்குத் திரும்பியதும் உணவை வரவழைத்துச் சாப்பிட்டார்கள்.. இரவின் குளிரில் அவன் அவளை நாடி வந்தபோது கோகுல்நாத்தை அவர்கள் மறந்தே போனார்கள்..

ஆனால், கோகுல்நாத் அவர்களை மறக்கவில்லை. தினமும் மகனை போனில் அழைத்து கோபமாய் பேசினார்.. அதன் விளைவாய் வினய் இந்தியா திரும்ப வேண்டுமென்று கூற ஆரம்பித்தான்..

"சந்தியா.. போதும்.. நாம் நம் ஊருக்குத் திரும்பலாம்.. இன்னொரு தடவை இங்கே வரும்போது அதிகநாள்

இருக்கலாம்.."

"அது டூராக இருக்கும் வினய்.. தேனிலவாக இருக்காது.."

"சொன்னால் கேட்க மாட்டாயா..?"

"யார் சொல்வதைக் கேட்க வேண்டும் வினய்..?"

"ஏண்டி படுத்துகிற.. நான் சொல்வதைக் கேள்.."

"நீங்கள் நீங்களாக இல்லையே.. உங்கள் அப்பா சொல்வதை நீங்கள் என்னிடம் சொல்கிறீங்க.."

"ஏண்டி என் அப்பா சொன்னால்தான் என்ன..?"

"வேண்டாம் வினய்.. கோபத்தைக் கிளப்பாதீங்க.. இங்கே வந்தும் ஏன் உங்கள் அப்பாவின் பிடிக்குள்ளேயே இருக்கிறீங்க..?"

"சந்தியா.. நான் ஒரு நல்ல மகனாகவும் பொறுப்புள்ள அண்ணனாகவும் இருக்க நினைப்பதை தவறு என்கிறாயா..?"

"அவை இரண்டுமாக நீங்கள் இருக்க வேண்டு மானால் எனக்கு கணவனாக இருக்கக் கூடாதுன்னு அர்த்தமா..?"

"நான் அப்படியாடி சொன்னேன்.."

"உங்களுடைய அப்பாவும் தங்கையும் அப்படித்தான் சொல்கிறாங்க.."

"எதனால் அப்படிக் குற்றம் சொல்கிற..?"

"தேனிலவில்கூட உங்களை என்னுடன் இருக்க விடாமல் தொந்தரவு செய்கிறாங்களே.. அதனால் இப்படிச் சொல்கிறேன்.."

"அது வேறு ஒன்றிற்காக சந்தியா..?"

"எதற்காக..?"

"வெல்.. நான் இனியும் ஒளித்து மறைக்க விரும்பலை.. இந்தக் கல்யாணம் எப்படி நடந்ததுன்னு உனக்குத் தெரியுமா..?"

"ம்ம்.. பூர்ணிமா போனாள்.. உங்களுடைய அப்பாவைப் பார்த்தாள்.. என்ன சொன்னாளோ தெரிய வில்லை.. நம் கல்யாணம் நடந்துவிட்டது."

"அவள் என்ன சொன்னாள் தெரியுமா..?"

"என்ன சொன்னாள்..?"

"உங்கள் மகனின் மேல் சந்தியாவிற்கு காதல் இருக்கிறது.. அதனால் நீங்கள் சந்தியாவை உங்கள் மருமகளாக்கிக் கொண்டு நீங்கள் நினைப்பதை உங்கள் மகன் மூலம் சந்தியாவிடம் வற்புறுத்திப் பெற்றுக் கொள்ளுங்கள்னு சொல்லியிருக்கிறாள்.."

"என்ன..?"

சந்தியா அதிர்ந்துபோய் வினய்யிடம் இருந்து விலகி அமர்ந்தாள்.. அவள் முகம் வெளுத்துவிட்டது.. வினய் பதறிப்போய் அவளை அணைத்துக் கொள்ள கரம் நீட்ட.. அதை தட்டிவிட்டாள் அவள்..

"பூர்ணிமா அப்படியா சொன்னாள்..?"

"ஆமாம்.. அப்பா அதனால்தான் உடனே கல்யாணப் பேச்சை ஆரம்பித்துவிட்டார்.."

"வினய்.. பூர்ணிமா பாவம் வினய்.."

"ஏன் சந்தியா அப்படிச் சொல்கிறாய்..?"

"அவள் அறியாப் பெண்.. அவள் தலையில் அவளே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டிருக்கிறாளே.."

"என்னடி சொல்கிறாய்..?"

"சித்ராங்கி என் அண்ணனை கல்யாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படுகிறாள்.. என் அண்ணனுக்கு அதில் விருப்பமில்லை.. அதனால்தான் நம் கல்யாணத்தை நடக்க விடாமல் உங்கள் அப்பா முட்டுக்கட்டை போட்டார் என்பது அவளுக்குத் தெரியாது வினய்.. தெரிந்திருந்தால் இந்த வழியை உங்கள் அப்பாவிற்கு அவள் சொல்லியிருக்க மாட்டாள்.."

"சந்தியா.."

"பூர்ணிமா என் அண்ணனை காதலிக்கிறாள் வினய்.."

## 38

பூர்ணிமா ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தாள்.. கீதா கட்டிலில் படுத்து அவளையே பார்த்துக் கொண்டிருந் தாள்.. படித்தவாறே திரும்பிப் பார்த்த பூர்ணிமா, புத்தகத்தை மேஜை மேல் வைத்துவிட்டு திரும்பி உட்கார்ந்தாள்..

"ஒன்று படி.. இல்லை படு.. இரண்டையும் விட்டு விட்டு என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்..?"

"உன்னால் எப்படியடி இப்படி அமைதியாய் இருக்க முடிகிறது..?"

"ஏண்டி இப்படிக் கேட்கிறாய்..?"

"பிரசன்னா பாவம்.. பெரிய இடத்துப் பையன்.. உன் குடும்ப நிலையை நீ சொன்ன பின்னாலும் உன் பின்னாலேயே சுற்றிச் சுற்றி வந்தான்.. நீ அவன் காதலை தூக்கி எறிந்துவிட்டாய்.."

"கீதா.. என் மனதில் அவனுக்கு இடமில்லையேடி.. அவனை என் நல்ல நண்பனாகத்தான் நான் நினைத் திருந்தேன்.. அவனோ வேறு விதமாய் நினைத்தான்.. அதற்கு நானா பொறுப்பு..?"

"அதற்கு நீ பொறுப்பில்லை.. நீ தலையிட்டு கல்யாணம் பண்ணி வைத்தாயே.. உன் சந்தியா மேடம்.. அவங்க கையில் மூன்று வயதுக் குழந்தையோடு

அண்ணன் வீட்டிற்கும் கணவன் வீட்டிற்குமாக அலைந்து கொண்டிருக்கிறாங்களே.. அதற்கு நீ பொறுப்பில்லையா..?"

"நிச்சயம் நான்தான் பொறுப்பு கீதா.. எனக்கு கோகுல்நாத்தின் மனதில் இருந்த நிபந்தனை.. சித்ராங்கியை சந்தானகிருஷ்ணன் சார் திருமணம் செய்து

கொள்ள வேண்டுமென்பதுன்னு தெரியாமல் போய்விட்டது கீதா.."

"தெரிந்திருந்தால் என்ன செய்திருப்பாய்..?"

"என் காதலை சந்தியா மேடத்திடம் சொல்லாமல் மறைத்திருப்பேன்.. இப்போது அவங்களுடைய வாழ்வைக் குலைத்த பாவத்திற்கு ஆளாகால் இருந்திருப்பேன்.."

"பூர்ணிமா.."

"என்னால்தான் சந்தியா மேடத்திற்கு இந்த நிலைமை கீதா.. ஒருவாரம் சேர்ந்தாற்போல் அவங்களால் வினய் சாரின் வீட்டில் இருக்க முடியவில்லை.. அவர்கள் பிடுங்கியெடுப்பதில் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்துவிடுகிறாங்க.. ஆனால் கீதா.. ஒரு வார்த்தைகூட அவங்க அண்ணனிடம் நாத்தனாரைக் கல்யாணம் பண்ணிக் கொள்னு சொன்னதில்லை.. அதுதான் என் மனதை போட்டு அறுக்கிறது.."

"இந்த வேதனைகளைத் தாங்கிக்கொண்டு எப்படித்தான் நீ எல்லாப் பாடங்களிலும் கோல்டு மெடல் வாங்கிக் கொண்டிருக்கிறாயோ.."

"ச்ச்.. இந்தப் படிப்பு எனக்குக் கிடைத்த வரம்.. இதைப் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் எனக்கு மீட்சியில்லை கீதா.."

"அதற்காக உன் காதலை கொன்று புதைத்து விட்டாயேடி.."

"இல்லை கீதா.. நான் என் காதலை கொல்ல வில்லை.. அது சாகவும் விடமாட்டேன்.. நான் வாழும் காலம் வரைக்கும் அது என் மூச்சில் கலந்து நிற்கும்.. நான்

விலகி நிற்கிறேன் கீதா.. தங்கைக்காக சந்தானம் சார்.. அந்த சித்ராவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டுதான் ஆகனும்.. அதனால் என் காதலை வெளிக்காட்டாமல் விலகி நிற்கிறேன்.."

"இந்த மூன்றரை வருடங்களாக நீ அவர்கள் வீட்டிற்கு போவதையே நிறுத்திவிட்டாயே பூர்ணி.. பாவம் அந்த

அம்மாள், உன் கார்டியனின் அத்தை.. உன்னைப் பார்க்க வாரம் இருமுறை வந்துவிட்டுப் போகிறாங்க.."

"அவங்களுக்கு குழந்தையில்லை கீதா.. என்மேல் பெற்ற பெண் போல் பாசம் காட்டுகிறாங்க.."

"இந்த பரீட்சை முடிந்ததும் உன் படிப்பும் முடிந்து விடும்.. அதற்குப் பின்னால் என்ன செய்யப் போகிறாய்..?"

"என் கிராமத்திற்குப் போய்விடுவேன்.. எங்கள் ஊரிலும் இப்போது ஹையர் செகண்டரி ஸ்கூல் வந்து விட்டது. என் தங்கை ப்ளஸ் ஒன் படித்துக் கொண்டிருக்கிறாள்.. எனக்கு வேலை கிடைத்ததும் என் அம்மாவையும் அவளையும் கூப்பிட்டுக் கொண்டு வேலை கிடைத்த ஊருக்குப் போய்விடுவேன்.. என் தங்கையை மேலே படிக்க வைப்பேன்.. என் அம்மாவை கடைசிவரை என் கூடவே வைத்துக்கொள்வேன்.."

"சந்தானகிருஷ்ணன்..?"

"அவர் நினைவையும் கடைசிவரை என் கூடவே வைத்திருப்பேன்.."

பூர்ணிமா மேஜை மேல் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.. சற்று நேரத்தில் தலையை நிமிர்ந்தவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள்..

**ச** ந்தியா தனது கேபினுக்குள் அமர்ந்து கம்ப்யூட்டரின் திரையை ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்தபோது வினய் அவளது கேபினுக்குள் புயல் போல் நுழைந்தான்.. தலையை நிமிர்த்தி கணவனைப் பார்த்தவள்.. மீண்டும் கம்ப்யூட்டர் திரையில் விழிகளைப் பதித்தாள்..

"சந்தியா.."

"ம்ம்.."

"அபிநய்க்கு ஜூரமா..?"

"ஆமாம்.."

"ஏன் என்னிடம் சொல்லலை..?"

"உங்கள் செல்போன் ஸ்விட்ச் ஆஃப் ஆகியிருந்தது.."

"ஏண்டி.. நான் பெற்ற பிள்ளைக்கு உடம்பு சரியில்லை.. அதை என்னிடம் சொல்லாமல் மறைத்து விட்டு கதை சொல்கிறாய்..?"

"இது கதையில்லையென்பது உங்களுக்கே தெரியும் வினய்.."

"நான் என் மகனைப் பார்க்கனும்.."

"போய்ப் பாருங்கள்.. அத்தையிடம்தான் இருக்கிறான்.."

"உன் வீட்டிற்கு நான் வரமாட்டேன்.."

"அதற்கு நான் என்ன செய்யட்டும்..?"

"குழந்தையைத் தூக்கிக் கொண்டு நம் வீட்டிற்கு வா.."

"நம் வீடா..? எது அந்த வீடா..? குட்ஜோக்.."

"சந்தியா.."

"சும்மா கத்தாதீங்க வினய்.. அது நம் வீடில்லை.. உங்கள் அப்பாவுடைய வீடு.. அங்கே உங்களுடைய தங்கைக்குத்தான் உரிமை இருக்கிறது.. எனக்கு இல்லை.."

"நீ நினைத்தால் அவளது உரிமையைப் பறித்துக் கிட்டு அந்த வீட்டை விட்டு வெளியில் அனுப்பலாமே.."

"எங்கே அனுப்பச் சொல்கிறீங்க..? என் அண்ணன் வீட்டிற்கா..? ஒரு நாளும் நான் அதைச் செய்ய மாட்டேன்.."

"நீ செய்ய மாட்ட.. நான் உன் கணவன்.. என் கடமையில் உனக்குப் பங்கிருக்கிறதுன்னு நினைத் திருந்தால் நீ அதை செய்திருப்ப.. நீதான் இன்னமும் ராமலிங்கத்தின் மகளாகவும் சந்தானகிருஷ்ணனின் தங்கையாகவும்தானே இருக்கிற.. நீ எப்படி அதைச் செய்வ.."

"வேண்டாம் வினய்.. இந்தக் கேள்விகளை நீங்களும் உங்கள் அப்பாவும் மாறி மாறிக் கேட்டு என் காது ஜவ்வு கிழிந்ததுதான் மிச்சம்.. இதற்குப் பயந்துதான் நான் என்

அண்ணன் வீட்டிற்குப் போய்விட்டேன்.. இங்கேயும் வந்து என்னை டார்ச்சர் பண்ணாதீங்க.."

"சந்தியா.. இந்தச் சொத்துக்களில் அறுபது பர்ஸன்ட் உன் பெயரில் இருக்கிறதுங்கிற எண்ணம்தானே உனக்கு..?"

"ஹ.. இப்படிப் பேசினால் இந்தச் சொத்துக்களை உங்கள் அப்பா பெயருக்கு மாற்றிவிடுவேன்னு எண்ணமா..? ஒரு நாளும் நான் அதைச் செய்யமாட்டேன்.. இந்தச் சொத்து என் அப்பா எனக்காகக் கொடுத்தது.. இதை நான் என் பிள்ளைக்கு கொடுப்பேன்.. உங்கள் அப்பாவிடம் கொடுத்தால் அதை உங்கள் தங்கைக்கு கொடுத்துவிடுவார்.. அது எனக்குத் தெரியும்.."

"ஏண்டி.. என்னைப்பற்றி நீ நினைத்தே பார்க்க மாட்டாயா..? உன் பிள்ளை.. உன் பிள்ளையென்கிறாயே.. அவன் என் மகன்டி.."

சொன்னவனை நிமிர்ந்து பார்த்தாள் சந்தியா.. தலை கலைந்து ஆள் கறுத்து.. லேசாய் தாடி படர்ந்த முகத்துடன் இளைத்து இருந்தான் வினய்..

சந்தியாவின் கண்கள் கலங்கின.. அவள் அருகில் வந்த வினய், அவள் தோள் தொட்டு எழுப்பினான்.. எழுந்தவள் அவன் மார்பில் முகம் புதைத்து அழுதாள்..

"ச்சு.. வேண்டாம் சந்தியா.. வேண்டாம்.. அழுகாதே.. ப்ளீஸ்.."

அவனைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டு அவளது கூந்தலில் முகம் புதைத்தான்.. இது என்ன வாழ்க்கை என்று கசந்து மறுகினான்..

## 39

சந்தானகிருஷ்ணன் தாயம்மாவைத் தேடிக்கொண்டு சமையலறைக்குள் போனபோது அவள் அங்கு இல்லை..

"அத்தை எங்கே..?" என்று அங்கிருந்த சமையல் வேலை செய்யும் பெண்மணியிடம் வினவினான்..

"அவங்களுக்கு நல்ல காய்ச்சல்ங்க ஐயா.." என்றாள் அந்தப் பெண்மணி..

சந்தானகிருஷ்ணன் கவலையுடன் தாயம்மாவின் அறைக்குச் சென்றான்.. கட்டிலில் சோர்ந்து போய் படுத்திருந்தாள் தாயம்மா.. அவளது நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். உடம்பு அனலாக கொதித்தது.. புனிதாவிற்கு போன் செய்தான்.. சற்று நேரத்தில் கையில் மருந்துப் பெட்டியுடன் புனிதா வந்துவிட்டாள்.. காதுகளில் ஸ்டெதாஸ்கோப்பை எடுத்து மாட்டிக்கொண்டு தாயம்மாவை பரிசோதிக்க ஆரம்பித்தாள்..

"என்ன ஆச்சு புனிதா..?"

"ம்.. மனக்கவலைதான் இவங்களை படுக்க வைக்கிறதுன்னு நினைக்கிறேன்.. இந்த மாத்திரைகளை வாங்கி வந்து மூன்று வேளைக்கு கொடு.. ஒரு இன்ஜெக்ஷன் போட்டுவிட்டுப் போகிறேன்.. திரும்பவும் நாளைக்கு வந்து பார்க்கிறேன்.."

புனிதா, தாயம்மாவிற்கு ஊசி போட்டுவிட்டு ஹாலுக்கு வந்தாள்.. வேலையாள் கொண்டு வந்த காபியை வாங்கியவள் தன் மறு கையிலிருந்த பெட்டியை அங்கேயிருந்த டீப்பாவில் வைத்துவிட்டு சோபாவில் அமர்ந்து காபியை பருக ஆரம்பித்தாள்..

"அவங்க பக்கத்தில் யாரும் இல்லையா கிருஷ்..?"

"ம்ம்.. சந்தியா நேற்றுதான் அவள் வீட்டிற்குப் போனாள்.. எப்படியும் இரண்டு நாள்களுக்கு மேல் அங்கே தங்க மாட்டாள்.. இப்போதுகூட அவளுடைய குழந்தைக்குப் லேசாய் ஜூரம் அடித்தது.. வினய் வந்து குழந்தையைப் பார்க்க வேண்டும் வீட்டுக்கு வான்னு கூப்பிட்டிருக்கிறான்.. அதனால் போயிருக்கிறாள்.."

"ஓ.. வினய் இங்கே வந்தாரா..?"

"இல்லை புனிதா.. நான் சித்ராவை மறுத்துவிட்ட பிறகு அவன் இங்கே வருவதில்லை.."

"சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கொள் கிருஷ்... நீ தனிமையில் நின்றால் அவர்களது வற்புறுத்தல் அதிகமாகத்தான் செய்யும்.."

"ச்சு.. வீடு இந்த நிலையில் இருக்கும்போது எப்படி கல்யாணம் பண்ணிக் கொள்வது..? அத்தோடு எனக்குப் பித்தவளாய் ஒரு பெண்கூட கண்ணில் படவில்லையே புனிதா.."

"உனக்குப் பிடித்தவள் எப்படியிருக்க வேண்டும்ன்னு சொல்லு.. உனக்காக நான் பெண் பார்க்கிறேன்.."

"அவளுக்கு என்னைப் பிடித்திருக்க வேண்டும்.. என்னை எனக்காக காதலிக்க வேண்டும். என் பணம், வசதிகள் இவையெல்லாவற்றையும் மறந்து எனக்காக உருக வேண்டும்.. மொத்தத்தில் எனக்கென்று ஒரு இதயம் வேண்டும் புனிதா.."

"என்னடா கவிதை போல் பேசுகிற..? நீ யாரை யாவது காதலிக்கிறாயா..?"

"தெரியவில்லை.."

"ஏன் கிருஷ்.. இப்படிச் சொல்கிறாய்..? உன்னை காதலித்த நிறைய பெண்களை எனக்குத் தெரியும்.. அவர்களில் ஒருத்தியை நீ செலக்ட் பண்ணியிருக்கலாமே.. ஏன் இப்போது சந்தியாவின் நாத்தனார் சித்ராகூட உன்னைக் காதலிக்கிறாளே.. வருடக் கணக்கில் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள தவமிருக்கிறாளே.. அவளுடைய இதயம்.. உனக்கென்று வாழும் ஒரு இதயம் தானேடா.."

"சேச்சே.. யாரைப் பார்த்து இப்படிச் சொல்கிற..? அவள் எனக்கானவள் இல்லை புனிதா.. அவள் காதலிப்பது என்னை இல்லை.. என் பரம்பரைப் பணத்தை.. என் குடும்ப வைர நகைகளை.. நீ சொல்லிய மற்றவர்கள்கூட இதே அளவுகோலைச் சேர்ந்தவர்கள்தான்.. என்னை எனக்காக

நேசிக்க நீ சொல்லும் இந்தக் கூட்டத்தில் யாருமே இல்லை புனிதா.."

"ம்ம்.. ஏன் கிருஷ், இந்த வீட்டில் பூர்ணிமான்னு ஒரு பெண் இருந்தாளே.. அவள் எங்கே..?"

"அவள் காலேஜில் இருக்கிறாள் புனிதா... சந்தியாவின் கல்யாணத்திற்கு அப்புறம் அவள் வீட்டிற்கு வருவதில்லை.. நான்தான் வாரம் இருமுறை அத்தையுடன் போய்ப் பார்த்துவிட்டு வருவேன்.. அத்தைக்கு அவள் மேல் பாசம் அதிகம் புனிதா.. அவள் இங்கே வந்துபோய்க் கொண்டிருந்தபோது அத்தை கலகலப்பாக இருந்தாங்க.. இப்போதும் அவளைப் போய்ப் பார்த்தவீட்டு வருவதால் சோர்வில்லாமல் இருந்தாங்க.. அவளுக்கு இந்த வாரம் படிப்பு முடிகிறது.. அதன்பின் அவள் அவளுடைய கிராமத்திற்கு போய்விடுவேன்னு சொன்னாள்.. அப்போதிருந்து அத்தை சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டாங்க.. உனக்கு ஒன்று தெரியுமா புனிதா..? அவள் அத்தையை 'அம்மா..' ன்னுதான் கூப்பிடுவா.. அத்தைக்கு அதனாலேயே அவள்மேல் பிடிப்பு அதிகம்.."

"அப்படியானால் அந்தப் பெண்ணை வீட்டிற்கு அழைத்து வந்து உங்கள் அத்தையின் பக்கத்தில் இருக்க வைக்கலாமே கிருஷ்.."

சந்தானகிருஷ்ணன் எதையோ சொல்ல வாயெடுத் தான்.. பின் தலையை ஆட்டிக் கொண்டு மௌனித்தான்..

"என்னடா..?" என்று பரிவுடன் வினவினாள் புனிதா.

"அவள் எதனாலோ என்னை அவாய்ட் பண்ணுவது போல் தெரிகிறது புனிதா.. இந்த வீட்டிற்கு வருவதை அவள் விரும்புவதில்லை.."

"எப்போதிருந்து அவள் வருவதில்லை.."

"சந்தியாவின் கல்யாணம் நடந்து முடிந்ததில் இருந்து.."

"எதனாலாக இருக்கும்ன்னு நீ நினைக்கிற..?"

"தெரியவில்லை புனிதா.. ஒருமுறை சித்ரா பூர்ணிமாவை டீஸ் பண்ணப் பார்த்தாள்.. நான்விட வில்லை.. அதன்பின் அவள் இங்கே வருவதில்லை.."

"நீயேண்டா சித்ராவிடமிருந்து பூர்ணிமாவை காப்பாற்றின..?"

"இது என்ன கேள்வி புனிதா..? என் கண்முன் பூர்ணிமாவை யார் அவமரியாதை செய்யப் பார்த்தாலும் நான் அதற்கு விடமாட்டேன்.. ஏன் பூர்ணிமாவந்த புதிதில் சந்தியாவிற்கு பூர்ணிமாவைக் கண்டாலே ஆகாது.. அப்போது நான் சந்தியாவைத்தான் கண்டித்தேன்.."

புனிதா, சந்தானகிருஷ்ணனை ஆழமாய் ஓர் பார்வை பார்த்தாள்..

"உனக்கு அவளைப் பிடிக்குமாடா..?"

"நீ என்ன நினைப்பில் கேட்கிறாய்ன்னு தெரியலை.. இருந்தாலும் சொல்கிறேன்.. பிடிக்கும்.."

"எதனால்..?"

"அவள் வித்தியாசமானவள் புனிதா.. அவளைப் போன்ற ஒரு பெண்ணை நான் பார்த்ததே இல்லை.. அழகாக இருப்பாள்.. அந்த அழகு தன்னிடத்தில் இருப்பதை உணரவே மாட்டாள்.. இயல்பாக இருப்பாள்.. மனிதரை மனிதருக்காகவே நேசிப்பாள்.. சந்தியா அவளை எப்படியெல்லாம் பேசினாள் தெரியுமா..? இவள் அவள் மனத்தையெல்லாம் மாற்றிவிட்டாள்.. சந்தியாவின் கல்யாணத்தில் பூர்ணிமாவின் பங்கு மகத்தானது புனிதா.. ஏன்.. என் அதையையே எடுத்துக் கொள்.. குழந்தை யில்லாத அவங்களுக்கு பெற்ற பெண் போல ஆகிப்போனாள்.. இவையெல்லாம் அவள் ஒருத்தியால் மட்டுமே செய்ய முடிந்த செயல்பாடுகள் புனிதா.. இன்னும் சொல்லப்போனால் அவளுக்கு என் மீதும் பாசம் அதிகம்.. என்னை எனக்காகவே நேசிப்பவள்.."

"இவ்வளவு சொல்கிறாயே.. அவள் ஏன் நீ தேடும் பெண்ணாக இருக்கக்கூடாது..? எனக்கென்று ஒரு இதயம்

வேண்டும்னு ஏங்குகிறாயே.. உனக்கென்று அவளுடைய இதயம் இருப்பதை நீ உணரவே இல்லையா கிருஷ்..?"

சந்தானகிருஷ்ணன் ஆச்சரியத்தோடு புனிதாவைப் பார்த்தான்.. தன் மனதில் இருப்பதை இவள் எப்படி கண்டுகொண்டாள் என்ற வியப்பு அவன் விழிகளில் தெரிந்தது..

"என்னடா அப்படிப் பார்க்கிற..? அவள் உன்னை நேசிக்கிறான்னு நீதானே சொன்ன..?"

"அது மட்டும் போதுமா புனிதா.. அவளுக்கும் எனக்கும் வயது வித்தியாசம் அதிகம்.. அவள் பணத்தை பெரிதாக நினைக்காதவள்.. நான் அவளைப் படிக்க வைக்கும் காரணத்திற்காக என்னை நேசிக்கிறாள்.. நான் அதைக் காரணம் காட்டி.. அவளை என் மனைவியாக்கிக் கொள்ள நினைக்கலாமா..? அத்தோடு அவளுடைய காலேஜிற்கு நான் போயிருந்தபோது பிரசன்னான்னு ஒரு பையன் என்னை வந்து பார்த்தான்.. பூர்ணிமாவை உயிருக்குயிராய் காதலிப்பதாய் சொன்னான்.. பெரிய இடத்துப் பையன்.. அவனும், பூர்ணிமாவும் கல்யாணம் பண்ணிக் கொண்டால் பொருத்தமான ஜோடிகளாக இருப்பார்கள்.."

"போடா முட்டாள்.. இதை நீயாகவே நினைத்துக் கொண்டாயா..? அந்தப் பெண்ணை நீ என் ஹாஸ் பிடலுக்கு அழைத்து வந்தபோதே நான் அவள் மனதைக் கண்டுபிடித்துவிட்டேன்.."

"என்ன கண்டுபிடித்தாய்..?"

"அவளுக்கு உன் மேல் காதல்டா மடையா.."

"வெறும் பார்வையை வைத்து அப்படி எடை போடாதே.."

"உனக்கு இதை விளங்க வைக்க என்னால் முடியாது.. ஒன்று சொல்கிறேன்.. அதை நீ செய்.."

"என்ன..?"

"அந்த பிரசன்னா என்கிற பையனின் வீட்டில் போய் உனக்காக கல்யாணம் பேசப் போகிறேன்னு சொல்லு..

அதற்கு அவள் என்ன சொல்கிறாhள்னு தெரிந்து கொண்டால் உன் பித்தம் தெளியும்.."

"அவன் வீட்டிற்கு நிஜமாகவே போய் கல்யாணம் பேசச் சொல்கிறாயா..? என்னால் அது எப்படி முடியும் புனிதா..?"

"உன்னை அடித்துவிடுவேண்டா கிருஷ்..! சும்மா வாய் வார்த்தையாய் அவளிடம் சொல் என்றேன்.. போய் வரவா..?"

புனிதா போன பின்னாலும் வெகு நேரம் சந்தான கிருஷ்ணன் அமர்ந்த இடத்திலேயே அசையாமல் அமர்ந்திருந்தான்..

40

சந்தானகிருஷ்ணன் காரின் மேல் சாய்ந்துகொண்டு காத்திருந்தான்.. காலடியோசை கேட்டதும் பூர்ணிமாதான் வந்துவிட்டாளோ என்ற நினைவுடன் திரும்பிப் பார்த்தான்.. கீதா வந்து நின்றாள்..

"பூர்ணிமா எங்கே..? அவள் ரூமில் இருக்கிறாளா..?"

"இல்லை சார்.. அவள் காலையிலேயே அவளுடைய ஊருக்குப் போய் விட்டாளே.."

சந்தானகிருஷ்ணன் அதிர்ந்துவிட்டான்.. அன்றுடன் பூர்ணிமாவிற்கு பரீட்சை முடிந்துவிட்டது என்பதால் அவளை அழைத்துப்போக காரோடு வந்திருந்தான்

அவன்..

"இன்று வரை எக்ஸாம் இல்லையா..?"

"இல்லை சார்.. நேற்றோடு முடிந்துவிட்டது.."

"அப்புறம் பூர்ணிமா ஏன் என்னிடம் அப்படிச் சொன்னாள்..?"

"உங்கள் வீட்டிற்கு வருவதை தவிர்த்துவிட்டு ஊருக்குப் போய்விட அவள் முடிவு செய்திருந்தாள்.. போன வாரமே வாட்ச்மேனிடம் சொல்லி டிரெயின் டிக்கெட் ரிசர்வ் பண்ணிவிட்டாள்.."

"அவளுக்கு தனியாக எங்கு போயும் பழக்க மில்லையே.."

"இனி பழகித்தானே ஆகவேண்டும்..? அவள் இன்ஜினீயர் என்பதை நீங்கள் மறந்து விட்டீங்களா..?"

"ஓ.. அதற்காக சொல்லாமல் கொள்ளாமல் போவதா..?"

"நல்லவர்களுக்கு அழகு சொல்லாமல் போவது தானே.. அவள் நல்லவள் சார்.. அதனால்தான் போய் விட்டாள்.."

இந்தப் பெண் ஏதோ பொடி வைத்துப் பேசுவது போல் இருக்கிறதே.. சந்தானகிருஷ்ணன், கீதாவை கூர்ந்து பார்த்தான்..

"மிஸ் கீதா.. பூர்ணிமாவைப் பற்றி நீங்கள் எதையோ சொல்ல நினைப்பது போல் எனக்குத் தோன்றுகிறது.."

"நான் நினைத்து என்ன பயன்..? சொல்ல வேண்டியவள் அதைச் சொல்லாமலே விலகிப் போய் விட்டாளே.."

"நீங்கள்தான் சொல்லுங்களேன்.. ஏன் அவள் என்னிடம் சொல்லாமல் போய்விட்டாள்..?"

"உங்கள் தங்கையின் நல்வாழ்விற்காக.."

"சந்தியாவின் வாழ்விற்கும் பூர்ணிமா என்னிடம் சொல்லாமல் போய்விட்டதற்கும் என்ன சம்பந்தம்..?"

அந்த சம்பந்தத்தை கீதா விலாவாரியாகச் சொன்னாள்.. சந்தியாவின் திருமணத்திற்காக பூர்ணிமா, கோகுல்நாத்திற்கு போட்டுக் கொடுத்த திட்டத்தைச் சொன்னாள்.. அதே திருமணம் முடிவானதும் சந்தியா, பூர்ணிமாவிற்கு கொடுத்த வாக்குறுதியைக் கூறினாள்.. சந்தியாவின் நாத்தனாரின் கோரிக்கையை அறிந்ததும் பூர்ணிமா, சந்தானகிருஷ்ணனின் வாழ்வை விட்டு விலக நினைத்ததைச் சொன்னாள்..

"அவள் பைத்தியம் சார்.. உங்கள் மனதில் சந்தியாவின் கல்யாணம் தடைபட்டுக் கொண்டிருப்பது குறித்த கவலை இருப்பதைத் தெரிந்து கொண்டதும் அம்மணி.. திட்டம் போட்டு காரியத்தை இறங்கி விட்டாள்.. அவள் பிள்ளையார் பிடிக்கப் போனதும், அது ஆஞ்சநேயராகி விட்டது.. இவள் பதறிப்போய் என்னால் தானே சந்தியாவின் வாழ்க்கை இப்படி ஆகிவிட்டதுன்னு ராப்பகலா அழுது தன் உயிரை குறைத்துக் கொண்டாள்.. எங்கே உங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்தால் தன்னையுமறியாமல் உங்களிடம் காதலைச் சொல்லிவிடுவோமோ என்ற பயத்துடன் உங்களைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.. இப்போது சொல்லாமல் போய்விட்டாள்.. சுயநலக்காரி.. காரியம் முடிந்ததும் காற்றாய் பறந்துவிட்டாள்னு நீங்க நினைத்துக்கொள்வீங்க இல்லையா.. அதற்காகவே ஓடிப்போய்விட்டாள்.. ஆனால், ஒன்றை மட்டும் அவள் என்னிடம் உறுதியாகச் சொன்னாள் சார்.. காலம் பூராவும் அவர் நினைவில் நான் வாழ்ந்து விடுவேன் என்றாள்.."

சந்தானகிருஷ்ணன் உதட்டைக் கடித்துத் தன் உணர்வுகளை அடக்கிக் கொண்டான்..

'எனக்கென்று ஒரு இதயம் இருக்குமா என்று தேடி அலைந்தேனே.. இதோ.. எனக்காகவே ஒருத்தி தன் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டு தியாகியாய் என்னைத் துறந்து ஓடியிருக்கிறாள்..'

கீதாவிடம் விடைபெறும் பாவனையில் தலை அசைத்துவிட்டு புயல்போல் காரைச் செலுத்திக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.. சந்தியா குழந்தையுடன் திரும்பவும் வந்திருந்தாள்.. அவளருகே சென்று அமர்ந்தான்..

"உனக்காக உன் நாத்தனாரை நான் கல்யாணம் செய்து கொள்ளவா..?"

"நீ அப்படிச் செய்தால் நான் என் உயிரை விட்டு விடுவேன் அண்ணா.."

"உன் துன்பம் தீர அதுதான் வழி சந்தியா.."

"இல்லை.. நீ உடனடியாக கல்யாணம் பண்ணிக் கொள்வதுதான் வழி.. நீ தனியே நின்றால் அவர்கள் ஆடித்தான் பார்ப்பார்கள்.."

"நீ யாரையாவது எனக்காகப் பார்த்து வைத்திருக் கிறாயா..?"

"பார்த்து என்ன.. நீதான் என் அண்ணியென்று வாக்கு கொடுத்து வைத்திருக்கிறேன்.."

"யாருக்கு..?"

சந்தியா, தமையனை நிமிர்ந்து பார்த்து துன்பப் புன்முறுவல் ஒன்றைப் பூத்தாள். சந்தானகிருஷ்ணனின் புருவங்கள் உயர்ந்தன..

"அவள் பெயரை உன்னிடம் நான் சொல்லக் கூடாதுன்னு.. வினய் என்னிடம் இன்னொரு வாக்குறுதியை வாங்கிக் கொண்டு விட்டார் அண்ணா.."

"எப்போதும்மா..?"

"என் தேனிலவின்போது.. அவரிடம் நான் என் மனதிலிருந்தவைகளைப் பகிர்ந்து கொண்டேன்.. அவர் என்னிடம் இப்படியொரு வாக்குறுதியை கேட்டு வாங்கிக் கொண்டார்.. அதனால்தான் அமைதி இல்லாமல் நான் அங்கும் இங்குமாய் அலைந்து கொண்டிருக்கிறேன்.."

"கலங்காதே சந்தியா.. உன் மனதில் இருப்பது எனக்குத் தெரியும்..?"

"அண்ணா.."

"நான் அதை நிறைவேற்றுகிறேன்.. நீ கவலைப் படாதே.."

"ஆனால், எப்படி உனக்குத் இது தெரியும்..? அவள் சொன்னாளா..?"

"அவள் சொல்வாளா..? உன் நல்வாழ்விற்காக ஊரை விட்டு சொல்லாமல் ஓடிவிட்டாள்.. அவள் எப்படிச் சொல்வாள்..?"

"என்ன அண்ணா சொல்கிறாய்..?"

"ஆமாம் சந்தியா.. பூர்ணிமா அவளுடைய கிராமத்திற்கு நம்மிடம் சொல்லாமல் கிளம்பிப் போய் விட்டாள்.."

தாயம்மா பதறி எழுந்து அமர்ந்தாள்.. அவள் முகத்தில் தவிப்பு தெரிந்தது..

"சந்தானம்.. என்னடா சொல்கிற.. என் பெண் என்னிடம் கூட சொல்லாமல் போய்விட்டாளா..?"

"ஆமாம் அத்தை.. ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தி தன்னை அழித்துக் கொண்டு மற்றவர்களுக்கு ஒளி கொடுக்குமாம்.. அதைப் போல இவள் தன் காதலை அழித்துக்கொண்டு சந்தியாவின் வாழ்வைக் காப்பாற்ற சொல்லாமல் ஓடிவிட்டாள்.."

"என்டா சொல்கிறாய்..?"

"நான் போய் அவளைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன் அத்தை.. எனக்கு மனைவியாக.. உங்களுக்கு மகளாக... சந்தியாவிற்கு அண்ணியாக... அவள் என்றைக்கும் நம்மோடு இருப்பாள்.." சந்தானகிருஷ்ணன் காரில் ஏறிப் பறந்தான்..

# 41

தோட்டத்தில் காய் பறித்துக் கொண்டிருந்தாள் பூர்ணிமா.. வசுந்தரா வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தாள்.. கனகம் படிப்பை முடித்துக் கொண்டு வந்திருக்கும் மகளுக்கு வாய்க்கு ருசியாக சமைத்துக் கொண்டிருந்தாள்..

"அந்த டீச்சருக்கு இது பட்டிக்காடுன்னு நினைப்புக்கா பெரிய பட்டணத்துப் பைங்கிளி போல அலட்டிக்கும் அதுக்குத் தெரியலை, இப்போது கிராமத்தில் நைட்டியும் சுடிதாரும் தண்ணீர் பட்ட பாடுன்னு.."

"....."

"என் நிறத்தைப் பார்த்துவிட்டு, நீ எந்த பியூட்டி பார்லருக்குப் போகிறாய்னு கேட்டது.. எனக்கு மட்டு மில்லை.. மொத்த கிளாஸிற்கே சிரிப்பு வந்து விட்டது.."

வசுந்தரா.. பூர்ணிமாவின் மௌனத்தைக் கண்டு கொள்ளாமல் பேசிக் கொண்டிருந்தாள்.. வரப்பின் மீதிருந்த எஃப்.எம்.ரேடியோவில் இருந்து பாடல் ஒலித்தது..

"கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா.. கிருஷ்ணா..

கீதையின் நாயகனே கிருஷ்ணா.. கிருஷ்ணா.."

பூர்ணிமாவின் உடலில் மின்சாரம் பாய்ந்தது... அவளது கைகள் காய் பறிப்பதை நிறுத்தின.. அசையாமல் நின்று அந்தப் பாடலை செவி மடுத்தாள் அவள்.. கண்களில் நீர்த் திரையின் ஊடே வரப்பில் சந்தான கிருஷ்ணன் நின்றுகொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது..

'ச்சு.. என்ன பிரமை இது..' தலையை உலுக்கிக் கொண்டு வேலையைத் தொடர்ந்தாள்..

"அக்கா.. அவர் வந்திருக்கிறார்.." வசுந்தரா அவளை உலுக்கினாள்..

"எவர்..?" எரிச்சலுடன் நிமிர்ந்த பூர்ணிமா, சிலையாக நின்றாள்..

எதிரே சந்தானகிருஷ்ணன் நின்றுகொண்டிருந் தான்..

'பிரமையில்லையா.. உண்மையில் அவர் தான் வந்திருக்கிறாரா..?’

அவளது கைகளில் இருந்து காய் நழுவியது..

சந்தானகிருஷ்ணன் வந்த செய்தியைச் சொல்ல.. வசுந்தா வீடு நோக்கி ஓடினாள்.. அவன் பூர்ணிமாவையே பார்த்தவாறு நிதானமாய் காய்கறி தோட்டத்திற்குள் இறங்கி அவளிடம் வந்தான்..

"நீங்கள் போய் தோட்டத்தில் இறங்குவதா..?"

"நீ இங்கேதானே இருக்கிறாய்..?"

"கால்களில் காய்கறியின் செதில் பட்டுவிடும் சார்.."

"ஏன் சொல்லாமல் வந்தாய் பூர்ணிமா..?"

அவனது விழிகள் அவளை ஊடுருவின.. அவள் தலைகுனிந்தாள்..

"வீட்டுக்குப் போகலாம் சார்.."

"என் கேள்விக்கு முதலில் பதிலைச் சொல்லு.. ஏன் என்னை விட்டு வந்தாய்..? என்மேல் அவ்வளவு வெறுப்பா உனக்கு..?"

"சார்.."

பூர்ணிமா அதிர்ந்து நிமிர்ந்தாள்.. அவளது கண்கள் கலங்கிவிட்டன..

"வேண்டாம் சார்.. இப்படியெல்லாம் பேசாதீங்க.."

"வேறு எப்படிப் பேச பூர்ணிமா..? அங்கே அத்தை படுத்தப் படுக்கையாய் கிடக்கிறாங்க.. அது தெரியுமா உனக்கு..?"

"ஐயோ.. அவங்களுக்கு என்ன ஆனது..?"

"பாசம் வைத்துவிட்ட பாவம் தான்.. வேறு என்ன..? உன்னைப் பெற்ற பெண் போல அவங்க நினைத்தாங்க.. நீதான் எனக்கு எல்லாமுன்னு நான் நினைத்தேன்.. நீ எங்கள் இருவரையும் தூக்கியெறிந்துவிட்டு ஓடிவந்து விட்டாய்.."

"சார்.."

"நான் உன்னைக் காதலிக்கிறேன் பூர்ணிமா.. உன்னோடு வாழ்ந்தால்தான் எனக்கு அது வாழ்வு.."

பூர்ணிமாவிற்கு தன் காதுகளில் விழுந்த செய்தியை நம்ப முடியவில்லை.. சந்தானகிருஷ்ணன் அவளை தொட்டு தன் பக்கம் இழுத்துக் கொண்டான்.. அடக்கி வைத்திருந்த துயரம் தாங்காமல் அவன் மார்பினில் முகம் புதைத்து அவள் கதறி அழுதாள்.. அவளது கதறல் அவளது காதலைச் சொல்லியது.. சந்தானகிருஷ்ணன் திருப்தியுடன் அவளது நெற்றியில் முத்தமிட்டான்..

"அழுதுவிடு பூர்ணிமா.. வேண்டியமட்டும் அழுது விடு.. இனி உன் வாழ்வில் அழுகை என்பதே வரக் கூடாது.."

"ஆனால், சந்தியா மேடம்..?"

"அவள் வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் வேறொரு வாக்குறுதியில் கட்டுப்பட்டு மறுகிக் கொண்டிருக்கிறாள்... நம் கல்யாணம் நடந்தால் சந்தோஷப்படுவாள்.."

"சித்ராங்கி..?"

"வேறொரு ஏமாந்தவன் கிடைப்பானான்னு தேடுவாள்.."

"வினய்.."

"அவனுக்குமே என் கல்யாணம் ஓர் நிம்மதியைத் தரும்.. அவன் நல்லவன் பூர்ணிமா.. என்னை சித்ராவிற்கு திருமணம் செய்து வைக்கும்படி சந்தியாவிடம் சொல்வானே தவிர.. ஒருபோதும் என்னிடம் அவன் சொன்னதில்லை.. நம் கல்யாணம் முடிந்துவிட்டால் அவனுடைய வீட்டிலும் அவனை நெருக்க மாட்டார்கள்.. சந்தியாவுடன் அமைதியாய் வாழ்வான்.."

"எல்லாக் கேள்விகளுக்கும் உங்களிடம் பதில் இருக்கிறதா..?"

"சில கேள்விகளுக்கு உன்னிடம் பதில் இருக்கிறதா..?"

"என்ன அது.."

அவன் அவளது காதோரம் குனிந்து ரகசியமாய் கிசுகிசுத்தான்.. அவள் முகம் சிவந்து அவன் மார்பினில் குத்தினாள்..

அடுத்து வந்த முகூர்த்தத்தில் அந்த கிராமத்தில் ஊரை அடைத்து பந்தல் போட்டு அவர்களது திருமணம் நடந்து முடிந்தது..

"அத்தை.. வசுந்தராவின் மேற்படிப்பும் கல்யாணமும் எங்கள் பொறுப்பு.." என்று கனகத்திற்கு வாக்கு கொடுத்தான் சந்தானகிருஷ்ணன்..

சந்தியாவை வினய் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போய்விட்டான்.. சித்ராவிற்கு உடனடியாக வேறு இடத்தில் திருமணம் ஆகிவிட்டது.. தாயம்மாளுக்கு தான் பெற்ற பெண்ணே திரும்பி தன்னிடம் வந்துவிட்ட மகிழ்வு வந்துவிட்டது.. சந்தானகிருஷ்ணனை மட்டும் நினைத்து அவனுக்கு இதயத்தில் இடம் கொடுத்த பூர்ணிமாவிற்கு இறுதியில் அவன் கிடைத்தே விட்டான்.. அவனுக்கும் அவனுக்கென்று இருந்த இதயம் கிடைத்து விட்டது..-

முற்றும் -